177

பைந்தமிழ் பயிற்றும் முறை.

REGISTRAR OF BOOKS
13 JUL 1954
MADRAS
177
3—54

வித்துவான். வீ. ப. கா. சுந்தரம்,
பசுமலை ஆசிரியர் பயிற்சிக் கூடம்.

T:3 (P31)
N54
111555

பைந்தமிழ் பயிற்றும் முறை.

ஆரம்ப, உயர்தர ஆசிரியர்க்கு

[அரசியலார் பாடத் திட்டப்படி எழுதியது.]

★

METHODS OF TEACHING TAMIL

FOR

ELE. & SEC. GRADES.

OFFIC... REGISTRAR OF ...
13 JUL 19..

★

ஆக்கியோன் :

வித்துவான் **பி. கா. சுந்தரம்,**

தமிழாசிரியன்,

ஆசிரியர் பயிற்சிக் கூடம்,

பசுமலை.

★

ஸ்ரீ பாண்டுரங்கன் அச்சகம்,

மதுரை.

1954

பதிப்புரிமை] இரண்டாம் பதிப்பு. [1—10—0

11555

டாக்டர். மு. வரதராசனர், M. O. L., PH. D.

அளித்த

அணிந்துரை.

பாடலும் பொருளும் மொழியும் எவ்வளவு அரியனவாக இருப்பினும், பயிற்றுவோரின் திறமையாலும் அவர் பயிற்றும் முறையாலும் அவை எளியனவாதல் இயலும். இதுவே இக்கால அறிஞரின் முடிவு. தமிழ் மொழி எளிய மொழி, இனியமொழி எனப் பலரும் போற்றும் சிறப்பு வாய்ந்தது. இத்தகைய மொழியையும் முறை அறிந்து பயிற்றின் மாணவர்க்குப் பெருநலம் விளையும். வித்துவான், திருவாளர், வீ. ப. கா. சுந்தரம் இத்துறையில் கொண்டுள்ள ஆர்வம் "பைந்தமிழ் பயிற்றும் முறை" எனும் இந்நூலில் நன்கு புலனாகிறது.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் எவ்வெவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதை ஆசிரியர் நன்கு தெளிந்து வகுத்தும் தொகுத்தும் விளக்கியுள்ளார். பாடத்திட்டத்தைக் கண்மூடிப் பின்பற்றாமல், அதை நெறியறிந்து போற்றித் தமிழ் மொழியின் சிறப்பியல்புகளுக்கு ஏற்றவாறு விளக்கியுள்ளார். ஏற்ற எடுத்துக்காட்டுகளும் தந்துள்ளார். நடைமுறையில் கையாளத் தக்க அனுபவ முறைகளை விளக்கியுள்ளார்.

வாய்மொழிப் பயிற்சி, கதை கற்பிக்கும்முறை, பலவகை வாசிப்பு வழிகள் முதலியனபற்றி இவர் விளக்குவன போற்றத்தக்கன. செய்யுட்களை உணர்வுடன் பாடிக் காட்டல் பற்றியும், எடுத்துக்காட்டுகளின் வாயிலாக இலக்கணம் உள்ளத்தே பதியுமாறு செய்தல்பற்றியும் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். செய்யுளின் முழுக் கருத்தையும் முன்னர் உணர்த்திப் பிறகு அருஞ்சொற்களுக்குப் பொருள்கூற வேண்டும் எனவும், இலக்கணப் போதனை முறையை நோகாமல் இலக்கணத்தை நோதல் கூடாது எனவும் இவர் குறித்துள்ள கருத்துக்கள் சிறப்புடையவை.

இந்நூலாசிரியரின் ஊக்கம் வளரும் வகையில் இவர் தம் முயற்சியை ஆசிரிய உலகம் வரவேற்கும் என நம்புகிறேன்.

சென்னை,
25—7—53

மு. வரதராசன்.

திரு. ஐ. சாம். பெஞ்சமின், B. A., L. T., அவர்கள்

அளித்த

முகவுரை.

T:3(CP3) N54

சுதந்திரம் தோன்றியதால், தாய் மொழியானது முதலிடமும் முக்கியமும் பெற்றுவரும் இக்காலத்திலே, நம் மொழிப்போதனையில் முக்கியமாக ஆரம்ப வகுப்புகளில் அதிகக் கவனமும் கருத்தும் செலுத்த வேண்டும். ஆங்கில மொழி கற்பிக்கும்முறை நூற்களைப்போலவே, தமிழ் மொழியைக்கற்பிக்கும் முறைநூற்களும் விரிவாக, விளக்கமாக வெளிவருவது மிகவும் வரவேற்கத் தக்கதே. தமிழ்மொழியைப்பரப்பும் தொண்டிலே வெற்றியுற, தமிழாசிரியர்கட்கு மொழியறிவோடு முறையறிவும் அவசியம். இலக்கியங்களில் அதிக ஆர்வங் காட்டி ஆராய்ச்சிகள் செய்தல்போலவே, போதனுமுறைகளிலும்ஆராய்ச்சிகள் அவசியம்.

வித்துவான் திரு.வீ. ப. கா. சுந்தரம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலே, போதனு முறைப் பள்ளியிலே போதித்துப் பெற்ற அனுபவத்தின் பயனே பைந்தமிழ் பயிற்றும்முறை நூல். ஆசிரியர் சிரத்தையோடு பல விஷயங்களைச் சேகரித்துச் சேர்த்துள்ளார். ஏற்ற இலக்கிய மேற்கோள்களையும், போதனு முறை பற்றிய அனுபவ முறைகளையும் நூலிலே ஆங்காங்கு குறித்துச் செல்வது குறிப்பிடத் தக்கது.

அரசினர் பாடத் திட்டத்திற் கிணங்க, ஆரம்ப' உயர்தர ஆசிரிய மாணவர்க்கென இந் நூல் எழுதப்பட்டுள்ளது. ஆயினும் ஆசிரியர்க்கு மட்டுமின்றி, தமிழ்ப் பற்றுடைய மற்றோர்க்கும் பயன்படும்விதத்தில் இனிதாகவும் எளிதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

ஆகவே, இந்நூலில் காணும் பரந்த பண்பியல்புகளை நோக்கின், இது கல்விக் கூடங்களிலும் பிற இடங்களிலும் பெரிதும் பயன்படுமென உறுதியாய்க் கருதுகின்றேன். நூலாசிரியர்க்கு எனது ஆசி.

ஐ. சாம். பெஞ்சமின்,
தலைமை ஆசிரியர், நிர்வாகி,
பசுமலை ஆசிரியர் பயிற்சிக் கூடம்.

பசுமலை,
27—7—53.

உள்ளுறை.

I. மொழியும் பயனும்.

1. மொழியின் வரலாறு. 1
2. தமிழ் மொழிப் பெருமை. 2
3. கலைத் திட்டத்தில் தாய்மொழி. 5
4. தாய் மொழிக்கு முதலிடம் கொடுத்தல். 6
5. தாய் மொழிப் போதனையின் நோக்கம். 9
6. இடை வகுப்புகளில் பொது நோக்கங்கள். 11
7. தமிழாசிரியரின் சிறப்பியல்பும் பண்பும். 13

II. சில போதனு முறைகள்.

1. பண்டைக் காலப் பள்ளிகளும் முறைகளும். 15
2. இடைக்காலப் பள்ளிகளில் போதனு முறை. 16
3. புதிய போதனுமுறைகளின் பொதுப்பண்புகள் 17
4. விளையாட்டும் கல்வியும். 18
5. தமிழ் மொழிப் பயிற்சியில் சிலவிளையாட்டுகள் 20
6. நடிப்பு முறை. ... 24
7. நடிப்பினுல் விளையும் நற்பயன்கள். 27
8. கிண்டர் கார்டன் முறை. 28
9. செயல் திட்ட முறை. 29
10. செயல் திட்ட முறையில் மொழிப் பயிற்சி. 30
11. வார்தாத் திட்டம். ... 33
12. ஆதாரக் கல்வித் திட்டம். ... 33
13. வகுப்பு முறை. ... 36
14. தனிப் பயிற்சி முறை. ... 37
15. டால்டன் திட்டம் ... 40

III. பேச்சுப் பயிற்சி.

1. கிரகித்தலும் வெளிப்படுத்தலும். 43
2. வாய்மொழிப் பயிற்சியின் நோக்கம். 45
3. வாழ்க்கையில் பேச்சுப் பயன்படல். 48
4. திருந்திய பேச்சின் இயல்புகள். 49
5. பேச்சுத்திறனை வளர்த்தல். 53
6. மாணவர் பேச்சில் காணும் குறைகள். 55
7. பேச்சுப் பிழை முறைகள். 57
8. உரையாடற் பாடம் நடத்தலின் நோக்கம். 62

9. உரையாடலுக்குகந்த பொருட்கள். 63
10. கதை சொல்வதின் முக்கியமும் நோக்கமும். 65
11. சிறுவர் கதைகளின் தன்மை. 67
12. கதை கூறும் ஆசிரியரின் தன்மை. 69
13. மாணவரைக் கதை சொல்லப் பழக்கல். 72
14. கதைக்குப்பின் தரும் வெளிப்பாட்டுச் செயல் 74
15. படங்களினுல் பயனும் நன்மையும். 75
16. தமிழ்ப் போதனையில் படங்கள். 76
17. மாணவர் பேச்சுப் பயிற்சிக் கழகம். 78

IV. வாசிப்புப் பயிற்சி.

1. வாசிப்பின் அவசியம், ... 81
2. வாசிப்பின் விளக்கம். ... 82
3. குழந்தைக்கு வாசிப்பில் ஆவலை யூட்டுதல். 82
4. வாசிப்பு முறைகளைக் கவனித்தல். ... 83
5. எழுத்து முறை. 84
6. சொல் முறை. ... 87
7. சொற்றொடர் முறை. ... 89
8. படிப்புப் பயிற்சிக்குப் பயன்படும் உபகரணம் 91
9. ஆதாரக் கல்வியில் இணைப்புமுறையில்வாசிப்பு 91
10. சொற் களஞ்சியத்தைப் பெருக்கல். 95
11. வாசிப்புத் திறமையின் கூறுகள். 100
12. உரக்கப் படிப்பின் முக்கியம். 100
13. உரக்கப் படிப்பதில் பெறற்குரிய திறமை. 102
14. மௌன வாசிப்பின் நலன்கள். 102
15. மௌன வாசிப்பை விருத்தி செய்தல். 104
16. மௌன வாசிப்பின் வேகம். ... 105
17. பரந்த படிப்பின் நோக்கம். ... 110
18. நூல் நிலையப் படிப்பு. ... 113

V. உரைநடைப் பயிற்சி.

1. பண்டைய உரைநடை. ... 118
2, உரைநடை வளர்ச்சி. ... 119
3, ஆழ்ந்த படிப்பின் நோக்கங்கள். ... 119
4. சிறுவர் பாட நூற்களின் தன்மை. 121
5. மேல்வகுப்புகட்குரிய பாடநூலின் தன்மை 123
6. உரை நடை வகை. ... 125
7. உரைநடைப் பாடம் கற்பிக்கும் முறை. 128
8, வினவுதல். ... 133

VI. செய்யுட் பயிற்சி.

1. செய்யுட் பயிற்சி என்பது என்ன ? 136
2. செய்யுட் போதனையின் நோக்கம். 137
3. சிறுவர் செய்யுட்களின் தன்மை. 140
4. ஆரம்பப் பள்ளியில் பாட்டால் பயன். 142
5. செய்யுளுக்கும் வசனத்திற்கும் வேறுபாடு 144
6. செய்யுட் போதனையின் தற்கால இயல்பு. 148
7. மனனச் செய்யுளைத் தேர்ந்தெடுத்தல். 153
8. செய்யுள் கற்பித்தலின் படிகள். 155

VII. இலக்கணப் பயிற்சி.

1. விளக்கம். 159
2. இலக்கணத்தை இனிமையாக்கல். 160
3. விதி விளக்கும் முறையில் இலக்கணம். 163
4. விதிவரு முறையில் இலக்கணம். 164
5. அனுமான முறையில் பாடம். 166
6. சில வாக்கியப் பயிற்சிகள் 169
7. சில நூதன முறைப் பயிற்சிகள். 170
8. ஆங்கில இலக்கணத்தோடு ஒப்பிடல். 171

VIII. எழுத்துப் பயிற்சி

1. எழுத்துப் பயிற்சியின் அவசியம். 172
2. எழுதுதற்குத் தகுதி. 173
3. எழுதுந் தகுதியை வளர்க்க முற்பயிற்சிகள் 174
4. எழுத்துக்களை எழுதிப் பழகல். 176
5. நல்ல கையெழுத்தின் தகுதிகள். 177
6. கையெழுத்துத் திருந்துவதற்குப் பயிற்சி 180
7. எழுத்துப் பிழைக் காரணமும் நீக்கலும். 183

IX. கட்டுரைப் பயிற்சி.

1. கட்டுரைப் பயிற்சியின் அவசியம். 188
2. கட்டுரைப் பயிற்சியின் நோக்கம். 189
3. வாய் மொழிக் கட்டுரை. 190
4. கீழ் வகுப்புகளில் எழுத்து வேலை. 191
5. கட்டுரை எழுதுந் திறனை வளர்த்தல். 192
6. கடிதங்கள் எழுதுதல். 195
7. கட்டுரை வகை. 197
8. ஆக்கத் திறமையை வளர்த்தல். 199
9. கட்டுரை எழுதப் பழக்கல் ... 201
10. கட்டுரையைத் திருத்துதல். 205

184-ம் பக்கம் 4ம் பத்தியில் 'என்பதற்கிணங்க' இதை நீக்குக

I. மொழியும் பயனும்.

1. மொழியின் வரலாறு.

கூடி வாழ்வது மனிதரின் இயல்பு. கூட்டு வாழ்க்கையிலே ஒருவருக்கொருவர் உள்ளக் கருத்தை வெளியிட வேண்டும். ஆதிமக்கள் தம் எண்ணங்களையும் கருத்துக்களையும் முகக் குறிப்பாலும், கை நடிப்பாலும் வெளியிட்டனர்; பட்சிகளை, விலங்குகளைப் போன்று பலவகை ஒலிக் குறிப்புகளாலும் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவித்தனர். ஆனால் ஒலிக்குறிப்பாலும், உடல் நடிப்பாலும் உள்ளத்தில் ஊறும் எண்ணங்களை முற்றிலும் தெளிவாய்த் தெரிவிக்க இயலாது. ஆகையால் அறிவின் ஆற்றலால் ஒலிகளைப் படிப்படியாய் வளர்த்தனர்; வகைப்படுத்தினர்; சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்தனர். இவ்வாறாக மொழியை உருவாக்கிக் கொண்டனர். உணவு, உடை, உறையுள் ஊர்திகள் முதலியவற்றை மக்கள் தம் வசதிக் கேற்ப அமைத்துப் படிப்படியாய் விருத்தி செய்து வருகின்றனர். அது போலவே, மொழியினையும் படைத்து, வளர்த்து வருகின்றனர்.

நீண்டகாலமாகப் பேச்சு வடிவிலே மொழி வளர்ந்து வந்தது. ஆனால் பேச்சின் மூலம் பிற்காலத்தவர்க்கும் தூரநாட்டில் உள்ளவர்க்கும் கருத்தைத்தெரிவிக்க இயலாது. தாம் கண்டுபிடித்த காரியங்களையும் கருதிய கருத்துக்களையும்

பிற்காலத்தவர்க்கும் பிற நாட்டவர்க்கும் தெரிவிக்கும் ஆசையும் தேவையும் மக்களுக்கு எழுந்தது. அவ்வாறு தெரிவிக்கச் சித்திரத்தை முதலில் உபயோகப்படுத்தினர். ஆதி எழுத்துக்கள் கருத்தைக் காட்டும் சித்திரங்களே. பின்னர் தான் தனித்தனியாக ஒவ்வொரு எழுத்தொலிக்கும் வரி வடிவம் அமைத்தனர். எழுத்துக்கண்டு பிடிக்கா விட்டால் நாட்டுச் சரித்திரத்தை நாம் அறிய இயலுமா? விஞ்ஞானம் விருத்தியடைந்திருக்குமா? ஆகவே நாகரிக வளர்ச்சிக்கு இன்றியமையாது துணைபுரிவது மொழியே.

வினா:- மொழி தோன்றி வளர்ந்த வரலாற்றைச் சுருக்கி வரைக.

2. தமிழ் மொழிப் பெருமை

1. மிகப் பண்டைய மொழி:- தமிழ் தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூற இயலாது. நமக்குக் கிடைத்துள்ள சங்க நூற்களில் மிகப் பழையது "தொல்காப்பியம்" இது கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பர். இதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வந்திருக்க வேண்டும். இவ்வளவு முதுமொழியாயினும், இன்று பலதுறை அறிவு நூற்கள் இல்லை எனும் குறைபாடும் உடையது.

2. தனி மொழி:— பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்க வல்லது. "வடசொற்கள் இன்றியே எவ்வகைக் கருத்தையும் இனிமையுற எடுத்துக்கூறவல்ல மொழி தமிழ்" என்று பன்மொழிப் பெரும்புலவர் கால்டுவெல் ஐயர் கூறியுள்ளார்.

3. உயர்மொழி:— தமிழ், தான் வழங்கும் நாட்டில் பல கிளை மொழிகளைத் தோற்றுவித்தது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழே.

4. செம்மொழி:— இனிமையும் பெருமையும் உடைய உயர்ந்த இலக்கிய நூற்களைப் பெற்றுள்ளது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் மணி ஆரம் தமிழன்னை பூண்டுள்ளாள். ஐம்பெரும் காப்பியங்களும் ஆழ்ந்தகன்ற பொருள் பொலிந்த சங்க இலக்கியங்களும் தமிழன்னையின் சீரிய செல்வங்கள். உள்ளத்தை உருக்கி, உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கி, ஆன்ம ஈடேற்றம் செய்யும் துதிப்பாடல்கள் நிறையக் காணலாம். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, இரட்சண்யமனோகரம் முதலிய பக்திப்பாடல்கள் எவரையும் இழுக்கும் தன்மையன.

5. இலக்கண விரிவிலும் அமைதியிலும் தமிழ் மொழி எம்மொழிக்கும் பிந்தியதன்று.

6. இயற்கையான இனிய ஓசை நயம் வாய்க்கப் பெற்றது. மலையாள மொழியையும் சீனமொழியையும் போல அதிக மூக்கொலியும், வடமொழியில் உள்ளன போல அடிவயிறு, தொண்டை இவற்றினின் றெழும்பும் ஒலியும் தமிழ் மொழியில் இல்லை. வாயினுல் எழுப்பும் இயல்பான இனிமையான ஒலியினையே அதிகம் கொண்டது தமிழ். ஆகவே பண்டைய நாகரிக மொழியாகிய வடமொழி, எபிரேயம், லத்தீன் போன்ற உயர் தனிச் செம்மொழி (Classical

language) தமிழ். ஆதலாலே பலமொழிகள் தேர்ந்தறிந்த கவிஞர் பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று தான் கண்ட உண்மையை உரைத்துள்ளார்.

7. கன்னித் தமிழ்:— வடமொழி, எபிரேயம், இலத்தீன் போன்ற உயர்தனிச் செம்மொழிகள் இறந்து பட்டன. அவைகள் உலக வழக்கொழிந்தன. ஆனால் தமிழ் மொழியானது பண்டை மொழிக்கும் பண்டைய மொழி யாக விளங்கினும் தளர்ச்சியுறாது நாடொறும் வளர்ச்சி யுற்று வருவது; மாறுபாடின்றி அன்றும் இன்றும் என்றும் புதுமையுடனே இனிமையுடனே விளங்குவதால் கன்னித் தமிழ் எனப் போற்றப்படுகிறது.

8. இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாய்ப் பகுக்கப்பட்டுவிளங்குவது தமிழ்மொழி. ஆதலால் பண்ணிற் சிறந்தது தமிழ். பாட்டிற் சிறந்தது தமிழ். கண்ணிற் சிறந்தது தமிழ். கருத்திற் சிறந்தது தமிழ்—எனப் போற்றப்படுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து.

பல்லுயிரும்பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

— பேராசிரியர்: சுந்தரம் பிள்ளை.

வினா:- தமிழ் மொழி எவ்வாறு உயர்தனிச் செம்மொழி எனப் போற்றற் குரியது?

3. கலைத் திட்டத்தில் தாய்மொழி.

தாய்மொழி:— குழந்தைப் பருவ முதல் பெற்றோரால் பிறரால் பயிற்றப்படும் மொழியே தாய் மொழியாகும். எனவே குழந்தை முதன் முதல் நன்றாகப் பேசக் கற்றுக்கொள்ளும் மொழியே தாய் மொழி. இதனை நன்கு கற்றுத் தெளிந்த அறிவு பெறும்வரை வேறு மொழியைக் கற்பித்தல் முறையல்ல.

ஆங்கில ஆட்சியில் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. கல்வித்திட்டத்தில் ஆங்கிலமே முதன் மொழியாக அமர்ந்திருந்தது. ஆங்கிலங் கற்றோர்க்கு உயர்ந்த வேலை; நிறைந்த சம்பளம். ஆதலால் பலர் ஆங்கிலத்தை விரும்பிக் கற்றனர்; ஒரு சிலரே உண்மையான உயர் நோக்கங்கொண்டு ஆங்கிலங் கற்க ஆரம்பித்தனர். அயல் மொழிகளைக் கற்று அறிவு பெறல் நல்லதே; பயன்தருவதே. ஆனால் அயல்மொழியாகிய ஆங்கிலத்திற்கு முதலிடம் தந்து தாய் மொழியைப் புறக்கணிக்க வேண்டியதில்லை. இப் புறக்கணிப்பால் நாட்டன்பு குறைந்தது; நாட்டுப் பழம்பெருமை மறைந்தது; இலக்கண அமைப்புகள் கூடத் திரிந்தன. சீரிய நம் இலக்கியங்களின் சுவையைப் பலரால் காண இயலவில்லை. தமிழாசிரியர்களோ ஊதியம் குறையினும், உலக மதிப்புக்குறையினும், உயர் குறிக்கோளுடன் மொழி அன்பே துணையாகக் கொண்டு தமிழன்னையின் அருளையே பலமாகக்கொண்டு எளிய வாழ்க்கையை இன்பமாய் அமைதியாய் நடத்திவந்தார்கள்.

முதலிடம்:— படு இருள் மறைந்தது; விடுதலை ஞாயிறு எழுந்தது; நன்மை மலர்ந்தது; கல்விப்பயிற்சியில் தாய் மொழி முதலிடம் கண்டது. இதன் முக்கியத்தையும் இன்றியமையாமையும் அரசாங்கம் அறிந்தது. இவ்வாறு நமது குடியாட்சியினர் அறிக்கை விட்டனர்:—

"சிறுவர் கல்விப் பயிற்சி பெறும் ஆரம்பக் காலத்தில் தாய்மொழி மூலமாகவே கல்வி புகட்டப்படல் வேண்டும். மொழியில் திறமை ஏற்படாவிடின் நுண்ணிய எண்ணமும் தெளிவான உட் கருத்துக்களும் தோன்ற. குழந்தைகளின் மனோபாவங்களையும் அழகுணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் வளர்ப்பது தாய் மொழியே.

4. தாய் மொழிக்கு முதலிடம் கொடுத்தற்குரிய காரணம்.

இன்றையக் கல்வித்துறை விதிப்படி கால அட்டவணையில் தாய்மொழிக்குப் போதிய வேளைகள் (Priods) கொடுக்கப் படுகின்றன. மாணவருக்குத் தமிழ் அறிவு ஊட்டத்தக்க வகையில் விரிவான வாசகப் புத்தகங்கள் எழுதப்படுகின்றன. குறித்த அளவு தமிழ்த் திறமை எய்தினல் மட்டுமே மாணவர் தேர்வில் வெற்றி பெறுகின்றனர். பள்ளிகளில் தாய்மொழி மூலமாகவே பிற பாடங்களையும் கற்பிக்கின்றனர். இவ்வாருகத் தாய்மொழி தனியிடம் அல்லது முதலிடம் வகிக்கின்றது. 27—6—50ல் திருத்தி வெளியிட்டுள்ள அரசினர் புதிய பாடத்திட்டப்படி I—III படிவங்களிலே தாய்மொழிப் பாடம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பாகம் எல்லா மாண

வரும் படித்தற்குரிய பொதுத்தமிழ். இரண்டாவது பிரிவு சிறப்புத்தமிழ். இவ்வாறு தமிழ் முதன்மை வகித்தற்குரிய காரணங்கள் பலவகைப்படும். அவை வருமாறு:—

1. சிந்தனையை வளர்ப்பது:— நாம் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கணமும் மொழியின் மூலமாகச் சிந்திக்கின்றோம். சிந்தனையையும் மொழியையும் பிரிக்க இயலாது. குழந்தைக்கு எத்துணை சொற்கள் தெரியுமோ அத்துணை அளவுக்குக் கருத்துக்கள் பெற்றிருக்கின்றது என்று ஒருவாறு கூறலாம். ஆகவே கருத்துக்களையும் எண்ணங்களையும் வளர்ப்பது மொழி.

2. பிற பாடங்களைத் தமிழ் மூலமே கற்கிறோம்:— கதை நூல், கணித நூல், குடிமைப் பயிற்சி நூல், அறிவியல் நூல் முதலிய நூற்களைத் தாய்மொழி வாயிலாகக் கற்றல் எளிது. பிறமொழி மூலமாகக் கற்றலினும் தாய்மொழி மூலமாகப் பெருகிய பொருளைச் சுருங்கிய காலத்திலும், மிக விளக்கமாகவும், எளிதாகவும் கற்றுத் தேரலாம். ஆனால் அயல்மொழி மூலம் கற்றல் கடினம்; காலமும் முயற்சியும் பணச் செலவும் அதிகமாகின்றன.

3. மனவெழுச்சிகளை இயற்கையாக வெளியிட உதவும் கருவி:— வீரம், சாந்தம், கோபம், வியப்பு, அச்சம், நகை, அழுகை, துயரம், காமம் ஆகிய சுவைகளைத் தாய் மொழியின் மூலம்தான் இயற்கையாக வெளியிட இயலும். தாய் மொழியிலமைந்த செய்யுட்களும் காப்பியங்களும் மனவெழுச்சிகளையும் உள்ள உணர்ச்சிகளையும் கிளர்ச்சி செய்து ஊட்டுவது போன்று, அயல்மொழி இலக்கியங்கள் ஊட்டா பெரும்பாலோரிடத்து. தாகூர் தன் தாய்மொழியாகிய

வங்காளத்தில் முதலில் சுவைபடச் செய்யுட்கள் எழுதிப் பின்னர்தான் அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். என்? தன் அறநெறியை உலகமெலாம் பரப்புவதற்காகவே உலகில் உதித்த கிருஸ்து பெருமானும் தன் தாய்மொழியாகிய அரமெயிக் மொழியில்தான் பேசினர்.

4. சமூக வாழ்க்கையில் உதவத் தாய்மொழி அறிவு தேவை:— பிறமொழி கற்பதால் புதுக் கருத்துக்களை அறியலாம். ஆனல் தான்கற்ற புதுக்கருத்தைப் பிறர்க்குக் கொடுத்து இன்புறவேண்டும். கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்துரைத்து முன்னேற்ற வழிகளைக் காட்ட வேண்டும். தமிழ் நாட்டில் 100-க்கு 86 விழுக்காடு தமிழ் கல்லாதவர்; 14 விழுக்காடு கற்றவர். கல்லாதவர்க்குச் சொற்பொழிவு, கூத்து இவை மூலமும் கற்றோர்க்கு எழுத்துநடை மூலமும் அறிஞர் பெருமக்கள் அறிவைப் பொதுமக்களிடையே பரப்பல்வேண்டும். ஆகவே நாட்டு நலம் பெருக்கும் அறிஞர் அனைவர்க்கும் செந்தமிழில் தெளிந்த அறிவு தேவை.

5. இலக்கிய நயங்கண்டு இன்புறல்:— தமிழ் மொழியில் பல உயர் இலக்கிய நூற்கள் உள்ளன. 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போல, தமிழ்ச் செய்யுள் நூற்களைக் கற்குந்தோறும் இன்பம் பெருக்கெடுக்கும். இலக்கிய இன்பம் ஒருவன் அனுபவிக்கும் இன்பங்களுள் தலையாயது. பக்திப் பாடல்கள் தமிழில் அரும்பி மலர்ந்ததுபோல, வேறு எம்மொழியிலும் மலர்ந்தில.

6. படைப் பாற்றல்:— புதிது புதிதாகப் பல செய்யுட்களையும் உரைநடை நூற்களையும் வெளியிடலாம். தாய்மொழியில் இயற்கையாக உணர்ச்சியுடன் வெளியிடல்

போல் பிற மொழியில் நூற்களை எழுதுவது அனைவர்க்கும் இலகுவில் அமையாது. தாய்மொழி வாயிலாக நாடகங்கள், கட்டுரைகள், புதினங்கள் (Novels), சொற்பொழிவுகள், செய்யுட்கள் முதலியவைகளை ஆக்கும் ஆற்றல்களை வளர்க்க இளமை முதல் ஏற்ற சிறு சிறு பயிற்சிகள் தரல் வேண்டும்.

7. மொழிப் பற்று, நாட்டுப் பற்று வளர்த்தல்:- தாய் மொழியை ஊன்றி ஊக்கத்துடன் கற்பதால் தாய் நாட்டின் பண்டைய வரலாறு, நம் முன்னோரின் பண்பாடு, பழக்க வழக்கம், நம்முடைய உயர்வு தாழ்வு முதலியவற்றை உணர ஏதுவாகும். தாய்போல உயிர், உடல், உள்ளம் பற்றிய நன்மைகளை அருளிய தாய்மொழியைத் தாயைப் பேணல் போல பேணுவோமாக.

வினா:- தாய்மொழிக்கு முதலிடம் கொடுப்பதைப்பற்றி ஆராய்க.

5. தாய் மொழிப் போதனையின் நோக்கம்.

அறிஞர் தெளிவான நோக்கமின்றி எதனையும் தொடங்கார். ஆதலால் எக்கருமத்தையும் எண்ணித் துணிதல் வேண்டும். போதனையில் பொது நோக்கம் எனவும் சிறப்பு நோக்கம் எனவும் இருவகை நோக்கங்கள் கொள்ளப் படும். தமிழ் மொழியின் பல்வேறு பயிற்சிகட்கும் மொழிப் போதனையின் முழுமைக்கும் கொள்ளும் நோக்கம் பொது நோக்கம். அந்தந்த நிலையிலே முடிவாக மிக முக்கியமாகக் கொள்ளப்படும் லட்சியங்களும் குறிக்கோளுமே சிறப்பு நோக்கமாகும். ஆரம்பக் கல்வியின் சிறப்பு நோக்கம் நிலையான படிப்பறிவை நாட்டுவதும், நற்குடிப் பண்பை ஊட்டுவதுமாகும்.

கீழ் வகுப்புகட்குரிய தாய் மொழிப் போதனையின் பொது நோக்கம்:—

1. தெளிவாகப் பேசிக் கருத்துக்களை வெளியிடல்.

2. பொருளுணர்தல் அல்லது கிரகித்தல். பிறர் பேசுவதை அல்லது படிப்பதைக் கேட்டும் தானே படித்தும் பொருளுணர்ந்து கொள்ளல்.

3. உணர்ச்சியுடன் தெளிவாக உணர்ந்து உரக்க வாசித்தல். மௌனமாக வாசித்தற் பழக்கத்தைப் படிப் படியாக விருத்தி செய்தல்.

4. சொல்லறிவைப் பெருக்குதல்:—

ஐந்தாம் வகுப்பிற்குள் அதாவது பத்து வயதிற்குள் சுமார் 2700 சொற்களை அறிந்து, பேசவும் படிக்கவும் எழுதவும் வேண்டிய திறமையை உண்டுபண்ணுதல். இதற்குக் கல்வித்துறையினர் கீழ்க்கண்டவாறு திட்டம் வெளியிட்டுள்ளனர்.

முதல் வகுப்பில்		300	புதுச்சொற்களை	அறிதல்
2	,, ...	400	,,	,,
3	,, ...	500	,,	,,
4	,, ...	700	,,	,,
5	,, ...	800	,,	,,

ஆக மொத்தம் 2700 சொற்களைப் பிழையின்றித் தெளிவாக எழுதவும் வாசிக்கவும் உபயோகிக்கவும் கற்றல் வேண்டும்.

சுருக்கமாகக் கூறின், சிறு கடிதங்கள், கட்டுரைகள், விண்ணப்பங்கள் எழுதலும், செய்தித் தாள்களைப் படித்து உள்நாட்டு அயல் நாட்டுச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் அறிதல் முதலிய திறமையை உண்டாக்குவதும் தாய்மொழிப் படிப்பின் அடிப்படையான பொது நோக்கம். மாணவர் மறந்து போகாத, நிலைத்துதவக்கூடிய படிப்பறிவை உண்டாக்குவதும் தம் வாக்குரிமையைப் பொறுப்புணர்ந்து வழங்கும் ஒரு நல்ல குடியாகக் குடியரசில் திகழ வேண்டும் என்பதும் அரசியலாரின் சிறப்பு நோக்கமாகும்.

வினா :- இரண்டாம் வகுப்புக்கு "ஒட்டகம்" என்ற பாடம் கற்பிக்க நீர்கொள்ளும் நோக்கங்கள் எவை?

6. இடை வகுப்புகளில் பொது நோக்கங்கள்.

1. மேற்கூறிய ஆரம்ப வகுப்புகட்குரிய நோக்கங்களை உறுதிப்படுத்தல்.

2. சிறந்த காவியப் பகுதிகளைப் படித்துச் சுவையுணரும் ஆற்றலை வளர்த்தல்.

3. மேலும் இலக்கண அறிவை விருத்திபண்ணுதல் சொற்பொருளையும் சொற்களின் நுட்பமான பொருள் வேறுபாடுகளையும் அறிவித்தல்; அவற்றை உபயோகிக்கும் திறமையை உண்டுபண்ணுதல்.

4. பரந்த படிப்புப் பழக்கத்தை உண்டுபண்ணுதல்.

5. தூய தொடர் கதை நூற்கள், கட்டுரைகள், துணைப் பாட நூற்கள், சிறு நாடகங்கள், ஆராய்ச்சிகள் முதலியவற்றைப் படித்துப் பயனுறச் செய்தல்.

6. தானே கற்றல்:— சொல் அகராதி, பொருள் அகராதி, கருத்தகராதி, கலை அகராதி, அபிநாத சிந்தாமணி, அட்டவணைகள், மேற்கோள் நூற்கள் முதலியவற்றைத் தேடித் தேவையான விஷயங்களைக் கண்டுபிடிக்கும் வழிகளைப் பயிற்றல்.

7. வாசகசாலைப் புத்தகங்களையும் செய்தித்தாள்களையும் வாசிப்பதில் விருப்பமூட்டுதல்.

8. ஆராய்ச்சி முறையோடு கற்பதற்கும் உயர்ந்த வகுப்பில் வழிகாட்ட வேண்டும்.

9. விரிவான முறையான கட்டுரைகள், தெளிவான கடிதங்கள், சிக்கலில்லா மனுக்கள், பத்திரங்கள் முதலிவற்றை எழுதவும் அறியவும் கற்பித்தல், விஷயங்களைப் பாகுபடுத்தவும், நேரடியாகத் தெரிவிக்கவும் பயிற்சிகள் அளித்தல்.

சிறப்பு நோக்கு:—மேற்கண்டவாறு அறிவைப் பெறுவதும் பரீட்சைகளில் தேர்வதும் போதாது. பெறும் அறிவை அடிப்படையாகக்கொண்டு மாணவன் தன் பிற்கால வாழ்க்கையில் நல்ல குடியாகத் திகழ வேண்டும். பிறர்க்குப் பயன்படல்வேண்டும். நாட்டு நலத்திற்கும் மொழி நலத்திற்கும் நல்லுதவிகள் நாடி நல்க வேண்டும். மாணவனை இத்தகைய பண்புடையோனாக்கத் தக்க பயிற்சிகளை ஆசிரியர் ஆராய்ந்து தரல் வேண்டும்.

வினா:- தமிழ் மொழி-என்ற பாடத்தை 7-ம் வகுப்புக்குப் போதிக்க நீங்கள் என்ன நோக்கம் கொள்வீர்கள்.

7. தமிழாசிரியரின் சிறப்பியல்பும் பண்பும்.

1. பரந்து பட்ட மொழி அறிவு:— மொழி ஆசிரியர் இலக்கண இலக்கிய நூற்களை மேலும் மேலும் கற்கும் பழக்க முடையவராய்த் திகழவேண்டும். பிற மொழியிலுள்ள இலக்கிய நூற்களைப் பற்றிய பொதுவான அறிவும் பெற்றிருத்தல் நலம்.

2. தமிழ் மொழிப் பற்று:— தமிழ் மொழியின் தோற்றம், தொன்மை, இனிமை, ஆழமுடைமை, சொல்வளம் முதலிய சிறப்பியல்புகளை நன்குணர்ந்தவராகவும் மொழிப் பற்றும் மொழியைப் பரப்பும் வாஞ்சையும் சீர்திருத்த ஆர்வமும் உடையவராகவும் திகழல் தேவை.

3. சொல்வன்மை:— வீரம், சோகம், நகை முதலிய சுவை தோன்ற, நன்கு நடித்து, ஏற்றத் தாழ்ந்த இனிய குரலில் எப்பொருளையும் எடுத்தியம்பும் வன்மை வாய்ந்தோராய் இருத்தல் வேண்டும். விஷயங்கள் விளங்கும் வண்ணம் சுருக்கிச் சொல்வனவற்றைச் சுருக்கியும் விரிக்க வேண்டியவற்றை விரித்தும், பொருள்களைத் தொடர்புற வரிசைப்படுத்தி, உணர்ச்சியோடு எடுத்தியம்பும் ஆற்றல் அவசியம். தமிழாசிரியரின் உச்சரிப்பு மிகவும் திருத்தமாக இருத்தல் மிகமிக அவசியம்.

4. எழுதும் திறமை:— ஆசிரியரின் கையெழுத்தையே மாணவர் பின்பற்றுவர். ஆதலால் ஆசிரியர்கள் அழகாக, தெளிவாக, விரைவாக எழுதும் திறமையுடையராகத் திகழல் வேண்டும்.

5. கல்வித்துறை அறிவு:—அரசியலார் கல்வியைப் பற்றி அவ்வப்போது வெளியிடும் விஷயங்களையும் கொள்கைகளையும் அறிந்துகொண்டு அதற்கேற்பத் தன் போதனையை மாற்றிக்கொள்ளல் வேண்டும்.

6. போதனு முறை அறிவு:— பொருள் அறிவோடு போதனு முறைகளை நன்குணர்ந்து அவைகளைக் கைக்

கொள்ளும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். சிறுவரின் உள்ளப் பண்பாடுகளையும் அவர்களை வழிநடத்தி அன்பாய் ஆளும் வகைகளையும் பற்றிய அறிவு அவசியம்.

7. உபகரணங்கள்:— தமிழ்ப் போதனைக் கேற்ற படங்களையும் மாதிரிப் பொருள்களையும் தேசப் படங்களையும் ஆக்கும் திறமை தேவை. ஆக்க இயலாவிடினும் சேகரிக்கும் ஆசையும் முயற்சியும் வேண்டும்.

8. ஆராய்ச்சி விருப்பம்:— இன்று எத்தனை புது நூல்கள்! எத்தனை புதுக் கருத்துக்கள்! ஏராளமான ஆராய்ச்சி நூற்களை வல்லுனர் வெளியிட்டு வருகின்றனர், அவற்றைக் கற்று உண்மைகாணும் தெளிவும் திறனும் நுட்பமும் தேவை.

9. மாணவர்பால் உண்மை அன்பு:— ஆசிரியத் தொண்டு தெய்வீகத் தொண்டு, தேசத் தொண்டு. குழந்தைகளே ஒரு நாட்டின் செல்வம்—என்ற உண்மைகளை உணர்ந்து, குழந்தைகளிடம் உள்ளன்பு, இரக்கம் ஆதரவு காட்டுபவரே ஆசிரியர். "விரையான், வெகுளான், விரும்பி முகமலர்ந்து"—பாடங்கற்பிக்க வேண்டுமென நன்னூல் நன்குணர்த்துகிறது.

10. பாடக் குறிப்பு தயாரிக்கும் பழக்கம்:— நிறைந்த அனுபவமும் பரந்த அறிவுமுடையராயினும், தான் கற்பிக்கக் கருதும் பொருள் எவ்வளவு? அதற்கேற்ற உபகரணம் எவை? எளிய விளக்கங்கள், உதாரணங்கள், பயிற்சிகள், எவை? — என முன்னரே சிந்தித்துக் குறித்துச் செல்லல் மிகப் பயன்தரும். "உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து"—வகுப்பதனுள் செல்லல் வேண்டும் என நன்னூல் சொல்வது போற்றற்குரியது.

11. நடத்தை:— எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் நல்லொழுக்கமும் கடவுள் பக்தியும் உடையவராக இருத்தல் வேண்டும்.

வினா:- தமிழாசிரியர்க்குரிய சிறப்பியல்புகளையும் பண்புகளையும் கூறுக.

II. சில போதனு முறைகள்.

1. பண்டைக் காலப் பள்ளிகளும் முறைகளும்.

பண்டைக்காலத்தில் பல பள்ளிகள் நன்னிலையிலே நடைபெற்றிருக்க வேண்டு மென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தொல்காப்பிய உரையிலும்; நன்னூலிலும் நல்லாசிரியரின் இயல்புகளையும் மாணவர் பாடங் கேட்கும் முறையினையும் பற்றி மிக அழகாகக் கூறப்பட்டுள்ளன. நல்லாசிரியரின் தன்மைகளைப் பற்றிய கூற்றுக்களை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

1. "அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்,
சொற் பொருள் உணர்த்தும் சொல்வன்மையும்"
உடையோராக ஆசிரியர் திகழல் வேண்டுமாம்

2. மாணவனுடைய அறிவு, ஆற்றல் ஆசைக்கேற்பக் கற்பிக்க வேண்டும் என்பதைக்

கொள்வோன் உணர்வகை அறிந்து அவன்
கொள்வரக் கொடுத்தல் மரபெனக்" கூறினர் புலவர்

3. பகுத்தறிவுடன் கூடிய ஆசான் தெய்வத்தை வணங்கியே வகுப்பில் பாடம் ஆரம்பிக்க வேண்டும் என்பதை

"புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்,'
கற்றுத் தருக எனப் பாடியுள்ளனர்.

4. உயர் வகுப்புமாணவர், நீர் வேட்கையால்
"பருகுவ னன்ன ஆர்வத்த ளுகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிப்" பாடங்களை ஆசாஞேடு அன்பாக, மரியாதையாகப் பழகிக் கற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் "கற்கை நன்றே கற்கை நன்று" — "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று"—என்பன போன்ற பழம் பெரும் புலவர்கள் செய்யுட்களே பண்டையப் பள்ளிகளின் நன்னிலையை நன் முறையை எடுத்துக்காட்டப் போதிய சான்ருகும். ஆனல் மிகப் பிற்பட்ட காலத்திலும் ஆங்கில ஆட்சித் தொடக் கத்தை ஒட்டிய காலங்களிலும் தமிழ் நாட்டில் பள்ளிகள் அத்துணை திருப்திகரமாக நடைபெறவில்லை எனலாம்.

2. இடைக்காலப் பள்ளிகளில் போதனு முறை.

முழு நூலையும் மனனம் செய்ய வற்புறுத்தல், கணித மும் செய்யுட்களையும் மட்டும் அதிகமாகக் கற்பித்தல், மாண வரின் வயது, விருப்பம், அறிவு இவற்றிற் கேற்பப் பாடத்தை தெரிந்து கொள்ளாமை, பொருள் விளங்காதவற்றைப் போதித்தல், முதலிய குற்றங்கள் இடைக்காலப் பள்ளிகளில் இருந்து வந்தன.

மேலும் செல்வக் களஞ்சியங்களாகிய சிறுவர்கட்கு விதித்த தண்டனையோ அம்மம்மா! கொடிது, மிகக்கொடிது. கொக்கு பிடித்தல், கோதண்டம், உருவானடி, கட்டையிடல் முதலிய கொடிய தண்டனைகளை ஆசிரியர்கள் விதித்தனர். ஆதலால் மாணவர் பள்ளியை வெறுத்தனர்; படிக்காது

பலர் நீங்கினர். எங்கேனும் ஆசிரியரைக் காணில், சிங்கம் புலி என்று அங்கம் நடுங்கி ஒடுங்குவர். ஆகவே இம் முறைகள் பண்பும் பயனுமற்றவை, ஆதலால் படிப்படியாக மடிந்து மறைந்தன. இன்று மாணவர்க்கு மகிழ்ச்சியூட்டும் புதிய போதனு முறைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இன்று மேலும் மேலும் குழந்தைகளின் இயல்புகளையும் தன்மைகளையும் உள நூலறிஞர் ஆராய்ந்து வருகின்றனர். அவற்றிற்கேற்பக் கற்பிக்கும் பொருளையும் முறைகளையும் அமைக்கின்றனர்.

3. புதிய போதனு முறைகளின் பொதுப் பண்புகள்

1. களிப்பூட்டும் விளையாட்டிற்கும், கண்ணைக் கவரும் வண்ணப் படங்கட்கும் சிந்தனையைத் தூண்டும் சிறுவகைப் பயிற்சிகட்கும் தற்காலப் பள்ளியில் ஏராளமான இடம் தாராளமாக அளிக்கப்படுகிறது.

2. குழந்தையின்

"ஆற்றலறி வின்பம் அனுபவம் அவனுக்
கேற்பப் பயிற்றல் இனிது"

3. மாணவர் தாமே முயன்று தம் அறிவை வளர்த்துக் கொள்ள வழிகாட்டுவதே சிறந்தது. ஆசிரியர் அரிய துணைவரும் அன்பின் வழிகாட்டியும் ஆவார்.

4. எதையும் இன்பமாய் இயற்கையாய்க் கற்றல் வேண்டும். மாணவரின் இயல்பு இன்பமாய் ஓடி ஆடல், பொருட்களை உற்று நோக்கல், ஏதாவதொன்றைச் செய்தல் முதலியன வாகும். இவற்றிற்கேற்ப விளையாட்டு மூலமும் தொழில் மூலமும் கற்பித்தல் நயனும் பயனுமுடையது.

5. மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஐம்பொறிவாயிலாக அறிவூட்டல் சிறந்தது.

6. குழந்தைகளையே கல்வியில் குறிக்கோளாகவும் மையமாகவும் கொள்ள வேண்டும். கற்பிக்க வேண்டிய கலைத்திட்டத்தைக் குழந்தையின் மனப்பான்மைக்கும் (Temperament) உள்ளப் போக்கிற்கும் (Tendency) ஏற்றவாறு அமைத்தல் அவசியம்.

மேற்கூறிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல புதிய போதனு முறைகள் தோன்றியுள்ளன. இனி அவற்றை ஒவ்வொன்ருய் ஆராய்வோம்.

4. விளையாட்டும் கல்வியும்.

விளையாட்டினுல் பயன்:- 1. சிறுவர்க்கு விளையாடுவதைப் போல இன்பத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுவது வேறெது? ஆட்டமும் ஓட்டமும் அளவற்ற ஆனந்தம் அளிக்கின்றன. 2. விளையாட்டானது உடலையும் உள்ளத்தையும் வளர்க்க உதவுவது. 3. உடலில் உண்டாகும் தேவைக்கு மேற்பட்ட சக்தியை வெளியிட உதவுகிறது. 4. பெரியோர் செயல் போல சிறியவரும் நடிக்க விரும்புகின்றனர். இவ்வாறு நடிப்பதன் மூலம் பிற்காலத்திற்கு வேண்டிய பயிற்சியைப்பெற விளையாட்டு பயன்படுகிறது.

ஆகவே இத்துணை நலம் நிறைந்த, பயன் சிறந்த விளையாட்டினைக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்துவது மிகச் சீரியது. விளையாடிக் கற்றல் கஷ்டத்தை ஓட்டும்; களிப்பூட்டும்; வெறுப்பை நீக்கும்; விருப்பாக்கும். பண்டைய ஆங்

கிலப் பழமொழியாவது "விளையாடுங்கால் ஆடு, வேலை செய்யுங்காற் செய்." (Work while you work & Play while you play) இதனை இன்றையக் கல்விமுறைகட் கேற்ப, "ஆடுங்கால் கற்க, கற்குங்கால் ஆடுக" (Work while you play & Play while you work) — என மாற்றி அமைத்துக் கொள்ளல் பொருத்தமானதே.

விளையாட்டு முறையின் குறைத்தன்மை:-

1. விளையாட்டின் மூலம் தமிழ்ப் பாடங்கள் முழுமையும் தொடர்ந்து கற்க இயலாது. செய்யுட்களை எவ்வாறு விளையாடிக் கற்பது ?

2. பாடத்தில் வரும் திட்ப நுட்பமான கருத்துக் களை விளையாட்டின் மூலம் கற்றல் எளிதன்று. அவற்றைச் சிந்தித்து ஆராய்ந்து சீர் தூக்கியே கற்றல் கூடும்.

3. பெரும்பாலும் முதலில் கற்றுக்கொண்ட விஷயங்களையே மேலும் கருத்தில் இருத்தப் பயிற்சி தரற்கே விளையாட்டு முறை பயன்படுகிறது.

4. அதிகமாகச் சிறு வகுப்புகளுக்குத்தான் இம் முறை ஏற்றது. சற்று பெரிய வகுப்புகளில் அவ்வப்போது விளையாட்டு முறையைப் பயன்படுத்தலாம்.

5. விளையாட்டில் மாணவர் மிகுந்த விருப்பம்காட்டு வதால் கற்கும் பொருளில் கருத்தூன்றாது போக நேரிட லாம்.

வினா:- விளையாட்டைக் கல்வியில் பயன்படுத்துவதைப் பற்றி ஆராய்க.

5. தமிழ் மொழிப் பயிற்சிக்குதவும் சில விளையாட்டுகள்.

கீழ்க்கண்டவை விளையாட்டுக்களைப் பற்றிய சுருக்கமான குறிப்புக்களேயாகும். ஒவ்வொரு விளையாட்டையும் பலவிதத்தில் விளையாடலாம். விளையாட்டில் போட்டியை ஏற்படுத்திக்கொண்டால்தான் சுவை பயக்கும். ஒரு மைல் ஒருவன் ஓடினுல் விளையாட்டாகாது. ஆட்டத்தில் பலர் ஓடல் வேண்டும். போட்டியும் போற்றுதலும் பரிசு அளித்தலும் விளையாட்டில் வேண்டும். யார் சீக்கிரம் செய்கின்ருர் எனப் பார்க்க வேண்டும். யார் அதிகம் செய்கின்ருர் எனப் பார்க்க வேண்டும். ஆகவே கீழ்க்கண்ட ஒவ்வொரு விளையாட்டையும் நடத்தும்போது இதனை மனதில் வைத்து நடத்த வேண்டும்.

I பலவித இணைப்பு விளையாட்டு:- (1) படங்களையும் படங்குறிக்கும் சொல்லையும் இணைத்தல்.

2. பொருத்தமான ஏற்ற சொல்லை இணைத்தல்.

கைக்கு	செருப்பு
தலைக்கு	வளையல்
காலுக்கு	தொப்பி

3. எழுவாய்க் கேற்ற பயனிலையை இணைத்தல்.

நாய்	கரைகிறது
சிங்கம்	குரைக்கிறது
காகம்	கர்ஜிக்கிறது

4. வினுவுக்குரிய விடையை இணைத்தல்.

5. உதாரணங்களையும் உபமேயங்களையும் இணைத்து விளையாடல்.

6. ஒருமைக்குப்பன்மையும் ஆண்பாலுக்குப் பெண் பாலும் தன்மைக்குப் பிற இடமும் ஆகிய சொற்களை இணைத்தல். இலக்கணத்தில் விளையாட்டு முறையை ஏராளமாகப் பயன்படுத்தலாம்.

7. எதிர் பதங்களை இணைத்தல். ஒரே பொருள் குறிக்கும் சொற்களை இணைத்தல்.

II சொல் ஆக்க விளையாட்டுக்கள்:- (1) தனித் தனி எழுத்தட்டைகளைக் குவித்துக் கொண்டு, பொருக்கிப் பல வார்த்தைகளை இணைத்தல்.

2. வட்டமாக மாணவர் அமர்ந்து ஆளுக்கொரு எழுத்தைக் கூறிச் சொற்களை அமைத்து ஆடலாம்.

3. மூலச் சொல்லிருந்து (Root word) பிறக்கும் பிற சொற்கள் ஒன்றிரண்டு கூறலாம். (உ-ம்) கண் = கண்டு கண்டான், காண், காட்சி, காணல். குதி = குதிரை, குதித்தல், குதித்தான்.

4. ஒரு சொல்லிற்குரிய பிற கடின சொற்களைக் கூறல். யானை — தந்தி, கரி, வேழம், தும்பி, கஜம், களிறு, பிடி.

5. காலி இடம் நிரப்பிச் சொல் ஆக்கல்:— சொல் ஏணி, சொல் சக்கரம் இவ்வாறே அமைக்கலாம்.

ப—ம்	—ரம்	பட—
படம்	வீரம்	படம்
பலம்	நேரம்	படல்
பயம்	பாரம்	படர்
பழம்	தூரம்	படகு

6. எழுத்துச் சுருக்கல்:- ஒரு நீண்ட சொல்லில் வந்துள்ள எழுத்துக்களை உபயோகித்து வேறு சிறு சொற்களை ஆக்கல். (உ-ம்) வீரசுதந்திரம் — வீரம், சுரம், திரம், தரம், ரதம், வீதி, சுதி, ததி, ரதி, வீசு, வீசும், வீதம், தந்திரம், சுந்தரம்.

7. எழுத்துப் பெருக்கல்:— ப......ம் இவற்றினூடே முறையே ஒன்று, இரண்டு, மூன்று எழுத்துக்களிட்டுச் சொல் ஆக்கல். (உ-ம்) படம், பவழம், பரவசம்

8. மோனைச் சொற்கள் கூறல்:— மோனை என்பது முதல் எழுத்து ஒரே எழுத்தாக, அல்லது இன எழுத்தாக இருத்தல். பாட்டி படுத்த பாயை பார். காலைக் கதிரவன் காட்சியைக் கண்டு காமாட்சி களித்தாள்.

9. எதுகைச் சொற்கள் கூறல்:— எதுகை என்பது முதலெழுத்து மாத்திரை அளவில் ஒத்து நிற்க, பிற எழுத்துக்கள் ஓசையில் ஒன்று படல். (உ-ம்) பாட்டி வீட்டில் பாட்டுக் கேட்டு நின்றேன்.

10. இயைபு என்னும் அழகுடன் வாக்கியத்தை முடித்தல்.

அப்பா தந்தார் துட்டு,
வாங்கினேன் லட்டு,
நாம் தின்று விட்டு,
போவோம் புறப் பட்டு.

ஓர் எழுத்தை மாற்றுதல்:— கொடுத்துள்ள ஒரு சொல்லிலே, ஒரு எழுத்தை மட்டும் மாற்றி வேறொரு சொல்லை உண்டாக்குதல்.

(உ-ம்) குடம் — படம், குலம், குடல்.

III வரிசைப் படுத்தல். (1) அம்மா, இலை, ஆடு, ஊசி, எலி, உரல், ஈரம், ஏணி — இச் சொற்களை உயிர் எழுத்து வரிசையில் அடுக்குதல் அல்லது சொல்லுதல். இப்பயிற்சி அகராதி காண உதவி செய்யும்.

(2) மாறி உள்ள எழுத்துக்களை வரிசைப் படுத்திச் சொல் ஆக்கலாம். (உ-ம்) ன், ஆ, சி, ய, ரி = ஆசிரியன்.

(3) மாறி உள்ள சொற்களை வரிசைப் படுத்திச் சொற்றொடர் உண்டாக்கலாம்.

IV செய்தி அனுப்பல்:- வரிசை வரிசையாக மாணவர் இடம் விட்டு நிற்க வேண்டும். வரிசையின் முதலில் உள்ளவர்களை மட்டும் தனியாக அழைத்து ஒரு செய்தியைக் கூற வேண்டும். அவர்கள் சென்று அடுத்தவர்கட்குக் கூற, கேட்பவர் ஒவ்வொருவரும் தன்பின்னுல் உள்ளவர்க்கு ஓடிக் கூற வேண்டும். இவ்வாறு விளையாடுவதற்காக அனுப்பிய செய்தி:— வகுப்பு அறையின் கூறையிலிருந்து பெரிய தேள், மேஜையில் விழுக, ஆசிரியர் திடுக்கிட்டு, ஐயோ என அலறி எழும்போது, மேஜை கீழே விழுந்ததினுல் நாற்காலியின் கால் ஒன்று ஒடிந்தது. இச்செய்தியை ஒருவர் பின் ஒருவராகக் கேட்டு வந்ததில் நாலாவது பையன் கூறியது:- தேள் ஆசிரியர் தலையில் விழுக, அலறி எழும்போது அவர் கால் ஒடிந்தது.

V அன்னியனைக் கண்டுபிடி:- 1. தலை, கால், வயிறு கண், காது, மூக்கு, சட்டை. 2. காலை, மதியம், சாமம், நேற்று, மாலை.

VI கண்ணும் பொத்தி அல்லது ஒழிந்தாடல்:-சொல் எழுதிய அட்டைகளை அறையில் பல இடங்களில் வைத்து ஒரு சொல்லைக் கூறி மாணவரைக் கண்டு பிடிக்க விடுதல்.

VII தபால் விளையாட்டு:- மாணவர் விலாசம் எழுதிய அட்டைகளை அந்தந்த மாணவனிடம் கொடுத்தல். அல்லது பொருள்களின் பெயர் எழுதிய அட்டைகளை அவ்வப் பொருள்களின் பேரில் வைத்தல்.

VIII கதை அமைத்தல்:- ஆளுக் கொரு வாக்கியம் கூறி ஒரு புதுக் கதையை உருவாக்கிக் கொண்டே செல்லல். கதை பற்றிய விளையாட்டுக்களை பின்னர் கற்போம்.

வினு:- 1. விளையாட்டு முறையில் குழந்தைகளுக்கு வாசிப்புக் கற்றுக் கொடுக்க அவசியமான உபகரணங்கள் எவை? அவற்றில் ஒன்றை நீர் எப்படித் தயாரித்து எந்த விதத்தில் உபயோகப்படுத்துவீர் என்பதை விளக்கு.

[**Ele. 1949.**]

2. இரண்டாம் வகுப்பிற்கு எழுதுதல், பேசல், படித்தல் பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற சில விளையாட்டுக் களைக் கூறுக.

6. நடிப்பு முறை.

பெரும்பாலும் பள்ளிகளில் நடிப்பு முறையில் நாட்டம் செலுத்துவதில்லை. ஆசையோடு அதிகம் கையாளுவதில்லை. ஆண்டிற் கொரு முறை பள்ளியில் ஆண்டுவிழாவிலே வேண்டிய நாடகம் ஒன்றை வெகு விமரிசையாக நடத்துவது வழக்கம். அதிலே ஆசிரியர் எழுதிய வசனங்களை மாணவர் மனனம் செய்து ஒப்பிப்பார். ஒரு சில மாணவரே நடிக்கும் வாய்ப்புப் பெறுவர். மற்றையோர் நடிக்க ஆசையுற்று அயர்ந்து அமர்ந்து பார்த்திருப்பார். ஆகவே நடிப்பு முறையில் நாட்டங்கொண்டு நாளும் கையாள, வழி வகைகளை வகுத்துக் காண்போம்.

மூன்று விதத்தில் நடிப்பினைப் பயன்படுத்தலாம். 1. நாடகம் நடித்தல். 2. சிறு கதை நடித்தல். 3. போலி நடிப்புகள் புரிதல்—அதாவது பெரியோர் செய்யும் தொழில்களையும் தினசரி நிகழ்ச்சிகளையும் போல நடித்தல். தாயார் சோறு சமைப்பது போல, மண்ணை, இலையை வைத்துக் குழந்தைகள் ஆடுவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

மாணவர்க்கேற்ற சில போலி நடிப்புகள்:-

கடை வைத்து விற்பனை செய்தல்:- இதிலே விலை விசாரித்தல், பொருளின் தரம் விசாரித்தல், சரக்கின் உயர்வை வியாபாரி புகழல், குறைத்துக் கேட்டல், நிறுத்தல், கொடுத்தல், செல்லாக் காசு சோதித்தல் முதலியவை போல நடித்தல். இது போன்றே மருத்துவ சாலைக் காட்சிகளை நடித்தல், நீதிமன்ற விசாரணை, பஞ்சாயத்துத் தீர்த்தல், ஜெப ஆராதனை நடத்தல், பிள்ளையைப் பள்ளிக்கு வைத்தல் முதலியவற்றைச் சிறிது நேரம் மாணவர் சிந்தித்து, கலந்தாலோசித்து நடிக்கலாம்.

நடிப்புப் பயிற்சியில் கவனிக்க வேண்டியவை:-

1. மாணவர் கதையை முதலில் வாசித்தல் அல்லது கூறக் கேட்டு அறிந்து கொள்ளல் வேண்டும். பின்னர் ஆசிரியர் அன்பின் துணையாகி, இன்ப வழிகாட்ட, மாணவரே கதையின் காட்சிகளை வகுத்துக் கொள்ளலாம். பாத்திரங்களைத் தெரிந்தெடுக்கலாம். இரண்டு மூன்று நடிப்புத் தொகுதிகளாக மாணவரைப் பிரித்துக் கொள்வதால் அனைவர்க்கும் நடிக்கும் வாய்ப்பும் இன்பமும் கிடைக்கும்.

2. சகல பொறுப்பினையும் மாணவர்பால் விட்டு விடலே சிறந்தது.

3. பேச வேண்டிய வசனங்களை முதலில் சற்று சிந்திக்கலாம், கலந்து யோசிக்கலாம், ஆசிரியர் ஆங்காங்கு ஆலோசனை கூறலாம். எழுதிக்கொடுத்த சம்பாஷணையை மனனம் செய்வதில் எவ்விதப் பயனுமில்லை. மிக உயர்ந்த வசன நடை பேச ஆசிரியர் எதிர்பார்க்கக்கூடாது.

4. பெரிய திரைகளும் காட்சி மாற்றங்களும் முக வர்ணப் பூச்சுகளும் தாடிமுடிகளும் பிற நாடகச் சூத்திரங்களும் வகுப்பு நடிப்புக்குத் தேவையில்லை. பாலரின் கற்பனை பரந்தது. கிடைக்கக்கூடிய சிறிய பொருட்களைப் பயன்படுத்தினால் போதும். மாணவர் பயிற்சியில் பேச்சும் நடிப்புமே முக்கியம்.

5. நடிகர்களை மாற்றி, மாற்றி எல்லா மாணவரும் பங்கு கொள்ளுமாறு தூண்டித் துணைபுரிய வேண்டும்.

6. **திருத்தும் முறை:-** (a) ஆசிரியர் நடித்தற் குதவும் நண்பராகவும், ஆனந்தித்துப் பார்க்கும் அன்பராகவும் திகழ வேண்டும். மாணவரின் சுய முயற்சியையும் தற்சார்பையும் வளர்க்க ஆசிரியர் முயலவேண்டும்.

(b) அடிக்கடி ஊடே ஊடே பிழைகளைத் திருத்துவதால், கதைத் தொடர்பும் இன்பமும் அற்றுப் போகும். சிறுவர் உற்சாகம் குன்றும். பிழைகளைக் குறித்து வைத்து இறுதியில் திருத்தலாம்.

ஆகவே சிறு வகுப்புகளிலிருந்து படிப்படியாய் நடிப்புப் பயிற்சியைப் பயன் படுத்துவதால் நாளடைவில் தேர்ச்சியும் திறமையும் காணலாம். இவ்வாறு மிகுந்த ஆயத்தமின்றி, ஆங்காங்கு சற்று உதவி பெற்று நடிப்பதை முன் ஆயத்தமில்லா நடிப்பு (Improvization) என்பர்.

7. நடிப்பினுல் விளையும் நற்பயன்கள்.

1. **சுயமாகப் பேசுதல்:-** இடத்திற்கு ஏற்றவாறு உடனே எண்ணிப் பேசும் திறமையை மாணவர் அடைகின்றனர்.

2. **உணர்ச்சி மிக்க பேச்சு:-** ஒருவரை ஒருவர் பார்த்தும் பயின்றும் போட்டியிட்டும் உற்சாகமாக, உணர்வாக, அபிநயத்துடன் நடிக்கப் பழகுகின்றனர்.

3. **சபைக் கூச்சம்** அச்சம் முதலியன அகலும்.

4. **சிந்தன சக்தியும்** கற்பன சக்தியும் வளரும்.

5. **ஒத்துழைப்பும்** கூட்டுறவும் உண்டாகும். ஒருவருக்கொருவர் துணை புரிகின்றனர்.

6. **இன்பம்** மாணவர் பலரும் நடிக்க ஆசைப்படுவார்கள். அவ்வாசையை, அடிக்கடி நடத்தும் 'ஆயத்தமிலா நடிப்பு' பூர்த்தி செய்கிறது. பள்ளி வாழ்க்கையில் ஒரு இன்பம் துளிர்க்கிறது.

7. **பேச்சுப் பயிற்சி:-** கோவைப் பட, ஒழுங்குற காரண காரியத்துடன் பேசும் பயிற்சி பெறுகின்றனர்.

8. **செயல்-** சொற்பொழிவைக் கேட்டுக்கேட்டுச் சோர்வும் வசனங்களை வாசித்து வாசித்து வாட்டமுற்று உட்கார்ந்து உட்கார்ந்து உடல் நோவும்கொண்ட மாணவர்க்கு நடிப்புப் பயிற்சியானது மன மகிழ்ச்சியையும் அறிவு மலர்ச்சியையும் அளிக்கும்.

வின:- 1. ஆரம்ப பருவத்தில் (Early stages) மொழியைக் கற்பிப்பதில் நடித்துக் காட்டும் முறையால் விளையும் நற்பயன்களை விளக்கிக் கூறுக. (45 & 46 Sec)

2. இரண்டாம் அமைப்பு (II Form) மாணவருக்கு எத்தகைய நடிப்புப் பயிற்சி அளிப்பீர். உதாரண மூலமாக விளக்குக. (49 Sec)

8. கிண்டர் கார்டன் முறை.

பெயரும் வரலாறும்:- Kindergarten - என்ற சொல்லுக்குக் குழந்தைத் தோட்டம் என்பது பொருள். ஜெர்மனி நாட்டு புரோபெல் (Froebel) எனும் அறிஞர் குழந்தைப் பற்றும் பேரன்பும்கொண்டு இம்முறையைக் கண்டுபிடித்தார். பள்ளியைத் தோட்டமாக உவமித்ததால் கிண்டர் கார்ட்டன் எனப் பெயரிட்டனர். பள்ளியாகிய தோட்டத்தில் குழந்தைகள் தான் பயிர்; ஆசான் தோட்டக் காரன்; இயற்கைதான் இன்பத்தாய்; இயற்கையாய் வளர்கின்றனர் குழந்தைகள். ஆயினும் குழந்தைகட்கேற்படும் இடையூறுகளாகிற களேயை அவ்வப்போது ஆசிரியர் எடுக்கிருர். வாட்டமுறுங்கால் வளமிக்க உரம் எனும் ஊக்கம் ஊட்டுகின்ருர்.

முறை விளக்கம்- (a) விளேயாட்டை அடிப்படையாகக் கொண்டதே இம்முறை. (b) பாடங்களுக்கு முதன்மை வழங்காமல் சிறுவர்களேயே சிறப்பாகக் கருதிக் கற்பிப்பதை வற்புறுத்துகிறது. (c) சுறுசுறுப்பூட்டும் சிறு சிறு கைப் பயிற்சிகள் மூலம் கற்பிக்க வழி காட்டுகிறது. (d) பலவித நிறங்களே அறிதல், உருவ வேறுபாடுணர்தல், பல் வடிவக் கட்டைகளே அவ்வடிவக் குழிகளில் பொருத்தல், களிமண், காகிதம், குச்சிகள், விதைகள் ஆகியவற்ருல் பொருள்கள் செய்தல் முதலியவை கிண்டர் கார்டன் பயிற்சிகள். (e) இவ்விளேயாட்டுக்களால் தசைநார்க் கட்டுப்பாடும், வடிவம், நிறம், கன அளவு பற்றிய அறிவும் உண்டாகின்றது. நினேத்தபடி தசைநார்களே இயக்கும் திறனும், வடிவ உணர்ச்சியும் எழுத்துக்களே எழுதத் துணே புரியும். விளேயாட்டுக்

குரிய கருவிகளை முறையின் முதல்வராகிய புரோபெல் அமைத்து அளித்துள்ளார். அவை "புரோபெல் பரிசு" எனப்படும்.

---

9. செயல் திட்ட முறை.
(Project method)

முறை விளக்கம்:- கில் பாட்ரிக் எனும் பேராசிரியர் தொழில் மூலம் கல்வி கற்பிக்க வேண்டும் என விரும்பினார். அம்முறைப்படி மாணவர் தாமாகவே விரும்பி ஒருதொழிலைத் தேர்ந்தெடுக்கலாம். எடுத்து அதனை எவ்வாறு செய்து முடிக்கலாம் எனத் திட்டமிடலாம். பின்னர் தாமாகவே செய்து முடித்து, அதன் பயன்களையும் நலன்களையும் சீர்தூக்கிப் பார்க்கலாம். ஆகவே இவ்விதமாக அவர் ஆராய்ந்து கண்ட முறையில் உள்ள நான்கு படிகளாவன:— 1. தேர்ந்தெடுத்தல், 2. திட்டமிடல், 3. செய்தல், 4. சீர்தூக்கல்.

"தேர்த்தெடுத்துத் திட்டமிட்டுச் செய்துபின் சீர்தூக்கி
ஆய்ந்தறி வாற்றலில் ஓங்கு" —

என்ற குறட்பாவால் இதனை ஞாபகத்தில் கொள்ளலாம். இவ்வாறு திட்டமிட்டு வினைசெயல் மூலம் பல துறை அறிவையும் மாணவர் இன்பமாய் இயற்கையாய்த் தேவை உணர்ச்சியோடு பெறுகின்றனர்.

பெயர்:- புராஜெக்ட் எனும் சொல்லானது திட்டம், உபாயம், எடுத்துக்கொண்ட காரியம் எனப் பொருள்படும். (Project=Plan, proposal, scheme) ஆகவே இம்முறையின் தன்மைகளை வெளிப்படுத்துமாறு, இதற்குப் பல பெயர்

இட்டு வழங்குகின்றனர். தன்னேக்க முயற்சி முறை, செயல் திட்டமுறை, தான் கருதிச் செய்யும் முறை என்பன இதன் பல பெயர்கள்.

சில செயல் திட்டங்கள்:- சோப்புச் செய்தல், தேனீ வளர்த்தல், நூற்றல், கடை வைத்து மாணவர்க்கு வேண்டிய சாமான்களை விற்றல், பள்ளிக்கூட அஞ்சல் நிலையம், செங்கல் அறுத்தெடுத்தல், களிமண் பாண்டங்கள் செய்தல், கோழி வளர்த்தல், விசிறி, பாய் முதலியவை பின்னல், வலைவகைகள் பின்னல், தோட்டப் பயிர் செய்தல் முதலியன மாணவர்க் கேற்றவை.

10. செயல் திட்ட முறையில் மொழிப் பயிற்சி பெறும் விதம்:-

1. இம் முறையில் செயல் செய்யுங்கால், கணிதம், பூகோளம், சரிதை, விஞ்ஞானம், தமிழ் முதலிய பல பாடங்களிலும் மாணவர் அறிவு பெறுகின்றனர். உதாரணமாகக் காற்றாடி செய்யும் திட்டத்தை எடுத்துக் கவனிப்போம்.

சித்திர அறிவு:- காற்றாடியை வரைந்து காட்டலால் பெறலாம்.

விஞ்ஞான அறிவு:- காற்றாடி ஏன் மிதக்கின்றது என்ற ஆராய்ச்சியால் பெறலாம்.

கணித அறிவு, காற்றாடிக்கு வேண்டிய தாளின் பரப்பு, வாலின் நீளம், விலை முதலியவற்றைக் கணக்கிடுங்கால் அடையலாம்.

பூகோள அறிவு, காற்று வீசும் திசை, மாதம் முதலிய வற்றை அறிவதால் கிடைக்கும்.

இப் பாடங்கள் தவிர இனி, தமிழ் மொழியறிவை எவ்வாறு பெறுகின்றனர் என்பதைக் காண்போம்.

தேர்ந்தெடுத்தலில்:- "காற்றாடி நல்ல விளையாட்டுக் கருவி. இது காற்று வீசும் மாதம்; ஆதலால் நன்கு பறக்க விடலாம். இவ் விளையாட்டு மிக்க இன்பம் தரும்; உடற் பயிற்சி தரும்." என்று இவ்வாறெல்லாம் பேசிக் காற்றாடி செய்ய முடிவு கட்டுவர் மாணவர். இதிலே பேச்சுப் பயிற்சி பெறுகின்றனர்.

திட்டமிடலில்:-

பொருள் கருவி காலம் வினையிடனொடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

எனும் திருக்குறள் வெண்பாவில் கூறியபடி, காரியங்களை முன்னரே எண்ணிச் செய்தல் வேண்டும். காற்றாடி செய்ய என்ன பொருட்கள் தேவை ? எவ்வளவு தேவை ? எங்கு அப்பொருட்களைப் பெறுவது? எவ்வாறு செய்வது?" என்றெல்லாம் அனைவரும் கலந்தாலோசிப்பதால் பேச்சுப் பயிற்சி பெறுவர். மேற்கூறிய விவரங்களைப் பற்றி, செய்தித் தாளிலும் மலர்த்திரட்டுகளிலும் நூற்களிலும் வாசித்தறிவதால் வாசிப்பு பயிற்சியும், வாசித்தவற்றைக் குறித்துக் கொள்வதால் எழுத்துப் பயிற்சியும், பிற மாண வர்க்குக் கூறுவதால் பேச்சுப் பயிற்சியும் பெறுகின்றனர். மேலும் காகிதம், பசை, குச்சி, நூல் முதலியவை வாங்கு வதற்கு வேண்டிய மொத்தப் பணத்தை எழுதித் திட்ட மிடலாம்; பணம் பெறலாம்; சாமான்களை அனுப்பும்படி கடைக்காரனுக்கு எழுதியனுப்பலாம். தொழில் செய்வ தற்கு வசதியான இடம், தேவையான கருவி முதலியவை களைக் கேட்டுத் தலைமை ஆசிரியர்க்கு விண்ணப்பிக்கலாம். இவற்றின் மூலம் மொழிப் பயிற்சிகள் பெறுகின்றனர்.

செய்தலில்:- செய்யுங்கால் பிழை நேரிட்டாலோ விளங்காவிட்டாலோ, பிற மாணவத் தோழரோடும் ஆசிரியரோடும் கலந்து பேசிக் கற்றுக் கொள்ளலாம். படங்களைப் பார்த்தும் புத்தகங்களைக் கற்றும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்

சீர் தூக்கலில்:- செய்து முடித்த பின் செய்த சாமான்களின் தன்மை, அதிலுள்ள குறைகள், செய்யுங்கால் ஏற்பட்ட இடர்பாடுகள், இன்னும் எவ்வாறு நன்கு செய்யலாம் என்பன போன்ற விபரங்களைப் பற்றி உரையாடலும் குறித்து வைப்பதும் மொழிப் பயிற்சியாகும். செய்த சாமான்கள் சிலவற்றை விற்றற்கு விளம்பரங்கள் வெளியிடலாம்.

ஆகவே இம்முறையின் நான்கு படிகளிலும் நன்கு பேச, எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்கின்றனர். செய்யும் பொருள் பற்றிய செய்யுட்கள் இருப்பின், அவற்றையும் பயன் படுத்தலாம். பேச்சு, எழுத்து, வாசிப்புப் பயிற்சியோடு இணைத்து ஆங்காங்கு இலக்கணமும் கற்பிக்கலாம்.

வினு:- 1. மூன்றும் வகுப்பு மாணவருடைய தமிழ் மொழிப் போதனைக்குப் பயன்படக் கூடியதும் செயல் திட்ட முறைக்கு ஏற்றதுமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு அதை எவ்வாறு பயனுடையதாகச் செய்வீர் என்பதனை விவரிக்க. (Sec 46)

2. புராஜெக்ட் முறையின் வெவ்வேறு நிலைகளைக் கூறுக. ஆரம்பப் பள்ளிக்குப் பொருந்தக் கூடிய ஒரு புராஜெக்டைக் கூறி, அது மொழி கற்பதற்கு எப்படி உதவும் என்பதைக் காட்டுக. (Ele. 51)

11. வார்தாத் திட்டம்.

"ஆங்கிலேய ஆட்சியிலே அமைத்த கல்வித் திட்டம் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படுவதாக இல்லை" எனக் காந்தியடிகள் கருதினர். ஆதலால் வார்தா என்னும் இடத்தில் பல ஆண்டுகள் கல்வியைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வகுத்து அளித்த திட்டமே வார்தாத் திட்டம்.

இதன் சிறப்பியல்புகளாவன:- 1. நெசவு, உழவு அல்லது கைத்தொழில் ஆகியவற்றுள் ஒன்றைத் திருத்தமாகச் செய்யப் பயிற்சி தரல். இப் பயிற்சி வாழ்கைக்குதவல் வேண்டும். 2. ஒரு பாடசாலையில் ஒரு தொழிலே போதித்தல். 3. அந்தத் தொழில் மூலமாகவே கல்வியைக் கற்பித்தல். 4. பிள்ளைகள் செய்யும் சாமான்களை விற்றுப் பள்ளியின் தேவைகளுக்கு ஓரளவுக்குச் செலவிடல். 5. தாய் மொழி முதல் மொழியாகவும் ஹிந்தி இரண்டாம் மொழியாகவும் கற்பித்தல். 6. தொழில் மூலமாகவும் பிற செயல்கள் மூலமாகவும் நம் நாட்டுப் பண்பாடுகளையும் கலைகளையும் வளர்த்தல்; குண இயல்புகளை நடைமுறையில் பின் பற்றப் பயிற்சிகள் அளித்தல்.

12. ஆதாரக் கல்வித் திட்டம்.

ஆதாரக் கல்வித் திட்டம்:- வார்தாத் திட்டம் மேலும் மேலும் ஆராய்ச்சி நிலைக்குட் பட்டது; சார்ஜெண்டுக் கமிட்டியார் ஆராய்ந்தனர். ஜகீர் ஹுஸேன் குழுவினரும் ஆராய்ந்தனர். பல சீர்திருத்தங்களைப் பெற்று ஆதாரக் கல்வி என வழங்குகிறது. வாழ்க்கைக்கு ஆதாரமான கல்வியைப் புகட்டுவதால் ஆதாரக் கல்வி எனப் பெயர் பெற்றது.

வாழ்க்கைக் கல்வி என்பது மறு பெயர். இது காந்தியடிகள் இட்ட பெயரே. இதற்கு மூன்று விதமாகப் பொருள் கூறலாம். 1. வாழ்க்கைக்குரிய கல்வி. 2. வாழ்க்கை மூலம் கல்வி. 3. வாழ்க்கை முழுவதும் கல்வி.

ஆதாரக் கல்வியின் பல நிலைகள்:- 1. பாலர் ஆதாரக் கல்வி. 6 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு.

2. இடைநிலை **ஆதாரக் கல்வி:-** 6 முதல் 14 வயது வரை, 8 ஆண்டுகள் பயில்வது. இதற்கு விரிவான நல்ல பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

3. உயர்நிலை ஆதாரக் கல்வி:- 15 முதல் 18 வயது வரை இது இப்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

4. பல்கலைக் கழக நிலை:- இதைப்பற்றி இன்னும் நன்கு ஆராயவில்லை.

நடுநாயக இயக்கங்கள்:- ஆதாரக் கல்வியிலே ஏதாவதொரு தொழிலை, திருத்தமாக வாழ்க்கையில் பயன்படக் கூடிய வகையில் கற்றுக்கொள்ளல் வேண்டும். இது தவிர பல செயல்களையும் செய்யப் பயிற்சியளிக்க வேண்டும். அச்செயல்களில் சில வருமாறு:—

1 ஆரோக்கியமும் துப்பரவும் பற்றிய பயிற்சிகள்.

2. தன்னம்பிக்கைப் பயிற்சிகள்.

3 குடிமைப் பயிற்சி.

4. உள்ளப் பண்பாட்டை. வளர்க்கக் கூடிய கலைகளிலும் ஆக்க வேலைகளிலும் பயிற்சி.

ஆதாரக் கல்வியில் மொழிப் பயிற்சி:- ஆதாரத் தொழிலின் மூலமாகவும் மேற்கூறிய இயக்கச் செயல்களின் மூலமாகவும், மொழி, கணக்கு; விஞ்ஞானம், சமூகநூல் முதலிய பாடங்களைக் கற்பிக்க வேண்டும்.

ஒரு செயலைப்பற்றி வெளியிடுவதற்குப் பயன்படுவதே மொழி. செயலில்லையேல் மொழியில்லை என்றே சொல்லலாம் ஆகவே ஆதாரக் கல்வித் தொழில்களையும் இயக்கச் செயல்களையும் செய்யும் போது, ஒவ்வொரு பகுதியிலும் மொழிப் பயிற்சி இடம் பெறுகிறது. உதா:- கொடி வணக்கம் எனும் செயலிலே கொடி, அசோகச் சக்கரம், வட்டம், பச்சை, கயிறு கொடிமரம் முதலிய சொற்களை வாசிக்கவும் எழுதவும், கற்பிக்கலாம். அவற்றைப்பற்றிப் பேசவும் கற்பிக்கலாம். 2, 3 வது வகுப்பில் கொடியைப் பற்றிய வாக்கியங்களைக் கற்பிக்கலாம். இன்னும் சற்று மேல் வகுப்பில் கொடியின் வரலாறு, தத்துவங்களைப் பற்றிக் கட்டுரை எழுதலாம். மேலும் ஆதாரக் கல்வியிலே, நாட்குறிப்பு எழுதி வரல், மாத அறிக்கைகளையும் பலவகைத் திட்டங்களையும் தயாரித்தல், வகுப்புப் பத்திரிகை, பள்ளிக்கூடப் பத்திரிகை, கிராமப் பத்திரிகை, எழுதி வெளியிடல், இலக்கியக் கழகங்கள் நடத்தல், சட்டசபைகள் பஞ்சாயத்து மன்றங்கள் நடத்தல், நாடகங்கள், களியாட்டங்கள், விழாக்கள் கொண்டாடல், ஆண்டுக்கிரு முறையாவது கண்காட்சி சாலைகள் தயாரித்தல், துப்பரவு பற்றிய சிறு புத்தகங்கள் எழுதி வெளியிடல் இவற்றின் மூலமாக மாணவர் நல்விதம் மொழிப் பயிற்சி பெறுகின்றனர்.

13. வகுப்பு முறை.

நம் பள்ளிகளில் இப்போது வகுப்பு முறையைப் பின் பற்றுகிறோம். ஒரு வகுப்பிற்கு சுமார் 40 பிள்ளைகள். அவர்கள் வெவ்வேறு திறமையுடையவர்; அறிவிலும் ஆற்றலிலும் வேறுபட்டவர்; விருப்பத்திலே மிகவும் வேறுபட்டவர். சிலர் மிக நுட்பத் திறனுடையவர்; சிலர் மந்த புத்தியுடையவர்; சிலர் நடுத்தர அறிவு உடையவர். இத்துணை விதத்தில் வேறுபட்ட இவர்களை ஒன்றாக வைத்து ஒரே மாதிரியாக ஒரே முறையில் கற்பிப்பது சிறந்ததாகாது. இது ஆமையினையும் முயலினையும் சேர்த்து ஓட்டம் கற்பிப்பதொக்கும். வேறுபட்ட அறிவு, ஆற்றல், ஆசையுள்ளவர்களுக்கு வேறுபட்ட முறைகளையல்லவா மேற்கொள்ளல் வேண்டும்? இது தவிர வகுப்பு முறை பிற குறைகளையும் உடையது.

வகுப்பு முறையின் குறைகள்:- பாடத் திட்டமும் பாடப் பொருளுமே மிக முக்கியமாகக் கருதி வற்புறுத்திக் கற்பிக்கப்படுகின்றது. குழந்தை மன நிலைக்கும் திறமைக்கும் ஏற்றவாறு கற்பிக்கும் நோக்கோடு முறையமையவில்லை

2. மாணவர்களின் திறமையைத் தனிப்படக் கவனித்து விருத்தி செய்வதில்லை.

3. மந்தமானவர்கள் திறமை வாய்ந்த மாணவருடன் சேர்ந்து விரைந்து கற்றுச் செல்ல இயலாது.

4. திறமைசாலிகள் மந்தமானவர்கட்காகக் காத்து நிற்கின்றனர். அவர்களின் விரைவான முன்னேற்றம் தடைப்படுகின்றது.

5. மிகப் பிற்போக்கான மாணவர்கள் அயர்ச்சியுற்று, மகிழ்ச்சியற்று, தோல்வியுற்று வருந்துவர்.

6. சிலருக்கு விளங்காததாலும், முன்னேற்றம் தடைப்படுவதாலும், அவர்களிடையே குறும்பு, அசட்டை, கவலையீனம், முயற்சிக் குறைவு, சோம்பல் முதலிய தீய பழக்கங்கள் காண நேரிடுகின்றது.

14. தனிப் பயிற்சி முறை.

மேற்கூறிய வகுப்பு முறையின் குறைகளை நீக்க வேண்டுமாயின், வகுப்பிலேயே ஒவ்வொரு மாணவனுடைய ஆற்றலையும் அறிவினையும் ஆசிரியர் தனித்தனி கவனித்தறிய வேண்டும். மாணவர்க்குத் தனித் தனியாகப் பயிற்சிகள் தந்து அவ்வப்போது அவர்கள் செய்யும் வேலையை மேற்பார்வை செய்து, ஏற்ற துணைபுரிய வேண்டும்.

குறிப்புதாள்த் வாயிலாகக் கற்பித்தல்:- இம் முறையில் குறிப்புத்தாட்கள் மூலமாகப் பாடங்களைக் கற்பிப்பர். ஆண்டு முழுமையும் கற்கவேண்டிய பாடங்கள் அனைத்தையும் சிறு சிறு பிரிவுகளாகவும் உட்பிரிவுகளாகவும் பிரித்துத் தொடர் எண் இட்டுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஓர் குறிப்புத்தாள் தயாரிக்க வேண்டும். இவற்றை மிக நன்றாய் ஆராய்ந்து, அனுபவத்தின் பேரில், தயாரித்தல் தேவை. ஆண்டுத் துவக்கத்திலே இவை அனைத்தையும் ஆசிரியர் தயாரித்து முடித்து வைத்திருக்க வேண்டும். மாணவர் மனநிலைக்கும் விருப்பு வெறுப்புக்கும் ஏற்ப, இவை அமைய வேண்டும்.

குறிப்புத்தாட்களின் உள்ளுறை:- இவை விஷயத்தை விளக்கும் விபரங்கள் கொண்டவை. தம்மறிவைத் தாமே வளர்த்துக் கொள்ளத் தக்க துணைபுரிவன; தூண்டுவன

சிறு படங்களாலும் எளிய சொற்களாலும் விஷயங்கள் விளக்கப்படும். குறிப்புத்தாட்கள் மாணவனின் சிந்தனையைத் தூண்டுவன. உதாரணமாகத் தமிழ்ப் பாடத்தில் கடின சொற்றொடரின் விளக்கமும் நுண்ணிய கருத்துக்களின் தெளிவுரையும் பொருள் சம்பந்தமாக வாசிக்கவேண்டிய புத்தகங்களின் பக்கங்களும் இலக்கணக்குறிப்புகளும் விளக்கங்களும் வாக்கிய அமைப்பு, சொல் அமைப்பு பற்றிய விவரிப்பும் கடின சொல், மரபுத்தொடர் முதலியவற்றின் பொருளுக்காகப் புரட்டவேண்டிய அகராதி வகைகளும் சிந்தனையைத் தூண்டும் சில வினுக்களும் குறிப்புத்தாட்களில் குறிக்கப்பட்டிருக்கும். ஆனல் குறிப்புத்தாட்கள் சுருக்கமாகவே இருத்தல் வேண்டும்.

தமிழில் கட்டுரை, உரைநடை, இலக்கணம் ஆகிய பாடங்கள் குறிப்புத்தாட்கள் வாயிலாகக் கற்பிக்க ஏற்றவை. செய்யுளை இம்முறையால் சிறிய வகுப்புகளில் கற்பிப்பது சிறந்ததாகாது.

குறிப்புத்தாள் கொண்டு மாணவர் விளங்கிக்கொள்ள இயலாவிடின் ஆசிரியரைஅண்டி எந்த நேரத்திலும் எப்பொருளையும் இனிது அறிந்து கொள்ளலாம். ஆசிரியர் அன்பான துணைவர்; வேண்டுவன கற்க தூண்டுபவர்; குழி வீழ்கையில் வழிகாட்டி; விழி மங்குகையில் ஒளிகாட்டி என உணரல் வேண்டும்.

தேர்ச்சி அறிதல்:- இக் குறிப்புத்தாளை முடித்த பின்னர் மாணவரின் தேர்ச்சியையும் தெளிவையும் தெரிந்து கொள்ளச் சில கேள்விகள் கேட்கலாம்; சிறு பயிற்சியும்

தரலாம். ஒரு அட்டவணையிலே ஒவ்வொரு மாணவரும் வரிசையாகக் குறிப்புத்தாட்களைத் தொடங்கிய தேதி, முடித்த தேதி இவற்றைக் குறித்து வைத்துவரல் வேண்டும். இவ்விதத் தேர்ச்சி பற்றிய அறிக்கைஅட்டைகள் மாணவரிடத்தும் ஆசிரியரிடத்தும் தனித்தனி இருத்தல் நலம்.

இம்முறையின் நலன்கள்:- 1. மாணவர் தத்தம் தனித்திறனுக் கேற்றவாறு விரைந்தோ மெதுவாகவோ கற்றுச் செல்லலாம். 2. மந்தமாணவன் இளக்கரித்துத் தளர்ச்சியுற வேண்டியதில்லை. அவனுக்கென ஆசான் தனிக் கவனம் செலுத்தலாம். திறமைசாலி விரைந்து மகிழ்ந்து கற்றுச் செல்லலாம்; காத்து நிற்கும் கஷ்டமில்லை, கற்றவரையில் தெளிவாய்க் கற்கலாம். 3. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் தனிக் கவனம் செலுத்துகின்றனர். 4. தானே கற்பதால் பொருள் ஆழமாக மனதில் நிற்கும். 5. தன்னம்பிக்கையும் தற்சார்பும் மனமகிழ்ச்சியும் மாணவர் உறுகின்றனர். 6. மாணவர் தத்தம் திறமைகளையும் சிறப்பான இயல்புகளையும் வெளிப்படுத்த வசதியுண்டு.

இம்முறையின் குறைகள்:- 1. ஆசிரியர் முற்கூட்டியே குறிப்புத்தாட்கள் தயாரித்தல் வேண்டும். தயாரிக்க உழைப்பும் உற்சாகமும் அனுபவமும் தேவை.

2. அதிகமான திருத்தும் வேலை ஏற்படுகிறது. குறிப்புத் தாள் முடித்த பின்னரும் ஆசிரியர் மாணவர் திறமையைத் தேர்ச்சியை அளந்தறிய வேண்டியதிருக்கிறது. ஆகவே அதிக மாணவர் இருக்கும் வகுப்பை இம் முறையில் நடத்துவது கடினம். ஒரு வகுப்புக்குச் சுமார் முப்பது மாணவர் இருப்பது ஏற்றது என்பார்.

15. டால்டன் திட்டம்.

தோற்றம்:- டால்டன் திட்டமும் தனிப் பயிற்சி முறை போலே, தனிக்கவனம் செலுத்தி மேற்பார்த்தல், தானே கற்றல் முதலிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதே. வகுப்புப் போதனா முறையின் குறைகளைக் குறைப்பது வகுப்புத் தனிப் பயிற்சி முறை. ஆனால் டால்டன் முறை, அக்குறைகளை அறவே அகற்றுவது. தொகுப்பு அல்லது வகுப்பு முறையின் குறைகளை நீக்க விருப்பங் கொண்ட திருமதி ஹெலன்பார்க் ஹர்ஸ்ட் அம்மையார் இத்திட்டத்தை முதன் முதல் 1920-ம் ஆண்டு அமெரிக்காவில் டால்டன் என்ற நகரில் பயனுறப் பரீட்சித்துப் பார்த்ததால், டால்டன் திட்டம் என்று பெயர் பெற்றது. ஹெலன் அம்மையார் இதனை முறை என்றாவது திட்டம் என்றாவது குறிப்பிடாமல், "கல்வியில் வேண்டும் சீர்திருத்தம்" என்றே கூறினர்.

இம்முறையின் சிறப்பியல்புகளாவன:- 1. கால அட்டவணைக்குள்ளே கட்டுப்படாது இஷ்டப்படும் வரை எப்பாடத்தையும் படிக்கலாம். 2. இம் முறையில் வகுப்பறைகள் ஆராய்ச்சிக் களங்களாக மாறுகின்றன. அதாவது இம் முறைப் பள்ளிகளிலே வகுப்பு அறைகட்குப் பதிலாகப் பாட அறைகளே இருக்கும். உதாரணமாகத் தமிழ், கணக்கு, சரித்திரம் முதலிய பாட அறைகள் இருக்கும். ஒவ்வொரு பாட அறையிலும் அவ்வப் பாடத்தில் தேர்ந்த அறிவும் திறனும் பெற்ற பாடவல்லுநர்களே ஆசிரியர்களாக இருப்பார்கள். பாடங்கற்கத் துணைபுரியும் பல்வகைக் கருவிப் பொருள்களும் (உபகரணங்கள்) விரிவான விளக்க நூற்

களும், பிற வசதிகளும் அவ்வவ் வறைகளில் ஒழுங்குற இருக்கும். 3. பலதரப்பட்ட தேர்ச்சியுள்ள மாணவர்கள் ஒவ்வொரு பாட அறையிலும் இருப்பார்கள். 4. பாடங்களைத் தாமாகவே கற்கத் துணைபுரியும் குறிப்புத் தாட்கள் (முன் விளக்கப்பட்டது) ஒவ்வொரு பாடத்தையும் தொடங்குமுன் கொடுக்கப்படும்.

இவற்றிற்கு பாடமுன் ஆயத்தத்தாள் அல்லது பாடமுன் ஒப்பந்தம் (Pre-lesson assignment) என்று பெயர். குறித்த காலத்திற்குள் இத்தனை பாடங்கள் கற்று முடிக்க வேண்டும் என மாணவர் ஒப்பந்தம் செய்து கொள்வதால் ஒப்பந்தம் எனப் பெயர் பெற்றதாம். பாடத்தைக் கற்றுத் தெரிந்து கொண்டதைச் சோதிக்கத்தருகின்ற, வினுக்கள் பயிற்சிகள் கொண்ட சோதனைத்தாளுக்குப் 'பின்சோதனைத் தாள்' அல்லது 'பாடப் பின் ஒப்பந்தம்' (Post-lesson assignment) என்று பெயர்.

இவ்வொப்பந்தங்கள் மாணவர் கவனத்தைக் கவரக் கூடியனவாய், முயற்சியிலே முன்னேற்ற வல்லனவாய், ஊக்கத்தை ஊட்டக் கூடியனவாய், தாமே கற்கத் துணைபுரிவனவாய், தற்சார்பைத் தூண்டுவனவாய், சுருக்கமாய், விளக்கமாய், பாடத் தொடர்புடையனவாய்த் திகழல் தேவை.

மாணவர் ஒப்பந்தங்களைச் செய்து முடிப்பதை ஆசான் கண்ணுங் கருத்துமாய் மேற்பார்த்து வரல் வேண்டும். ஏற்ற இடத்தில் இனியதுணை புரியவேண்டும். ஒப்பந்தங்களை முடித்தபின் ஒழுங்காய்த் தேர்ச்சியைப் பதிவுப் பட்டியலில் குறித்து வரல்வேண்டும். ரேகைப் படத்தாலும் தேர்ச்சி

யின் வேகத்தை விளக்கலாம். மாணவரிடமும் இப் பட்டியல் ஒவ்வொன்று இருப்பதால், தாம் தேர்ந்து வளர்ந்து எழுவதைத் தாமே அறிய ஏதுவாகும்.

ஆனால் இம்முறையிலே, பணச் செலவு அதிகம், ஆசிரியர்க்கு வேலைச் சிரமம், சிறியவர்க்குப் பெரிய பொறுப்பு, கற்கக் காலம் அதிகமாகும் என்றெல்லாம் குறை கூறுவாரும் உளர். ஆய்ந்து ஆழ்ந்து நோக்கின் இவை குறைகளாகக் கொள்ளத் தக்கன அல்ல.

வினா:- 1. தனிப்பயிற்சி முறையை எவ்வாறு தமிழ்ப் போதனையில் பின் பற்றலாம் என விளக்குக.

2. டால்டன் முறையை எவர் கண்டு பிடித்தார்? அதன் சிறப்பியல்புகள் எவை? குறைகளையும் குறிப்பிடுக.

III. பேச்சுப் பயிற்சி.

கிரகித்தலும் வெளிப்படுத்தலும்.

மொழிப் பயிற்சியில் இரு பிரிவு:- நம் மனதில் எழும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் பிறர்க்குத் தெரிவிக்க வேண்டும். பிறர் கருத்துக்களையும் எண்ணங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். இவை கூட்டுறவு வாழ்க்கையிலே அவசியம். பிறர் கருத்தை விளங்கிக் கொள்வதை, கிரகித்தல் அல்லது உட்கொள்ளல் என்கிறோம். பிறர்க்குக் கருத்தைத் தெரிவிப்பதை 'வெளிப்படுத்தல்'—என்கிறோம். மொழிப் பயிற்சியிலே இவை முக்கியமான இரு பிரிவுகள். தொல்காப்பியத்திலே கிரகித்தலை 'உட்கோடல்'—என்றும் வெளிப்படுத்தலை 'ஈதல்' என்றும் பேராசிரியர் குறிக்கின்றனர். பொருள் பொதிந்த இந்த இரு சொற்களையும் ஆட்சிக்குக் கொண்டுவரல் நலம். உட்கோடல்—உட்கொள்ளல். கொள்ளல் என்னும் சொல், முதல் நீண்டு கோடல் என்றாகிறது.

வெளிப்படுத்தலின் மூன்று வகை:- கருத்துக்களை மூன்று வகையில் நாம் வெளிப்படுத்துகின்றோம். பேச்சின் மூலமாக வெளியிடுகின்றோம்; நூற்களை வாசித்துக் காட்டியும் கருத்தை வெளியிடுகின்றோம்; எழுதியும் வெளியிடுகின்றோம். ஆகவே மொழியிலே பேச்சு, வாசிப்பு, எழுதுதல்

ஆகிய மூன்றின் மூலமாகக் கருத்தை வெளியிடலாம். இவை மூன்றும் மொழியிலே முக்கிய பயிற்சிகளாகும். இந்த முப் பயிற்சிகளையும் முறையே விரிவாக இனிக் கற்போம். பேசும் திறனைச் சொல்வன்மை என்கிறோம். இத்திறனை வள்ளுவர் வற்புறுத்துவதை ஒவ்வொருவரும் வாசித்தின்புறவேண்டும்.

உட்கோடலின் வகை:- கருத்துக்களை உட்கொள்ள (கிரகிக்க) மூன்று வழிகள் உண்டு.

கேள்வி:- 1. அறிவு நிரம்பியவர் கூறுவதைக் கேட்டு அறிந்து கொள்கிறோம். இதனைக் கேள்விஞானம் என்பர். கல்விப் பயிற்சியிலே கேள்வி என்பது மிக முக்கியமான பிரிவு.

2. **வாசித்தல்:-** பல அரிய நூற்களை வாசிப்பதினு லும் கருத்துக்களை வளர்த்துக் கொள்கிறோம்.

3. **அனுபவத்தின்** மூலமும் அறிவு அடைகின்றோம். தீ சுடும் என்பதைக் குழந்தை எவ்வாறுணர்ந்தது? சொல்வ தாலும் வாசிப்பதாலும் இதை உணர முடியாது. குழந்தை பட்டறிய வேண்டும். பல பொருள்களைக் கண்களால் பார்த் தும், கைகளால் தொட்டும், மூக்கினால் நுகர்ந்தும் நாம் அறிவு பெறுகின்றோம்.

எண்ணங்களைக் கிரகித்துக் கொள்வதினாலே மனத் திலே மேலும் மேலும் புது எண்ணங்கள் தோன்றும். தோண்டும் தோறும் மணற் கேணி ஊறும். அதைப் போன்றே பிறர் கருத்துக்களை அறிய அறியப் புதுப்புது

எண்ண அலைகள் எழும். எழும் எண்ணங்களையும் கருத்துக்களையும் சிந்தித்து ஆராய்வதினாலே நுண்மாண் நுழைபுலம் (நுட்பமாய் மாட்சிமையாய், நுழைந்து பார்க்கும் அறிவு) வளர்ந்தோங்கும்.

2. வாய் மொழிப் பயிற்சியின் நோக்கமும் அவசியமும்.

பேச்சும் முக்கியம் :- வாசிப்பு பயிற்சியும் எழுத்துப் பயிற்சியுமே முக்கியம்; பேச்சுப் பயிற்சி முக்கியமில்லை என்பது பழங்காலப் பள்ளியிலே பொதுவான கருத்து. ஆனால் பிற இரு பயிற்சியைப் போன்றே பேச்சுப் பயிற்சியும் மொழியறிவை வளர்ப்பதிலே முக்கியமானதே; அதிலும் ஆரம்ப நிலையிலே மிக அவசியமானது.

2. **முப்பயிற்சியில் முதல் பயிற்சி :-** தாய்மொழிப் பயிற்சிகளிலே வாய் மொழிப் பயிற்சியே முதன் முதல் வழங்கல் வேண்டும்; பின்னர்தான் வாசிப்புப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும். ஏனெனில் வாசிக்கவும் எழுதவும் வாய்மொழிப் பயிற்சி துணைபுரிகிறது. உதாரணமாக 'ஒட்டியாணம் நல்ல அணி'—என்ற தொடரை முதல் வகுப்புக்குக் கற்பிக்குங்கால், முதற்கண் நகையின் வடிவம், பயன், அணியும் விதம், இடம்—இவற்றைப் பற்றி வினவி உரையாடுகிறோம். இது பேச்சுப் பயிற்சி; இதன் மூலம் தொடரின் பொருளை விளக்குகின்றோம். பின்னர் மாணவர் பொருளுணர்ந்து வாசிப்பர். வாசிக்குங்கால் எழுத்துருவங்கள் மனதில் படிகின்றன. படிந்த எழுத்து வடிவங்களை எழுதப் பயிற்சிதருகின்றோம். ஆகவே இம்முப்பயிற்சிகளும் ஒன்றற்கொன்று தொடர்புடையன. பேச்சுப் பயிற்சியானது பிற பயிற்சிகளுக்கு அடிப்படையானதும் அடிப்படியானதுமாகும்

3. **மொழி வளர்ச்சி பேச்சிலிருந்தே:-** மொழிதோன்றி வளர்ந்த வரலாறு நோக்கின், ஆதி மனிதன் முதன் முதல் பேசக் கற்றான். பின்னர்தான் வாசிக்கக் கற்றான். இம் முறையில் மாணவர் முதலில் நன்கு பேசப் பயில்வதே இயற்கையாகும்.

4. **அறிந்ததினின்றும் அறியாததற்கேகுதல்:** பள்ளிக்கு வருமுன் பாலர் பல சொற்களைப் பேசிப் பழகியுள்ளனர். அச் சொற்கள் மூலமாகக் கற்றல் எளிதும் இனிதுமாகும்.

5. **எளிதாய்ச் சொல்லறிவையும் கருத்தறிவையும் பெருக்கல் :-** தினசரி வாழ்க்கையில், நடை முறையிலே பேச்சு மூலமே பல கருத்துக்களை மாணவர் வளர்த்துக் கொள்கின்றனர்; சொற்களை உபயோகிக்க அறிந்துகொள்கின்றனர்.

6. **பழக்கத்தால் பேச்சு :-** பேச்சுத் திறமை பழக்கத்தால்தான் உண்டாகும். எழுதுவதினாலோ, படிப்பதினாலோ, இலக்கணங்கற்பதினாலோ வந்து விடாது; பேச்சினைப் பேசியே பயிலல் வேண்டும். "செந்தமிழும் நாப்பழக்கம்" என்றனர் நம் முன்னோரும்.

7. **பிழையற எழுதத் துணை :-** நன்றாக உச்சரித்துத் தெளிவாகப் பேசும் அறிவானது பிழையற எழுதத் துணை புரியும் "வாலைப் பலம் இணிக்குது"—எனப் பேசும் சிறுவன் அவ்வாறுதானே எழுதுவான். வாசிப்பிற்கும் எழுதுவதற்கும் பேச்சுப் பயிற்சி உதவி புரியும்.

8. **பிழையகற்ற வேண்டிய பருவம் :-** பிள்ளைப் பிராயத்திலே பிழைபட ஒலித்துப் பழகிவிடின் பின்னர்

பிழை அகற்றல், பெருஞ்சிரமமாகும். "இளைதாக முள் மரம் கொல்க"—என வற்புறுத்துகின்றார் வள்ளுவப் பெருந் தகையார்.

9. **நேரக் குறைவு:-** பேச்சு மூலம் குறைந்த கால அளவில் நிறைந்த பொருளை அறிவிக்கலாம். விரைந்து பேசிச் செல்லுங்கால் உட்கோடல் (கிரகித்தல்) திறமை வளர ஏதுவாகும்.

10. **பேசுவது வாழ்வில் அதிகம்:-** வாழ்க்கையில் எழுதுவதைக் காட்டிலும் வாசிப்பு அதிகம். வாசிப்பதைக் காட்டிலும் பேச்சு அதிகம். ஆகவே கற்றுணர்ந்த பெரியோர்க்கும், கற்கும் சிறியவருக்கும் கருத்தை வெளிப்படுத்த அதிகமாய் உபயோகப்படும் கருவி வாய்மொழியே.

11. **திருத்தல் எளிது:-** பேசுங்கால் நேரிடும் இலக்கணப் பிழைகளையும், கொச்சை மொழிகளையும் திருத்துவது எளிது. பேசும்பொழுதே ஆங்காங்கு திருத்தி விடலாம்.

12. **ஒலிப்பை வளர்க்க ஏற்றது :-** எழுத்துக்களின் உச்சரிப்பைத் திருத்த ஏற்றது பேச்சே. பேச்சு வாயிலாகவே எழுத்தொலியைக் கற்கிறோம். விரைந்து பேசுங்கால் ஒலிப்பு விருத்தியாகிறது.

அச்சமின்மை :- சொல் வன்மையால் அச்சம், கூச்சம் குழைவு ஆகியவை நீங்கி, தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகின்றன. சிலர் திறமையாய் எழுதுவர், படிப்பர்; ஆனால் பேசார். முத்திறமையும் கொண்டவரே மொழித் திறமை முடியப்பெற்றவர். பேச்சு மூலம் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் அன்பும் உறவும் அதிகரிக்கின்றது.

ஆகவே மேற்காட்டிய காரணங்களால், மொழிக் கல்வியிலே, தொடக்க நிலை வகுப்புகளில் வாய்மொழிப் பயிற்சி மிக இன்றியமையாதது என்பது விளங்கும்.

வினா:- 1. மொழி பயிற்றுவதில், முக்கியமாக ஆரம்ப நிலையில் வாய்மொழிப் பயிற்சி என் இன்றியமையாதது?
Ele. 44 & 5'.

2. வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள் எவை?
(Sec. 47.

3. வாழ்க்கையில் பேச்சுப் பயன்படல்.

கீழ்க்கண்டவாறு வாழ்க்கையில் பேச்சுப் பயன்படுவதால், இப்பயன் தரும் நோக்கத்தோடு பேச்சுப் பயிற்சிகள் அளித்தல் நலம்.

1. **கேட்டுப் பெறல்:-** "கேளுங்கள் அப்போது உங்கட்குக் கொடுக்கப்படும்"—என்பது கிருஸ்து பெருமானின் அருள் மொழி. மனிதர் கூட்டுறவால் வாழ்கிறோம். ஒருவன் தன் திறமைகளையும், தேவைகளையும் திறம்படத் தெரிவிப்பதால், வேண்டிய பொருள்களையும் விரும்பும் நிலைகளையும் பெற்று விடுகிறான். விளக்கிச் சொல்ல இயலாமையால் விரும்புவன பெறமாட்டாது விழிப்பவர் பலர்.

2. **உள்ளம் உணர்தல் :-** கற்றவனைக் கற்றவனுகக் காட்டுவது கருத்துள்ள மொழிகள். ஒருவன் பேசும் ஓரிரு சொற்களிலிருந்தே உள்ளக் கிடக்கையை ஒருவாறுணரலாம்.

3. **சொல்லின்மையால் இடர்:-** சொல்லும் திறனில்லோர்க்கு வாழ்க்கையில் பல இடர்கள் நேரலாம். "மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால் பொய்போலும்மே! பொய்போலும்மே" என்ற செய்யுளடி இவ்வுண்மையை விளக்கும்.

4. **கவரும் சொல்:-** தன் மனத்தொழும் நன்மைக் கருத்தின் வழியே நடத்த வல்ல நல்ல கருவி சொல்வன்மை. நாட்டுத் தொண்டு நாடும் நல்லோர்களின் வலிமைக் கருவி சொல்வன்மை. மக்களைத் திரள் திரளாகக் கூட்டி, அறியாமையை ஓட்டி, புத்துணர்ச்சியை யூட்டி, அரசியல் ஊழல்களைக் காட்டி, கிளர்ச்சியை நாட்டி, ஆங்கிலேயரை ஓட்டி, விடுதலையை ஈட்டிய அணுகுண்டு எது? காந்தி அடிகளார், தனித் தலைவர் ஜவகர் முதலியோரின் வைர நெஞ்சங்களிலிருந்து வந்த சொல் வன்மையன்றோ? 'உணர விரித் துரைத்தலை மணம் கமழும் பொன் மலர்க்கொத்து,' என வள்ளுவர் வாழ்த்துவார்.

சொலல்வலன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது —குறள்

வினா:- தாய்மொழிப் பயிற்சியில் வாய்மொழிப் பயிற்சியின் ஸ்தானம் யாது? ஆரம்பப் பாடசாலையின் கீழ் வகுப்புகளில் எவ்வாறு இப்பயிற்சியைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவீர் என்று விளக்குக. (இவ்வத்தியாயம் 5-ம் தலைப்பில் உள்ளவற்றை விரிவாக்கிக் கொள்க.) (Ele. 54.)

4. திருந்திய பேச்சில் பொருந்திய இயல்புகள்.

1. **தெளிவான ஒலிப்பு:-** (உச்சரிப்பு) தமிழ் மொழியிலே ஒருவாறு ஒத்த ஓசையுடைய எழுத்துக்கள் சில உள. இலக்கண நூலார் அவற்றிற்கு இடும் பெயரையும் அறிந்து கொள்ளல் பயன் தரும்.

ல—முதல் லகரம், ள—பொது ளகரம், ழ—சிறப்பு ழகரம், ண—டண்ணகரம், ந—தந்நகரம், ன—றன்னகரம்,

ற—வல்லின றகரம், ர—இடையின ரகரம். பேச்சிலே இவ்வெழுத்துக்களைத் தவறாய் ஒலித்து விட்டால் பெரும் பிழையும் மாறுபட்ட பொருளும் மனதிற்கு வெறுப்பும் விளையும், ஒலிப்புப் போனால் மொழியின் உயிரே போனது என்று கூறலாம்.

2. **விழுங்காமை:-** ஈற்று ஒலிகளையும் ஈற்று வார்த்தைகளையும் மிகத் தாழ்ந்த குரலில் சொல்லி விழுங்கிவிடுகின்ற வழக்கம் சிலரிடம் உண்டு. இதனைச் சிறிது முயன்றால் செவ்வனே திருத்திவிடலாம்.

3. **குரல்:-** இடத்திற்கேற்றவாறு குரலில் எடுத்தல், படுத்தல், நலிதல் முதலிய ஏற்றத்தாழ்வு கவர்ச்சியைத் தரும். வேண்டுமென்றே வலிந்து பேசியது போலில்லாமலும், குரலில் ராகம் போடாமலும், இயல்பாக இனிமையாகப் பேசல் வேண்டும். அளவுக்கு மிஞ்சிய உரத்த வெடி குரலிலும் மிகத் தாழ்ந்த ஈனக் குரலிலும் பேசாமல் போதிய அளவு உரத்த குரலில் பேசல் அவசியம்.

4. **வேகம்:-** மிக விரைவும், மிக மெதுவுமின்றி பேசிச் செல்லல் ஓர் நுட்பத் திறனாகும். சுருக்கக் குறிப்புகளைப் பார்த்துப் பேசப் பயிற்சி தரலாம்.

5. **அமைதி:-** அச்சம், கூச்சம், குழைவு முதலியவையின்றி தன்னம்பிக்கையுடன் தளராத ஊக்கத்துடன் அமைதியாக அளந்து, அறிந்து, உணர்ந்து பேசல் சிறப்பு.

6. **உணர்ச்சி :-** கூறப்போகும் பொருளின் அவசியத்தையும் ஆழத்தையும் முதற்கண் மாணவர் உணருமாறு செய்யவேண்டும். அவ்வாறு உணரின் உயிருள்ள பேச்சு உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும். தானே ரசிக்காவிடின் பிறரை எங்ஙனம் ரசிக்கச் செய்ய இயலும்?

7. **நடிப்பு** :- அசையாது ஆடாது கையை முன்னாலே கட்டிக்கொண்டு கத்துவதும், மரம்போல விரைத்து நிற்பதும் தவிர்க்க வேண்டும். கையாலும் முகத்தாலும் நடிப்பது வாயால் சொல்லும் சொற் பொருளைச் சிறக்கச் செய்யும். அளவுக்கு மிஞ்சி தலையையும், கைகளையும் ஆட்டுவது சிறப்பிற்கிடமாகும். கால் சட்டைப் பைக்குள் கைகளை இட்டுக் கொண்டு வில்விசை போன்று, எவ்வி எவ்விப் பேசும் பழக்கத்தை மாணவர் எவ்விதமேனும் விட்டொழிக்க வேண்டும்.

8. **உரிய சொற்கள்** :- கொச்சை மொழிகளையும் வேண்டாத சொற்களையும் (வழூஉச் சொற்புணர்த்தல்)சேர்த்தல் பெருங் குற்றமாகும். கேட்போர்க்கு விளங்காத சொற்களைப் பெய்தும், கடின சொற்களை ஒன்றோடொன்று சேர்த்தும் பேசுவது 'மயங்க வைத்தல்'—எனும் குற்றமாகும். உரிய இடத்தில் உரிய சொல்லை அமைத்தல் அழகு. அவசியமற்ற அடுக்குத்தொடர்களை அகற்றல் வேண்டும். கருத்துக்கேற்ற சொல்லாகவும், விளங்கக்கூடிய சொல்லாகவும் தெரிந்து சொல்வதே திறமையாகும். ஆதலால் சொல்லறிவை மாணவர்க்குண்டாக்க வேண்டும்.

9. **நடை** :- நீண்ட வாக்கியங்களின்றி, சிறிய வாக்கியங்களாக இருத்தல் நலம். தித்திக்கும் தெளிந்த செந்தமிழ்ச் சொற் செல்வமிருக்க, வாய்க்கு வாராத வடசொல்லை வலிந்து புகுத்துவது எதற்கு? தனித்தமிழ் நடையே இனித்த நல்ல நடை.

10. **வேண்டா ஓசைகள்**:- திக்கல், திணரல், ஊடே ஆ! ஊ! என ஓசையிடல் இவற்றை இளமையிலே நீக்காவிடில் நீண்டு நிலைக்க நேரிடும்.

11. **கருத் தொழுங்கு:-** கருத்துக்களையும், எண்ணங் களையும் சேகரித்துக் குறித்துப் பின்னர் பல தலைப்புகளின் கீழ், பத்தி பத்தியாகச் சிறு குறிப்புகள் தயாரித்து வைத் துக்கொள்ளல் பயன்தரும். ஒரு பத்தியில் ஒரு கருத்தே அடங்கிக் கிடக்க வேண்டும். பேச்சில் காண வேண்டிய பத்து அழகுகளை நன்னூலார் நன்கு கூறியுள்ளதைச் சிந்தித்து இன்புறலாம்.

1. சுருங்கச் சொல்லல் 2. விளங்க வைத்தல்
3. நவின்றோர்க்கினிமை 4. நன்மொழி புணர்த்தல்
5. ஓசையுடைமை 6. ஆழ முடைத்தாதல்
7. முறையின் வைப்பே 8. உலக மலையாமை
9. விழுமியது பயத்தல் 10. விளங்கு உதாரணத்த தாகுதல் நூலிற்கு அழகு எனும் பத்தே.

12. **நகைச் சுவை :-** வீரம், கோபம், பயம், சோகம் முதலிய மெய்ப்பாடு தோன்றப் பேசுந் திறம் பெரிதும் போற்றற் குரித்து. பிற சுவைகளைக் காட்டிலும் நகைச் சுவை தோன்ற நவில்வது மிக்க இன்பம் பயப்பது; கேட் போரின் அலுப்பை அகற்றுவது; கேள்வி எனும் செவி உணவிலே உப்பு எனும் உயர் சுவையே நகைச் சுவை எனல் பொருந்தும். சிரிக்கும் திறனில்லார்க்குப் பகற் போதிற்கூட உலகமே இருள் மூடிக் காணப்படும் என்கிறார் திருவள்ளுவர். (குறள் 199. பண்புடைமை)

13. **உவமைகள் மேற்கோள்கள் :-** ஆங்காங்கு நுட்பக் கருத்துக்களை விளக்கும் உதாரணங்களைத் தரல் ஓர் அழகா கும். மிகப் பழைய உதாரணங்களையே மீண்டும் மீண்டும் சொல்லித் திரிதல் சிந்தனையற்றது. புதிய எடுத்துக்

காட்டுகளைப் புகுத்தல் வேண்டும். முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னேபோல் போற்றுதலும் நம் கடமை. ஆதலால் ஏற்ற செய்யுளடிகள், பழமொழிகள், பெரியார் கூற்றுக்கள், மேற்கோள்கள் முதலியவற்றைக் கூறுவது, பேச்சாளரின் பரந்துபட்ட அறிவைப் புலப்படுத்துவதாகும்.

14. **பண்போடு பேசல் :-** பிறர் கருத்துக்களை மாற்றவோ, மறுக்கவோ, நீக்கவோ, தாக்கவோ நேரிட்டால், மரியாதையுடன், தக்க காரணத்துடன், சமநிலை நோக்குடன் விஷயங்களை விளக்கல் வேண்டும். பிறர் மனம் புண்படாமல் சாந்தமாய், நீதியாய், நன்மை தீமைகளை எடுத்துக்காட்டும் திறன் அமைவது அரிது. கடிந்து நீக்க வேண்டிய கசப்பான விஷம் போன்ற விஷயத்தைக்கூட, விநயமாய் விளம்பி வெற்றி காண்பது திறமையுள் திறமையாகும்.

வினா:- திருந்திய பேச்சின் நல்லியல்புகள் யாவை? அவற்றைப் பெற உம்முடைய மாணவரை எவ்வாறு பயிற்றுவீர்? (Sec. 46.

5. பேச்சுத்திறனை வளர்த்தல்.

1. வீட்டில் பேச்சு ஆரம்பமாகிறது. ஆதலால் பெற்றோர் கொச்சை மொழிகளை அகற்றவேண்டும். குழந்தைகளோடு பெற்றோர் நன் முறையில் உரையாடினால் குழந்தைகளும் நன்கு பேசக் கற்றுக் கொள்வார்கள் என்ற உண்மையை அவர்களிடம் எடுத்துக் கூறவேண்டும். 2. பிள்ளைகளைத் தாராளமாகப் பேச அனுமதித்தல்:- தன் வீட்டில், வழியில், பள்ளியில் கண்ட காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் அனுபவங்களையும் தாராளமாக எடுத்துக்கூற வாய்ப்புகள் தரலாம். 3. பிற மாணவரோடு உரையாட அவகாசம்

தரலாம். 4. உரையாடற் பாடங்கள்:- தொடக்க நிலை வகுப்புகளில் குடும்பம், உறவினர், பள்ளிக்கூடம், ஊர், கோயில், திருவிழாக்கள் முதலியவற்றைப் பற்றிப் பேசலாம். 5. சிறு கதைகள் கூறலாம். 6. கதை நடித்தல், நாடகம் நடித்தல், விகட நடிப்புகளும், போலி நடிப்புகளும் நடித்தல். 7. படங்களைப் பார்த்துப் படித்தலும் பேசலும். 8. பாட்டுக்களைக் கூட்டமாகவும் தனியாகவும் பாடல். விடுகவிகள், சிறு செய்யுட்கள் ஒப்புவித்தல். சிறுவர்க்கான பாப்பா பாடல், அசைப் பாட்டு, ஆட்டப் பாட்டு, நாட்டுப் பாட்டு, கதைப் பாட்டு முதலியவற்றைப் பாடல். வானொலியில் சிறுவர் பகுதி ஒலிப்பரப்புகளைக் கவனிக்கும்படி செய்யலாம். அவை போன்றே நடிக்கலாம். 9. மாணவர் சொற்பொழிவுக் கழகங்கள், தர்க்கக் கழகங்கள் நடத்தல். 10. சரித்திரம் பூகோளம் ஆகிய பாடங்களிலும்; வினா—விடைகளை நன்கு பிழையறக் கூறல். 11. வாய் மொழி சம்பந்தமான விளையாட்டுக்கள் ஆடல். (விளையாட்டு முறையில் காண்க).

ஆகவே உணர்ந்த உணர்ச்சிகளை; எண்ணிய எண்ணங்களை எவ்விதமாயினும் வெளியிடச் சந்தர்ப்பங்கள் தரல் வேண்டும். மாணவர்கள் இன்பமாய், இயற்கையாய், ஏராளமாய்த் தாராளமாய்ப் பேச வசதிகள், வழிகள் வகுக்க வேண்டும். மேற்கண்ட ஒவ்வொன்றைப் பற்றியும் இனி விரிவாக காண்போம்.

வினா:- 1. பேச்சுப் பழக்கங்களை வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்குப் பாடசாலையில் கிடைக்கக் கூடிய வசதிகளை விவரிக்க. (Sec. 52.)

2. ஆரம்பப் பள்ளிகளில் எவ்விதம் வாய் மொழிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வீர்? (Ele. 53.)

3. Basic T. S. L. C:- கதை சொல்லல், சம்பாஷணை, பாட்டு ஒப்புவித்தல் ஆகியவை III வகுப்பில் பேச்சுத் திறனை எப்படி வளர்க்கும் என்று காட்டுக. (Junior Grade 53.)

6. மாணவர் பேச்சில் காணும் குறைகள்.

திருந்திய பேச்சில் பொருந்திய இயல்புகள்—எனும் தலைப்பின் கீழ்க் கூறியவற்றை இங்கு ஏற்ப மாற்றிச் சேர்த்துக் கொள்க. சாதாரணமாக மாணவர் பேச்சில் காணும் குறைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம்;

1. குரல்குற்றம்:— உச்சரிப்புப் பிழை, உணர்ச்சியில்லாத் தன்மை, திக்கல், திணரல், கொன்னல்.

2. சொல்குற்றம்:— கொச்சை, உரியசொல் இன்மை,

3. மனக்குற்றம்:— பயம், அச்சம், அவைக்கூச்சம் நடுக்கம், படபடப்பு மிக மெதுவாகப் பேசல், நிதானமின்மை

4. உடற்குற்றம்:— அசைதல் ஆடல் முதலிய பழக்கம், காதுமந்தம், மூக்கில், தொண்டையில் சதை வளர்ச்சி.

5. சொற்றொடர்க் குற்றம் 6. பொருள் தொடர்க் குற்றம்.

1. **உச்சரிப்புப் பிழைகள்:-** தமிழ் மொழியில் சில எழுத்துக்கள் நுண்ணிய ஓசை வேறுபாடுடையன; மேலும் அவற்றை ஒலிக்க நாக்கின் சுழற்சியும், முயற்சியும் அதிகம்

தேவை. ஆதலால் அவ்வொலிகளை ஒலிப்பது சிரமம். அவ்வெழுத்துக்களாவன:- ல, ள, ழ—ண, ந, ன—ர, ற தமிழ் நாட்டின் சில பகுதியார் ஒருசில வார்த்தைகளை பிழைபட உச்சரிப்பார்; முப்பது, எண்பத்தொன்று, வாழைப்பழம் முதலிய சொற்களை அவர்கள் தவருக ஒலிப்பதை எழுதும் போது நினைத்தாலே சிரிப்பு வருகிறது. இவற்றை எல்லாம் திருத்த வேண்டியது நம் கடமை.

2. **கொச்சை மொழிகள்:-** சிற்றூர்களிலும், பேரூர்களிலும் வழக்கமாகச் சில சொற்கள் பிழையாகப் பேசப்பட்டு வருகின்றன. ஆத்துக்கு, வூட்டுக்கு, ஆம்படியான், தாப்பாள், சுவற்றில், துகையல், தொப்புள், தொவக்கம், வரவு சிலவு, எழவு. எடறு, உடம்படிக்கை—முதலியவை போன்ற ஏராளமான உருச் சிதைந்த சொற்களைக் கேட்கின்றேம். எக் காலத்திலும் எல்லாரும் இச் சொற்களை ஒழுங்குற ஒலிக்கத் தெரிய வேண்டும். சொற்களின் பாகங்களை நீட்டியோ, வெட்டியோ, மிகத் திரித்தோ, கத்தரித்தோ கூறுவதால் நாளடைவில் உருச்சிதைந்து வழச் சொற்களாக வளர நேரிடுகின்றது.

3. **உரிய சொல் இன்மை :-** ஏற்ற சொற்களை ஏற்ற இடத்தில் போடாமை, பொருளுக்கேற்ற சொல் இன்மை, பொருளைப் புரிந்து கொள்ளாது சொற்களை வழங்கல் முதலிய குறைகளை அகற்ற வேண்டும்.

4. **அச்சம்:-** பயம், சபைக்கூச்சம், உடல்நடுக்கம் படப்படப்பாய் விரைவாய்ப் பேசல், மிக மெதுவாய்ச் சொற்களுக்கூடே நீண்ட நேரம் எடுத்து சிந்தித்துப் பேசுதல், நிதானமில்லாமல் பேசுதல் இவை மனம் பற்றிய குற்றம்.

5. **காது மந்தம்:-** காது கேட்காவிடில் பேச்சைக் கூர்ந்து கேட்டுக் கற்க இயலாது.

6. **சொற்றொடர்க் குற்றங்கள் :-** வாக்கியங்களைச் சிந்திக்காது வந்தவாறு தொடங்குதல், முடிக்காது இடையில் விட்டுவிடல், எழுவாய்க் கேற்ற பயனிலை இன்மை, ஏற்ற இடத்தில் சொற்களிட்டுச் செல்லாமை முதலிய பிழைகளை நீக்க வேண்டும்.

7. **பொருட்டொடர்க் குற்றம்** என்பவை:- கூறியது கூறல், மாறுபடக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், வெற்றெனத் தொடுத்தல், சென்று தேய்ந்திறுதல், மற்றொன்றுவிரித்தல் முதலிய குற்றங்கள் (நன்னூலில் கூறியவை) சொற்பொழிவிலே, அல்லது தொடர்ந்த பேச்சிலே நேரிடாவண்ணம் கவனிக்க வேண்டும்.

7. பேச்சுப் பிழை முறைகள்.

ஆசிரியரின் பேச்சு :- தமிழாசிரியர் மட்டும் நற்றமிழில் பேசிவருவது போதாது. பிற ஆசிரியர்களும் எளிய தமிழிலாயினும் பிழையறப் பேசல் வேண்டும். ஒண்ணு, மூணு, ஒம்போது என ஆசிரியர் பேசின், ஐயோ! தமிழ் எப்படித் திருந்தும்? மாணவர் எண்களை முதலில் தப்பிதமாகச் சொல்லிச் சொல்லிப் பழகிப் பின்னர், எழுத ஆரம்பிக்கையில் தப்பிதமாகவே எழுதுவார். காரணம் என்ன? எவ்வழி ஆசிரியர் அவ்வழி மாணவர். ஆதலால் ஆசிரியர் பேச்சானது சிறந்த முன் மாதிரியாய்த் திகழல் வேண்டும்.

2. **சூழ்நிலைப் பழக்கத்தால் கொச்சை மொழி :-** பள்ளிக்கு வருமுன்னர் பிள்ளைகள் பெற்றோருடனும் மற்றோருடனும் நெருங்கிப் பழகி, அவர்கள் பேசும் கொச்சை

மொழிகளைப் பழகிக் கொள்கின்றனர். இவற்றைப் படிப் படியாக அகற்றல் வேண்டும். ஒவ்வோரூரிலும் வழங்கும் கொச்சை மொழிகளைத் திரட்டிச் சரியாக எழுதி ஓர் பட்டியல் தயார் செய்து அடிக்கடி மாணவர் பார்க்கும் இடத்தில் தொங்கவிடல் நலம் தரும். இவ்வார்த்தைகளை வாக்கியங் களில் உபயோகிக்கப் பல இடங்களில் பயிற்சி தரல் வேண்டும்.

3. **உச்சரிப்புத் திருத்தல்:-** ஒத்த ஓசையுடைய தமிழ் எழுத்துக்களை ஒழுங்குற ஒலிப்பது கடினம். ஆரம்பத்திலே அவற்றை நன்கு பயிற்றல் அவசியம். பிழைபட்ட ஒலிப்புப் பதிந்துவிடின் பின்னால் திருத்த எடுக்கும் பெருத்த முயற்சிகூட வீணாகும். திருத்தும் வழிகள்:—

(க) ஆசிரியர் சிறந்த முன் மாதிரியான ஒலிப்புடையராகத் திகழல் வேண்டும்.

(உ) **ஒலியியலறிவு** - எழுத்துக்கள் பிறக்கும் இடத்தையும், நாக்குச் சுழலும் விதத்தையும், ஒலி உறுப்புக்களின் நிலையினையும் பற்றிய தெளிந்த அறிவு ஆசிரியர்க்கவசியம். அவற்றைப் படத்திலும் நேரிலும் காட்டி விளக்கலாம். கண்ணாடியில் காட்டியும் உணர்த்தலாம்.

(ங) **வாய்மொழிப் பயிற்சிகள் :-** அசைப் பாட்டுக்கள், கதைக் கீதங்கள், பழமொழிகள், சிறு செய்யுட்கள், கூறச் செய்யலாம். கடின ஒலிகள் அடிக்கடி இவற்றில் பயின்று வருமாறு இதை அமைத்திருத்தல் நலம்.

(ச) **மூச்சுப் பயிற்சிகள் :-** ஒலித்தல் கருவிகளிலே வேர் போன்றது நுரையீரல். வெளிவிடுவதற்குரிய காற்றினை சந்தர்ப்பத்திற் கேற்ப அடக்கி ஆளுவது நுரையீரலே.

நுரையீரல் வலிமை இழப்பின் உரை ஒருபோதும் ஒழுங்குற அமையாது. மூச்சுப் பயிற்சிகள் நுரையீரலுக்கு வலிமை யூட்டும். பலூனை ஊதுதல், இறகை ஊதி விளையாடல், மூச்சு வாங்கி வெளியிடற் பயிற்சிகள் முதலியவை தேவை யறிந்து குழந்தைகட்குக் கொடுக்கலாம்.

(ரு) **நா பிறழ்ச்சி வாக்கியங்களை** அடிக்கடி பயிற்று வதால், நாக்குத் திருந்தும். ஊர்ப் பூவரசெல்லாம் என் பூவரசு; யார் தைத்த சட்டை; எங்கள் பாட்டன் தைத்த சட்டை; ஓடும் நரியிலே ஒரு கிழநரி; கிழநரி முதுகிலே ஒரு பிடி நரை மயிர்; ஆற்றில் வெள்ளம் வந்தது; வாழைப்பழம் அழுகிக் கீழே விழுந்தது; ஏசுவின் மலே மொழி இனிய மணி மொழி; பற்றுவிடற்குப் பற்றுக பற்றற்றான் பற்றினை முதலிய சொற்றொடர்களைப் பலமுறை சொல்லச் சொல்ல நாக்குத் திருந்தும்.

(கா) **நா நெகிழ் பயிற்சி** :- ஒரே ஒலியைப் பன் முறை கூறுங்கால் நாக்கு நன்கு நெகிழ்ந்து விரைந்து இயங் கும். (உ-ம்) ல, ல, ல, லா; லி, லி, லி, லீ; லு, லு, லு, லூ; லெ, லெ, லெ, லே—முன்னர் எழுத்து வரிசைகளை ஒப்பிக் கும் பழக்கம் இருந்தது; இப்போது குறைந்தது. இப்பழக் கம் எழுத்தொலிகளை நன்கு நிலைநாட்ட மிக்கத் துணைபுரி வது. ழ, ழா, ழி, ழீ, ழு, ழூ, ழெ, ழே, ழை—என்ற வரிசையில் விரைவாய்க் கூறலால் ஒலிப்புத் திறமை வளரும்.

(எ) **காது மந்தமாயின்** பேச்சுத் திறமையும் குறையும். பெற்றோர் ஒத்துழைப்பால் மருத்துவ உதவி அருளலாம், உடற் பயிற்சியால் காதின் தசை நார்கட்கு வலுவுண்டாகுவ தால் சிறு குறைகள் நீங்கும்.

(அ) **செவிப்புலப் பயிற்சி** வாயிலாகக் கூர்ந்து கவனிக்கும் திறமையை வளர்க்கலாம். பறவை, விலங்குகளின் கத்துதல், பலவகை உலோகங்களை நாணயங்களைத் தட்டுதல், இசைக் கருவிகளை ஒலித்தல், கடிகையை காதுக்கருகில் வைத்தல், இசைச் சுரங்களைப் பாடல், முதலியவைகளைக் கண்டறியப்பயிற்சிதருவதால் நுண்ணிய செவிப்புலம் விருத்தியாகும்.

(கூ) **பேச்சுறுப்புகளில் கோளாறு** : தொண்டை சதை, மூக்கடியான் போன்ற குறைகளைச் சத்திரச் சிகிச்சையால் அகற்றலாம். திக்கல், கொன்னல் வாயுள்ள சிறுவரை அநுதாபங்காட்டித் தங்கள் குறையை மறக்கத் துணைபுரியலாம்; ஏளனம் செய்யலாகாது. ஆகவே மேற்கண்ட உட்பிரிவுகள் ஒலிப்பினை வளர்க்கும் வழிகளாகும்.

4. **பயத்தின் பயன்:** பயத்தாலும், கூச்சத்தாலும் போதிய அளவு பொருள் தெரியாததாலும் மாணவர் திக்குவர்: திகைப்பர்; உணர்ச்சியற்று உரைப்பர். அன்பாக ஆதரவாக நடப்பின் அழகாகப் பெசுவர். கூச்சம் நீங்க முதலில் பிற மாணவரோடு சேர்ந்து பாடவும் பேசவும் நடிக்கவும் பயிற்சி தந்து, பின்னர் தனிப் பயிற்சிகள் தரலாம்.

5. **பேச்சுப் பிழை திருத்துங்கால்** பல விதிகளைக் கைக்கொள்ளல் நலம்.

(அ) மாணவரைக் குறித்துக் காட்டி ஏளனம் செய்யலாகாது. அன்பாக ஆதரவாக நடத்தல் வேண்டும்.

(ஆ) **பிறவேலைகள் :** இடர்ப்பட்ட மாணவர் மனம் புண்படாமலும் தாழ்வுணர்ச்சியால் தளராமலும் இருக்க, வேறு கைவேலை, எழுத்துவேலை, ஓவியம் முதலியவை

கொடுத்து அவனவன் திறமையை ஆசிரியர் அறிந்து போற்றல் வேண்டும். கருத்தைப் பேச்சு மூலம் வெளியிட இயலாதான் வேறு வழியில் வெளியிடும் திறமை பெற்றிருக்கலாம்.

(இ) **பொதுப்படத் திருத்தல்** : பல மாணவர்கள் செய்யும் பிழைகளை ஆசிரியர் தம் ஏட்டில் குறித்து வைத்து, மாணவர் அனைவர்க்கும் விளக்கித் திருத்தல் நல்லது. தனியாக மாணவரை அழைத்தும் பிழைகளைத் திருத்தலாம். ஒருவன் பிழையைச் சுட்டிக்காட்டி, அவன் வருந்துமாறு பிழை திருத்தல் முறையன்று.

(ஈ) **தன்னுணர்வைத் தவிர்த்தல்**: சபையைக் கண்டவுடன் சபைக் கூச்சம் ஏற்படுகிறது. அதாவது நாம் வல்லவர்கள் முன்னிலையில் நிற்கிறோம்; நம் பேச்சில் பிழை காணில் இழிவாகும்—என்பனபோன்ற உணர்ச்சிகள் உதயமாகாது உதவ வேண்டும்; ஊக்கம் ஊட்ட வேண்டும். தன்னுணர்ச்சியை நீக்க முயலும் ஆசிரியர் சிலர் அதனையே உண்டாக்கி விடுகின்றனர். சபையைக் கண்டு பயந்து நடுங்காதே என்றெல்லாம் எதிர் மறையில் சொல்லலாகாது.

வினா:- 1. புதிதாகப் பள்ளிக்கூடம் வரும் மாணவர்கள் பேச்சில் பொதுவாகக் காணப்படும் குறைகள் எவை? அவற்றை எப்படித் திருத்தலாம் என விளக்கிக் கூறுக. (Sec. 45 Ele 47.)

2. முதல் வகுப்பில் பிழைபட்ட பேச்சைத் திருத்த எவ்வழிகளை மேற்கொள்வீர்? (Sec. 52.)

3. சாதாரணமாய் எவ்வொலிகளை மாணவர்கள் பிழையாய் உச்சரிக்கின்றார்கள்? அவற்றைச் சரியாக உச்சரிக்கச் செய்ய எம் முறைகளைக் கையாளுவீர்கள்? (Ele. 45.)

8. உரையாடற் பாடம் நடத்தலின் நோக்கம்.

உரையாடல் என்பது ஒருவர் பேசுவதை ஒருவர் கேட்பதும், வினவுவதும் விடை கூறுவதுமாகும். உரையாடல் ஒரு கலை. உரையாடல் பயிற்சிகள் தருதல் அவசியம் என்று சிறிது காலத்துக்கு முன்வரை கல்வியாளர் கருதவில்லையாம். பள்ளிக்கு வருமுன்பே குழந்தைகள் உரையாடலில் ஓரளவு பயிற்சி பெற்றிருக்கின்றனர். அதுவே மொழியிலே தொடக்கப் பயிற்சி. அது பயன்படுத்தற்குரிய சீரிய பயிற்சியாகும். பேச்சுப் பயிற்சியின் நோக்கங்களாக முன் கூறப்பட்டவை இங்கே பொருந்தும். ஆதலால் சுருங்கக் கூறிச் சொல்லலாம்:—

1. உரையாடல் சொல்லறிவை வளர்க்கிறது. சொல் தனித்தனியாய் நிற்கையில் பொருள் சிறப்பதில்லை. சொற்றொடரில் இடம் நோக்கிச் சொற்களுக்குத் தனிப் பொருள் பிறக்கும். வாக்கியங்களில் சொற்களை வழங்கப் பன்முறை பயிற்சி அளிக்க வேண்டும்.

2. கருத்துக்களைத் தொடர்பாக வரிசையாகக் கூறவும், பிறர் கருத்தை உணரவும் பழக்கல் ஒரு நோக்கம். மாணவர்கள் எந்த அளவுக்குக் கிரகித்துள்ளனர் என்பதை அவர்களுடைய வினக்களும், விடைகளும் வெளிப்படுத்தும்.

3. ஊக்கமாய், உணர்ச்சியாய், இயற்கையாய், இன்பமாய்ப் பேசுவதற்கு ஒருவரிடமிருந்து ஒருவர் கற்க உரையாடல் உதவும்.

4. சிந்தனை சக்தியைத் தூண்டலாம். வினாக்கட்குச் சிந்தித்து உடனே பதில் சொல்லிப் பயிற்சி பெறுகின்றனர். சமயோசிதமாகச் சாதுர்யமாக விடை கூறவும் பயிற்சி பெறுகின்றனர். கிரகிக்கும் சக்தி விருத்தியாகின்றது.

5. உரையாடுங்கால் பிறர் கருத்துக்கு மதிப்பீந்தும் மரியாதையோடு மறுத்தும், பேசக் கற்பித்தலால் நற்குணம் உண்டாகும். தக்க காரணங்காட்டித் தம் கொள்கைகளை நிலைநிறுத்த முயலும்போது ஆராய்ச்சித்திறன் அதிகரிக்கும்.

6. உரையாடல் மூலம் நட்பையும் நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்ளும் வழி வகைகளை மாணவர்க்குப் பள்ளியில் பயிற்றுவித்தல் பயன் தரும்.

7. பள்ளியில் நீண்ட சொற்பொழிவு கேட்பதால் உண்டாகும் அலுப்பையும் சலிப்பையும் அகற்ற நல்ல கருவி உரையாடல்.

9. உரையாடலுக்குகந்த பொருட்கள்.

அரசியலாரின் ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டம் உரையாடலை வற்புறுத்துமாறு:—

1. ஆரம்ப ஆண்டின் முதல் ஒன்றிரண்டு மாதங்களில் அளவளாவிப் பேசி நட்புக் கொள்க.

2. எஞ்சிய மாதங்களில் உறையாடற்கும், கதைக்கும் வேளைகள் ஒதுக்குக.

3. நல்ல பேச்சியல்புகளைப் பெருக்குக. சொற்றொகையை வளர்க்கும் நோக்கோடு உரையாடல் நடத்துக.

4. உரையாடற்குரிய பொருள் குழந்தை மனப்பான்மைக் குகந்ததாய் பற்றுதல் மிகுந்ததாய், அறிவிற் கெட்டியதாய், அனுபவத்திற் கொட்டியதாய் இருத்தல் வேண்டும்.

முதலிரண்டு வகுப்புக்குரிய பாடத் திட்டக் குறிப்பு:-

1. **பிள்ளைகள்** - வயது, பெயர், உணவு, விளையாட்டு, உடை.

2. குடும்பம்: பெற்றோர், உடன்பிறந்தோர், உறவினர்

3. வீடு, தளம் சுவர், கூரை, அறைகள், ஜன்னல்—கதவு.

4. பாடசாலை:- வகுப்புக்கள், தலைமை ஆசிரியர், சாமான்கள், தோட்டம், விளையாட்டிடம்.

5. மிருகம்:- தீனி, பழக்கம், குணம், பயன்.

6. நற்பழக்கம்:- தினசரிக் கடமை, பெரியோரிடம் மரியாதை, வந்தனம் கூறல், சுத்தம், பேச்சு.

7. தொழிற்கள்:- கருவிகள்

8. பண்டிகைகள்.

வினா:- 1. கீழ் வகுப்புக்களில் உரையாடல் பாடம் நடத்துவதின் நோக்கம் என்ன? உரையாடற் கேற்ற பொருட்கள் எவை? (Sec. 43.)

3, 4, 5- வகுப்புகட்குரிய உரையாடற் பாடங்கள்:-

மேற்கூறிய முதலிரண்டு வகுப்புகட்குரியவற்றோடு இவற்றையும் கூட்டிக் கொள்க.

1. சிறு நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறலும் உரையாடலும்.

2. சிறு கதைகள் கூறல்.

3. ஆங்காங்கு பார்த்த சிறு காட்சிகளைப் பற்றிக் கூறல்.

4. சமாச்சாரங்களைத் தெரிவித்தல்.

6, 7, 8-வகுப்புகட்குரிய உரையாடற் பாடத் திட்டம்.

1. தனிப்படங்கள், தொடர் படங்கள் முதலியவற்றை வாய்மொழியாக விளக்குதல்.

2. சரித்திரம், இலக்கியம் முதலியவற்றில் முக்கிய பாகங்களை நாடக முறையில் சம்பாஷித்தல்.

3. கதை சம்பந்தமான பல்வகைப் பயிற்சிகள் தருதல்

10. கதை சொல்வதின் முக்கியமும் நோக்கமும்

1. **இன்பம்:-** கரும்பை விரும்பா எறும்பில்லை; கதையை விரும்பாச் சிறுவரில்லை. மனித வாழ்க்கையில் பண்டைக் கால முதல் கதைகள் அளவற்ற ஆனந்தத்தை அளித்து வந்திருக்கின்றன. ஆகவே மனதிற்கு இன்பம் அளிப்பதே கதை சொல்வதின் முக்கிய நோக்கம்.

2. **கவனிக்கும் திறமை:** மாணவன் கதையை மெய் மறந்துகேட்கின்றான். கொஞ்சமும் விடாது,கதைப்போக்கில் ஈடுபட்டு விடுகிறான். ஆதலால் கவனிக்கும் திறமை வளர்கிறது.

3. **உணர்ச்சி:** கதைகள் மூலமாகப் புதுப்புது உணர்ச்சிகளைத் தூண்டலாம். குழந்தைகளின் மனவெழுச்சிகளைத் தட்டி எழுப்பக் கதைபோன்ற நல்ல கருவி காண முடியுமா?

4. **கற்பனை ஊட்டல்:** கதையை ஒரு மொழிச் சித்திரம் எனலாம். வர்ணச்சித்திரம் எவ்வாறு இன்பமான பல கற்பனை ஊற்றுக்களை உண்டுபண்ணுகின்றதோ, அது போன்றே கதைச்சித்திரமும் கற்பனையை அளிக்கின்றது.

5. **அறிவு வளர்ச்சி:** கதைகள் வாயிலாகப் பல்துறை அறிவை வளர்க்கலாம். பல நாட்டுக் கலாச்சாரங்களும், பண்டைய வரலாறுகளும், பண்பாடுகளும், பழக்க வழக்கங்களும் கதைகள் மூலம் கற்பிப்பது கடினமன்று.

6. **நற்குண பயிற்சி:** முன்னர் கூறியாங்கு உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, நன்னடக்கையில் பற்றுதலை உண்டு பண்ணக் கதை வன்மையான கருவி. "அரிச்சந்திரன் கதை கேட்டதால் சத்தியநெறிப் பற்று என் உள்ளத்தில் ஊற்றெடுத்தது"—என்றார் நம் காந்தியடிகளார். கிறிஸ்து பெருமான் கதைகள் வாயிலாகவே தம் அறநெறிக் கருத்தை அள்ளி வழங்கிச் சென்றுள்ளார். ஆகவே பக்தி, அன்பு, கருணை முதலிய கதை மணிகளை பங்கமில்லாத் தங்கமயமான பாலர் உள்ளத்தில் ஆழமாக அழுத்தமாகப் பதித்துவிடலாம்.

7. **பள்ளி விருப்பம்:** பள்ளி வாழ்க்கையை இன்பமாக மாற்றுகின்றது கதை. குழந்தைக்குக் கதை என்றாலே ஒரு களிப்பு; மாம்பழக் கன்னத்திலே மலர்ச்சி; முகத்திலே சிரிப்பு.

8. **நட்பு:** ஆசிரியர்பால் விருப்பமும் நட்பும் வளர்கின்றது.

9. **சொல்வன்மை:** கதையைத் தொடர்ந்து சொல்வதால் சொல்வன்மையும் ஞாபகச் சக்தியும் வளர்கின்றன.

குழந்தை கதை சொல்லும் பொழுது தானாகவே உணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும், ஆனந்தத்துடனும், அபிநயத்துடனும் சொல்லி இன்பமடைவதை நாம் கண்டு களித்துள்ளோம்.

10. **சொற்றொகை விருத்தி:** பல புதுச்சொற்களைக் கதையில் இடத்திற்கேற்ப உபயோகப்படுத்த மாணவர் பயிற்சி பெறுகின்றனர்.

11. **இலக்கியச் சுவையைப்** பிற்கால வாழ்க்கையிலே உண்டாக்கக் கதைகள் துணை புரியும். ஆகவே சொல் வன்மையை உண்டு பண்ணவும், வாய்மொழிப் பயிற்சிகள் அளிக்கவும் கதை பெரிதும் பயன்படுகின்றது என்பதை நன்கறியலாம்.

வினா: 1. கதை சொல்வதன் முக்கியத்தைக் கூறுக.
(Ele. 42)

2. கதை சொல்லல் வாய்மொழிப் பயிற்சியில் என்ன இடத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை விளக்குக
(Sec. 48).

11. சிறுவர் கதைகளின் தன்மை.

1. மாணவரின் வயது, அறிவு, மனநிலை, அனுபவம், ஆசை முதலியவற்றிற்கு ஏற்றவைகளாய் கதைகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். அவர்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டதாய் அறிவுக்கு எட்டியதாய் கதை அமைதல் வேண்டும். தாங்கள் காணும் மிருகங்கள், பட்சிகள், காட்சிகள் பற்றிய கதைகளை இலகுவில் விளங்கிக்கொள்வார்கள்.

2. **நீளம்:** பிள்ளையின் வயதிற்கும் வளர்ச்சிக்கும் பொருந்துமாறு கதையின் நீளத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். வாய்க்கு வராத வர்ணனைகளும், வேண்டாத விபரங்களும், உதவாத உட்கதைகளும் சேர்க்காமல் சுருக்கமாகக் கதையை அமைப்பதே நலம்.

3. **பயமூட்டும் கதை:** இளம் வயதில் பயமூட்டும் பேய், பூதம், பிசாசுக் கதைகளைச் சொல்வதைக் காட்டிலும் வேறு பெரிய தீமை இல்லை எனலாம். அந்தோ! இக் கதைகள் மலர் போன்ற மாசற்ற இளம் மனதை மடியத் தீய்க்கும் கொடிய நெருப்பு என வெறுத்தல் வேண்டும்.

4. **தீய பயனில்லாக் கதைகள்:** அடுத்துக் கெடுத்தல், வஞ்சனை செய்தல், ஏமாற்றல் போன்ற பஞ்ச தந்திரக் கதைகளையும் கள்ளமில்லாப் பிள்ளை உள்ளத்தில் கற்பிக்கலாகாது.

5. **சோகக் கதைகள்:** துக்ககரமான முடிவுகளும் துயரம் நிறைந்த நிகழ்ச்சிகளும், கதைகளையும் சிறுவர்க்குப் போதிக்காமல் பெரும்பாலும் நீக்கல் வேண்டும்.

6. **செயல் நிறைவு:** சிறுவர்க்குரிய கதைகள் நடிப்பிற்கும் ஆட்டத்திற்கும் சம்பாஷணைக்கும் பெரிதும் இடம் தரத்தக்கனவாய்த் திகழல் வேண்டும்.

7. **திரும்ப வரும் சொற்களைக் கொண்டுள்ளவை:** வந்த சொற்களும் சொற்றொடர்களும் மீண்டும் மீண்டும் வரும் கதைகள் குழந்தைகட்கு மிக எளிதாய் இன்பமாய் ஏற்றதாய் விளங்கும். இத்தகைய கதைகளை இந் நூலாசிரியர் எழுதியுள்ள "சிறுவர் இன்பம்!! ஏனும் நூலில் கண்டு

கற்பித்து இன்புறலாம். ரஷ்ய நாட்டு முள்ளங்கிக் கதை, வால் போச்சு கத்தி வந்தது டம்! டம்!! டம்!!! முதலியவை இவ்வகைக் கதைகள்.

8. **நகைச் சுவைக் கதை:** நல்ல சிரிப்பு நரம்பு கட்டு வலுவூட்டும். பூரண வாழ்க்கைக்குரிய பொலிவை நகைச் சுவை அளிக்கும். ஆதலால் வேடிக்கை நிரம்பிய கதைகளை கற்பித்தல் மனதிற்கும், உடலுக்கும் ஆரோக்கியத்தை உண்டு பண்ணும் சில நிகழ்ச்சிகளையும், கதைப் பாத்திரங்களின் கூற்றுக்களையும், புத்தி விசாலத்தையும் நினைத்து நினைத்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்கின்றோமல்லவா? வீரமா முனிவர் எழுதிய அவிவேக பூரண குரு கதையை எப்பொழுது நினைப்பினும் சிரிப்பே.

9. **பலவகைக் கதைகள்:** கட்டுக் கதைகளும், மாயா விநோதக் கதைகளும், புராணக் கதைகளும், சரித்திரக் கதைகளும், பெரியார் வரலாறுகளும் மாணவர் திறனுக்கேற்பத் தேர்ந்தெடுத்துக் கற்பித்தல் பெரிதும் நலன் தரும்.

வினா: முதல் வகுப்புக்கான கதைகள் எத்தன்மையனவாய் இருத்தல் வேண்டும்? (Ele. 42)

12. கதை கூறும் ஆசிரியரின் தன்மை.

1. **முன் தயாரிப்பு:** என்ன! இது கதைதானே என்று இளிவாகக் கருதலாகாது. கதை சொல்லல் ஒரு கலையாகும், கதை கருத்துக்கு விருந்து, கற்பனைச் சிற்பியின் கையில் கதை ஓர் சொல் ஓவியம். ஆதலால் கதையை வகுப்பிற்குச் செல்லுமுன் நன்கு சிந்தித்து ஆயத்தம் செய்து செல்ல வேண்டும். கதை விஷயங்களைப் பல தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தி மனக்கண்முன் ஒரு நிழற் படம் போல காண வேண்டும்.

2. **தெளிந்த அறிவு:** கதைப்பாத்திரங்களின் குணச் சிறப்பு, பாத்திரங்களின் இழிவு, நாட்டின் நிலைமை, கதை நடந்த காலத்திய பழக்க வழக்கங்கள், சூழ்நிலை முதலியவற்றைப் பற்றித் தெளிந்த திட்டவட்டமான அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

3. **சொல்லல்:** கதையை வாசித்துக் காட்டினால் சுவை பிறக்காது. அடிக்கடி எழுதி வைத்துள்ள குறிப்புகளைப் பார்த்துச் சொல்வதினால் கதையின் உணர்ச்சியும், உற்சாகமும் தடைப்படும். கதையை மனனம் செய்து ஒப்புவித்தலும் சுவை பயக்காது. கதையிலுள்ள மிகமுக்கியமான சிறந்த பகுதிகளை வேண்டுமெனில் சிறிது மனனம் செய்து கொள்ளலாம்.

4. **சொற்கள்:** கதையில் வரும் கடின சொற்களையும், சொற்றொடர்களையும் ஆசிரியர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். தொடர் கதையில், மீண்டும் மீண்டும் வரும் சொற்களையும், சொற்றொடர்களையும் நன்கு மனதில் பதித்து மாற்றாது சொல்ல வேண்டும்.

5. **உணர்ச்சி:** தான் கூறும் கதையில், தானே ஈடுபட்டு, லயித்துச் சுவைத்துச் சொல்ல வேண்டும். பல்வேறு சந்தர்ப்பங்களில் கதா பாத்திரங்களுக்கு நேரிடும் நிகழ்ச்சிகளைத் தமக்கு நேர்ந்ததாகவே பாவிக்கும் திறமை உண்டாயின், கதையை உணர்ச்சியுடன் கூறலாம். நல்ல நடிப்பும், ஏற்ற குரலும் உணர்ச்சியூட்டத் துணைபுரியும்.

6. **பிறசிந்தனையறல்:** கதையிலேயே கருத்தை எல்லாம் செலுத்தி, தன்னையும் புறவுலகத்தையும் மறந்து கூறல் வேண்டும்.

7. ஏற்ற குரலில், இனிய நடையில், விரையாது வேண்டுமளவு வேகத்தில் கூறல் சிறந்தது.

8. **சமநிலை:** மாணவரோடு மாணவராகிவிட வேண்டும். அவரோடு சேர்ந்து உட்கார்ந்து கொள்ளல் நலம். வகுப்பு முழுவதையும் தன் கண்பார்வைக்குள் அடக்கிக்கொண்டால் மாணவர் கவனத்தைக் கவரலாம்.

9. **நடிப்பும் சிரிப்பும்:** கருத்துக்கேற்றவாறு, முகத்தால், கரத்தால், உடலால் அபிநயம் பிடிக்கவும், ஆசிரியர் தனி அறையிலிருந்து பயிற்சி செய்து கொள்ளல்வேண்டும். கதையிலே காட்டும் சிரிப்பு மாணவர்க்குப் பெரும் விருப்பு. வெறுப்பை, களைப்பை, அலுப்பை, சலிப்பை அகற்றுவது சிரிப்பே.

10. **படங்கள்:** கதையில் வரும் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் விளக்க ஆங்காங்கு படங்கள் காட்டலாம். பத்துச் சொல்லால் விளக்கிப் பதியவைப்பதை பார்க்கினும் ஒரு படம் அதிகமாகப் பதித்துவிடும். வரைந்து வந்துள்ள படம் ஆடோ, மாடோ, குரங்கோ, கோழியோ என ஐயுறு வண்ணம் அழகுற வரைதல் அவசியம்.

11. **இடை வினாக்கள்:** கதை ஒரு சொற்பொழிவன்று. கதையின் இடையிலே ஆங்காங்கு சிறிய வினாக்களால் சிந்தனையைத் தூண்டலாம்; மாணவன் தொடர்ந்து அறிந்து வருகிறானா என அறியலாம்; பின்னால் நேரிடும் நிகழ்ச்சிகளை யூகிக்கத் தூண்டலாம்.

12. **நீதியை உணர்த்தல்:** கதையின் இறுதியிலே இக்கதையால் நீங்கள் இந்த நீதியை அறிந்து கொண்டீர்கள்

என்று ஆசிரியர் சொல்வது பயனற்ற முறையாகும். மாணவரே நீதியை உணர வேண்டும்.

வினாக்கள்:- 1. நன்றாய்க் கதை சொல்வதின் முக்கிய அம்சங்கள் (Characteristics) எவை? (Sec. 50)

2. மூன்றாம் வகுப்புக்குக் கதை சொல்வதில் நீர் கையாளும் முறையை விளக்கிக் கூறுக. (Sec. 50)

13 மாணவரைக் கதைசொல்லப் பழக்கல்

கதை சொல்வதில் மாணவர் படிப்படியாய் வளர வேண்டும். ஆரம்ப நிலையில் ஆசிரியர் உதவி கொண்டுதான் கதையை மாணவர்கள் கூற இயலும். கூறியதைக் கேட்டுக் கூறச்செய்வது முதற்பயிற்சி. சற்றுத் தேர்ந்த நிலையில் பிற உதவி கொண்டும் கொள்ளாமலும் கூற இயலும். ஆசிரியர் கொடுத்துள்ள குறிப்புகளையும் தொடர்படங்களையும் இடை விட்டுக் குறித்த சொற்றொடர்களையும் துணையாகக் கொண்டு மாணவருக்குக் கதை கூறப் பயிற்சிதர வேண்டும்.

சற்று முதிர்ந்த நிலையில் மாணவர் தாமே கதைகளைப் புதிதாக உருவாக்கலாம். இனிக் கதை சொல்லப் பழக்கும் பல்வேறு விதங்களைப் பார்ப்போம்.

1. கேட்டுக் கூறல்:— கதையை ஆசிரியர் ஒன்றிரண்டு முறைகள் கூற, மாணவர் கேட்டுப் பின்னர் அதே கருத்தையும் கூடிய வரையில் அதே சொற்களையும் நினைவூட்டிச் சொல்லவும் எழுதவும் பயிற்சி கொடுக்கலாம்.

2. கூறிய கதையில் தொடர்ச்சியான வினாக்களைக் கேட்க, மாணவர் விடை கூறிக் கதையை முடிக்கலாம்.

3. ஒவ்வொருவரும் ஒரு வாக்கியமாகவோ அல்லது பகுதியாகவோ கூறிக் கதையை முடிக்கலாம்.

4. விரித்துக் கூறல்:— சுருக்கமான கதையைச் சற்று விரித்தோ அல்லது மிகப் பெருக்கியோ கூறலாம்.

5. குறிப்புக் கொடுத்தல்:— கதையின் சுருக்கக் கருத்தைக் காட்டும் முக்கியக் குறிப்பை (குறிப்புச் சட்டகம்=hints & out line) வாசித்து அறிந்து, கதை முழுவதையும் விரித்துக் கூறலாம்.

6. கதை சம்பந்தமான பாட்டுக்களை ஒரு முறை இரு முறை பாடக் கேட்டு, அல்லது வாசித்தறிந்து, கதையை உரைநடையில் கூறலாம்.

7. கதையை ஒருவர், அல்லது பலர் சேர்ந்து ஊமையாக நடிக்கையில் ஆங்காங்கு ஒன்றிரண்டு இன்றியமையாச் சொற்களையும் விளக்கத்திற்காகக் கூறல் வேண்டும். இதனைப் பார்த்துக் கதையைப் பின்னர் கூறலாம்.

8. கதை பற்றிய தொடர்ந்த படங்களையும், படங்கட்கடியிலுள்ள குறிப்புக்களையும் பார்த்து முழுக் கதையை அமைக்கலாம். எழுதப்பட்ட கதையினூடே ஆங்காங்கு மட்டும் சிறு சிறு படங்களை வரைந்து விடலாம். அவற்றை வாசித்தும் பார்த்தும் முழுக் கதையை உருவாக்கலாம்.

9. கதையின் முதல் அல்லது இறுதி அல்லது இடைப் பகுதியை மட்டும் கூறிப் பிறபகுதியை பூர்த்தி செய்து கதையை உருவாக்கலாம்.

10. ஒரு படத்தைக் காட்டி அதைப்பற்றித் தத்தம் சிந்தனைக் கேற்பக் கதையமைக்கக் கூறலாம்.

11. ஒவ்வொரு மாணவனும் ஒரு வாக்கியமாகக் கூறி ஒரு கதையை உருவாக்குவது மிக விளையாட்டாகவும், விநோதமாகவும் இருக்கும்.

12. துக்க முடிவுக் கதைகளை இன்ப முடிவுக் கதைகளாகவும், இதற்கு மாறாகவும் புதிதாக மாற்றியமைக்கு மாறு பயிற்சியளிக்கலாம்.

13. கதை நிகழ்ந்த இடங்கள், தேசங்கள், கதையின் பாத்திரங்கள் ஆகியவற்றை வேறாக வைத்துக் கதையைப் புதுச் சூழ்நிலைக் கேற்ப மாற்றலாம்.

வினா - 1. கதை சொல்வதில் மாணவர்க்கு எவ்விதப் பயிற்சிகள் அளிக்கலாம்?

2. இரண்டாம் வகுப்பிற்குக் "கதைசொல்லும்பாடம்" போதிக்க, போதனைமுறைக் குறிப்புகள் எழுதுக.

(Ele. 54.)

14. கதைக்குப் பின் தரும் வெளிப்பாட்டுச் செயல்கள்.

உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும், ஊறும் எண்ணங்களையும் மாணவர் பல வகையில் வெளிப்படுத்த முயலுவார்கள். இவ்வாறு வெளிப்படுத்துவது இயற்கையும் இன்பமுமாகும்.

1. கேட்ட கதையைப் பிறர்க்குக் கூறுவதிலே ஒரு இன்பம் பிறக்கும்.

2. கதையில் வந்துள்ள சுவையான சொற்களையும் சொற்றொடர்களையும் மாணவர் பலகால் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள்.

3. கேட்ட கதையை நாடக முறையில் அமைக்கவும், நடிக்கவும் பிரியப்படுவார்கள்.

4. கதைகளை அடிக்கடி கேட்பதால், மேலும் மேலும் கதைகளைப் படிக்கவும் அறியவும் விருப்பம் எழும்.

5. கதையில் வரும் பொருள்களைப் போல களிமண், காகிதம் முதலியவற்றால் பொருள்கள் செய்யலாம்; படங்கள் வரையலாம். மாணவர் செய்யும் இவ்விதச் செயல்களைப் பாராட்டி, ஊக்கமூட்டி, இன்பங்காட்டி ஆதரவளிக்க வேண்டும். முன் ஆயத்தமில்லாக் கதை நடிப்பைப் பற்றியும், கதை நடிப்பின் பயன்களைப் பற்றியும் 2-ம் அதிகாரத்தில் நடிப்பு முறையில் கூறப்பட்டுள்ளதைக் கண்டு கொள்க. சிறுவர் பாடல்களைப்பற்றிச் செய்யுள் எனும் அதிகாரத்தில் கற்போம்.

15. படங்களினால் பயனும் நன்மையும்.

1. பெரும்பாலும் தமிழ் ஆசிரியர்கள் வகுப்புக்குப் பலவிதப் படங்களைக் கொண்டு வந்து காட்டுவதில்லை. சொல் வர்ணனையில் வல்லவர்களாக இருப்பதினால் வர்ணித்துச் சென்று விடுகின்றனர். ஆயினும் படம்போல ஒருசில பொருட்களை வார்த்தைகள் விளக்கா.

2. படங்கள் உள்ளப் பண்பை வளர்க்க உதவுகின்றன. அழகுணர்ச்சியை அதிகப்படுத்துகின்றன; இயற்கையினிடம் பற்றுதலை வளர்க்கின்றன.

3. படம் பேசத் தூண்டும். படத்தைப் பார்த்தவுடன் பக்கத்திலுள்ள மாணவனிடம் அதைப்பற்றிக் கூற ஆசைப்படுவான்.

4. படங்கள் கவனத்தை இழுக்கின்றன; கண்ணைக் கருத்தைக் கவருகின்றன. உற்று நோக்கும் திறனையும் விருத்தி செய்கின்றன. ஆராய்வூக்கத்தைத் தூண்டி வளர்க்கின்றன.

16. தமிழ்ப் போதனையில் படங்கள்.

1. **தனி அட்டைப் படங்கள்** :- சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்குவதற்குப் படங்களைப் பயன் படுத்தல் நலம்.

2. **விளையாட்டு அட்டைப் படங்கள்** :- ஆரம்ப வகுப்புகளில் விளையாட்டு முறையைப் பின்பற்றிப் பலவிதப் படங்களை உபயோகப்படுத்தலாம்.

3. **சரித்திரப் படங்கள்** :- ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், சரித்திரம் முதலியவற்றை அறியப் பலவகைப் படங்கள் மிகவும் உதவுகின்றன. தமிழ் நாட்டின் பண்டையப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நம்மில் எத்தனை தமிழாசிரியர்கள் படங்கள் மூலம் காட்ட முயற்சித்துள்ளோம்? நம் பழந் தமிழ் நாட்டின் புரவலர்கள், வாழ்ந்த இடங்கள், பண்டைப் போர்க்கருவிகள், அரண், அகழி, அரண்மனைகள், அணிவகைகள், மலர்கள், தாவரங்கள் இவற்றைப் படங்கள் மூலம் காட்டி மாணவர்க்கு இன்ப மூட்ட முயலல் வேண்டும்.

4. **நிகழ்ச்சி விளக்கப் படங்கள்** :- காப்பிய நிகழ்ச்சிகளைப் பற்றிய கற்பனைகளை விளக்குவதற்குப் படங்களைக் காட்டலாம்.

5. **இயற்கை வர்ணனைப் படங்கள்**;- இலக்கியங்களில் வரும் இயற்கையைப் பற்றிய சொல் சித்திரங்களை வண்ணச்

சித்திரத்தில் தீட்டிக் காட்டலாம். பள்ளியின் சித்திர ஆசிரியரின் உதவியால் இவைகளைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

6. **ஒலி விளக்கப் படங்கள்:-** ல, ள, ழ; ன, ண; ற, ர முதலிய எழுத்தொலிகளைக் கூறுங்கால் எழும் நாக்கின் சுழற்சிகளை நன்கு விளக்குவதற்குப் படங்களைப் பயன் படுத்தலாம்.

7. **கட்டுரைக்குதவு படங்கள் :-** ஆசிரியரின் உதவி பெற்றும், பெறாதும் மாணவர், கட்டுரைகள் வரைவதற்குப் படங்களைக் காட்டி, அவற்றைப் பற்றிய வினு விடை மூலம் விஷயங்களை விளக்கலாம். படங்களைக் கவனித்து, மாணவர் தாமே உணர்ந்த கருத்துக்களைக் கட்டுரையாக வரையலாம்.

8. **கதைப் படங்கள் :-** கதையின் முக்கிய நிகழ்ச்சியை விளக்க ஓர் படம் வரைந்து காட்டுவதால் கதையின் ருசி அதிகப்படும். ஒரு கதையை மூன்று நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனிப் படங்கள் வரைந்து விளக்கலாம். படங்களைப் பார்த்துக்கொண்டு மாணவரே சுயமாகக் கதையை அமைக்கு மாறு ஆசிரியர் கேள்விகளால் துணைபுரியலாம். கதைகட்கும் பிறவற்றிற்கும் மாணவரே படங்கள் வரையலாம். இது சுய ஆக்கத் திறமையை வளர்ப்பதாகும்.

9. **படத்திரட்டு :-** மாணவர் தமக்கு விருப்பமான பொருள் பற்றிய பலவகைப் படங்களைச் சேகரித்து ஏட்டில் ஒழுங்குற ஒட்டி வைக்கலாம். அவற்றைப் பற்றிய விளக்கங்கள் எழுதி வைத்தல் நல்லது.

10. **அச்சிட்ட பட புத்தகங்கள்:-** இத்தகைய புத்தகங்கள் மாணவர்க்கு மிக மகிழ்ச்சியூட்டும். சைவ சித்தாந்த கழகத்தார், கிருஸ்தவ இலக்கிய சங்கத்தார் நல்ல படப் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

11. **இலக்கணப் பாகுபாட்டினை;** விளக்கப் பல வகைப் படங்களை வரைந்து காட்டலாம். உதா:- பெயர்ச்சொல் அடிமரமாகவும், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய வகைகள் கிளைகளாகவும் மரம் வரைந்து காட்டலாம். மற்றோர் உதா:— உயர்திணைப்பாதை ஒன்று. அதில் மக்கள் தேவர் செல்லுதல் அஃறிணைப் பாதை மற்றொன்று, அதில் மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், உயிரல் பொருட்கள் ஆகியவைகளை நிறுத்தல்.

வினா:-1. வாய் மொழிப் போதனையில் படங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்குக. (Sec. 51.)

2. முதல் வகுப்பில் நீர் உபயோகிக்கும் மூன்று விதப் படங்களை விரித்துக் கூறி ஒவ்வொன்றையும் எவ்விதம் உபயோகிப்பீர் என்பதையும் விளக்குக. (Sec. 51.)

17. மாணவர் பேச்சுப்பயிற்சிக் கழகங்கள்

மாணவர் கூடி சிறு கழகங்களை ஏற்படுத்தி அவற்றில் சிற்றுரைகள், தர்க்கங்கள், நாடகங்கள், கதை நடித்தல் மாதிரிப் பஞ்சாயத்துக்கள், போலி அரசியல் கூட்டங்கள் போலி நியாய சபைகள்; புத்தக விமர்சனங்கள் முதலியவற்றை நடத்துவதன் மூலம் பேச்சு வன்மையடைகின்றனர். இவை பிற்கால வாழ்க்கையில் பெரிதும் பயன்படும் என்பது உறுதி. இவற்றை நடத்துங்கால் கீழ்க்கண்ட விதிகளை ஆசிரியர் கவனித்துக் கைக்கொள்வாராக.

1. கழகங்களின் கூட்டங்கள் நடைபெறுங்கால் ஆசிரியர் துணைவராகவும், வழிகாட்டியாகவும் விளங்குக. மாணவரே சகல பொறுப்பினையும் ஏற்குமாறு தூண்டித் துணைபுரிய வேண்டும்.

2. கழகங்களில் பேச்சுப் பிழை, கருத்துப் பிழை நேரிட்டால், உடனுக்குடனே திருத்தாமல், குறித்துவைத்து இறுதியில் மாணவரைச் சுட்டிக் காட்டாது, பொதுவாகப் பிழைகளைத் திருத்தலாம். தனியாக மாணவனை அழைத்தும் அன்பாக ஆதரவாகத் திருத்தலாம்.

3. இக் கழகப் பேச்சுக்களையும், தர்க்கங்களையும் சற்று விளையாட்டுப் போக்கிலேயே நடத்தல் இன்பந்தரும்.

4. மாணவர் தாங்கள் விரும்பும் எப்பொருளைப் பற்றியும் பேசலாம். கட்டுப்பாடும் கண்டிப்பும் கூடா.

5. கூட்டங்கட்குப் பின்னர், ஐயங்களைத் தெளிவு படுத்தவும், மேலும் விஷயங்களைச் சேர்க்கவும் ஏதுவாக கேள்வி கேட்பதற்கு இடமும் வாய்ப்பும் தரலாம்.

6. பேசுவோன் சிரமப்பட்டு மிகுந்த ஆயத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை. சிறிது நேரம் ஆசிரியரோடு கலந்தோ, புத்தகங்களைப் பார்த்தோ ஆயத்தம் செய்தால் போதுமானது.

7. பேசுபவனுக்குச் சொல்லோ; கருத்தோ தட்டுபடுமாயின் அவனைப் பிறமாணவர்கள் ஏளனம் செய்ய விட்டுவிடலாகாது. ஆசிரியர் உடனே அன்பாக ஆதரவூட்டி ஊக்கமளிக்க வேண்டும்.

8. ஆரம்பத்தில் மாணவர் தாம் விரும்பும் எப்பொருள் பற்றியும் ஒருசில வாக்கியங்கள் இஷ்டம்போல் பேசலாம். பயிற்சி பெறப் பெறச் சற்று நீண்ட நேரம் பேச முயற்சி செய்வார்.

9. மேல் வகுப்புகளில் தர்க்கக் கழகங்கங்கள், புத்தக விமர்சனம் முதலியவை நிகழ்த்துங்கால், மாணவர் தத்தம் விருப்பு, வெறுப்புக்களையும் கண்ட நன்மை தீமைகளையும் பெருமை, சிறுமைகளையும் தக்க காரண காரியத்துடன் எடுத்துக் கூற படிப்படியாகப் பயிற்சி தரல் வேண்டும். பிறர் கருத்தை மறுக்கவோ, மாற்றவோ, நீக்கவோ, தாக்கவோ நேரிடுங்கால் மரியாதையுடனும், பண்புடனும் அமைதியுடனும் தக்க காரணங்காட்டிப் பேசவேண்டும். விவாதத்திற்காக, தர்க்கத்திற்காக, மறுக்கவேண்டும் என்பதற்காக தான் கொண்ட கொள்கையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ளும் பழக்கத்தை மாற்ற முயல வேண்டும். தப்பிதத்தை தப்பிதம் என ஒப்புக்கொள்வதே ஒப்பில்லா உயர்குணம் என்பதை ஊட்டவேண்டும்.

வினா:- மாணவர் பேச்சுப் பயிற்சிக் கழகங்கள் வாய்மொழிப் பயிற்சி அளிப்பதில் எவ்வாறு உதவி புரிகின்றன? அவற்றை எப்படி நடத்துவீர் எனக் கூறுக.

IV. வாசிப்புப் பயிற்சி.

1. வாசிப்பின் அவசியம்.

1. பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழியின் மூவகைப் பயிற்சியில் இரண்டாவது முக்கியமான பிரிவு வாசிப்பு. இது பேச்சுப் பயிற்சிக்கும் எழுத்துப் பயிற்சிக்கும் இடை நிற்கும் சிறப்பு வாய்ந்தது.

2. பள்ளியில் நடைபெறும் பூகோளம், சரித்திரம் முதலிய எல்லாப் பாடங்களையும் அறிந்து கொள்ளுவதற்கு வாசிப்பு அவசியமானது.

3. பள்ளி வாழ்க்கைக்குப் பின்னர் ஒருவன் மேலும் மேலும் அறிவு பெற வாசிப்பு அவசியம். வாசிப்பின்றேல் அறிவில் வளர்வது எங்ஙனம்?

4. ஓய்வு நேரத்தை வீணாக்காது, பல நல்ல நூற்களைக் கற்று இன்புற, வாசிப்பு உதவுகின்றது.

5. தூர இடத்தில் நடக்கும் செய்திகளையும், இறந்த கால, வருங்கால நிகழ்ச்சிகளையும் ஒருவன் வாசித்துணர்ந்து கொள்ளலாம். பத்திரிகைகள் படிப்பதால் பல நல்ல உபயோகமான விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

6. திருந்திய உச்சரிப்பைக் கற்பிக்கவும் உரத்த வாசிப்பு உதவுகிறது.

2. வாசிப்பின் விளக்கம்.

கையெழுத்தை அல்லது அச்செழுத்தைக் கண்கள் பார்த்தும், வாய் உச்சரித்தும், மனம் பொருளை உணர்வதே வாசிப்பாகும். இதனை உரக்க வாசிப்பு அல்லது வாய்விட்டுப் படித்தல் என்கிறோம். வாய் ஒலிக்காமல் கண்கள் மட்டும் பார்த்து மனம் பொருளை உணரின் அதனை மௌன வாசிப்பு அல்லது வாய்க்குட் படிப்பு என்கிறோம். உரக்க வாசிப்பில், உதடு, நா, அண்ணம், குரல்வளை முதலிய ஒலி உறுப்புக்கள் இயங்கிச் சொற்களை உச்சரிக்கின்றன. மௌன வாசிப்பு என்பது உதட்டினை அசைக்காமல், ஒலியினைக் கிளப்பாமல் கண்கள் மட்டும் பார்த்துக் கருத்தை உணர்வதாகும்.

3. குழந்தைக்கு வாசிப்பில் ஆவலை மூட்டும் சில வழிகள்.

1. பிற மாணவர்கள் வாசிப்பதைப் பார்த்துத் தானும் வாசிக்க வேண்டும் எனும் ஆவல் குழந்தைக்குண்டாகலாம். அண்ணன் வாசிக்கும் புத்தகத்தையே குட்டித் தம்பியும் வாசிக்கத் தனக்கு வேண்டும் வேண்டும் எனக் கேட்டழுவதை வீடுகளில் நாம் கண்டுள்ளோம்.

2. அழகிய படங்களடங்கிய நல்ல புத்தகம் மாணவன் மனதைக் கவரும்.

3. பெரிய படங்களுக்கடியில் ஒரு சில வார்த்தைகளை எழுதிவைப்பின் அவற்றை வாசிக்க விரும்புவார்கள்.

4. பல விளையாட்டுகள் மூலமாக வாசிப்பில் பிரியம் மூட்டலாம்.

5. படங்கள் நிறைந்த கதைப் புத்தகம் வாசிப்பில் ஆசையை உண்டாக்கும்.

6. வகுப்பு அறையில் உள்ள விளம்பரப் பலகையில் தினந்தோறும் செய்திகளையும், அறிவிப்புகளையும் மாணவரின் செயல் திட்டங்களையும், கட்டளைகளையும் எழுதிப் போட்டு வாசிப்புப் பயிற்சி அளிக்கலாம்.

7. ஏதாவது ஒரு தேவைப்பட்ட விஷயத்தைப் பற்றி மாணவர் அறிய விரும்பினால், அவ்விஷயத்தைப் பற்றி அறிவிக்கும் நூற்களை வாசிக்கத் தரலாம். உதாரணமாக, புராஜெக்ட் முறையில் வாசிப்புப் பயிற்சி தரலாம். சோப்பு செய்யும் முறையைப்பற்றி, அதைச்செய்யும்போது, புத்தகங்களில் வாசித்துணரத் தூண்டலாம்.

8. நாட்டு நடப்புகளைச் செய்தித்தாளிலும், அறிவிப்புகளை விளம்பரங்களிலும் மாணவர் அறிய விரும்புவது இயற்கை. இவ்விருப்பத்தைப் பயன் படுத்தலாம்.

9. வகுப்பு நூல் நிலையத்தையும், பொது நூல் நிலையத்தையும் மாணவர் பயன்படுத்துமாறு தூண்டித் துணை புரியலாம்.

வினா :- உமது மாணவரிடத்தில் படிப்புப் பழக்கத்தை எவ்வாறு பதியச் செய்வீர்?

4. வாசிப்பு முறைகளைக் கலத்தல்.

ஆரம்பத்தில் வாசிப்புக் கற்பித்துக் கொடுக்கப் பல்வேறு முறைகளைக் கைக்கொள்ளுகின்றோம். அவையாவன:-

1. எழுத்து முறை.

2. சொல் முறையும், பார்த்துச் சொல்லும் முறையும்.

3 சொற்றொடர் முறையும் கதை முறையும்.

இம் முறைகள் ஒவ்வொன்றிலும் குறைகளும் நிறைகளும் உள்ளன. இவற்றுள் ஒரு முறைதான் சிறந்தது எனச் செப்ப இயலாது. இம் முறைகளுக்குள் காணப்படும் பல சிறப்பியல்புகளைக் கலந்து அவ்வப்போது ஏற்ற ஒரு முறையை ஆசிரியர் அனுசரிப்பதே திறமையாகும். நானுவித முறைகளிலுள்ள நல்ல அம்சங்களை அறிந்து தொகுத்து நன்கு கையாளும் கலப்பு முறையே சிறப்பு முறையாம்.

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்"—என்ற கொள்கையைப் பின்பற்றல் நலம்.

5. எழுத்து முறை.

இதுவே நம் நாட்டில் கையாண்ட பழைய முறை. இம் முறைப்படி எழுத்துக்களை முதலில் வரிசையாய்க் கற்பித்துப் பின்னர் எழுத்துக் கூட்டிச் சொற்களைக் கற்பிப்பார்கள். பிற்பாடு முறையே ஈரெழுத்துச் சொற்களையும் மூவெழுத்துச் சொற்களையும், நாலெழுத்துச் சொற்களையும் பின்னர் நீண்ட சொற்களையும் சொற்றொடர்களையும் கற்பிப்பார்கள். இனி இம்முறையின் நிறைகளையும் குறைகளையும் ஆராய்வோம்.

நிறைகள்.

1. முதலில் எழுத்துக்களைக் கற்பதால், எழுத்துக்களைப் பற்றிய திட்டமான தெளிவான அறிவு ஏற்படுகிறது.

2. தமிழில் 247 எழுத்துக்கள் உள்ளன. ஆனால் அவை வரிசை வரிசையாக அமைந்திருக்கின்றன. க, கா, கி, கீ, கு, கூ, ... என்பது ஒரு வரிசை. இவ்வாறுள்ள ஒரு வரிசை எழுத்தொலிக்கும் பிற வரிசை எழுத்தொலிக்கும் ஒற்றுமை நன்கு மிளிர்வதால், கற்பது கடினம் எனக் கூறல் பொருந்தாது. முதலிலுள்ள உயிர் எழுத்து வரிசையின் ஒலிகளே பிறவரிசையிலும் கலந்து ஒலிப்பதால் 247 எழுத்துக்கள் என மலைக்க வேண்டியதில்லை. ஒரே மூச்சில் 247 எழுத்துக்களையும் தொடர்ந்து கற்பிக்க வேண்டியதுமில்லை. ஓரிரு வரிசைகளைக் கற்றுப் பின் அந்த வரிசையிலுள்ள எழுத்துக்களால் வார்த்தைகளை உண்டாக்கிக் கற்றுத் தரலாம். இவ்வாறே படிப்படியாய்க் கற்பித்துச் செல்லலாம்.

3. தமிழ் மொழியில் எழுத்துக்கள் மிகச் சிறந்த காரணத்துடன் வரிசைப் படுத்தப்பட்டுள்ளதை அறிந்தால் இன்புறுதார் யார்? அவைகள் பிறப்பு நோக்கி வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. ஆ ஹா! ஒவ்வொரு குறிலுக்குப் பக்கத்தில் அதன் நெடில்! என்ன அழகு! எவ்வளவு காரணம்!! ஆங்கில எழுத்துக்கள் இவ்வளவு காரணத்துடன் வரிசைப் படுத்தப்படவில்லை.

4. ஆங்கில மொழியைக் கற்க வார்த்தை முறையே சிறந்தது. ஏனெனில் ஒவ்வொரு எழுத்துக்கும் வார்த்தைகளில் வெவ்வேறு ஒலிகள். மேலும் சில வார்த்தைகளில் எழுத்துக்கள் ஒலிக்காமலே அமைதியாய்க்கூட நிற்கும். (உதா:- Knife) ஆனால் தமிழ் மொழியில் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு ஒலி. எழுத்துக்களைக் கற்றுவிட்டால் வார்த்தைகளைக் கற்பது எளிது.

5. எழுத்துக்கள் சேர்ந்ததே சொல். ஆதலால் முதற்கண் எழுத்தைக் கற்றுப் பின்னர் சொல்லுக்குச் செல்வது காரண காரிய முறையைப் பின்பற்றியதாகும்.

6. தமிழில் பல ஓரெழுத்துக்களே சொற்களாகவும் உணர்ச்சி ஒலிகளாகவும் பொருள் பெற்று விளங்குகின்றன.

7. குழந்தை ஓர் எழுத்தில் கவனம் செலுத்திக் கற்பது எளிது. பல எழுத்துக்களால் ஆகிய வார்த்தையைக் கவனித்தறிவது கடினம்.

குறைகள்.

1. சொற்கள் எழுத்துக்களினால் ஆக்கப்படுகின்றன. ஆதலால் எழுத்துக்களை முதலில் கற்றல் வேண்டும் என்பது காரண காரிய முறையே. ஆயினும், குழந்தையின் உள நூல் கொள்கைக்கு இது ஒவ்வாதது என்பார். குழந்தைகள் முதலில் ஒரு பொருளின் முழு உருவத்தைக் கவனித்துப் பின்னர்தான், அப்பொருளின் தனித் தனிச் சிறு பாகங்களை உற்றுக் கவனிக்க ஆரம்பிப்பார்கள். அது போலவே முழு வார்த்தையை முதலில் கற்று, பின் தனித்தனி எழுத்துக்களைக் கவனிக்குமாறு கற்பித்தல் குழந்தைத் தன்மைக்குப் பொருத்தமான முறை என்கின்றனர்.

2. ஓரெழுத்து ஒரு மொழியாய் உள்ள சில எழுத்துக்கள் தவிர,பெரும்பாலான எழுத்துக்கட்குத் தனிநிலையில் பொருள் இல்லை. பொருளற்ற எழுத்துக்களைப் படிப்பது இன்பம் பயக்காது; வெறுப்பும் சலிப்புமே விளைவிக்கும்.

3. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதலே இயல்பாகும். இம்முறை இதற்கு மாறானது என்பர்.

வார்த்தையைக் குழந்தை அறியும் எழுத் தொலியைக் குழந்தை அறியாது.

4. பள்ளியில் பிறமாணவர் வார்த்தைகளைக் கற்பதைக் கண்டு, தானும் கற்க வேண்டும் எனக்குழந்தை ஆசைபடும். அவ்வாசையைப் பூர்த்தி செய்யாது, பொருளற்ற தனி ஒலிகளைக் கற்பது ஏமாற்றத்தையும் வெறுப்புணர்ச்சியையும் கொடுக்கும் என்பார்.

5. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள சில எழுத்துக்கள் வார்த்தைகளில் வழங்குவதில்லை. ஙப்போல் வளை-என்பதற்கேற்ப இடம் பெற்றுள்ளன. 'ங' தவிர ஙா ஙி, ஙீ, ஙு, ஙூ, ... முதலிய எழுத்துக்கள் வார்த்தைகளில் வருவதில்லை அவற்றையும் படிப்பது வீணாகும்.

6. எழுத்துக் கூட்டிப் படிப்பதிலே அதிகக் கவனம் செலுத்தப்படுவதால், வார்த்தையின் பொருளை உணராமற் போகலாம். ஆகவே இம்முறையின் குறைகளையும் நிறைகளையும் ஆராய்ந்து, பிறமுறையின் நல்ல அம்சங்களோடு கலந்து உபயோகப்படுத்தினால் பலனும் நலனும் காணலாம். எம்முறையும் முற்றிலும் குற்றமுடைத்தென இகழற்பாலதன்று. ஒரு முறையே எல்லாவற்றிலும் சிறப்புடைத்து எனக் கொள்ளல் பாலதன்று. அரசியலாரும் பாடத் திட்டத்தில், பின்பற்ற வேண்டிய முறை இது என ஒன்றை குறிப்பிடவில்லை.

6. சொல் முறை.

சொல் முறை என்பது முதலில் எழுத்துக் கூட்டாமல் சொல் முழுமையும் பார்த்து அப்படியே முழுதாகக் கற்பித்துப் பின்னர் தனித்தனி எழுத்துக்களைக் கற்பிப்பதாகும்.

முழுச் சொல்லைப் பார்த்து, எழுத்துக் கூட்டாமல் சொல்லு தால், இதனைத் பார்த்துச் சோல்லும் முறை என்பர். பார்த்து சொல்வதற்குச் சொல்லை அளவாகக் கொண்டால், சொல் முறையாகும்; சொற்றொடரை அளவாகக் கொண்டால் சொற்றொடர் முறையாகும்.

சொல் முறையின் குறைகள்:-

இம் முறையில் எழுத்துக்கூட்டிப் படிக்கும் பழக்கம் அதிகம் இல்லை. மாணவர்கள் எழுத்துக்கூட்டும் அறிவைப் பெற்றிருப்பின், ஆசிரியர் உதவியின்றித்தாமே கற்க ஏதுவாகும். தமிழ் மொழியில் ஆங்கிலம் போலன்றி, எழுத்துக் கூட்டிப் படிப்பது இலகுவாக இருக்கிறது. தேனிலும், தெளிதேனிலும் தித்திக்கும் செந்தமிழ் மொழியிலே ஓர் எழுத்துக்கு ஓர் ஒலி; ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து. ஆனால் ஆங்கிலத்தில் ஓர் எழுத்துக்குப் பல ஒலி; ஓர் ஒலிக்குப் பல எழுத்து. ஆதலால் தமிழ் மொழியைக் காட்டிலும் ஆங்கிலம் கற்பிப்பதற்கே சொல் முறை மிக ஏற்றது.

2. படங்களின் துணைக் கொண்டு வார்த்தைகளை உற்றுக் கவனியாது எளிதாக விரைவாகச் சொல்விச்செல்வர் படமில்லாது தனிவார்த்தைகளைக் கரும்பலகையில் அடிக்கடி எழுதி வாசிக்கக் கூறினல் இக்குறை நீங்கும்.

3 எழுத்துக்களைப் பற்றிய திட்டமான அறிவின்மையால் எழுத்துப் பிழைகள் நேரிடலாம். வார்த்தைகளில் குறில் நெடில் பற்றிய மயக்கம் உண்டாகும். சொற்களை அடிக்கடி பார்ப்பதாலும் எழுதுவதாலும் இக்குறை நீங்கும்.

4. இம்முறையில் தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் உள்ள எழுத்துக்கள் அனைத்தையும் ஒருமுறையாக விடாமல்

கற்பது சற்று சிரமம். எந்த எழுத்துக்களைப் போதித்துள்ளோம் என்ற கணக்கை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும்.

5. இம் முறையில் வாசிப்பு விரைந்து செல்லும். ஆனால் வாசிப்பவற்றை உடனுக்குடன் எழுதிவிடமுடியாது.

நிறைகள்.

1. சொல்லுக்குப் பொருளுண்டு. பொருளற்ற எழுத்தைக் கற்பதிலும், பொருள்பட்ட சொல்லைக் கற்பது இன்பம் பயக்கும்.

2. மொழி வளர்ச்சியை நோக்கின். ஆதி மனிதன் முதலில் சொற்களைப் பேசி, பின்னர் எழுத்துக்களைக் கண்டறிந்தான். இந்த மொழி வளர்ச்சி முறைக்கும் இயற்கைக்கும் ஒத்தது எனலாம் இச்சொல் முறையை.

3. மாணவர் சொற்களை அறிவர். எழுத்துக்களை அறியார். ஆகவே தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்வது இம்முறை.

4. முழுப் பொருளை முதலில் அறிந்து பின்னர் அதன் பாகங்களைக் கவனித்தறிவதே பாலர் இயல்பு. இந்த இயல்புக்கு ஏற்றது இம்முறை.

வினா:- 1. வாசிக்கக் கற்பிக்கும் முறைகள் சிலவற்றைக் கூறுக. முதல் வகுப்பிற்கு அவற்றுள் எம்முறையை அனுசரிப்பீர்? ஏன்? (Ele. 45)

7. சொற்றொடர் முறை.

பல சிறிய சொற்றொடர்களை முதலில் கற்பித்துப் பின் தனிச் தனிச் சொற்களையும் அதன்பின் தனி எழுத்துக்களையும் கற்பிப்பதே இம் முறை. சொல் முறைபோல,

பார்த்துச் சொல்லுதல் எனும் கொள்கையினையே, இதுவும் ஆதாரமாகக் கொண்டது. ஆதலால் சொல் முறைக்குக் கூறிய குறைகளும் நிறைகளும் இதற்கும் பெரும்பாலும் பொருந்தும். சொல்லைக் காட்டிலும் வாக்கியம் ஒரு முழு எண்ணத்தையும் கருத்தையும் வெளிப்படுத்துவதால், சொல் முறையினும் இது சிறந்தது. மேலும் சிறு சொற்றொடர் களால் ஒரு கதையை அமைத்து இம்முறையைப் பின்பற்றிப் போதிப்பது பெரிதும் இன்பமும் உற்சாகமும் தரும். இதனைக் கதை முறை என்றுங் கூறுவர். சொற்கள் மீண்டும் மீண்டும் வரும் சங்கிலித் தொடர் கதைகள் ஆரம்பத்தில் மிகவும் ஏற்றவை.

இம்முறையைக் கையாளும் விதம்:—

படத்தின் கீழ் ஏற்ற சிறு வாக்கியத்தை எழுத வேண்டும். படத்தை விளக்கி, வாக்கியத்தை மாணவரிட மிருந்து வருவித்துப் பின் முழு வாக்கியத்தையும் கற்பிக்க வேண்டும். பின் தனிச் சொற்களையும் அதன்பின் எழுத் துக்களையும் கண்டறியப் பயிற்சிதரல் வேண்டும்.

பெரிய அட்டைகளில் சிறியகட்டளைகளை எழுதிக்காட்டி அக்கட்டளைப்படி செய்யச் சொல்லலாம். கதவைத் திற, ஜன் னலை மூடு, காலைத் தொடு:—என்பன போன்ற கட்டளைகளை உபயோகிக்கலாம். சிறிய பாப்பாப் பாடல்களையும் பழ மொழிகளையும் விடுகதைகளையும் இம்முறையில் போதிக்க லாம். "சிறுவர் இன்பம்"—எனும் பாடல் நூலில் இதற் கேற்ற பாடல்களையும் கதைகளையும் காணலாம்.

வினா வாசிக்கக் கற்றுத்தரும் முறைகள் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றின் குணங் குறைகளை ஆராய்க.

8. படிப்புப் பயிற்சிக்குப் பயன்படும் உபகரணங்கள்.

1. **பலவகைப் படிப்புத் தாட்களையும்** (Reading Charts) அட்டைகளையும் ஆசிரியர்களே ஆக்கிக்கொள்ளலாம். மாணவர்களையும் இவற்றை ஆக்கத் தூண்டலாம். இப்படிப்புத்தாட்களில் பலவகைப் படங்களை வெட்டி ஒட்டலாம்; வரையலாம் எழுத்துக்கள் பெரிதாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும். படிப்புத் தாட்கள் கெட்டியான தாளில் இருத்தல் வேண்டும். இவற்றை வகுப்பு மாணவரின் திறனுக்கும்விருப்பிற்கும்ஏற்றவாறு ஆசிரியரே தயாரிப்பதால் அச்சு நூற்களைக் காட்டிலும் இவை சிறந்தவை எனலாம்.

சிறு கதைகள், நாட்டுநடப்புகள், குறிப்புகள், பெரியோரின் அறமொழிகள், பாப்பாப் பாடல்கள், நாட்டுப் பாடல்கள், உலகச் செய்திகள், விஞ்ஞான அதிசயங்கள், புதுமைகள் முதலியவைகளை விளக்கப் படங்களுடன் எழுதி வைத்துக் கொண்டால் மாணவர்க்கு மிகப் பயன்படும்.

2. **வார்த்தைப் பட்டியல்:** நிறையச் சொற்களை அறிந்தாலன்றி மாணவர் படிப்பு விருத்தியடையாது. வார்த்தை அறிவு அதிகமாக, கருத்தறியும் திறனும் வாசிப்பு வன்மையும் வளர்ச்சியாகும். ஆகவே மிக்கப் பயன்படும் சொற்களையும் வாழ்விற்கு தேவைப்படும் சொற்களையும் நூற்களில் அதிகமாக வழங்கும் சொற்களையும் தொகுத்துப் பட்டியலாகத் தயாரித்து மாணவர் அடிக்கடி பார்க்குமிடத்தில் தொங்கவிடல் நலம்.

3. குழந்தைகட்குப் பெரும்பாலும் விளையாட்டு முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்குத் தேவை

யானவற்றை ஆசிரியர் ஆண்டு ஆரம்பத்திலே தயாரித்து வைத்துக் கொள்ளல் நலம். எழுத்தட்டைகளையும் சொல்லட்டைகளையும் பட அட்டைகளையும் வைத்து வாசிப்புப் பயிற்சி அளிக்கும் விதங்களை, விளையாட்டு முறையின் கீழ் முன்னரே விரிவாகக் கற்றுள்ளோம். அவற்றை இங்கு சேர்த்துக் கொள்க.

4. **செய்தித் திரட்டு:** மாணவர்க் கேற்ற நாட்டு நடப்புகளையும் செய்திகளையும் படங்களையும் செய்தித்தாட்களிலிருந்தும் செய்தி மலர்களிலிருந்தும் கத்தரித்துச் சேகரித்துப் புத்தகமாக ஆக்கலாம். மாணவர் ஒத்துழைப்பைக் கொண்டே ஆசிரியர் இதனைத் தயாரிக்க வேண்டும்.

5. **படத் திரட்டு:** பலவகை மரங்கள், பட்சிகள், விலங்குகள், உலக நிகழ்ச்சிகள், அற்புதங்கள், கட்டடங்கள் இவை பற்றிய படங்களைச் சேகரித்து அவற்றைப் பற்றிய சிறு குறிப்புகளையும் எழுதி வைப்பதால் மாணவர்கள் மிகவும் ஆவலாய் வாசிப்பார்கள்.

6. பெரியோர் வாக்குகள், பழமொழிகள், சுகாதார விதிகள், நீதிச் செய்யுட்கள் முதலியவற்றை எழுதிப்போட்டு மனனம் செய்யச் சொல்லலாம். இவை வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும்.

7. **வகுப்புப் பத்திரிகை:** மாணவர் கூடிப் பொறுப் பேற்று, சிறிய கை எழுத்துப் பத்திரிகைகள் நடத்தலாம்.

8. **சிறு வெளியீடுகள்:** சுகாதார இலாகா, விவசாய இலாகா, ரெட்கிராஸ் சங்கம், ஜீவகாருண்ய சங்கம் ஆகியவற்றிலிருந்து சிறு அறிக்கைகளையும் வெளியிடுகின்றனர். இவற்றை முறையோடு சேகரித்து வைத்துப் படிக்கக் கொடுக்கலாம்.

9. **சிறு பாடல்கள்** : பாரதியார் பாப்பாப்பாட்டுகள், மாயூரம் வேத நாயகனுர், தேசிக விநாயகனுர், சுத்தானந்த பாரதியார், நாமக்கல் ராமலிங்கனுர், பாரதிதாசன் முதலியோரின் பாடல்களை அட்டையில் எழுதி, அதற்குரிய விளக்கப் படங்களையும் வரைந்து சுவரில் தொங்கவிடலாம். மாணவர் அடிக்கடி பார்க்கவும், மனனஞ் செய்யவும், வாசித்துப் பயிலவும் பயன்படும்.

10. **சுகாதாரப் பழமொழிகள்**, நீதி வரிகள், விடுகதைகள், எழுதிய அட்டைகள் வாசிக்கப் பயன்படும்.

11. **படிப்பு நூற்கள்** : பொது நூல் நிலையத்திலிருந்து அனி வகுப்புக்கேற்ற நூல்களைத் தேர்ந்தெடுத்து மாணவருக்கு வாசிக்கக் கொடுக்கலாம். அந்நூல்கள் அவர்களின் வயதிற்கும் விருப்பத்திற்கும் ஏற்றவையாய், இனியவையாய், எளியவையாய் இருத்தல் வேண்டும்.

வினு:- 1. மூன்ரும் வகுப்புக் கேற்ற படிப்புத் தாட்களை (Reading Charts) எங்ஙனம் ஆயத்தம் செய்யலாம்?

(Ele. 48.)

2. படிப்புப் பயிற்சிக்காகும் ஆறுவகை உபகரணங்களை விவரிக்க. (Ele. 52)

3. முதலாம் இரண்டாம் வகுப்புகளில் மொழிப் போதனையில் நீர் உபயோகிக்கும் சாதன உபகரணங்களை aids & appliances) எடுத்துரைக்க. (Sec 44 & 47.)

4. மாணவர்க்கேற்ற புத்தகம் கிடையாதபொழுது அவர்கள் படிப்பதற்கு என்ன தருவீர்கள்? (Ele. 42.)

9. ஆதாரக் கல்வியில் இணைப்பு முறையில் வாசிப்பு

ஆதாரக் கல்வியில் இணைப்புப் போதனையை மிக வற்புறுத்தப் படுகிறது. எல்லாப் பாடங்களையும் ஆதாரத் தொழிலுடனே சம்பந்தப் படுத்தியே (Correlation) போதிக்க வேண்டும். தோட்டவேலை, சுகாதாரப் பணிகள், விழாக் கொண்டாட்டங்கள் முதலிய இயக்கங்களோடும் சம்பந்தப்படுத்த வேண்டும். பாடல்களை இவ்வித இணைப்பு முறையிலே வாசிக்கவும் எழுதவும் பயிற்சி அளிப்பது சிறந்தது. உதா:- தக்ளி நூற்றற்செயலுக்குப் பின்னர், தக்ளி, கொக்கி, இரும்பு, பருத்தி, பஞ்சு, நூல், பட்டை, சிட்டம் முதலிய வார்த்தைகளை வாசிக்கவும் எழுதவும் கற்பிக்கலாம். ஆகவே ஆதாரக் கல்வியிலே முதலில் சொல்முறையிலே வாசிக்கக் கற்று, பின்னர் எழுத்துக்களை மாணவர்கள் கற்றுக் கொள்வார்கள். கொடிவணக்கம், காந்திவிழா, தோட்டவேலை, சுகாதாரப் பணி, இவற்றிற்குப் பிற்பாடு நீங்கள் எந்த வார்த்தைகளைச் சொல்லித் தருவீர்கள்? வகுப்பு உயர, உயர வார்த்தைகளிலிருந்து வாக்கியங்களையும் கட்டுரைகளையும் சொல்லித்தரல் வேண்டும்.

வாசிப்புத் தாட்கள் :— முதல் வகுப்பினிறுதியிலும் இரண்டாம் வகுப்பிலிருந்தும் வாக்கியங்களை வாசிக்கவும் எழுதவும் அமைக்கவும் பயிற்சிகள் தரவேண்டும். செய்தகளைப் பற்றி சில வாக்கியங்களை எழுதி வாசிப்புத் தாட்களை (Reading Chart) அமைத்து வாசிப்புப் பயிற்சி அளிக்க வேண்டும். உதாரணம் தக்ளி நூற்றற்செயலில் காண்போம்.

தக்ளி நூற்றற் செயல்.

1. தக்ளியை விரலால் சுற்றுகிறேம்.
2. தக்ளியின் பாகங்கள் எவை?
3. தக்ளியின் வட்டு பித்தளையால் செய்யப்பட்டது.
4. தக்ளித் தண்டின் நீளம் என்ன?
5. தக்ளியின் கொக்கி கூர்மையாய் உள்ளது.

வாசிப்புக் கை ஏடுகள் :- (Booklets) மூன்றும் வகுப்பிலிருந்து மாணவர் செய்யும் தொழில்களையும் இயக்கச் செயல்களையும் பற்றிச் சிறு புத்தகங்களை எழுதித்தரல் வேண்டும். இப்புத்தகங்கள் 20 பக்கத்திற்கு மேற்படாமல் இருத்தல் நலம். இவை வகுப்புக்கேற்றவாறு இனிமையும் எளிமையும் பொருந்தியவைகளாக அமைக்க வேண்டும். ஒரு செயலுக்கு இவ்வாறு நாலைந்து புத்தகங்கள் உண்டாக்கலாம். இவற்றை எல்லோரும் வாசிக்க ஏற்பாடு செய்யவேண்டும். மாணவர்கள் இத்தகைய நூற்களின் பிரதிகளை நல்ல கை எழுத்தில் எழுதலாம்.

வினு :- (Basic T. S. L. C.) முதலாவது அல்லது இரண்டாவது வகுப்புக்குப் பொருத்தமான ஏதேனும் ஒரு செயலை வைத்து அவ்வகுப்புக்குரிய வாசிப்புத்தாள் தயாரிக்க (12 வாக்கியம்) (Basic junior 53)

10. சொற்களஞ்சியத்தைப் பெருக்கல்

1. சொல்லையும் சொல் குறிக்கும் பொருளையும் பிரிக்க முடியாது. ஆகவே சொல்லறிவு வளர, கருத்தும் வளரும்; நாம் சொற்களாலே சிந்திக்கின்றேம்; சொற்களாலே எண்ணிய எண்ணங்களை வெளிப்படுத்துகின்றேம் ஆதலால் சொல்லறிவை மாணவரிடம் வளர்க்க வேண்டியது.

மிக முக்கியம். இதைக் குறிக்கொண்டே, அரசியலார் ஆரம்பப் பள்ளிப் பாடத் திட்டத்தில் வகுப்பு ஒவ்வொன்னுக்கும் கற்பிக்க வேண்டிய சொற்கள் இத்தனை எனக் குறித்துள்ளனர். முதல் வகுப்பில் 300, II-ல் 400, III-ல் 500, IV-ல் 700, V.ல் 800 புதிய சொற்களைக் கற்பிக்க வேண்டும். "குழந்தைகள் படிப்படியாக நாள்தோறும் வழங்கும் சொற்களையும் வழங்காச் சொற்களையும் வாழ்க்கைக்கு வேண்டும் சொற்களையும் வேண்டாச் சொற்களையும் நன்முறையில் ஆராய்ச்சிகள் செய்து ஆயத்தம் செய்த பட்டியல்கள் தமிழில் இல்லை" — என்று புலவர் சரவண ஆறுமுக முதலியார் கூறியுள்ளார்.

மாணவர் சொற்களஞ்சியத்தை (1) நாள்தோறும் மிகுதியாகப் பேச்சிலும் எழுத்திலும் வழங்கும் சொற்கள், (2) பேச்சு வழக்கில் இல்லாது செய்யுள், உரைநடை போன்ற இலக்கியங்களில் மட்டும் வழங்கும் சொற்கள், (3) புதிதாக ஆக்கப்பட்ட விஞ்ஞான, சமுதாயச் சொற்கள் என மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளல் பயன்படும். இச் சொற்களைப் படிப்படியாக, அளவோடு, முறையோடு கற்பிப்பதைப் பற்றிக் கவனிப்போம்.

1. முதலில் எச் சொற்களைக் கற்பிக்க வேண்டும்?

குழந்தை அனுபவத்திற்குட்பட்ட சொற்களையும்.
அறிவுக்கெட்டிய சொற்களையும்.
அடிக்கடி பயிலும் சொற்களையும்.
காணும் பொருள்கள்.
காட்சிகள், நிகழ்ச்சிகள் பற்றிய சொற்களையும்
பிற்பாடு, இலக்கியச் சொற்களையும் கடினசொற்களையும் கற்பித்தல் வேண்டும்.

2. **அருஞ் சொல்லறிவைப் பெருக்கும் வழிகள்:**

(i) சொற்களைக் கொஞ்சங் கொஞ்சமாக அளவாகக் கற்பித்துச் செல்லல் வேண்டும்.

(ii) ஒரு சொல்லின் பொருளை பிறிதொரு சொல்லால் விளக்கிச் சென்று விட்டால் பயனில்லை. அச் சொல்லை சொற்றொடரில் ஏற்ற இடம் நோக்கி வழங்கும் திறனைப் பயிற்சிகள் மூலம் உண்டாக்க வேண்டும். அதுவே முக்கியம்.

(iii) சொல் வழக்குகளையும் (idiom) மரபுத் தொடர்களையும் (Phrases) மொழியில் சந்தர்ப்பம் நோக்கி உபயோகப்படுத்தும் விதத்தை விளக்கிக்காட்டிப் பலகாலும் பயிற்சியும் தந்து உறுதியான அறிவை ஊட்ட வேண்டும். அடைமொழிகள் முன், பின் சேர்ப்பதால் பொருள் வேறு படுவதையும் காட்டல் நலம். உதா:- பார் என்ற சொல்லுக்கு முன்னால் அடைமொழி சேர்க்கப் பொருளே வேறுபட்டு விடுகிறது ... ... கண்பார், கைபார்.

(iv) பழமொழிகள், செய்யுட்கள், உவமைகள், அறமொழிகள் வாயிலாக அருஞ் சொல்லறிவை அதிகப் படுத்தலாம்.

(v) பாடப் புத்தகங்கள் மூலமாகவும் அகன்ற படிப்பு நூற்கள் மூலமாகவும் புதுச் சொற்களைப் போதிக்க லாம். இனிய சிறிய கதைப் புத்தகங்களைக் கற்கத் துணை புரியலாம்.

(vi) கண்ணைக் கருத்தைக் கவரும் காட்சிகளையும் எண்ணத்தைத் தூண்டும் வர்ணம் நிறைந்த படங்களையும் பார்க்கையில் உணர்ச்சி தூண்டுவதால் உற்சாகம் உண்டாவ

தாலும், எண்ணங்கள் எழும்புவதாலும் மாணவர்கள் மற்றவரோடு உரையாடுவார்கள். பல சொற்களையும் உபயோகிக்க முற்படுவார்கள்.

(vii) நாடகங்களையும், போலி நடிப்புகளையும் நடத்துவதால் நல்ல சொல்வளத்தைப் பெருக்கலாம்.

(viii) சொற்களை இணைத்தல்:— ஒரே பொருள் குறித்த பல சொற்களை ஒன்றுபடுத்திக் காட்டல், (பூமி, அண்டம், கோளம், படி, பார்.)

பல பொருள் குறித்த ஒரு சொல்லை விளக்கல் (படி—பூமி, அளக்கும் அளவு, வாசி, தங்கு, விதம்)

நேர் எதிர் சொற்களைக் கூறல்: சொற்களை நன்கு அறிந்து இத்தகைய பயிற்சிகள் தரல் வேண்டும். வெண்மை என்ற சொற்கு கருப்பு எதிர்பதமன்று. ஏழு நிறங்களில் எப்படி ஒரு நிறம் மற்றொரு நிறத்திற்கு எதிர்பதமாகும்? கைக்குக் காலையும் கோபத்திற்குச் சாந்தத்தையும் எதிர்பதமாகக் கூறல் பொருந்தாது. எல்லாச் சொற்களுக்கும் எதிர்பதம் காண முயல்வது தவறு. ஒரு சில சொற்களுக்கே எதிர்பதம் உண்டு.

சொற்களின் பொருளை மேற் கண்டவாறெல்லாம் விளக்கினால் மாணவர் மனதில் மறக்காமல் நன்கு பதிந்து நிலைக்கும் சொல்லறிவும் பெருகும்.

(ix) ஒரே வேரினின்றும் பிறக்கும் பல சொற்களையும் எடுத்துக் காட்டுவதால் தெளிவான சொல் அறிவு உண்டாகும். (காண்—காணல், காட்சி, காண்பது, கண்டு, கண்டான், காட்டு, காண்பி.) (நட:—நடத்தை, நடப்பு, நடக்கை, நடனம், நடமாடுதல், நடந்தான், நடராஜன்.)

(x) வினவல், விடையளித்தல், தர்க்கித்தல், உரையாடல் முதலிய பயிற்சிகளைக் கொடுக்குங்கால், குறிப்பிட்ட சொற்களை உபயோகிக்கும் வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடே கொடுத்தல் சிறந்தது.

(xi) ர, ற;—ல, ள, ழ;—ந, ன, ண முதலிய ஒத்த ஓசையுடையச் சொற்களின் பொருள் வேறுபாட்டை நன்கு காட்ட வேண்டும். ஒரு ஏட்டில் இவ்வகைச் சொற்களையும் பொருளையும் உபயோகத்தையும் அருகருகிலே குறித்து வைத்துவரச் சொல்ல வேண்டும். இவ்வாறு அகர வரிசையில் குறித்து வைத்துக் கொண்டே வந்து தமக்குப் பயன்படும் அகராதியே உண்டாக்க வேண்டும்.

உதாரணம்:

அரம் = ஓர் கருவி...ரம்பத்தை அரத்தால் கூர்மையாக்கு.
அறம் = நல்வழி...குறள் கூறும் அறமே சிறந்தது.

(xii) சொல் ஆக்க விளையாட்டுக்கள் மூலமாகவும் சொற் பயிற்சியும் அறிவும் ஊட்டலாம். விளையாட்டு முறையில் அவற்றைக் காண்க. (20-ம் பக்கம்)

வினா:- 1. ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான வழிகளில் எவையேனும் நான்கினைக் குறித்து, அவற்றுள் ஒன்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. (Ele. 48)

2. மூன்றும் நான்காம் வகுப்புக் குழந்தைகளின் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கேற்ற நான்கு வழிகளைக் கூறுக. அவற்றுள் ஒன்றை விரிவாக விளக்குக. (Ele. 50.)

3. உமது மாணவரின் சொல்லறிவை(Vocabulary) எவ்வாறு விரிவாக்குவீர்? (Ele. 54)

11. வாசிப்புத் திறமையின் கூறுகள்.

சிறுவர் எதையும் எழுத்துக் கூட்டி பொருள் அறியாமல் வாசித்து விடுவர். ஆனால் அது வாசிப்பாகுமா? சொற்களின் வாயிலாகப் பொருளை உணர்வதே வாசிப்பாகும். சொற்கள் குறிக்கும் பொருளை மட்டும் உணர்வது வாசிப்புத் திறமையின் முதற்படியேயாகும். இதிலும் சற்று தேர்ந்த வாசிப்பாவது சொற்கள் குறிக்கும் பொருளை உட்கொண்டு, மனதில் மறக்காமல் நிலை நிறுத்திப் படித்துச் சொல்வதாகும். இதைக்காட்டிலும் உயர்ந்த படிப்புத் திறமையைக் கீழ்க் கண்டவாறு விளக்கலாம்:—

வாசிக்குங்கால் முன்பின் தொடர்பு நோக்க வேண்டும்; சரியா தப்பா எனச் சிந்திக்க வேண்டும்; தாம் முன்னர் கற்றவற்றின் தொடர்பும் ஞாபகத்திற்கு வரல் வேண்டும். இவ்வாறு சிந்தித்து, ஆராய்ந்து படித்துச் செல்வதே சிறந்த படிப்பாகும். வாசித்துச் சிந்திக்காதது உண்டு ஜீரணிக்காததை ஒக்கும்.

12. உரக்கப் படிப்பின் முக்கியம்.

குழந்தைக்கு ஆரம்பத்தில் உரக்கப் படிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். பின்னர் படிப்படியாக உரக்கப் படிப்பைக் குறைத்து, மௌனப் படிப்பை வளர்த்துக் கொண்டே செல்லல் வேண்டும். முதலிலே உரக்கப் படிப்புப் பயிற்சி அளித்தல் வேண்டும் என்பதற்குரிய காரணங்கள் வருமாறு:

1. முதலில் எழுத்துக்களை வாய்விட்டு ஒலித்துத் தான் உணர முடியும். மௌனமாக, கண்ணால் மட்டும் பார்ப்

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 111555

பதால் பயனை விளையாது. 'அ' என்ற எழுத்தை முதல் வகுப்புக் குழந்தை ஒலிக்காமல் எங்ஙனம் முதலில் கற்க இயலும்.

2. மாணவரின் உச்சரிப்புப் பிழைகளைத் திருத்த உரக்க வாசிப்புத்தான் உதவும்.

3. உரக்க வாசிப்பிலே, கண் பார்ப்பதாலும் வாய் ஒலிப்பதாலும் செவி கேட்பதாலும் மனதில் சென்று நன்றாய் பதியும். மனனம் செய்ய மௌன வாசிப்பைக் காட்டிலும் உரக்க வாசிப்பே மிக உதவுகிறது.

4. நடையின் அழகிலே, சொல்லின் சுவையிலே, ஓசையின் இன்பத்திலே ஈடுபடுத்த ஏற்றது உரக்க வாசிப்பே.

5. படிப்பறிவு பரவாத இந்நாட்டிலே பிறர்க்குப் படித்துக் காட்டும் திறமையைப் பெற வேண்டும். விளம்பரங்களையும் செய்திகளையும் கிராமங்களில் வாசித்துக்காட்ட வேண்டும். கற்றவர் படிப்பறிவால் பெற்ற இன்பத்தை படிப்பறியாரும் பெறுக! எனுங் கருத்தோடு தொண்டு செய்ய உரக்கப்படிப்பானது உதவ வேண்டும்.

6. மாணவர்கள் தாராளமாகத் தடுமாட்டமின்றிப் படிப்பதை அளந்தறியலாம்.

7. நிறுத்தற் குறிகளை அறிந்து வாசித்தல், குரலில் ஏற்றத் தாழ்வு ஏற்படல், ஒலிப்பால் உணர்ச்சி தோற்றுவித்தல் முதலியவைகளைப் பயிற்றுவிக்க ஏற்றது.

8. திருத்தமான வாசிப்பானது பேச்சு, நடித்தல் உரையாடல் முதலியவைகளிலும் தேர்ச்சியுற உதவும்.

13. உரக்கப்படிப்பதில் பெறற்குரிய திறமை.

1. கேட்கக் கூடிய அளவுக்கு உரத்த குரலில் வாசித்தல்.
2. பொருளை உணர்ந்து சிந்தித்து வாசித்தல்.
3. நிறுத்தற் குறிகட்கேற்ப நிறுத்தல்.
4. இடத்திற்கேற்ப குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசித்தல்.
5. வேண்டிய அளவில் விரைந்து வாசித்தல்.
6. பொருள் புரிவதற்கேற்றவாறு வார்த்தைகளைத் தொகுதி தொகுதியாகச் சேர்த்துப் படித்தல்.
7. வரிகளை ஊடே விட்டுத் தாண்டிச் செல்லாமல் அடுத்த அடுத்த வரிக்குக் கண்பார்வையைச் செலுத்தி வாசித்தல்.

மேற்கூறிய இத்தகைய திறமைகளை அடையப் பயிற்சிகள் தொடர்ந்து முயன்று தரல் வேண்டும்.

வினு:- ஆரம்ப வகுப்புகளிலே உரக்கப் படிப்பு ஏன் முக்கியமானது? உரக்கப் படிப்பதில் எவ்விதத் திறமைகளை விருத்தி செய்வீர்?

14. மௌன வாசிப்பின் நலன்கள்.

1. **அலுப்பின்மை:-** உதடு, தொண்டை முதலிய ஒலி உறுப்புகள் உழைக்காமல், கண்கள் பரந்து விரைந்து பார்த்துச் செல்ல, பொருளை ஆழ்ந்து கிரகித்துப் படிப்பதே வாய்க்குட் படிப்பாகும். இதிலே உதடுகளை அசைப்பதும் முணுமுணுத்து ஒலிப்பதும் ஸ்—ஸ— எனச் சப்திப்பதும்

கூடவே கூடாது. இவற்றை ஆரம்பத்திலேயே அகற்ற வேண்டும். ஆகவே ஒலி உறுப்புக்கள் உழையாமையால், அலுப்பின்றி நீண்ட நேரம் படிக்கலாம். கல்லூரி மாணவன் ஒருவன் நீண்ட நேரம் கத்தி வாசித்துக் கொண்டிருப்பின், அவன் கதி என்னவாகும்?

2. **சிந்தித்தல்:-** ஆழ்ந்து படிக்க (Detailed Study) அதிகம் பயன்படுவது மௌன வாசிப்பே. ஆங்காங்கு நிறுத்தி, சொல் நயங்களையும் பொருள் நயங்களையும் உணர்ந்து செல்ல ஏதுவாகும்.

3. **விரைவு:-** ஏராளமாகவும் விரிவாகவும் வாசிக்க விரைவு வேண்டும். விரைவை உண்டாக்க ஏற்றது உட்படிப்பே. வாசிப்பில் தேர்ந்த நிலையிலே நாவும் உதடும் அசைந்து ஒலிக்கும் வேகத்திலும், கண் பார்க்கும் வேகம் அதிகமாகும்.

4. **குறித்த கருத்தறிதல்:-** ஒவ்வொரு சொல்லையும் சமமாக நிறுத்திப் பார்த்துச் செல்லாமல், முக்கியமான கருத்துணர்த்தும் சொற்களைக் கண்டு, ஊன்றிக் கவனித்துச் செல்லலாம். கண் பார்வை பரந்து சென்று அவசியமில்லாத சொல்லை அகற்றிவிட்டுச் செல்லும். இதனை அகராதி காண்கையில் அறியலாம். இதன் மூலமும் மௌன வாசிப்பில் வேகம் அதிகரிக்கின்றது.

5. **கிரகித்தல்:-** உரக்க வாசித்தலில் உள்ள ஒலித்தல், கேட்டல் ஆகிய முயற்சிகளும் பிறர்க்குக் கேட்க வேண்டும்என்ற எண்ணமும் பிறர் புரிந்துகொள்ள வேண்டும் என்றகவலையும் பிழை செய்து விடுகின்றோமோ என்றஅச்சமும் மௌன வாசிப்பில் இல்லை. மௌன வாசிப்பில் கருத்தைக் கிரகிப்பதிலேயே முழுக் கவனமும் செலுத்தப் படுகிறது.

6. **இடைஞ்சல்** எவர்க்கும் ஏற்படாமல் வாசிக்கலாம். வாசகசாலையில், பள்ளி விடுதியில், ரயில் அறையில் அமைதியாக வாசிக்காவிடில் என்ன நேரிடும்? நிலைமை எவ்வாறிருக்கும்?

7. **ரகசியம்:-** பிறர் அறியாமல் மறைத்துப் படிக்க வேண்டியவிஷயங்களும் சந்தர்ப்பங்களும் வாழ்க்கையில் பல.

மௌன வாசிப்பின் சில குறைகள்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மௌன வாசிப்புப் பயிற்சியிலே சில குறைகளும் உண்டு. (i) மௌன வாசிப்பிலே குரற் பயிற்சி பெறவும் உச்சரிப்பைத் திருத்தவும் இடமில்லை. (ii) செய்யுளைக் கேட்டு ரசிப்பதற்கும் செய்யுளின் நடையழகிலே ஓசை நயத்திலே இன்புறுவதற்கும் மௌன வாசிப்பு மூலமாய் முடியாது. (iii) மௌன வாசிப்பு மூலம் பல்வேறுவகை வாய்மொழிப் பயிற்சிகள் அளிக்க இயலாது.

வினா:- 1. மௌன வாசிப்பு எப்படி முக்கியமானது?

[Sec. 42, 46, 47, & 51. Ele. 42, 47 & 49]

15. மௌன வாசிப்பை விருத்தி செய்தல்.

வாழ்க்கைக்கு மிக இன்றியமையாது வேண்டப்படும் மொழிப் பயிற்சி மௌன வாசிப்பாகும். இதிலே பொருளறிதல், விரைவாகப் படித்தல் ஆகிய இரு திறமைகளையும் தகுந்த பயிற்சிகளின் மூலம் விருத்தி செய்தல் வேண்டும். வகுப்புதோறும் கொஞ்சங் கொஞ்சமாக உரக்க வாசித்தலைக் குறைக்கவும் மௌன வாசிப்பைப் பெருக்கவும் அரசியலார் திட்டம் வகுத்து வெளியிட்டுள்ளனர்.



பொருளறிந்து வாசிக்க வழி.

1. **விளையாட்டுகள்:-** தொடக்க வகுப்புகளில் சொல் அட்டை, வாக்கிய அட்டை இவைகளை வைத்து ஆடல், கட்டளை விளையாட்டு, தபால் விளையாட்டு முதலிய விளையாட்டுக்கள் நல்ல மௌன வாசிப்புத்திறனை வளர்க்கும்.

2. **சொல்லறிவு:-** மாணவனின் சொற்றொகையைப் பொருத்தமே அவனது கிரகிக்கும் ஆற்றல். ஆதலால் மாணவனின் சொல் வளத்தைப் பெருக்க, அரசியலார் விதித்துள்ள பாடத்திட்டம் வருமாறு:—

முதல் வகுப்புக்கு 300 புதுச் சொற்களும், 2-க்கு 400, 3-க்கு 500, 4-க்கு சுமார் 700, 5-க்கு சுமார் 800 ஆகும். வகுப்புப் பாடநூல், துணைப் பாடநூல், கதை நூற்கள், செய்தித் தாட்கள் முதலியவை மூலமாக சொற்றொகுதியை பெருக்கலாம். சொல்வளம் பெருக்கும் வழியை முன் பாடத்தில் படித்துள்ளோம்.

3. **ஏற்ற பொருள்:-** மாணவர் வயதிற்கும் அறிவிற்கும் ஏற்ற விஷயங்களைத்தான் மாணவர் கிரகிக்க இயலும். ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் விஞ்ஞான விளக்கங்களையும் சிறியவரால் விளங்கிக்கொள்ள இயலுமா?

16. மௌன வாசிப்பின் வேகம்.

வாசிப்பின் வேகமானது பாடத்தினுடைய எளிமை, இனிமை, ஏற்ற தன்மை ஆகியவற்றையும்—கண்ணுடைய சாண், நகர்ச்சி பாய்ச்சல், பார்வை ஆகியவற்றையும்—உட்காரும் நிலை, உடல்நிலை, மன நிலை, வெளிச்சம் வருதல் ஆகியவற்றையும் பொருத்தது.

1. **பாடத்தின் எளிமை:-** கடின பதங்கள் அதிக மிருப்பின் வாசிப்பின் வேகம் தடைப்படும். அரும் சொற்களை முதலில் விளக்கி விடல் வேண்டும். தமிழ் நடையும் எளிதாக, இனிதாக அமைதல் வேண்டும். நீண்ட வாக்கியங்களைக்காட்டிலும் சிறுவாக்கியங்களே சிறுவர்க்கேற்றவை.

2. **பாடத்தின் பொருள்:-** மாணவர் அறிவுக்கெட்டிய, அனுபவத்திற் குட்பட்ட, வாழ்க்கையோடு ஒட்டிய பொருள்களையே மாணவர் சுருக்கமாய் [விரைவாய்] பெருக்கமாய்க் கற்க [பல பக்கங்களைக் கற்க] இயலும்.

3. **பாடத்தின் இனிமை;-** நகைச்சுவைபடும் நற்பொருள்களையும் சிறிய கதைகளையும் மாணவர் விரும்பிக் கற்பார். படங்கள் நூற்களில் ஏராளமாக இருப்பது இன்பமூட்டும்.

4. **கண் நிறுத்தம்:-** ஒரு வரியை வாசித்துச் செல்லும்போது கண் அடிக்கடி நிற்கிறது. அதனைக் கண் நிறுத்தம் [Fixation] எனலாம். ஒரு நிறுத்தலுக்குச் சுமார் $\frac{1}{4}$ விநாடி ஆகும். வாசிக்குங்கால் வரியில் கண் நிறுத்தம் குறையக் குறைய, வேகம் அதிகரிக்கும். ஆகவே கண் நிறுத்திச் செல்லும் கால அளவையும் இடங்களையும் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். கண் நின்று நகர்ந்து நகர்ந்து செல்வதை கண் நகர்ச்சி என்பர். வாசிக்கும் பிறர் கண்ணைப் பார்த்தால் இது தெரியும். ஒரு வரியில் எத்தனை முறை கண்கள் நிற்கின்றன. எனக் கணக்கிடலாம்,

5. **கண் சாண்;-** [Eye span] ஓர் இமைப் பொழுதில் கண் பார்வைக்குள் விழுந்து அகப்பட்டுச் செல்லும் சொற்களின் நீளமே கண் சாண், அல்லது காட்சியின் நீட்சி

எனப்படும். ஆரம்பத்தில் ஒரு சொல்தான் கண் நீட்சியாகும்; வாசிப்பில் தேர்ச்சி யுற யுற, கண்சாண் அதிகமாகும். ஆரம்ப வகுப்புகளில் வாசிப்புப் புத்தகத்தில் எழுத்துக்கள் பெரியவையாகவும், மேல் வகுப்புக்களில் படிப்படியாய் சிறியவையாகவும் அமைக்க வேண்டும். வரிகளுக் கூடே ஏற்ற இடமும் விடல் வேண்டும். மின்னட்டைகள் கண்சாண் விருத்திக்குப் பயன்படும். கண்ணினுடைய நகர்ச்சி, நிறுத்தம், நீட்சி இவை ஒன்றற்கு ஒன்று தொடர்புடையன. கண் நிறுத்தம் குறைய, நகர்ச்சி அதிகமாகும்; நகர்ச்சி அதிகமாக நீட்சி அதிகமாகும்.

6. **கண் பாய்ச்சல்:** -என்பது வரியை விட்டுத் தாண்டிச் செல்லாமல், அடுத்தடுத்த வரிக்குக் கண்பார்வையைச் செலுத்துதலாகும். வரிகட் கூடே போதிய இடம் வேண்டும். அடுத்த வரிக்குச் செல்ல இடர்ப்படும் குழந்தைகள் வரி முதலில் விரல் வைத்துக் கொண்டு போகும்படி சொல்லலாம்.

பிற்போக்கு:- விளங்கிக் கொள்வதற்காகவும் எழுத்துக் கூட்டுவதற்காகவும் கண்கள் முதலில் பார்த்த சொற்பகுதிகளையோ, சொற்றொடர்களையோ மீண்டும் பார்க்கும், இதனைப் பிற்போக்கு என்பர்.

7. **பார்வைக் குறைவு:-** குறைவு கண்ணில் இருப்பின் விரைவு எங்ஙனம் கூடும்? ஒரு பொருளை அண்மையில் வைத்தாலே, பார்க்க இயல்வது குறும்பார்வை எனவும், ஓரடிக்கு மேற்பட்ட தூரத்தில் வைத்தாலே, பார்க்க இயல்வது நெடும் பார்வை எனவும் படும். இக் குறைகளை நீக்க ஏற்ற கண்ணாடி போடுவது அவசியம்.

8. **மன நிலை, உடல் நிலை:** உடலும் மனமும் நோயற்று, களைப்பற்றுச் சுகநிலையில் இருந்தால்தான் பொருளுணர்ந்து, விரைந்து படிக்கலாம். உடலைக் கூனுமல் நேராய் நிமிர்ந்து, அமர்ந்து கற்றல் நல்லது.

9. **ஒளி பேறல்:** வெளிச்சம் அதிகமாகவோ குறைவாகவோ இல்லாமல் அளவாக இருத்தலும் இடப்புறத்திலிருந்து வருதலும் படிப்புக்கு வசதியாகும்.

10. **முற்றிலும் மௌன மாகுதல்.-** உதட்டை அசைத்தல், முணு முணுத்தல், குரல்வளை அசைத்தல் முதலியவை நேராமல் தடுத்து நிறுத்தல் வேண்டும். இவை வேகத்தைத் தடைபடுத்தும்.

11. **நோக்கமும் தேவையும்.-** ஆழ்ந்த படிப்புப் பாடங்களில் கீழ்க்கண்டது போன்ற ஒரு பயிற்சியைத் தந்து மௌனமாக வாசிக்கக் கூறலாம். ஒரு நோக்கத்தோடு மௌன வாசிப்பில் மாணவன் ஈடுபட வேண்டும். வினுக்கட்கு விடை காணல், கடின பதங்களைக் குறித்தல், பத்திகளுக்குத் தலைப்புக் கொடுத்தல், பத்திகளின் முக்கியக் கருத்தைக்கண்டு சொல்லல், ஏற்ற இடத்து நிறுத்துக் குறிகளிடல், பாடத்தில் வந்துள்ள செய்யுளடிகளையும் பழமொழிகளையும் மேற்கோள்களையும் கண்டுதிரட்டல்; கட்டுரைக்குப் பொருள் திரட்டல் இவை போன்ற நோக்கோடு, மௌனமாக வாசிக்குமாறு தூண்டலாம். தன்னுக்க முயற்சி வேலைகள் செய்யுங்கால் மௌனமாக வாசிக்கப் பயிற்சி பெறுவதை முன்னரே கற்றுள்ளோம்.

12. **விரைவுச் சோதனை.-** படிப்பில் விரைவை உண்டாக்குவதற்கென பயிற்சிகள் அடிக்கடி தரவேண்டும் வாசிப்புப் பந்தய ஓட்டங்கள் நடத்தலாம், குறித்த நேரத்

திற்குள், அதாவது சுமார் 5 நிமிட நேரத்திற்குள் மாணவர், முன் வாசிக்காத புதுப் புத்தகத்தை ஒரே சமயத்தில் எல்லோரும் வாசிக்க ஆரம்பிக்குமாறு கூறி, ஒரே சமயத்தில் நிறுத்திவிடல் வேண்டும். பின் ஒவ்வொருவரும் எத்தனை வரிகள் வாசித்துள்ளனர் என்பதைப் பென்சிலால் குறியிடச் சொல்லலாம்.

பின்னர் வாசித்த பகுதியை விளங்கிக்கொண்டனரா எனச் சோதிக்க வினாக்களும் பிற பயிற்சிகளும் தந்து விடை எழுதச் சொல்லித் திருத்தி, மதிப்பெண் தரல் வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தான் படித்த வரிகளை எண்ணிக் காண வேண்டும். இவை வேகத்தைக் காட்டும். எழுதிய விடைகள் கிரகிக்கும் திறனைக் காட்டும். இவ்விரு திறமைகளையும் இச் சோதனை விருத்தியாக்குகிறது. அடிக்கடி இவ்வாறு விரைவுச் சோதனை நடத்தி ஒரு பட்டியலில் அல்லது ரேகைப் படத்தில் குறிக்கலாம். இதனைக் குறிக்க, எவ்வாறு பட்டியல் அல்லது ரேகைப் படம் தயாரிப்பீர்கள் என்பதை வரைந்து காட்டுங்கள்.

13. **படிப்புப் பயிற்சிக்குப் பயன்படும் உபகரணங்கள்** (91-ம்பக்கம்) என்ற தலைப்பில் முன்னர் கூறியவைகளைக் கொடுத்துப் படிக்கச் செய்வதால் மௌன வாசிப்பை வளர்க்கலாம்.

14. **விளையாட்டு முறையில்** கூறிய விளையாட்டுக்களையும் பயன்படுத்தலாம். (20-ம் பக்கம்)

வினா:- 1. மௌன வாசிப்பை விருத்தி செய்ய என்ன வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்.

(Sec. 42, 46, 47, & 55; Ele. 47 & 49.)

2. மூன்றும் வகுப்புக்கேற்ற வாய்க்குட் படிப்புக்கு உதவக்கூடிய தனிப்பயிற்சித் தாள்களை (Individual work sheets) எவ்வாறு ஆயத்தம் செய்யலாம்? (Sec. 48)

16. பரந்த படிப்பின் நோக்கம்.

விளக்கம்:- படிப்பினை பரந்த படிப்பு, ஆழ்ந்த படிப்பு என இரு பிரிவாகப் பிரிப்பார். ஆழ்ந்த படிப்பிலே நுண் கருத்து விளக்கமும், ஆழமான மொழிப் பயிற்சிகளும் தேவை. ஆனால் பரந்த படிப்பிலே பொதுவாகப் பொருளை உணர்ந்தால் போதுமானது. அருஞ் சொற்களை இடம் நோக்கிப் பொருளுணர்ந்து சென்றாலே போதும். ஒவ்வொரு வாக்கியமாக, வார்த்தையாக நிறுத்திப் படிக்கத் தேவையில்லை. பார்வை பரந்து விரைந்து சென்று முக்கியக் கருத்தை உணர்ந்து செல்லப் பயிற்சி தர வேண்டும்.

நோக்கம்:- மேல் வகுப்புகளிலே இவ்விதப்பரந்த படிப்பை வளர்க்க வேண்டும்; வாசிப்புத் திறமை வளர,வளர மாணவர் தாமாகவே படிக்க விரும்புவர். பரந்த படிப்பின் முக்கிய நோக்கங்கள் நான்காகும்:—

1. கருத்தை உணர்தல்,
2. இன்ப மனுபவித்தல்,
3. உள்ளக் கிளர்ச்சியுறுதல்,
4. மொழி அறிவில் வளர்தல்.

மௌன வாசிப்பின் நோக்கங்களாகக் கூறியவைகளை யும் இங்கு கூட்டிக் கொள்ளலாம். மேற்கண்ட நான்கு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு தரலாம்:—

I. **கருத்துணர்தல்:-** வாசித்து, நூல் குறிக்கும் கருத்தை மட்டும் அறிந்தால் போதாது. தான் முன்னர் வாசித்த, அறிந்த, அனுபவித்த கருத்துக்களோடு ஒற்றுமைப் படுத்திப் பார்த்தல் வேண்டும். வாசித்த விஷயத்தைச் சிந்திக்க வேண்டும்.

இத்திறமைகளை விருத்தி செய்யும் வழிகள்:—

1. ஒவ்வொரு பிள்ளையின் தனி ஆசைக் கேற்ற புத்தகங்களை வாசிக்கக் கொடுத்தல்.

2. ஓய்வு நேரங்களில் தமக்கு விருப்பமான விளையாட்டுப் பொருள்கள், வேலைகள் இவைகளைப் பற்றிய விபரங்களை வாசித்துச் சேகரித்தல். அதாவது சுயநோக்க முயற்சி வேலைகளைப் பற்றிய விஷயங்களை விருப்பத்தோடு, ஒரு நோக்கத்தோடு கற்று அறிந்து கொள்ளத் தூண்டல்.

3. பொது அறிவைப் பெறுதல்:— துண்டுப் பிரசுரங்கள், வேண்டிய விளம்பரங்கள், மாணவர்க்குரிய செய்தித் தாட்கள் இவற்றை கற்கப் பழக்கல்.

4. சொற்பொழிவு, கட்டுரை முதலியவைகட்குத் தேவையான விஷயங்களைச் சேகரித்தல். புத்தகம் முழுமையும் வாசிக்காது, தான் விரும்பும் பகுதியை மட்டும் வாசித்துத் தேவைப்பட்ட விபரம் அறிதல்.

5. பொருளடக்கக் குறிப்பு, அகராதி முதலியவைகளைப் பயன்படுத்தப் பழக்கல்.

இத்தகைய பயிற்சிகள் மூலம் விஷய அறிவு பெறும் பொருட்டு வாசிக்கும் பழக்கத்தை உண்டு பண்ணலாம்.

II. **இன்பமடைதல் :—**

1. கதைபோல களிப்பூட்டுவன பிறவுமுண்டோ? சிறுவர்க்கேற்ற, தாமே விளங்கிக் கொள்ளத் தக்க, கதைகள் தேவை. வீரம், இரக்கம்,

ஆச்சரியம் ஆகிய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பத் தக்க சிறு கதைகள், பெரியார் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை ரசிகத் தன்மையை உண்டாக்கச் சிறந்த சாதனங்கள்.

2. படங்கள் மூலம் படிப்பில் பற்றுதலையும் ஆவலையும் உண்டாக்கலாம்.

3. கதையைச் சொல்லி, ஆவலைத் தூண்டி, ரசமான கட்டத்தில் நிறுத்தி, மீதிப் பகுதியைப் புத்தகத்தில் வாசிக்கச் சொல்லலாம்.

4. உயர்ந்த இலக்கியப் பகுதிகளை விளங்கிக்கொள்ளத் தக்க சூழ்நிலை அறிவை உண்டாக்கி, ரசித்து ருசித்து இன்புறச் செய்யலாம்.

5. சிறு வர்ணனைகள், நாடகங்கள், தர்க்கங்கள் மேல் வகுப்பில் இன்பமூட்டும்.

6. சிறுவர் பத்திரிகையும், பெரிய பத்திரிகையில் சிறுவர்க் கேற்றவைகளை மட்டும் குறியிட்டும் வாசிக்கக் கொடுக்கலாம்.

7. நகைச் சுவை நல்கும் நல்ல நூற்களை கற்குமாறு தரலாம்.

III. **உள்ளக் கிளர்ச்சியூட்டல்:-** கருத்தை விளங்கிக் கொள்வதும் இன்பமுறுவதும் மட்டும் போதா. உள்ளத்திலே ஒரு புதிய உணர்ச்சி ஊற்றெடுக்க வேண்டும். வீரம், சேவை, தெய்வபக்தி முதலிய பண்புகளை ஊட்டும் நூற்களை வாசிக்கவும் சிந்திக்கவும் தூண்டலாம். ஆழ்ந்த இலக்கியங்கள்

அலை அலையான எண்ணங்களை அகத்திலே எழுப்ப வல்லவை பாடப் புத்தகத்தைப் படிக்குங்கால், சொல்லழகு, பொருளழகு, நயங்கள் முதலியவற்றை ஆங்காங்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

VI. **மொழிப் பெருக்கம்:—** சொற்களின் பொருளை மட்டும் அறிதல் போதாது. சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறும் ஆற்றலை உண்டாக்கல் அவசியம். சொற்கள் பிறக்கும் விதம், சொற்களின் நுட்பப்பொருள் வேற்றுமை, மரபுச் சொற்கள் ஆகியவற்றை தனி ஏட்டில் குறித்து வரலாம். வாக்கியங்களின் வகைகளையும் பல்வேறு நடைகளையும் மாணவர் பயில வேண்டும். மொழி அறிவு என்பது பொருளை விளங்கிக் கொள்வதும் பிறர்க்கு எடுத்து சொல்வதுமாகிய இரு திறமைகளாகும்.

வினா:- 1. மேல் வகுப்புகளில் பரந்த படிப்பினால் விளையும் பயன்களை விளக்குக.

2. எட்டாம் வகுப்புப் பிள்ளைகட்குப் பரந்த படிப்பில் பயிற்சி தர எவ்வாறு உதவுவீர். (Sec. 52)

18. நூல் நிலையப் படிப்பு.

1. **நூல் நிலைய வகைகள்:** 1. போது நூல் நிலையம் என்பது எல்லாவகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து படிக்கக் கூடியது. 2. மேற்கோள் நூல் நிலையம் என்பது அகராதி வகைகள், உயர் இலக்கியங்கள், செய்தி இதழ்த் திரட்டுக்கள் அடங்கியது. 3. வகுப்பு நூல் நிலையம் என்பது தனி வகுப்புக்கேற்ற புத்தகங்கள் கொண்டது.

வகுப்புப் புத்தகசாலையை வளர்க்கும் வகை:-

1. நூல் நிலையத்திற்கென அரசியலார் அருளும் பணத் தொகையினின்றும் ஒரு பகுதியை வகுப்புப் புத்தக சாலைக்குப் பயன்படுத்தலாம்.

2. மாணவர் தத்தம் திறமைக்கேற்ப, நன்கொடையாக நூற்கள் அளிக்கலாம்.

3. சிறு நாடகங்கள், நானாவிதப் பயிற்சிகள், இசைக் கூட்டங்கள் நடத்தி, பொருள்பெற்றுப் புத்தகம் வாங்கலாம்.

4. வருடந்தோறும் தேறிச் செல்லும் மாணவர் சிலர் தம் உபபாட நூற்களைத் தரலாம். புதிதாக, மாணவர் தனியாக வாங்கி வாசித்தஉபபாட நூற்களைத் தந்துதவலாம்.

நூல் நிலையத்தை வளர்ப்பதின் மூலம் உதவி செய்யும் பண்பை மாணவர் பெறுகின்றனர். வாங்குவதிலும் வழங்குவதே பேறு—என்ற கிருஸ்துவின் அருள் மொழிக்கிணங்க ஈந்து உதவும் இன்பம் பெறலாம் மாணவர்.

தலைமை ஆசிரியரின் அனுமதியின் பேரில், மாணவர் கூட்டுறவாகி சிறு பங்குப் பணமிட்டு ஒரு சில நூற்கள் வாங்கிக் கற்கலாம்.

வகுப்பு நிலையத்திற் குரிய நூற்கள் :—1. அவ்வவ் வகுப்பு மாணவரின் அறிவு, ஆற்றலுக்கேற்ற நூற்கள் வேண்டும். தாமே படித்து விளங்கத் தக்கவைகளாய் இருத்தல் நலம்.

2. மாணவர் தாமாகவே விரும்பும் நல்ல நூற்கள் எவை என உண்மையாக அறிந்து சேகரிக்க வேண்டும். மாணவர் இன்ன நூற்களைக் கற்க வேண்டும் என்று ஆசிரியர் வற்புறுத்தல் கூடாது.

3. கண்ணைக்கவரும் படங்கள் வாசிப்பிலே கவனத்தை இழுக்கும்; கருத்தையும் விளக்கும். புத்தகங்கள் நல்ல காகிதத்தில், உரிய பெரிய எழுத்தில் உறுதியான கட்டமைப்பில் இருத்தல் வேண்டும். பல்வேறு வகையான நூற்களைச் சேகரிதல் நலமாகும்.

1. வகுப்பு நூல் நிலையத்தை நடத்தும் விதம்:-

1. நூல்நிலைய வாசிப்பிற்கு எனக் கால அட்டவணையில் ஓர் நேரம் ஒதுக்க வேண்டும். ஒதுக்கிய நூல் நிலைய வேளையில் மாணவர் ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிரியமான ஒரு புத்தகத்தை எடுத்து அமைதியாக வாசிக்க வேண்டும். வாசித்துத் தேவையானவற்றைக் குறித்துக் கொள்ளவேண்டும். குறிப்பு எடுக்கும் வகைகளை மாணவர்க்குச்சொல்லித்தரல் நலம். ஆசிரியரிடம் மாணவர்கள் நூலில் ஏற்படும் சந்தேகங்களைக் கேட்டறிய மிக்க இடம் தரல் வேண்டும். மாணவர் தாமே அகராதி, அட்டவணைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளப் பயிற்சியளிக்க நூல் நிலையம் ஏற்ற இடம். ஒவ்வொரு மாணவனும் வைத்திருக்கும் தன் தன் நூல் நிலைய ஏட்டின் முதற் பக்கத்தில் ஒரு பட்டியல் வரைந்து வைத்துக்கொள்ள வேண்டும். பட்டியல் கீழ்க்கண்ட தலைப்புகள் கொண்டிருக்கலாம்.

பட்டியலின் தலைப்புகள்:-

1. புத்தகத்தின் பெயர்
2. வாசிக்க வாங்கிய தேதி
3. கொடுத்து விட்ட தேதி
4. பெற்றுக் கொண்டவர் கையொப்பம்
5. நூலைப் படித்து முக்கிய குறிப்புகள் எழுதி வைத்துள்ள பக்கம்.

2. ஆழ்ந்த படிப்பைப்போல, அதிக விளக்கமும் மொழிப் பயிற்சிகளும் தேவையில்லை. அருஞ் சொற்களைத் தெளிவாய்த் திட்டமாய் அறிய வேண்டும் என்ற அவசிய மில்லை. இடம் நோக்கிப் பொருளை யூகித்துணர்ந்து சென்றால் போதும்.

3. நிறுத்திச் சிந்தித்து வாக்கியங்களைக் கற்றுச் செல்ல வேண்டியதில்லை. பொதுவாகப் பொருளை உணர்ந் தால் போதுமானது. இத்தகைய அகன்ற படிப்பிற்கு நூல் நிலையம் மிகத் துணைபுரியும்.

4. வேண்டிய சமயங்களில் நூற்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். நூற்களைக் கொடுத்தல், எடுத்தல் பற்றிய விதிகளை மாணவர்களே ஆக்கிக் கொள்ளலாம்.

5. நிலையத்தை நடத்தும் முழுப் பொறுப்பையும் மாணவர்பால் விடுத்து, மேற்பார்த்து வரல் சிறந்தது. மாண வரே நூற்களை வகைப்படுத்தல், அடுக்கல், சுத்தம் செய்தல், தருதல், பெறுதல்—ஆகிய அனைத்தையும் ஆசான் துணைக் கொண்டு செய்யலாம்.

6. நூற்களைப் படித்த பின்னர், ஆசிரியர் சிறு பயிற்சிகளும் சோதனைகளும் தரலாம். நூற் பொருளைச் சுருக்கமாக எழுதுதல், நாடகமாக நடித்தல், சம்பாஷணை நடத்தல், விமர்சனம் கூறல், சிறு வினுவிடை எழுதுதல் முக்கிய பொருளை வாய்மொழியாகக் கூறல், கட்டுரை எழுது தல், அழகிய நீதிகளையும் வர்ணனைகளையும் குறித்துத் திரட் டல் படிக்கும்போதே அவ்வப்போது குறிப்புகள் தயாரித்தல்

முதலியவை நூல்நிலையப் படிப்பிலே தரத்தக்க பயிற்சிகளாகும். நூல் நிலைய வாசிப்புக்கெனத் தனி ஏடு ஒவ்வொரு மாணவரும் வைத்திருத்தல் நலம். ஏட்டில் குறிக்கும் விதம்:-

படித்த தேதி	நூலின் பெயர்	பொருட் சுருக்கக் குறிப்புகள்.	முக்கிய வார்த்தைகள்	பிற விஷயம்
...	...	...	...	...

7. ஆசிரியரிடம் விரும்பும் போது மாணவர் தனித்துவந்து புதிய சொற்களையும் கருத்துக்களையும் பற்றிக் கேட்டறியலாம். புத்தகத்திற் படித்த விஷயங்களைப் பற்றி ஆசிரியரோடு மாணவர்கள் கலந்து பேசி மகிழ வாய்ப்புத் தரல் வேண்டும்.

வினா - 1. வகுப்பு நூல் நிலையங்களின் பிரயோசனங்களை விவரிக்க. இவ்வித நிலையங்களில் எவ்வகையான புத்தகங்களை நீர் சேகரித்து வைப்பீர்? (Sec. 47)

2. இரண்டாம் வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரையில் வாசிக்கும் மாணவர் உபயோகிப்பதற்கான வகுப்புப் புத்தகசாலை ஒன்றை எப்படி வளர்த்து வருவீர்கள்? அதனை முற்றிலும் பயன்படுத்தும்படி அவர்களை எப்படித் தூண்டுவீர்கள்? (Ele. 43)

3 உமது வகுப்புப் புத்தகசாலைக்குத் தகுந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் நீர் கருத வேண்டிய விஷயங்களில் முக்கியமான நான்கை விளக்குக. (Ele. 52)

V. உரை நடைப் பயிற்சி.

1. பண்டைய உரை நடை.

பண்டைச் சங்க காலத்தில் எழுதிய உரைநடை நூற்கள் நமக்குக் கிடைக்கவில்லை. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டு முதலிலிருந்து உரைநடையில் நூற்கள் மிகுதியாக எழுதப்படுகின்றன. சங்ககாலத்திலும் அதற்குப் பிற்பட்ட சில நூற்றாண்டுகளிலும் நூற்களைப் பெரும்பாலும் செய்யுட்களின் மூலமே எழுதினார்கள். செய்யுட்களுக்கு விளக்கமும் அர்த்தமும் உரைநடையில் பேராசிரியர்கள் எழுதினார்கள். இந்த உரைநடையும் கடின சொற்கள் கலந்து, ஆங்காங்கு எதுகை மோனை அமைந்து விளங்கும்; ஒரு வகைச் செய்யுள் போலவே காணப்படும். ஆதலால் அதனை உரைப் பாட்டு எனவும் உரைபெறு கட்டுரை எனவும் கூறுவர். அந்நடை மிக ஆழமானதாயினும் இயற்கையானதன்று. சிலப்பதிகாரம் ஊடுடே உரைநடை தழுவி எழுதப்பட்டதால் உரை இடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப் பெயர் பெறும். ஆகவே முழுவதும் வசனத்தில் எழுதிய நூல், 17-ம் நூற்றாண்டு வரை இல்லை எனலாம். இதற்குக் காரணம் ஓலையில் எழுதுவதும், ஓலைச் சுவடிகளைக் காப்பதும் நூற்கள் வேண்டுமெனில் ஓலை பெயர்த்தெழுதுவோர்க்குக் கூலி கொடுத்து எழுதி வாங்குவதும் மிகச் சிரமமாகும். ஆகவே வசதியின்மையால் வசனம் பெருகவில்லை.

உரை நடை வளர்ச்சி.

காகிதம் கண்டு பிடித்த பின்னரே, அச்சுப்பொறிகள் தோன்றின. அவை இந்தியாவிற்கு வந்த பின்னரே உரை நடை நூற்கள் தமிழில் பெருகின. நமது நாட்டில் தூர நாட்டிலிருந்து வந்து தொண்டாற்றி வந்த பாதிரிமார்கள் முதன்முதல் தமிழில் அச்சுப் புத்தகம் உண்டாக்கினார்கள். இந்திய மொழிகளில் முதன் முதல் அச்சுப் புத்தகம் உண்டானது தமிழ்மொழியிலேதான். பிறகுதான் ஏனைய இந்திய பாஷைகளில் அச்சுப் புத்தகம் உண்டாயினவாம்.

நல்ல உரை நடை நூற்களை 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ மடாலயங்களிலிருந்த முனிவர்களும் பிற தமிழ் அறிஞர்களும் எழுதி வெளியிட்டார்கள்.

2. ஆழ்ந்த படிப்பின் நோக்கங்கள்.

ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு என்று இரண்டு வகையாக உரைநடையைப் பிரிக்கலாம். பாட நூற்கள் மூலம் பள்ளியில் ஆழ்ந்த படிப்பில் பயிற்சி அளிக்கின்றோம். அகன்ற படிப்பென்பது மேலாக நுனிப்புல் மேய்வது போல, நூலின் பொதுக் கருத்தை ஒருவாறு உணர்ந்து, விரைந்து படித்துச் செல்வதாகும். இதனைத் துணைப்பாட நூற்கள், செய்தி இதழ்கள், கதைப் புத்தகங்கள், அகராதிகள், நூல் நிலையப் படிப்பு முதலியவற்றின் மூலமாகக் கற்பிக்கின்றோம். ஆழ்ந்த படிப்பென்பது நுட்பமாகக் கருத்தை உணர்ந்து சிந்திப்பதாகும். தமிழ் மொழியிலே படித்தல் (Reading) கற்றல் (Studying) ஓதுதல் என மூன்று சொற்கள் உள்ளன. படித்தல் என்பது மேலெழுந்தாற்போல முக்கிய கருத்தை மட்டும் வாசித்தறிதல். கற்றல் என்பது சிந்தித்துச்

சீர்தூக்கி வாசித்தல். (கற்க கசடற) ஓதுதல் என்பது ஒழுக்கமாகக் கொள்ள வேண்டியவற்றை பக்தியோடு கற்றுணர்தல். (ஓதுவது ஒழியேல்) வாழ்க்கையிலே ஆராய்ச்சி, இலக்கணம், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய நூற்கள் ஆழ்ந்து படித்தற்குரியன.

ஆழ்ந்த படிப்புப் பழக்கத்தைக் கற்பிப்பதற்காகவே தமிழ்ப் பாட நூற்களில் பல்வகைப் பாடங்களும் அமைக்கப் படுகின்றன.

ஆழ்ந்த படிப்பின் நோக்கம்:- 1. உரை நடை, செய்யுட் பகுதிகளை நுட்பமாய்ப் பொருள் உணர்தல்.

2. சிந்தித்துச் சீர்தூக்கி ஆராய்தல்.

3. சொல் நயம், பொருள் நயம் சுவைத்தின்புறுதல்.

4. வாக்கிய அமைப்புகளை அறிதல், பல்வகைச் சொற்றொடர்களை ஆக்குந்திறமை பெறுதல்.

5. அரும் சொற்கள், மரபுத்தொடர்கள்(Phrases) வழக்குகள் (idioms) முதலியவற்றை இடம் நோக்கி உபயோகிக்கும் ஆற்றலைப் பெறல்; சொற்களஞ்சியத்தைப் பெருக்கல்.

6. கதைகள், நாடகங்களில் வரும் ஆட்களின் குணங்களை ஆராய்ந்தும் ஒத்திட்டும் அறிதல்.

7. இலக்கணக் குறிப்புகளை அறிதல்.

8. பல்வேறு சொல் நடைகளைக் கற்று, மாணவன் தனக்கென ஒரு நடையை உருவாக்கல்.

மேற்கண்ட நோக்கங்களை மனதிற்கொண்டு, ஏற்ற பயிற்சிகளை மேல் வகுப்புகளில் பாடப் புத்தகங்களைப் படிக்குங்கால், தரல் வேண்டும். ஏற்ற பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்தல் அவசியம்.

வினா:- ஆழ்ந்த படிப்பின் நோக்கங்கட்கும் பரந்த படிப்பின் நோக்கங்கட்குமுள்ள வேறுபாடென்ன?

3. சிறுவர் பாட நூற்களின் தன்மை

1. **எழுத்துத்** தெளிவாகவும் பெரிதாகவும் அழுத்தமாகவும் இருத்தல் வேண்டும். முதலிரு வகுப்புகளில் உயிர், மெய், உயிர்மெய், ஆயுதம் ஆகிய எல்லா எழுத்துக்களையும் ஒரு வரிசையில் கற்பிப்பதற்கு ஏற்ற சொற்கள் புத்தகத்தில் காணப்படல் வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் புகுத்தப்படும் புதிய எழுத்துக்களைச் சிவப்பு நிறத்தாலோ அல்லது அழுத்தமாகவோ காட்டினால் நலம்.

2. **வரியும் இடமும் :-** சொற்களுக்கூடே போதிய இடம் விட்டு, அழகாக அமைக்க வேண்டும். வரிகளிடையே உரிய இடம் தேவை. சிறு வகுப்புகளில் வரிக்கொரு வாக்கியமாக அச்சிட்டால் வாசிக்க எளிதாயிருக்கும்.

3. **படங்கள் :-** பாடங்களுக் கேற்ற விளக்கப் படங்கள் படிப்பில் பற்றுதலுண்டாக்கும். படங்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் போதிய அளவு பெரிதாகவும் பல நிறத்திலும் இருப்பது நல்லது. முழுக் கையினை வரைந்து அதன் கீழ்"நகம்"என்ற சொல்லை எழுதுவதும், குதிரையோ கழுதையோ என்று ஐயம் தோன்றுமாறு படங்கள் வரைவதும் கூடா.

4. **நூலின் அளவும் அழகும் கட்டடமும் :-** புத்தகத்தை, மிகப் பெரிதாகவோ மிகச் சிறிதாகவோ அமைக்காமல், அடக்கமான அளவில் அமைத்தால் வசதியாயிருக்கும். சிறுவர் புத்தகம் கெட்டியான அட்டையிட்டும் அவ்வட்டையில் நல்ல படங்கள் வரைந்தும் இருந்தால் இன்பந்தரும்.

5. **பொருள் :—** சிறுவரின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் இயல்புக்கும் இன்பத்திற்கும் ஆசைக்கும் அவசியத்திற்கும் ஏற்ற பொருள்களில் பாடங்கள் அமைந்து திகழ

வேண்டும். சிறு கதைகள், விளையாட்டுப் பொருள்கள், மிருகங்கள், பட்சிகள், நல்வழிப் பழக்க வழக்கங்கள் ஆகிய பொருட்கள் பற்றிய விஷயங்களை விளக்கமாகச் சுருக்கமாகக் கூறல் வேண்டும். சிரிப்பூட்டும் சிறு கதைகளைச் சேர்த்தல் சிறந்தது. எளிய பழமொழிகள், இனிய விடுகதைகள், சிறிய பாடல்கள் முதலியவைகளும் புத்தகத்தில் காணப்பட வேண்டும்.

6. **சொல்லும் நடையும்:-** கல்வித் துறையினர் வெளியிட்டுள்ள சொற்றொகைத் திட்டத்திற் கேற்ப(96-ம் பக்கம்)சொல்லறிவைப் பாடங்கள் விருத்தி செய்ய வேண்டும். அருஞ் சொற்கள் பாடந்தோறும் ஒரு சிலவே இருத்தல் வேண்டும். ஒரு பாடத்தில் உபயோகப்படுத்திய சொற்கள், மீண்டும் வரும் பாடங்களில் தக்க இடங்களில் உபயோகப் படுத்தப் பட்டிருந்தால் மனதில் பதியும். இக்காரணத்திற் காகவே சிறுவரின் வாசக நூலில் பாடங்கள் யாவும் ஒரே ஆசிரியரால் எழுதப்படல் வேண்டும். பாடங்கள் படிப்படியாய் எளிதிலிருந்து வன்மைக்கு உயர்ந்து செல்லல் முறையாகும். மொழி நடையும் இனிதாக, எளிதாக அமைதல் அவசியம். பிற்காலத்தில் உயர்தர வகுப்புகளில், இலக்கியத்தை அனுபவிக்க ஆயத்தப்படுத்தும் வகையில்பாடங்கள் அமைந்து திகழல் சிறப்பாகும். கிரகிக்கும் சக்தியைப் பெருக்குவதற்கும் மொழிப் பயிற்சிகள் தருவதற்கும் பாடங்கள் உதவ வேண்டும்.

விவரமாகப் படிக்கும் பாடப் புத்தகத்தை தேர்ந்தெடுப்பதில் நீர் கவனிக்க வேண்டிய அம்சங்கள் யாவை? (Ele. 54)

4. மேல் வகுப்புப் பாட நூலின் தன்மை.

I **பொருள்:-** அறிவின் வளர்ச்சிக்கும் வயதின் மலர்ச்சிக்கும் மனதின் உணர்ச்சிக்கும் ஏற்றவையாய் இருக்க வேண்டும். பின்வரும் தலைப்புகளின் பேரில் பாடங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டுமென அரசியலார் பாடத்திட்டம் வற்புறுத்துகிறது:—

1. **இலக்கியம்:-** கற்பனை மலிந்தவையாயும் மனதில் உணர்ச்சிகளை எழுப்பும் வன்மை வாய்ந்தனவாயும் உள்ள இலக்கியப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்இன்பந்தரும்.

இந்திய இலக்கியத்தினின்று மட்டுமின்றிப் பிற நாட்டிலக்கியத்தினின்றும் தேர்ந்தெடுத்தல் நலம்.

2. **வரலாறு:—** உண்மை நிகழ்ச்சிகள், மக்கள் செய்த மாண்புறு செயல்கள், நாட்டு வரலாறு, பெரியோர் வாழ்க்கை வரலாறு, புதிய நாடு கண்டுபிடித்தோர் வரலாறு முதலியவை பற்றிய பாடங்கள் ஏற்றவை.

3. **கதைகள்:** புனைக் கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள், பிராணிக் கதைகள், சிறு நாடக உருவக் கதைகள், வீரர் கதைகள், நகைச் சுவைக் கதைகள்—ஆகிய இவற்றுள் ஒன்றிரண்டு ஆங்காங்கு சேர்த்தல் நலம்.

4. விஞ்ஞானம், விவசாயம் பற்றியும் குடிசைக் கைத் தொழில் போன்ற சாதாரணக் கைத் தொழில் பற்றியும் அறிவியலாராய்ச்சியாளர் அவ்வப்போது கண்டு பிடிக்கும் புதுமைகளை விளக்கும் பாடங்கள் வரவேற்கத் தக்கன.

5. **கட்டுரைகள்:** இலக்கிய, விஞ்ஞான, சரித்திரக் கட்டுரைகள் பாடநூலில் இடம் பெற வேண்டும்.

6. **நாடகங்கள்:** புதினங்களிலிருந்து சுருக்கியவை, தமிழ்க் காப்பியங்களிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் தேர்ந்தெடுத்த காட்சிகள், மேல்நாட்டுக் கதைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை முதலியன ஏற்றவை.

7. கவர்ச்சிமிக்க முக்கியமான இந்தியச் சரித்திர நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடங்கள்.

8. வானொலிச் சொற்பொழிவுகளினின்றும் தெரிந்தெடுத்த ஏற்ற கட்டுரைகள்.

II. **நடை :—** எளிமை, ஆழமுடைமை முதலிய அழகோடு பேராசிரியர்களால் எழுதப்பட்டவை பயனும் பண்பும் தரும். சிறந்த பல ஆசிரியர்கள் எழுதிய பாடத் தொகுப்பு சிறந்தது. பல்வேறு வசன நடைகளைப் பற்றிப் பின் பார்ப்போம்.

III. **மொழித் திறம் :—** சொற் களஞ்சியத்தைப் பெருக்குவதும் முறையே இலக்கணப் பயிற்சி தருவதும் நோக்கமாகக் கொண்டு, பாடங்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். எழுத, படிக்க, பேசப் பயிற்சிகள் தருங்கால் இலக்கணத்தை இணைத்துப் போதிப்பதே இன்பம் பயக்கும்

IV. **செய்யுட்கள் :—** பல்வேறு வகைச் செய்யுட்களை மாணவரின் நூலில் சேர்க்க வேண்டும். தோத்திரம், காவியம், சங்க இலக்கியப் பாக்கள், தற்கால இலக்கியச் செய்யுட்கள் முதலிய சிறு பகுதிகளை மாணவர் கற்றால், பிற்கால வாழ்க்கையில் நூற்களை முழுதும் கற்க வேண்டும் என்ற ஆசை உண்டாகும்.

V. **பயிற்சிகள் :-** பாடங்களின் இறுதியில் நூதன முறைப் பலவகைப் பயிற்சிகள் கொடுத்தல் நலம்.

வினா:- 1. ஆரம்பப் பாடசாலையிலே வாசகப் புத்தகங்கள் எத்தன்மையனவாய் இருத்தல் வேண்டும்?

2. மேல் வகுப்புகட்குரிய பாட நூற்களின் தன்மையை விளக்குக.

3. ஆழ்ந்தபாடப் படிப்பிற்கும் (detailed study) துணைப்பாடப் படிப்பிற்கும் வேண்டியவற்றை தேர்ந்தெடுக்கையில் எவற்றை எல்லாம் கவனிப்பாய்? (Sec. 53)

5. உரை நடை வகை.

செல்லும் செலவைக் குறிக்கும் கால் நடை எவ்வாறு ஒருவனை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்கிறதோ, அதுபோன்றே சொற்களும் ஒருவரிடமிருந்து மற்றொருவர்க்குக் கருத்தைக் கொண்டு சென்று தெரிவிப்பதால், இது சொல் நடை எனப் பெயர் பெற்றது. கருத்தை வெளிப்படுத்தச் சொற்களை அமைத்துக் கொண்டு போகும் போக்கே நடை எனப்படும். இக்காலத்தில் பலவிதமான தமிழ் நடைகள் வளர்ந்துள்ளன. பல நடைகளை மாணவர்க்குப் பயிற்றல் வேண்டும். மேல் வகுப்புக்குரிய வசன நூலில் பல ஆசிரியர்கள் பல்வகை நடைகளிலும் எழுதிய பாடங்களைத் தொகுத்து வெளியிடுகிறோம். அவற்றைக் கற்பதன் மூலம் மாணவர்கள் தமக்கென ஒரு சொந்த நடையை இயல்பாக அமைத்துக் கொள்ளலே நல்லது. பிறர் நடையைப் பின்பற்றுவது, பிறர் கால்களைக் கொண்டு நடப்பதொக்கும். ஆதலால் ஆசிரியர் கீழ்க்கண்ட நடை வகைகளை அறிந்து, அவற்றின் தன்மைகளை மாணவர்க்கு எடுத்து விளக்கலாம்.

1. **வெள்ளை நடை** :— எல்லார்க்கும் மிக எளிதில் விளங்கும் நாடோடிய தமிழ். (உ-ம்) இரண்டு சின்னக்குருவிகள் மரத்தில் கூடுகட்டி வசித்தன. பெட்டைக் குருவி முட்டை இட்டது. பிற்பாடு அடைகாத்துக் குஞ்சு பொரித்தது.

2. **கொடும் புணர் நடை** :— சொற்களை ஒன்றோடொன்று புணர்த்தி எழுதிச் செல்வது:- (உ-ம்) ஈங்கிவற்கொரு விடுக்கண்டுயர் தீர்த்தலா லிம்மைப் புகழுண் டென்றொரு நந்நோக்கத்தாலு மறஞ் செய்வாரு முளர்.

3. **மணிப் பவள நடை** :— வட சொற்களையும் தென் சொற்களையும் மாலையில் மணியும் பவளமும் மாறி மாறிக் கோத்துச் செல்வது போல, கலந்து எழுதும் நடை. இந்த நடை விரும்பத்தக்கதல்ல.

(உ-ம்) "சமயோசிதமான சாமர்த்தியமே சாதுர்யம் என்பது. சகலரிடத்தும் உபசாரமாக ஒத்து நடப்பது கஷ்டமல்ல; அதனால் நஷ்டம் ஒன்றுமில்லை. எல்லோருக்கும் சந்தோஷம் உண்டாக நடப்பதைப் பால்யப் பிராயத்திலே பழக வேண்டும்."—திரு. செல்வகேச முதலியார்.

4. **தனித்தமிழ் நடை**:- பிறமொழிச் சொல் ஒன்றும் கலவாது, தனித் தமிழ்ச் சொற்களைக் கொண்டெழுதுவது பிறமொழி பெரும்பாலுங் கலவாது எழுதிச் செல்வதே செந்தமிழ் நடையாகும். தனித்தமிழ் நடைக்குதாரணம்:— "இளைஞர்கள் உடலோம்பல் மீது பெருங்கவலை செலுத்தல் வேண்டும். இளமை அழகுக் குரியது. இக்கால இளைஞர் முகத்தில் அழகு ஒழுகுகிறதோ? இளைஞர்களல்லவோ ஒரு நாட்டின் செல்வம். அவர்கள் நிலையை உன்ன உன்ன உளங் குழைகிறது." — திரு. வி. கல்யாணசுந்தரர்.

5. **செய்யுள் நடை** அல்லது எதுகை மோனை நடை:- "பூவினை வெறுத்து, அயோத்தி மன்னன் பொன் மனை புகுந்து, கணவனுடன் நாடு துறந்து, காடு புகுந்த கமலச் செல்வியாவாள் சீதை. அவள் பெண்மையும் பேதுரும் பேரழகுவாய்ந்தவள்"— திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை.

மாணவர் இயல்பாக எழுதப் பயிலல் வேண்டும். வலிந்து சிந்தித்து வார்த்தைகளைப் போட்டு எழுதுவது இயற்கை யானதன்று.

6. **இலக்கிய நடை**:- உயர்ந்த சொற்களாலும் செய்யுள் வரிகளை ஊடே கலந்தும் விழுமிய கருத்துக்களைக் கற்றோர்க்கு மட்டும் விளங்கும் வண்ணம் எழுதுவது.

(உ-ம்) "அரசன், அஞ்சாமை, ஈகை, அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாதவனாய், தூங்காமை, கல்வி, துணிவுடைய வனாய் விளங்கல் வேண்டும். ஊழையும் உப்பக்கம் காணும் அமைச்சர் புடைசூழச் செங்கோல் செலுத்த வேண்டும்."

7. **தவிர்க்க வேண்டிய கொச்சை நடை** :-
(உ-ம்) "அவங்க ஊட்லே குடுத்த தண்ணி சூடா இருந்த தின்னு." தற்காலப் புதினங்களில் நடையை நினைக்கும்போது நெஞ்சு பொறுக்குதில்லையே! எத்தனை பிழை; ஆனால் புத்தக மாக வெளிவருகிறது.

(உ-ம்) அவள் அழகி; தன் காதலனுக்காகக் கார்த்துக் கொண்டு நின்றாள். பந்தலிலே தவள்ந்து பூர்த்த ரோஜாப் பூவைப் பரிச்சுக் கோர்த்தாள்; முகர்ந்து பார்த்தாள். அகண்ட கண்களால் நாலா பக்கமும் பார்த்துண்டே காதலன் எப்போ வருவாரோ என்று யிதயம் நொந்தாள்," — இங்கே தடித்த எழுத்தில் உள்ளவை பிழைச் சொற்கள்.

8. **இழிவு நடை:-** "சோழர் ஹிஸ்டரியில் வரும் அநேக மினிஸ்டர்கள் கமாண்டர் இன் சீப்புகளாக சர்வீஸ் பண்ணினவர்கள்." —இந்த ஆங்கிலக் கலப்பு, ஆபாச நடையைப் பள்ளிக் கூடங்களிலிருந்து தொலைத்து ஒழிக்கும் நாள் எந்நாளோ! பள்ளியில், இது முதலில் தொலைந்தால்தான் நாட்டில் பிற இடங்களிலும் நிலையங்களிலும் தொலையும்.

நடையானது கேட்போருக்கு ஏற்றவாறும், பொருளுக் கேற்றவாறும், காலத்திற்கு ஏற்றவாறும் வேறுபடும். இயற்கையாகப் பேசும் சாதாரண நடையில் பிழையற எழுத மாணவர் முதலில் பயில வேண்டும்.

6. உரைநடைப் பாடம் கற்பிக்கும் முறை

ஆழ்ந்த படிப்புப் பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு உரைநடைப் பாடம் கற்பிக்க வேண்டும். வசன பாடத்திலே மாணவர் நுட்பமான கருத்தை உணர்வர். விஷயங்களைச் சுருக்குதல், பெருக்குதல், சொற்களை உபயோகித்தல் முதலிய பயிற்சிகளைப் பெறுவார் என்பதை முன்னரே படித்துள்ளோம். ஆகையால் இத்தகைய விரிந்த நோக்கங்களை மனதில் கொண்டு, வசன பாடத்தை மொழித் தேர்ச்சி உண்டாகுமாறு கற்பிப்பதற்குக் கீழ்க்கண்ட படிகளைப் பின்பற்ற வேண்டும்.

1. முன்னுரை.

முன்னுரை மூலம் பாடத்தை அறியும் விருப்பத்தை மாணவர்க்கு ஊட்ட வேண்டும். முன்னுரையானது பாடத்திற்குள் மாணவரை அழைத்துச்செல்ல வேண்டும்; பாடத்தை அறிந்துகொள்ளுமாறு மனதைப் பக்குவப் படுத்துவதே முன்னுரை அல்லது பீடிகையாகும். பீடிகையிடும் வழிகள்:-

1. பாட சம்பந்தமாய் முன்பே அறிந்தவைகளை பற்றி உரையாடலாம்.

2. நீண்ட கதையாயின் சுருக்கம் கூறியோ அல்லது சிறு கதையாயின் முழுக்கதையும் இடமும் கூறியோ ஆரம்பிக்கலாம்.

3. படங் காட்டியும் நேரிலே பொருளைக் காட்டியும் அல்லது மாதிரிப் பொருளைக் காட்டியும் விளக்கலாம். முன்னுரையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதொன்று உண்டு. அதாவது பாடத்தில் வரும் கடின சொற்களைக் கூடிய வரையில் முன்னுரையிலேயே விளக்கி விட்டால், பாடத்தை எளிதில் வாசித்துணர ஏதுவாகும். முன்னுரை நீண்டதாய் இல்லாமலும் பாடத்தை விட்டு விலகிச் செல்லாமலும் இருத்தல் வேண்டும்.

2. படிப்பு.

மேல் வகுப்புக்குச் செல்லச் செல்ல,மௌன வாசிப்பை அதிகமாக்கியும் உரக்க வாசிப்பைப் படிப்படியாய்க் குறைத்தும் வரல் வேண்டும். ஏதாவதொரு பயிற்சியைத் தந்து, அதன்மூலம் மௌன வாசிப்பைத் தூண்ட வேண்டும். வினாக்கள் கொடுத்து விடைகாணுமாறோ, அருஞ் சொற்களைத் தேர்ந்து குறிக்குமாறோ, முக்கிய கருத்தைக் கண்டு பிடிக்குமாறோ கட்டளையிட்டு, மௌன வாசிப்பில் ஈடுபடுத்த வேண்டும்.

கீழ் வகுப்புகளில் ஆசிரியரின் மாதிரி உரக்க வாசிப்பு அவசியம். மேல் வகுப்புகளில் கருத்தை அறிந்த பிறகு பிள்ளைகள் உரக்கப் படிப்பது நல்லது. மிக மந்த மாணவனையோ முதல்தர மாணவனையோ முதன்முறை உரக்கப்

படிக்கச் சொல்லல் நல்லதன்று. நடுத்தர அறிவுடைய மாணவன் முதன்முதல் உரக்க வாசித்தால் எல்லோருக்கும் பயன்படும். உரக்கப் படிப்பு முடிந்த பின்னர், ஒலிப்புப் பிழைகளையும் நிறுத்தற்குறி பற்றிய பிழைகளையும் பிறபிழை களையும் திருத்தலாம்.

3. விளக்கம்.

விளங்கிக் கொள்ள முடியாத சொற்களையும் விஷயங் களையும் விளக்க வேண்டும்; உவமானங்கள் காட்டியோ சிறு கதை கூறியோ படங்கள் காட்டியோ அநுபவங்களை ஞாபக மூட்டியோ விளங்காத பொருளை விளக்கலாம். மாணவனின் சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் கேட்கலாம். பிற புத்தகம், அகராதி, அட்டவணை முதலியவற்றைப் பார்த்துப் பொரு ளுணர வழிகாட்டல் சிறந்தது. கடின சொற்களின் பொரு ளைக் கரும்பலகையில் ஒருபுறமாக எழுதி வைக்க வேண்டும். விஷய விளக்கக் குறிப்பினைக் கற்பித்துப் போகையில் அவ் வப்போது கரும்பலகையில் எழுதலாம். பிள்ளைகள் அவற் றைத் தம்முடைய குறிப்பேடுகளில் எழுதிக்கொண்டால், மீண்டும் படிக்க உதவும்.

கடின பதங்களை விளக்கும் வகை:—

1. அகராதி காணல்.
2. படம் காட்டி விளக்கல். தரு-என்ற சொல்லை மரத்தின் படத்தைக் காட்டி விளக்கலாம்.
3. மாதிரிப் பொருள் காட்டி விளக்கல். எரிமலையை மாதிரிப் பொருள் காட்டி விளக்கலாம்.
4. உண்மைப் பொருள் காட்டி விளக்கல். நெற்றி யைக் காட்டி, நுதல் என்ற சொல்லை விளக்கலாம்.

5. நடித்துக் காட்டல். வெகுளி எனும் சொல்லை விளக்கக் கோபித்துக் காட்டலாம்.
6. வாக்கியத்தில் உபயோகித்துக் காட்டல். 365 நாள் கொண்டது ஓர் ஆண்டு எனும் வாக்கியத்தால் ஆண்டு எனும் சொல்லை விளக்கலாம்.
7. ஒரு பொருள்பட்ட பல சொல்லோடு இணைத்துக் காட்டல். வீடு, மனை, அகம், இல்லம்.
8. சொல்லின் மூலங் காட்டி விளக்கல். உழவு என்ற சொல்லிருந்து உழத்தியர் எனும் சொல் பிறந்தது. ஆகவே இச்சொல் உழவு நிலத்தில் வாழும் பெண்கள் எனப் பொருள்படும்.
9. எதிர்பதங் கூறல். சிறியது X பெரியது.

வினவுதல்:- வினாக்களைப் பல மாணவர் வினவச் சந்தர்ப்பம் தரல் வேண்டும். சிந்திக்கச் செய்யும் முறை சிறந்தது. மாணவன் வினவும்போது அவனுடைய நுட்ப அறிவையும் கிரகித்த அளவையும் ஆசிரியர் அறிந்து கொள்ளலாம்.

4. கீழ் வகுப்புகட்குரிய முடிவுப் பயிற்சிகள்:-

1. சொல்வதெழுதுதல்.
2. அருஞ்சொல் விளக்குதல்.
3. வினாக்கட்கு விடை கூறல்.
4. சொற்களை இணைத்தல்.
5. எதிர்பதம் கூறல்.
6. சொற் பொருள் கூறல்.
7, சொற்களை வாக்கியத்திலமைத்தல்.
8. வாக்கிய அமைப்புகளைப் பயிலல்.
9. காலி இடம் நிரப்பல்.
10. கதை நடித்தல்.
11. சம்பாஷணை நடத்தல்.
12. போலி நடிப்புகள் நடித்தல்.
13. சுலபமான சிறு இலக்கணப் பயிற்சிகள் கொடுத்தல்.

மேல் வகுப்புகட்குரிய முடிவுப் பயிற்சிகள்:-

1. விரிந்த பொருளைச் சுருக்குதல்.
2. சுருங்கிய பொருளை விரித்தல்.
3. நுட்பமான விஷயங்களை விளக்கி, நயம் கூறல்.
4. பத்திகளின் பொருளுக்கேற்பத் தலைப்பிடுதல்.
5. விஷயக் குறிப்புத் தயாரித்தல். (உ-ம்) ஆள் இல்லா வீடு-குழந்தை உயர்ந்த மண் தொட்டித் தண்ணீருக்குள் விழுந்து விடல்-கண்ட பையன் தொட்டியைக் கல்லால் உடைத்தல்-குழந்தை பிழைத்தல்.
6. ஷை விஷயக் குறிப்பை வைத்துப் பெருக்கி எழுதல்.
7. இணைத்தல், தரம் பிரித்தல், பூர்த்தி செய்தல், முதலிய நூதன முறைப் பயிற்சிகள்.
8. கதைப் பாத்திரங்களின் குணங்குறைஆராய்தல்.
9. கட்டுரையாக, நாடகமாக, சம்பாஷணையாக எழுதுதல்.
10. பாடம் இடம் தரும் வகை அறிந்து ஓரிரு புதிய இலக்கண விதிகளைப் பயிற்றலாம். முன்னர் கற்ற இலக்கண அறிவை நினைவூட்டும் பயிற்சி களும் தரலாம்.
11. நல்ல சில வாக்கிய அமைப்புகளைக் கவனிக்கச் செய்வது மிக்க நன்மை தரும். தனி வாக்கியத்தைக் கலப்புவாக்கியமாக மாற்றல்போன்ற பயிற்சிகள் தருவதால், மாணவர் வாக்கியங்களைப் பிழையற அமைக்கும் ஆற்றல் பெறுவார்.

வினா:- 1. முதன் மூன்று பாரங்களில் ஏதாவது ஒன்றிற்குக் கற்பிக்கப்படும் உரைநடைப் பாடத்தின் பல்வேறு படிகளை வருணிக்க. (Sec. 43.)

2. நான்காம் வகுப்பு மாணவருக்கு யானையைப் பற்றி வசன பாடம் கற்பித்தபின் நீவிர் கொடுக்கக்கூடிய பயிற்சி வகைகள் நான்கினைக் குறிக்க. (Ele. 46)

3. வசன பாடத்தில் புதிய சொற்களை விளக்க எம் முறைகளைக் கையாளுவீர்? உதாரணங் காட்டுக. (Ele. 52)

8. வினவுதல்:-

வினவுதலின் அவசியம்:-

மொழிப் போதனையில் கேள்விகள் கேட்டல் மிக முக்கியமானது. கேள்வி கேட்கும் திறமை ஆசிரியர்க்கு இருக்கவேண்டிய முக்கியமான திறமை வினவுதலால் பல நலன்களும் பயன்களும் விளைகின்றன.

1. வினக்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன; ஆழ்ந்து யோசிக்கச் செய்கின்றன.
2. தெரிந்த கருத்துக்களுடன் தெரியாத கருத்துக்களைத் தொடர்பு படுத்தியறிய வினக்கள் உதவும்
3. ஊகித்தறியத் தூண்டும்.
4. எண்ணங்களைக் கோவைப் படுத்தி ஒழுங்கு செய்யவும் உதவும்.
5. கற்பித்தவற்றைக் குழந்தைகள் அறிந்து கொண்டார்களா என அறிய உதவும்.

6. கற்பித்தவற்றை மேலும் மேலும் ஞாபகமூட்டவும் மனதில் இறுத்தவும், பாட இறுதியிலே வினக்கள் பயன்படுகின்றன. ஆகவே, பயனும் இடமும் கருதி வினக்களை நான்கு வகைப் படுத்தலாம்.

வினு வகை:-

1. **ஆயத்த வினு:—** முன்னறிவைச் சோதிக்கவும், புதிய பாடத்தோடு முன்தெரிந்தவற்றைத் தொடர்பு படுத்தவும், சிந்தனையைத் தூண்டவும் பயன்படும்.

2. **விளக்கும் வினு:—** பொருட்களை விளக்கவும் மனதில் பதிக்கவும் உதவும்.

3. **பரிசோதனை வினு:—** (Testing or recapitulatory questions) தெரிந்து கொண்டதையும் தேர்ச்சியையும் சோதிக்க உதவும்.

4. **பயிற்சி வினு:—** (Drill) கற்றதை ஞாப மூட்டி நிலைத்து நிற்கச் செய்யவும் பழக்க முண்டு பண்ணவும்உதவும்

வினுக்களின் தன்மை.

1. மிக எளிமையாகவோ மிகக் கடினமாகவோ இருக்கக் கூடாது. மாணவர் அறிந்து கொள்ளத் தக்க அளவுக்கு எளிமையும் தெளிவும் வினுக்கள் பெற்றிருக்க வேண்டும்.
2. சிறு குழந்தைகட்கு ஒவ்வொரு கேள்வியும் ஒரு கருத்தையே உட்கொண்டிருக்க வேண்டும். சிறு விடை எதிர்பார்க்கும் புதுமுறைக் கேள்விகள் பாலர்க்கு மிக ஏற்றவை.
3. ஆம், இல்லை என்ற விடைதரும் வினுக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருந்தா.
4. விடையைத் தெரிவிக்கும் போக்கில் வினுக்களை அமைக்கக்கூடாது. உதா:- விக்டோரியா பல நன்மைகளைச் செய்தாரல்லவா?

5. பாட முகவுரையிலும் இடையிலும் முடிவிலும் கேட்கும் வினக்களின் நோக்கம் வெவ்வேறு; இதை முன்னரே கூறியுள்ளோம்.

கேள்வி கேட்கும் முறை:-

1. மாணவர் அனைவரையும் நோக்கி வகுப்பில் வினவல் வேண்டும். ஒரு பிள்ளையைச் சுட்டிக் கேள்வி கேட்டால், பிறர் கவனிக்கமாட்டார்.

2. சில கெட்டிக்கார மாணவரை மட்டும் அடிக்கடி கேள்வி கேட்டுப் பிறரை கேட்காதிருத்தல் கூடாது. வகுப்பறைக் கோடியிலும் மூலையிலும் உள்ளவரையும் கவனிக்கவேண்டும்.

3. வரிசையாய் மாணவரை வினவிச் செல்லல் நல்லதல்ல. ஏன்?

4. வினக்களை மாணவர் விளங்கிக்கொள்ள இயலாவிடின், வார்த்தைகளை மாற்றி எளிமையாக அமைக்கவேண்டும்.

5. பாடத்திற்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் மாணவரிடமிருந்தே வருவிக்கவேண்டும் என எண்ணி முயலுவது வீண். ஊகித்து அறிய முடியாத கடினமான கருத்தாக இருப்பின், ஆசிரியரே அதைச் சொல்லிவிடல் நலம்.

6. மாணவர் ஆசிரியரை வினவ வாய்ப்பு அளித்தல் வேண்டும். மாணவரும் ஒருவரை ஒருவர் வினவுதல் இன்பம் பயக்கும்.

7. விடைகள் முழு வாக்கியமாகக் கூறல் வேண்டும்; எல்லோரும் ஒன்றாகக் கூடி விடையளித்தல் தவறு.

வின:- நல்ல முறையில் கேள்வி கேட்டலின் குணாதிசயங்கள் எவை? (Ele. 52)

VI. செய்யுட் பயிற்சி.

1. செய்யுட் பயிற்சி என்பது என்ன ?

உள்ளத்திலே உணர்ச்சிகளும் எழுச்சிகளும் கருத்துக்களும் எழுகின்றன. இவற்றை இசை இனிமை, பொருள் நயம், சொல் நயம், பொருந்த வெளிப்படுத்துவதே செய்யுளாகும். நன்னூல் ஆசிரியர், மனிதவுடல் போன்றது செய்யுள் என்கிறார். நரம்பு, எலும்பு, தசை முதலிய தாதுக்களால் ஆக்கப்பட்டது உடல்; உயிர் தங்க உதவுவது உடல். இது போலவே நயமான சொற்களால் செய்யப்பட்டது செய்யுள்; உணர்ச்சிக் கருத்துகட்கு உறைவிடமானது செய்யுள். ஆனால் மனித உடல் அழியும். புகழ் ஆகிய சொற்களால் செய்யப்பட்ட புகழ் உடம்பு அழியாது. "மாயா புகழ் கொண்டு மற்றிவர் செய்யுமுடம்பு"-என்றார் குமரகுருபரர்.

ஆகவே செய்யுளைச் "சொல் சித்திரம்" - எனலாம். காவியப் புலவன் மனத்தில் தோன்றும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஏற்ற சொற்களால் இனிமையாக வெளிப்படுத்துகின்றான். அவ்வாறே ஓவியப் புலவன் நிறங்களால் வெளியிடுகின்றான். சிற்பப் புலவன் கல்லிலே செதுக்கி வெளியிடுகின்றான். செய்யுளிலே சிறந்த சொல்லமைப்பையும் செறிந்த பொருளினையும் நிறைந்த இன்னோசையினையும் விரிந்த கற்பனையினையும் கண்டு, சிந்தித்துச் சிந்தித்து இன்புறலாம். நமக்குக் கிடைத்துள்ள பெருஞ் செல்வங்களாகிய செய்யுட்களை மாணவர் கற்று, இன்புற வழிகாட்ட

வேண்டும். ஆரம்ப வகுப்புகளிலே சிறு பாட்டுக்களில் பயிற்சி அளித்து, படிப்படியாய் உயர்ந்த காவியங்களைப் படிக்கும் அறிவை உண்டாக்க வேண்டும்.

2. செய்யுட் போதனையின் நோக்கம்.

1. **வசன பாடத்தின் நோக்கமன்று:-** வசன போதனையின் நோக்கத்திற்கும் செய்யுள் போதனையின் நோக்கத்திற்கும் பெரிய வேறுபாடுண்டு. செய்யுளின் நோக்கமென்ன? கடின சொற்களைக் கற்பதன்று; அருஞ் சொற்றொடர்களை அறிவதும் அன்று; இலக்கண விதிகளைக் கற்பதும் அன்று; பதவுரை, பொழிப்புரை படிப்பதும் அன்று; சொல் வளத்தைப் பெருக்குவதுமன்று; கருத்தை வெளியிடும் திறமையை வளர்ப்பதுமன்று; ஆனால் இவற்றை இடை இடையே நாம் கற்பிக்க நேரிடுகின்றது. சிறு சிறு பக்க வேர்கள் போலவே செய்யுட் படிப்பிலே இவை பயன்படுகின்றன. செய்யுட் படிப்பிலே ஆணி வேர் போன்ற சீரிய, கூரிய, செவ்விய நோக்கமாவது செய்யுளை ரசித்து இன்புறுவதாகும்.

2. **உணர்ச்சியை எழுப்பல்:-** செய்யுள் ஒரு இன்பப் பொருள், அனுபவித்து ஆனந்தமுற வேண்டிய அழகுப் பொருள்; புலவன் உள்ளத்திலிருந்து ஊறிய ஊற்று; கற்பனையால் கனிந்த கனி. ஆதலால் புலவன் எவ்வுணர்ச்சி தூண்டப்பட்டுச் செய்யுளை இயற்றினனோ, அவ்வுணர்ச்சியை மாணவர் மனதில் உண்டாக்குவதே செய்யுளின் தலை சிறந்த நோக்கம். 1. இயற்கையின் அழகில் ஈடுபட்டோ, 2. மக்களின் தன்மையை அறிந்தோ, 3. அல்லது தானே இன்ப துன்பத்தை அனுபவித்தோ புலவர்கள் கவிகளை இயற்றியிருக்கலாம். இவ்வாறு இயற்றியதற்கு ஒவ்வொருதாரணம் கூறுங்கள். ஆகவே செய்யுட்களுக்கு நல்ல விளக்கங்கள் கூறுவதால்,

உயிர்நிலைக் கருத்தை உணரச் செய்யலாம். உயிர்நிலைக் கருத்தை மாணவர் அறிவது மட்டும் போதாது. அதனை மாணவர் உணர்ந்து இன்புறத் துணைபுரியவேண்டும். மாணவர் மனத்திலே எழுச்சியை, கிளர்ச்சியை, உணர்ச்சியை எழுப்பல் வேண்டும்.

3. **இயற்கையின்பால் பற்றுண்டாக்கல்:-** அற்புத இயற்கைக் காட்சியின் அழகிலே மனதைப் பறிகொடுத்து, பரவசமுறுவதினாலே, பாட்டு இதயத்திலிருந்து மலர்கிறது; அவ்வின்பம் மாணவர் மனதிலும் மலரவேண்டும்.

4. **இனிய ஓசையிலீடுபடல்:-** சுவைகளுக் கேற்ற வல்லோசையோ, மெல்லோசையோ செய்யுட்களில் காணலாம். எதுகை, மோனை, இயைபு முதலிய தொடைகளிலே ஓசை இனிமை எழும்பும். மோனை என்பது முதல் எழுத்து ஒரே எழுத்தாக, அல்லது இன எழுத்தாக இருக்குமாறு சொற்றொடர் அமைப்பது.

(உ-ம்) அறிவு, ஆற்றல், ஆசை நிறைந்தவன். எதுகை என்பது முதலெழுத்து அளவில் ஒத்து நிற்க, இரண்டு, மூன்று முதலிய எழுத்துக்கள் ஒரே எழுத்துக்களாக இருக்குமாறு சொற்றொடர் அமைப்பது. (உ-ம்) நேற்று ஆற்றில் காற்று வீசியது. இயைபு என்பது செய்யுளின் இறுதிச் சொற்கள் ஒரே ஓசையுடன் ஒலிப்பது.(உ-ம்)

"கடவுளைத் துதிப்பது போல் வாய் பாடும்
கண்ணுங் கருத்துங் கண்ட விட மெல்லாம் ஓடும்
திடமாகக் கோயிற்குள் தேகம் போய்க் கூடும்
சிந்தனை வெளியிலே திரிந்து திண்டாடும்"

—வேதநாயகம் பிள்ளை.

(இந்தச் செய்யுளிலுள்ள எதுகை மோனையைக் குறிக்க.)

5. **கற்பனை வளர்தல்:-** புலவன் வரைந்துள்ள வர்ணனைகளையும் நிகழ்ச்சிகளையும் மாணவர் மனக்கண்ணால் காணச் செய்யலாம்.

6. **இலக்கியப் பற்று:-** மாணவர், சிறு செய்யுட்களையும் காவியப் பகுதிகளையும் கற்பதால், தம் பிற்கால வாழ்வில், பெரு நூல்களை முழுமையும் கற்க வேண்டும் எனும் ஆசையை உண்டாக்கப் பெறுவர்.

7. **செய்யுளியற்றல்:-** எதுகை மோனை அழகிலே சிறுவர் தம்மை அறியாமலே ஈடுபட்டு இன்புறுகிறார்கள். படிப்படியாக, முறையாகப் பயிற்சி அளித்தால் நாளடைவில் செய்யுளியற்றும் ஆற்றல் ஒரு சிலர்க் குண்டாகலாம். எதுகைச் சொற்றொடர்கள், மோனைச்சொற்றொடர்கள் கூறப் பயிற்சி தரலாம். மேல் வகுப்புகளில் அணியிலக்கணத்தில் முக்கியமானவற்றை மட்டும் கற்றுத்தரலாம்.

8. **ஒழுக்கத்தில் பற்று:-** தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை அறநெறியை அறிவிப்பன. ஆதலால் வாழ்க்கையிலே இன்னல், இடுக்கண், வழுக்கல் நேரும் போது ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் ஊன்றுகோல் போல உதவுவன.

9. **ஆராய்ச்சித் திறன்:-** காவியத்திலே பல இலக்கியப் பாத்திரங்களின் பண்புகளைப்பற்றிப் படிக்குங்கால் ஆராய்ச்சித்திறமை வளர்கிறது. எது உண்மை, எது பொய், எது சரி, எது பிழை, எது கற்பனை என்றெல்லாம் பகுத்தறிந்து காண மேல்வகுப்பில் பயிற்சிகள் தரலாம்.

வினா - 1. ஒரு செய்யுட் பாடத்தின் நோக்கங்கள்யாவை? ஒரு வசன பாடத்தின் நோக்கங்கட்கும்இவைகட்கும் என்ன வித்தியாசங்கள்? (Ele. 47)

(கேள்வியின் இரண்டாம் பகுதிக்கு இந்த அத்தியாயம் 5-ம் தலைப்பில் விடை காண்க.)

3. சிறுவர் செய்யுட்களின் தன்மை

1. **நீதிச் செய்யுட்களின் பொருத்தம் ;-** ஆழ்ந்த நீதிக் கருத்துக்கள் சிறுவர்களுக்கு இன்பமூட்டா. கருத்துக் களைக் காட்டிலும் காட்சிப் பொருள்களே களிப்பூட்ட ஏற்றவை. தாங்கள் காணும் பறவைகள், விலங்குகள், விளையாட்டுப் பொருள்கள் பற்றிய செய்யுட்களே இன்பம் தரும். "ஆறுவது சினம்; உடையது விளம்பேல், நப்போல் வளை" என்பன போன்ற நீதிச் செய்யட்களின் ஆழத்தையும் அறத்தின் உண்மையையும் சிறுவர் எவ்வாறு சிந்தித்து இன் புற முடியும்? பொருள் விளங்காப் பாடல்களை, பாலர் மனனஞ்செய்யவேண்டும் என வற்புறுத்துவது, பல்லிழந்த பழங்கிழவனை, கடிக்க முடியாக் கடிய முறுக்கைக் கண்டிப் பாய்க் கடித்துத் தின்ன வேண்டுமென வற்புறுத்துவ தொக் கும். சிறு பருவத்தில் மனனசக்தி சிறந்து விளங்கும் என்பது உண்மை; ஆனால் அப்பருவத்தில் அறிய முடியாத அரிய செய்யுட்களை அவசியம் மனனம் செய்ய வேண்டுமென்பது உளநூல் முறைக்கு ஒவ்வாதது.

2. **ஏற்ற பொருள்:-** செய்யுள், அன்பின் சிறுவர்க்கு ஆனந்தமூட்டவேண்டும். அத்தகைய பொருள் அடங்கி இருத்தல் அவசியம். அறிவுக்கெட்டிய, வாழ்க்கையோடு ஒட்டிய பொருள்களைப் பற்றிய செய்யுட்களைத் தேர்ந்தெடுத் தலிலே கவனம் செலுத்த வேண்டும்.

3. **எளிமை:-** உரித்தவுடனே வாழைப்பழம் தின்ன உதவுவது போல, படித்தவுடனே பொருள் மனதில் படல் வேண்டும். எளிய நடையில் இருப்பதோடு, எதுகை, மோனை, இயைபு முதலிய தொடை அழகிலே குறைவுபடக்

கூடாது. தொடை என்பது என்ன? சொற்களை ஒன்றோ டொன்று அழகுறத் தொடுப்பதே தொடையாகும். எளிய நடை கருதி, உரைநடையில் எழுதியவற்றைப் பாட்டாகப் பாடும் பேதமையை நீக்குவோமாக.

4. **ஆடலுக் கிடம்:-** நகைப்பிற்கும் நடிப்பிற்கும் ஆடலுக்கும் ஓடலுக்கும் பாடல்கள் மிக்க இடம் தருபவை களாகத் திகழல் வேண்டும். இத்தகைய பாடல்களை இன்னும் அதிகமாக இயற்றும் முயற்சி தமிழ்நாட்டில் ஓங்கவேண்டும்.

5. **எதிர்மறைப் போதனை:-** வஞ்சனை செய்வாரோடு இணங்க வேண்டாம் — போகவிட்டுப் புறஞ்சொல்லித்திரிய வேண்டாம் என்பன போன்ற எதிர்மறை நீதிச்செய்யுட்கள் மாணவர்க்குத் தீய பழக்கவழக்கங்களை உண்டாக்கலாம். இச் செய்யுட்களைப் போதிக்கும்போது, வஞ்சனை என்பது என்ன, புறஞ் சொல்லல் என்பது என்ன, என விரித்துக் கூற வேண்டிய திருக்கிறது; தீயவற்றை விளக்க நேரிடு கிறது. புறஞ் சொல்ல அறியாக் குழந்தையானது புறஞ் சொல்ல அறிந்து கொள்ளும். ஆதலால் எதிர்மறை நீதிச் செய்யுட்கள் ஏற்றவை அல்ல. கிருஸ்து பெருமானும் இவ்விதியை வற்புறுத்தியுள்ளார்; "இதைச் செய்ய வேண் டாம், அதைச் செய்ய வேண்டாம் எனச் சொல்வதிலும் இதைச் செய், அதைச் செய்—எனச் சொல்வது மேல்" என்றார். ஆக்க வழியிலே அறிவூட்டலே சிறந்தது.

6. **சிறுவர்க்குரிய பல வகைப் பாடல்கள்:-** சிறு வர்க்கு, பல்வேறு வகைப் பாடல்களைப் போதிக்கவேண்டும். மாணவர்கள் விருப்பத்திலே வேறுபட்டவர்கள்; ஆதலால்,

கீழ்க்கண்ட வகைப் பாடல்கள் சிறுவர்க் கேற்றவை:—

1. வர்ணனைப் பாடல்கள்: பறவைகள், மிருகங்கள், மலர்கள், விளையாட்டுப் பொருள்கள் முதலியவை களைப் பற்றிய சிறு வர்ணனைப் பாடல்கள்.
2. கதைப் பாடல்கள்.
3. அபிநயப் பாடல்கள்.
4. விளையாடிக் கொண்டே பாடும் பாடல்கள்.
5. ஆட்டப் பாடல்கள்:- கும்மி, கோலாட்டம், ஒயில் கும்மிப் பாடல்கள்.
6. வழி நடைப் பாடல்கள். (marching songs)
7. தேசிங்குராஜன், கட்டபொம்மு போன்ற நாட்டுப் பாடல்கள்.
8. பாப்பாப் பாட்டு, தாலாட்டுப் பாட்டு. அசைப் பாட்டு.
9. தொழில், பற்றிய பாடல்கள் — குறம், உழவர் பாட்டு, (பள்ளு) ஏற்றப்பாட்டு (ஏற்றம் இறைக் கும்போது பாடுவது.)
10. விடுகவிப் பாடல்கள்.
11. காவடிச் சிந்து, திருப்புகழ், தேவாரம் முதலிய பக்திப் பாக்கள்.
12. சங்கிலித் தொடர்ப் பாட்டு:— வந்த சொற்களே மீண்டும் மீண்டும் வரும் பாட்டு.

    வால் போச்சு, கத்தி வந்தது டம்! டம்!! டம்!!!
    கத்தி போச்சு, குடம் வந்தது டம்! டம்!! டம்!!!
    முள்ளங்கிப் பாடல் முதலியவை.

மேற்கண்ட வகைப் பாடல்களை ஆசிரியர் திரட்ட வேண்டும். பாப்பா மலர்களிலும், செய்தி இதழ்களிலும் பாலர் பாடல்கள் வெளிவருகின்றன. மேலும், தற்காலக் கவிஞர்கள்: பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலியோர் இன்று சிறுவர்க்கு ஏற்ற பல பாடல்களை இயற்றிச் சிறுவர்க்குச் சேவை செய்கின்றனர்.

அவற்றைத் திரட்டி, வகுப்புக்கேற்றவாறு வகைப்படுத்திக் கொள்ள வேண்டும். எலியும் தவளையும், நரியும் காகமும் போன்ற பழைய கதைப் பாடல்களையே நூற்றுண்டு தோறும் பாடித் திரியலாகாது. இந் நூலாசிரியர் வெளியிட்டுள்ள "சிறுவர் இன்பம்" -எனும், முதல் 5 வகுப்புக்குரிய பாடல் நூலில் பலவகைப் பாடற்கும் உதாரணம் காணலாம்.

4. ஆரம்பப் பள்ளியில் பாட்டால் பயன்.

1. பாட்டுமூலம் பள்ளியின்மேல் பற்றுண்டாகும். ஆசிரியரிடத்து அன்பும் நட்பும் வளரும்.

2. வாய்மொழிப் பயிற்சிகளிலே பாட்டு, ஒரு நல்ல இடம் வகிக்கின்றது; உச்சரிப்பைத் திருத்த உதவுகிறது.

3. கூட்டத்தோடு சேர்ந்து பாடும் போதும், பின் தனித்துப் பாடும் போதும் மாணவரிடம் இயல்பாகக் காணப்படும் அச்சமும் கூச்சமும் நீங்கும்.

4. பாட்டு நீண்ட காலம் மனதில் நிற்கும். ஆதலால் இதன்மூலம் ஞாபகத்திறனை வளர்க்கலாம்.

5. உயர்ந்த கருத்துக்களையும் நல்ல எண்ணங்களையும் பாட்டின் மூலம் வளர்க்கலாம்.

6. அபிநயப் பாடல்கள் நடிப்புத் திறனை வளர்க்க ஏற்றவை.

7. கதைப் பாடலாலும் வர்ணனைப் பாடலாலும் கற்பனைத் திறமை விருத்தியாகும்.

8. இன்பமான பொழுது போக்குக்குதவுவது பாட்டு. பாட்டிலே பரவசமுற்றிருக்கும் பண்பாட்டைப் படிப்படியாய்வளர்க்கலாம். பிற்காலத்தில் வாழ்க்கையில் இசைக்கலையில் ஈடுபடவும், தொழில் புரியவும் பாட்டுப் பயிற்சிபயன்படலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இன்பமூட்டுவதையே பாடற் பயிற்சியின் சிறந்த நோக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

வினு:- 1. அபிநயப் பாடல்களின் நோக்கத்தையும்பயன்களையும் கூறுக. (Ele. 45)

2. ஆட்டப் பாடல்கள் (Action songs) கற்பிப்பதின் நோக்கம் என்ன? முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கேற்ற ஆட்டப் பாடல்களின் வகைகள் (Types) எவை? (Ele 50

5. செய்யுளுக்கும் வசனத்திற்கும் வேறுபாடு.

1. செய்யுள் உணர்ச்சி ஊட்டுவது; இன்பம் அளிப்பது. கவிஞன் எவ்வுணர்ச்சியால் பாடினனே, அவ்வுணர்ச்சியை மாணவர்க்கு ஊட்ட வேண்டும்; இயற்கை அழகிலே ஈடுபடுத்த வேண்டும்; சொல்லழகையும், பொருள் அழகையும் ரசித்து இன்புற உதவவேண்டும். இதுவே செய்யுட் போதனையின் சிறந்த நோக்கம். ஆனல் உரைநடைப் போதனையிலே,

பலவகை மொழிப் பயிற்சிகள் தந்து, மொழித் தேர்ச்சியை உண்டாக்குவதுதான் முக்கிய நோக்கம். நோக்கத்திலே இவ்வித வேறுபாடு கொள்வதன் காரணமாக, முறையிலும் வேறுபாடு உண்டாகுமல்லவா ?

2. இளஞ்சிறுர்க்கு வசனம் எளிதில் விளங்கும். ஆனல், செய்யுளை விளங்கிக் கொள்வது சற்று சிரமம். ஆதலால், கிரகிக்கும் திறமையை வளர்க்கச் செய்யுளைக் காட்டிலும் வசனம் ஏற்றது. மேல் வகுப்புகளில் பொருளுணரும் ஆற்றலை வளர்க்கச் செய்யுளைப் பயன்படுத்தலாம்.

3. தினசரி வாழ்க்கையில் வசனமே பெரிதும் பயன்படுகிறது; எல்லா விஷயங்களையும் எடுத்துக்கூற ஏற்றது. ஆதலால் மொழிப் பயிற்சியானது உரைநடையில் ஆரம்பமாகிறது.

4. கற்ற எல்லோரும் எல்லாக் காலத்திலும் வசனம் எழுதலாம். ஆனல் செய்யுளைப் புலவர் மட்டுமே இயற்ற இயலும். செய்யுள் இயற்றும்திறமை இயற்கையாக அமைவது. அதனைக் "கருவிலே உண்டான திரு" -என்பர். செய்யுள் இயற்றும் புலவரும் எல்லாக் காலத்திலும் செய்யுளியற்ற இயலாது. உள்ளக் கிளர்ச்சியால், ஒரு கவர்ச்சியால், அல்லது மனமகிழ்ச்சியால் செய்யுள் தானக மலரும். இவ்வுண்மையைச் செய்யுள் கற்பிக்கும்போது எடுத்துக் காட்ட வேண்டும்; செய்யுளைக் கவிஞன் பாடிய சந்தர்ப்பத்தைக் கூறி விளக்க வேண்டும்.

5. செய்யுளானது யாப்பிலக்கணத்திற் கிணங்க, ஓர் ஒழுங்கிற்குட்பட்டது; செய்யுளடிகள் அளவிற்குட்பட்டிருக்கும். செய்யுளிலே, ஓசைஒழுங்கு காணப்படும்.

உரைநடையிலே, வாக்கியங்கள் கட்டுப்பாடின்றி, நீண்டும் குறுகியும் இருக்கலாம். ஓசைஒழுங்கையும் அடிகளின் அளவையும் செய்யுளிலே மாணவர்கண்டு, இன்புறத் துணை செய்வதால், ரசிக்கும் தன்மை உண்டாகும்.

6. பாட்டு எனும் பழரசப் பிழிவை, இசை எனும் தேனோடு குழைத்து எடுத்து ஊட்டினால், அடடா! எத்துணை இன்பம். காதிலே செந்தமிழ்த் தேன் வந்து பாயும். ஆனால் வசனத்தைப்போல, பாட்டை வாசிப்பது, விசனத்தைக்கொடுக்கும் முறை. பாட்டிலே சிறந்த பொருள் இல்லாவிடினும், நல்ல ராகத்தில் பாடினால், இனிமைதரும். "இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று"—என்பதற்கிணங்க, இசையானது பாட்டிற்கு அழகையும் இனிமையும் கொடுக்கும்.

7. உரைநடையை மௌனமாகப் படித்துக் கருத்துணரத் தூண்டலாம். ஆனால், செய்யுளை உரக்கப் படிப்பதாலும், பாடுவதாலுந்தான் ஓசையின்பம் பெற இயலும்; ஏற்ற இசையின்மூலம் பாடுவதாலும், பிறவகையில் உதவிகள் செய்வதாலும் செய்யுட் கருத்தை உணர்த்தலாம்; மாணவர் செய்யுளின் கருத்தைமட்டும் உணர்ந்தால் போதாது; கருத்துணர்வதின்மூலம் செய்யுளை மாணவர் ரசித்து இன்புற வேண்டும்.

8. சொற்றொகையைப் பெருக்கல், சொற்களை வாக்கியத்தில் உபயோகப்படுத்தல்,சொல்அமைப்பை அறிதல், வாக்கியங்களை அமைக்கப் பழகல் முதலிய பலவகை மொழிப் பயிற்சிகள் அளிப்பதற்குரிய பாடம் வசன பாடமே. அதாவது ஆழ்ந்தபடிப்பின் நோக்கங்களை நிறைவேற்ற உதவுவது வசன பாடமே. ஆனால் செய்யுளில், சொல்விளக்கங்களும் வாக்கியப் பயிற்சிகளும் இலக்கண விதிவிளக்கமும் ஓரள

விற்குத்தான் இருக்க வேண்டும். பொருளை ரசித்துணர ஏற்ற அளவிற்கு மட்டும், வார்த்தைகளைப் பற்றிய விளக்கமும் இலக்கணக்குறிப்பும் கொடுத்தால் போதும்.

9. அழகுற வெளிப்படுத்தல்:— ஒரு கருத்தைக் கவிமூலம் வெளிப்படுத்தும் விதம்வேறு; உரைநடையில் சொல்லும் விதம்வேறு. கவிஞன் அழகுணர்ச்சியில் ஈடுபடுபவன்; கற்பனையில் களிக்கின்றவன். ஆதலால் அழகுற, இனிமையுற, ஒரு கருத்தை வெளிப்படுத்திவிடுகின்றான். உதாரணமாக, ஒரு காட்சி வர்ணனையைக் காண்போம். குளிர்ந்தசோலையிலே வண்டுகள், மலர்த்தேனை உண்கின்றன; ரீங்காரம் செய்கின்றன. அழகிய மரக்கிளைகள் அசைகின்றன. இத்தகைய சோலையிலே மெல்லிய மேகம் வந்து தங்குகின்றது.—இதுவே ஒருவன் கண்ட காட்சி. இவ்வாறு தான் அழகுணர்ச்சி அற்றவன் உரைப்பான். ஆனால் கவிஞன் இக்காட்சியினையே வேறுவிதமாக வர்ணித்துவிடுவான். மெல்லிய, அழகிய மேகம் ஒரு குழந்தையாம்—(கொண்டல் அம் குழவி) அக்குழந்தை, கரங்களில் உறங்கியது. யார் கரங்களில்?—குளிர்ந்த மரங்களின் கிளைகளாகியகரங்களிலே உறங்கியது. அக்கிளைக்கரங்கள் காற்றில் அசைந்து அசைந்து மெல்லிய மேகக்குழந்தையை ஆட்டின. வண்டுகள் தேனுண்டு இசை பாடின. இவ்விதமாகக் கிளைக் கரங்கள் தாங்கி ஆட்ட, வண்டுகள் பாடித் தாலாட்ட, மேகக் குழந்தை மென்மையாகத் தங்கித் தூங்கியது. ஆஹா! எவ்வளவு நயமான வர்ணனை! மனதில் அக்காட்சியை அப்படியே பதித்துவிடுகிறார்; உயிரற்ற மேகத்திற்கும் மரத்திற்கும், உயிருள்ள தாய்க்கும் குழந்தைக்குமுள்ள உறவை ஊட்டிவிடுகிறார் கவிஞர். இதோ, அந்தக் கவியைப் பாடுங்கள்:—

வண்டுகள் மலர்குடைந்து, இனிய மாநற(வு)
உண்(டு,) இசை முரன்றுதா லாட்ட, ஒண்பொழில்
தண்டலை சினைக்கர மசைத்துத் தாங்குறக்
கொண்டலம் குழவிவந் துறங்கும் கொள்கைத்தே.

(நறவு—தேன்; முரன்று—பாடி; ஒண்பொழில்—இயற்கை அழகு நிறைந்த சோலை; தண்டலைசினை—மரங்களின் கிளைகளாகிய; கொண்டல் அம் குழவி—மேகங்களாகிய குழந்தைகள்.

வினா:- 1. ஒரு வசன பாகத்தை மாணவர் படித்து அனுபவிப்பதைவிட அதே விஷயங்கொண்ட ஒரு செய்யுட் பாகத்தை இவர்கள் இன்னும் நன்றாக அனுபவிக்க நீர் என்ன செய்வீர் என்று விளக்கிக் காட்டுக. (Sec. 47)

2. ஒரு செய்யுட் பாடத்தின் நோக்கங்கள் யாவை? ஒரு வசன பாடப்போதனையின் நோக்கங்கட்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசங்கள்? (Ele. 47)

3. செய்யுட்பாடப் போதனுமுறையும் வசன பாடப் போதனு முறையும் எவ்விதம் வேறுபடும்?

(Sec. 45 & 53. Ele. 44)

6. செய்யுட் போதனையின் தற்கால இயல்புகள்.

1. **துண்டித்துப் போதித்தல் கூடாது:-** பழைய முறைப்படி செய்யுளை முதலில் பதம் பதமாகப் பிரித்து உரைகூறுவர். அவ்வப் போது இலக்கணக் குறிப்புகளும் கூறுவர். இதன் பின்னர் பொழிப்புரை, கருத்துரை முதலியவையும் பிற விளக்கங்களும் சொல்லுவர். இவ்வாறு வார்த்தை, வார்த்தையாக உடைத்து, தனித் தனியாக விளக்

கிக் கொண்டே செல்வதுதான் 'துண்டித்துப் போதித்தல்' என்பது. இம்முறையால் மாணவர்க்கு வார்த்தையறிவு உண்டாகுமே தவிர, செய்யுளின் முழுக்கருத்தறிந்து இன்புற இயலாது. உதாரணமாக, அச்சகத்தில் அச்சு எழுத்துக்களைக் கோப்பவர், எழுத் தெழுத்தாக, வார்த்தை வார்த்தையாகக் கோத்துச் செல்வார். ஆகையினால் அச்சுக் கோத்த பகுதியின் முழுப்பொருளையும் உணரமாட்டார்.

பாடல் ஒரு கருத்தடங்கிய முழுப்பொருள். முழுவதுமாகக் கேட்டு இன்புறல் வேண்டும். செய்யுளின் உயிர் நிலைக் கருத்தை அறிவது மட்டும் போதாது. முதலில் கருத்தை கிரகித்தால், பின்னர் உணர்ந்து இன்புறஇயலும்; செய்யுள் ஒரு அழகுப் பொருள். அதன் அழகிலே ஈடுபடல் வேண்டும்.

ஒரு மயிலின் அழகைக் கண்டு மகிழ்வுற வேண்டுமெனில், மயில் வாழும் மாச்சோலையிலே ஆனந்தமாய் அகவி, ஆடி ஓடித் திரிவதைக் காணல் வேண்டும். அப்போதுதான், அதன் முழுஅழகையும் கண்டு, களிப்புற முடியும். இவ்வாறின்றி மயிலின் கால் இது, இறகு இது, கொண்டை இது எனத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டினால் மயிலின் அழகை அறிந்தனுபவிக்க முடியுமா? முடியாது. அது போலவே செய்யுளைத் தனித் தனிச் சொல்லாகப் பிரித்துக் கற்பித்தால் முதன்மைக் கருத்தை உணர முடியாது. ஆனால் நீண்ட செய்யுளாக இருப்பின், கருத்து நோக்கி சிறு சிறு பகுதியாகப் பிரித்துப் போதிக்கலாம். அவ்வாறு பிரிக்கும் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கருத்து ஒருவாறு முடிவுற்று இருக்க வேண்டும். செய்யுளை முழுவதும் முதலில் படித்தும் பாடியும் காட்டி, முக்கியக்கருத்தை

ஒருவாறு உணர்த்த வேண்டும். அதன் பின்னர், மேலும் நன்குணர்வதற்காக, அருஞ்சொற்களை விளக்கலாம். பொருள்விளங்காத கடினமான இடங்களில் பதவுரை, பொழிப்புரை கூறவேண்டும். அவ்வாறு கூறுவதால் வார்த்தைகளின் தொடர்பும் வாக்கியஅமைப்பும் நன்கு விளங்கும்.

2. **இசையுடன் பாடல்:—** இசையும் செய்யுளும் இணைந்து செல்வன. பாடுவதற்குப் பொருந்துமாறு சொற்களும் வரிகளும் அமைந்திருக்கும்; செய்யுளின் பொருளுக்குப் பொருந்துமாறு பண் (இராகம்) அமைந்திருக்கும். ஆகவே இசைக்குரியது பாட்டு; பாட்டுக்குரியது இசை. பல்வகைச் சுவைக் கேற்ப, பலவகைப் பண்கள் உள்ளன. முகாரி, சாவேரி, பைரவி முதலிய பண்கள் அழுகைக் கேற்றவை: அடாணு, மோகனம் முதலியவை வீரத்திற் குரியவை. நாதநாமக்கிரியை, ஆனந்தபைரவி, தந்யாசி, காம்போதி முதலியவை பக்திக்கும் அன்புக்கும் உரியவை. இந்தப் பண்கள் போதனமுறைப் பள்ளியின் இசைப்பாடத் திட்டத்தில் உள்ளன. இசையாசிரியர்மூலம் வெண்பாவையும் விருத்தப்பாவையும் ஓராளவிற்காவது பாடப்பயிலல் வேண்டும்.

செய்யுளைப் பாடிக்காட்டுவதால் பயன் என்ன?

1. சொற்களையும் சீர்களையும் பிரித்து, நிறுத்தி, அபிநயித்துப் பாடுவதால், செய்யுட் பொருள் உணரலாம்.

2. இசை மூலந்தான் சந்தவின்பமும் சொல்லழகுகளும் புலப்படும்.

3. இசையிலே குழைவு, நெளிவு இருப்பதாலும் மீண்டும் மீண்டும் வரிகளைப் பாடுவதாலும் இரக்கம், கோபம் அழுகை முதலிய மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தலாம்.

4. மனனஞ்செய்ய, இசை பெரிதும் உதவும்.

5. சிதறிச் செல்லும் சிறுவர் மனத்தைக் கவர்ந்து, ஒரே வழியில் செலுத்த வல்லது இசை.

3. **கடின சொல் விளக்கம்:-** காணும் கடின சொற்களை முன்னுரையில் விளக்கலாம்; கருத்தை அறிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு விளக்கினுல் போதும். விரிவான சொற்பயிற்சி முறைகளால் செய்யுளின் சிறப்பு நோக்கம் சிதற நேரிடும். அவ்வாறே, சுருக்கமாக இலக்கணக் குறிப்பும் தரல் நலம்.

4. **கற்பனை விளக்கம்:-** கற்பனை என்பது பொய்யும் புழுகும் அன்று. கற்பனை என்பது பிறப்பித்தல் என்று பொருள்படும். கவிஞன் தன் நுட்ப அறிவால் ஒரு புதிய சுவையைப் பிறப்பித்தல் கற்பனையாகும். பிறர்க்குப் புலனுகாத ஒரு புதிய விஷயத்தை எடுத்துக் காட்டுவது கற்பனை; அறிந்து ஆச்சரியப்படுமாறு சித்தரித்துக்காட்டுவது கற்பனை. கண்டு களித்த காட்சியைமட்டும் சித்திரக்காரன் எழுதுவதில்லை. அதோடு கற்பனையைக் கூட்டியே எழுதுவான். என்? அவன் கருத்தை விளக்க, கற்பனை உதவுகிறது. ஓவியனைப் போலவே கவிஞனும் தன் கருத்தை விளக்குவதற்காகவும், பிறர்க்கு வியப்பை ஊட்டுவதற்காகவும் கற்பனை சேர்த்தே கவியை எழுதுகிருன் என்பதை மாணவர்க்கு விளக்க வேண்டும். புத்துணர்ச்சி பொங்கி, உள்ளக்கிளர்ச்சி உண்டாகி, ஆனந்த அனுபவத்தால் கவிஞன் கருத்திலே கற்பனை தோன்றுகின்றது. இந்தக் கற்பனையைக் கண்டு களிக்கச் செய்ய வேண்டும்.

5. **செய்யுளை ஒட்டிய சில முயற்சிகள்:-** செய்யுட் பாட முடிவிலே சில மொழிப் பயிற்சிகள் தருவதைக் காட்டிலும் இன்பமான பிற முயற்சிகளிலே பிள்ளைகளை ஈடுபடச் செய்வது சிறந்தது.

(அ) செய்யுளை மாணவர் விரும்புவதற்குக் காரணம் கூறலாம்.

(ஆ) ஏற்ற பண்ணிலே பாடிக் காட்டலாம்.

(இ) செய்யுளின் முக்கியக் கருத்தைச் சுருக்கமாகக் கூறலாம்.

(ஈ) கற்ற செய்யுளின் கருத்துக்கொண்ட பிற எளிய செய்யுட்களைப் பாடி மகிழலாம். இத்தகைய செய்யுட்களைப் பத்திரிகையிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும் சேகரிக்கலாம்.

(உ) கற்ற செய்யுளை, நாடகத்திலோ, பிற நடிப்பிலோ பாடலாம்.

(ஊ) ஒருகதையைக் கூறும்போது அல்லது ஒரு கட்டுரை எழுதும்போது ஏற்ற இடத்தில் ஏற்ற செய்யுள் வரியை சேர்த்துச் சொல்லப் பயிற்சிதரலாம்.

(எ) செய்யுட் கருத்தை விளக்கும் சித்திரமோ களிமண்உருவமோ அமைக்கலாம்.

(ஏ) எளிய பாட்டுக்கள், கவிதைகள் இயற்றவும் தூண்டலாம்.

(ஐ) உபமான உபமேயங்களைப் பொருத்தி விளக்கலாம்.

(ஒ) கற்பனைத் திறனையும் சொல் நயத்தையும் எடுத்து விளக்கலாம்.

(ஓ) கவிஞனின் வாழ்க்கை வரலாற்றோடு அல்லது கவியியற்றப்பட்ட காலக்கருத்துக்களோடு செய்யுள் பொருந்துவதைக் கூறலாம்.

வினா:- 1. செய்யுள் கற்பிக்கும்போது முழுப்பாட்டையும் ஒருங்கே எடுக்காமல் துண்டித்துக் கற்பிக்கும் முறையை கையாளுவதனால் ஏற்படும் குறைகள் யாவை? அவற்றைத் தடுப்பது எங்ஙனம்?

(Sec. 44—Ele. 50)

2. செய்யுள் பாடங் கற்பிக்க அனுசரிக்கப்படும் தற்கால முறையின் இயல்புகளைக் குறிக்க.

7. மனனச் செய்யுளைத் தேர்ந்தெடுத்தல்.

நாம் ஏன் செய்யுட்களை மனனம் செய்கிறோம்? மனனம் செய்வதால் பயன் என்ன?

(அ) செய்யுட்களின் அழகும் நயமும் நம்மைக் கவருவதினாலே, இன்பமூட்டுவதினாலே விரும்பி மனனம் செய்கிறோம்.

(ஆ) செய்யுட்களை மீண்டும் மீண்டும் ஒப்பிக்கும்போது, அவற்றின் பொருளைச் சிந்திக்க இயலும்.

(இ) சிந்திக்கச் சிந்திக்க, புதிய சுவையும் புதிய நயமும் தோன்றும். அறிவைப் பெறும் ஆசையுடையார் அடிக்கடி சிந்தித்து இன்புறுவர்.

(ஈ) துன்பம் நேர்கையில் புலவர் பெருமக்கள் அனுபவித்துணர்ந்த, ஆழ்ந்த கருத்து நமக்கும் உற்றுழி ஆறுதல் அளிக்கும். இக்காரணங்கள் பற்றியே வாழ்க்கையில் செய்யுட்களை மனனம் செய்கின்றோம்.

எத்தகைய செய்யுட்களை மாணவர் மனனமாக்க விரும்புவர்?

1. இசைப் பற்றுடைய மாணவர் இனிய பண்ணில் அமைந்த பாடல்களை விரும்புவது இயல்பு.

2. சிலர் உணர்ச்சியூட்டும் உருக்கமான பாடல்களை விரும்புவர். பக்திப் பரவசத்தால் பாடிய பாடல்களைக் கடவுளுணர்வுடையோர் கருதி மனனம் செய்வார்.

3. நல்ல இயற்கை வருணனைச் செய்யுட்களும் இன்பமூட்டுவன.

4. புதிய உவமைகள், புதிய கற்பனைகள் நிறைந்த செய்யுட்கள் கவர்ச்சி தரும்.

5. நகைச்சுவைச் செய்யுட்களை நாடாதவர் யார்?

6. இருபொருள் தரும் எளிய செய்யுட்களும், புலவர்கள் சந்தர்ப்பங்களில் சாதுர்யமாகப் பாடிய தனிப் பாடல்களும் விரும்பக் கூடியன. 7. சிறுவர்கள் நடிப்பிற்கும் நகைப்பிற்கும் இடம் தரும் சிறு பாடல்களைப் பெரிதும் விரும்புவார்கள்.

மாணவர் யாவரும் குறித்த ஒருசில செய்யுட்களை மனனம் செய்ய வேண்டுமென வற்புறுத்தக்கூடாது. தாமே விரும்பி மனனம் செய்யவேண்டும். மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பம் உண்டு. அவரவர் விருப்பத்திற்கேற்ற செய்யுட்களை மனனம் செய்யலாம். நீண்ட செய்யுளாயின் முக்கியமான சில வரிகளை மட்டும் நெட்டுருச் செய்யலாம். சிறு பருவத்திலே மனன சத்தி மிக அதிகமாக இருப்பினும் குருட்டு மனனம் செய்தல் உளநூற் கொள்கைக்கு ஒவ்வாதது.

தமிழ்ச் செய்யுட்களிலே எதுகை, மோனை, இயைபு முதலிய தொடைகள் எளிதில் மனனமாக உதவுபவை. எதுகைச் சொற்கள் அல்லது இயைபுச் சொற்களை அழித்து விட்டுப் பின், பூர்த்தி செய்யுமாறு பயிற்சியளிப்பதால் இலகுவில் மனனமாகும். கூட்டமாகப் படிப்பதாலும் தனித்துப் படிப்பதாலும் பேச்சிலே பல சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்துவதாலும் நயங்களை விளக்கும்போது ஊடே ஊடே பாடுவதாலும் செய்யுள் மனனமாகலாம். மனனம் செய்வதை நன்னூலார் "பாடம் போற்றல்" என்பர்.

வினா:- மூன்றும் படிவ மாணவர் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற செய்யுட்களைத் தேர்ந்தெடுப்பதில் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளைக் கூறுக. (Sec. 48)

8. செய்யுட் கற்பித்தலின் படிகள்.

செய்யுட் போதனை முறையின் படிகள்:—

1. பீடிகை. 2. பாடுதல். 3. கடின சொல் விளக்கல். 4. (மேல் வகுப்புகளில்) நுண் பொருள்களையும் நயங்களையும் விளக்கல், 5. பிறவகை முயற்சிகளில் ஈடுபடுத்தல்.

1. பீடிகையிடும் வழிகள்:-

பொருளை அறிவதற்கேற்ற அடிப்படை அறிவுண்டாக்கலே பீடிகையின் நோக்கமாகும்.

(அ) **படங் காட்டல்:—**

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்; -அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு:—

படம்:— நீர் வற்றிய குளம்; பறவைகள் குளத்தை நீங்கிப் பறந்து செல்லல்; கொட்டி ஆம்பல் முதலிய நீர்ப் பூச்செடிகொடிகள் வாடித் தங்கி இருத்தல்;— இவற்றைப் படத்தில் கவனிக்கச் செய்து விளக்கல். பெரும்பாலும் சிறுவர்கட்கு அநேக செய்யுட்களைப் படத்தின் மூலமே விளக்க வேண்டியதிருக்கின்றது.

(ஆ) நேரில் இயற்கைப் பொருளைக் காட்டல்:— மேற்படிச் செய்யுளுக்கு வற்றிய குளமிருப்பின் காட்டலாம்; ஞாபகமூட்டலாம். கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி—என்ற செய்யுட்கு வான்கோழி கர்வமாய் அழகின்றி ஆடுவதை நேரிலே காட்டலாம்.

(இ) மாதிரிப் பொருளைக் காட்டல்:— "ஓடுமீனோட உறுமீன் வருமளவும், வாடி இருக்குமாம் கொக்கு" -இதனை விளக்கக் கொக்கு வாடியிருப்பது போன்றும் சிறு மீன் நீரில் ஓடல் போன்றும் மாதிரி உருவம் தகரத்தில் வெட்டிச் செய்து காட்டல் கவர்ச்சியூட்டும்.

(ஈ) கதை கூறல்:— "வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி." என்ற செய்யுளில் அடங்கிய கதையை முதலில் கூறித் தொடங்கல் நலம்.

(உ) புலவர் செய்யுளை எழுத நேர்ந்த காரணத்தை அல்லது கவி எழுதிய காலத்தின் நிலைகளை, அல்லது எண்ணங்களைக் கூறுவதால், செய்யுட் பொருளை அறியத் துணை புரியலாம். நாராய்! நாராய்! செங்கால் நாராய்! -என்ற செய்யுட்குப் புலவரின் வறுமையும் பாடிய வரலாற்றையும் கூறுவது நல்ல முன்னுரையாகும்.

2. படித்தலும் பாடுதலும்:-

முதற்கண் செய்யுளை உரக்கப் படித்துக் காட்டல் நலம். பின்னர் ஏற்ற சந்தத்தில் பாடுதல் வேண்டும். பதங்களைப் பிரித்துக் குரலை ஏற்றி இறக்கி, நடித்துப் பாடுவதிலிருந்தே பொருள் ஒருவாறு மாணவர்களுக்கு விளங்க வேண்டும். உரக்க வாசிக்கும்போது பொருள் விளக்கத்திற்காக, தொகை நிலைத் தொடர்களை விரித்து ஓரிரு சொற்களைச் சேர்த்துப் படிக்கலாம். [உ-ம்] நீர் அற்ற குளத்தில், அறும் நீரில் வாழும் பறவைகளைப் போல்.........

3. **கடின சொல் விளக்கும்வழி** வகைகளை உரை நடையிலே படித்துள்ளீர்கள்.

4. **வினவல்:—** கடினபதங்களை விளக்கிய பின்னர், மீண்டும் பொருள் புரியுமாறு பாடிக்காட்டலாம்; பின்னர் மௌனமாக வாசித்து முடித்த பிற்பாடு, முறையாகக் கேள்விகள் கேட்க வேண்டும். அக் கேள்விகள்மூலம் கருத்தைத் தெளிவுறுத்த வேண்டும்.

(அ) குளம் வரண்டபின் பறவைகள் அங்கிருக்குமா ?

(ஆ) அவை ஏன் விட்டு நீங்குகின்றன ?

(இ) குளத்தோடு அவை உண்மை உறவு கொண்டவை எனக் கூறலாமா ?

(ஈ) அற்ற குளத்தை விட்டுச் செடி கொடிகள் நீங்குமா ?

(உ) அவை உண்மை உறவு பூண்டவை எனக் கூறலாமா ?

(ஊ) வாழ்க்கையில் யார் உறவினர் ஆகத்தக்கவர்? யார் தகாதவர் ?

(எ) பறவைகளுக்குச் சமமானவர் யார்? நீர்ச் செடிகட்குச் சமமானவர் யார்?

(ஏ) உபமானம் எது? உபமேயம் எது?

என்பன போன்ற பலவினாக்கள் மூலம் கருத்தைப்பதிக்கலாம்.

5. **நலத்தைப் பாராட்டி மகிழல்:-** செய்யுட் பொருளை முதலில் கிரகிப்பதானது, பின்னர் செய்யுளில் பொதிந்துள்ள நலத்தைப் பாராட்டி இன்புறுவதற்குத் துணைபுரியும். செய்யுளின் சுவையானது: (i) செய்யுளின் சொல்லழகிலே, (ii) ஓசை ஒழுங்கிலே, (iii) பொருள் நயத்திலே (iv) கவிஞனின் கற்பனைத் திறத்திலே, (v) புலவன் ஈடுபட்டுப் பாடிய உள்ளக் கிளர்ச்சியிலே அடங்கிக் கிடக்கும்.

6. **மனனம் செய்வதில்** கவனிக்க வேண்டியவற்றையும்

7. **இறுதியில் செய்யும் பிறமுயற்சிகளைப் பற்றியும்** முன்னரே கூறியுள்ளோம். அவற்றை இங்குச் சேர்த்துக் கொள்க.

வினா:- 1. ஐந்தாம் வகுப்புக்கென்று நீங்கள் தேர்ந்தெடுத்த ஒரு செய்யுளை அவ்வகுப்பில் கற்பிப்பதற்குப் பாடக் குறிப்பு வரைக. (Ele. 43)

2. ஐந்தாம் வகுப்புக்கு ஏற்ற ஒரு செய்யுளை எப்படிக் கற்பித்து அதன் சுவையை மாணவர் உணரும்படி செய்வீர் என்பதைப் பாடக்குறிப்பின் துணை கொண்டு விளக்குக. (Ele. 48)

3. செய்யுள் போதிப்பின் வெவ்வேறு நிலைகளைச் சுருக்கமாய் வர்ணிக்க. உமது விடையை உதாரணத்தால் விளக்குக. (Sec 51)

4. செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்வதற்கு மாணவர்களை எப்படிப் பழக்குவீர்?

VII. இலக்கணப் பயிற்சி.

1. விளக்கம்.

மொழியின் இயல்புகளையும் அமைப்புகளையும் விதி விலக்குகளையும் ஆராய்ந்து உரைக்கும் நூலே இலக்கண மாகும். இலக்கியம் என்பது உயர்ந்த கருத்துக்களை நயம் பட எடுத்துக்கூறும் உரைநடையும் செய்யுளுமாகும். மொழி தோன்றி வளர, வளர இலக்கியங்கள் தோன்றின. இலக்கியங்கள் பெருகிய பின்னரே அவற்றை ஆராய்ந்து இலக்கணம் வகுத்தனர். இதனை விளக்கவே நன்னூலார் "இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" —எனக் கூறினர். இலக்கணம் என்ற சொல்லுக்கு இயல்பு, அழகு என்று பொருள்.

இலக்கணம் கற்பிப்பதைப்பற்றி மூன்றுவித முரண் பட்ட கருத்துக்கள் உண்டு. ஒரு சாரார், "பிழையற்ற பேச்சைக் கேட்பதாலும் நூற்களைப் படிப்பதாலும் பிழை யற எழுதவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். ஆதலால் மாணவர் வெறுக்கும் இலக்கணமே வேண்டாம்." —எனக் கூறுகின்றனர். இதற்கு முற்றும் முரணாக மற்றுமொரு சாரார் "இலக்கண விதிகளை ஒழுங்காகத் தனிப் பாடமாகக் கற்பிக்க வேண்டும். ஒருவருக்கு இலக்கண அறிவின்றேல் அவர் மொழியைக் கற்றதாகக் கொள்ளலாகாது." என்று வாதிக்கின்றனர். பின்னுமொரு சாரார் இடைப்பட்ட

கருத்தினர்; அவர்கள் கருத்து, "பிழையறப் பேசவும் எழுதவும் ஓரளவுக்கு இலக்கண அறிவு தேவை. அதனை நடைமுறையில் பிறபாடங்களோடு சேர்த்துக் கற்பிக்கவேண்டும்" என்பதாகும். இக்காலத்தில் இக்கொள்கையே பின்பற்றப் படுகிறது.

2. இலக்கணத்தை இனிமையாக்கல்.

கல்விக்கூடங்களிலே இலக்கணம் மாணவரால் பெரும் பாலும் வெறுக்கப்படுகிறது. தமிழ் என்பதற்கு இனிமை என்றும், இலக்கணம் என்பதற்கு அழகு என்றும் பொருள். இனிய மொழியின் அழகினையும் அமைப்பினையும் அறியுங் கால் ஏன் வெறுப்பு? எறிந்தவன் எங்கோ இருக்க, கையில் கிடைத்த கல்லைக் காய்வது போல, இலக்கணப் போதனு முறையிலே குற்றங்கள் இருக்க, இலக்கணத்தைக் குறை கூறுவதும் வெறுப்பதும் பொருந்தாது. ஆகையால் கீழ்க் கண்ட நன்முறைகளை மேற்கொண்டால், இலக்கணம் இன்ப மான பாடமாக மாறும்.

1. **ஆரம்ப வகுப்பில் அகற்றுக:-** மொழியை ஓரளவிற்குக் கற்ற பின்னர் தான் இலக்கணம் போதிக்க வேண்டும். ஆதலால் தொடக்க வகுப்புக்களிலே இலக் கணம் கற்பிக்கக் கூடாது

2. **ஒழுங்கிலக்கணம் தவிர்க்க:-** எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற வரிசையில் முன்னர் இலக் கணம் கற்பித்தனர். எழுத்தால் ஆகியது சொல்; சொல் லால் ஆகியது சொற்றொடர். ஆகையால் இவ்வரிசையிலே கற்றுச் செல்வது ஒழுங்கிலக்கணமாகும். இது காரண

காரிய முறையில் பொருந்தியதே ஆயினும், உளநூல் முறைக்கு ஒவ்வாதது. நடைமுறையிலே, தினமும் பயன் படும் விதம் கருதி, வாக்கிய அமைப்பு, சொல் அமைப்பு, எழுத்தமைப்பு ஆகிய இந்த வரிசையில் இலக்கணம் கற்பிக்க வேண்டும். தினசரி, மொழிப் பயிற்சிக்குதவும் இலக்கண விதிகளை மட்டும் முதலில் கற்கத் தூண்டுதல் வேண்டும். இதுவே நடைமுறை இலக்கணம் என்பது.

3. **நெட்டுரு கூடாது:-** நடைமுறையில் வேண் டாத விதிகளை விடுத்து, வேண்டிய விதிகளை மட்டும் கற்பிக்க வேண்டும். அவ்விதிகளையும் மாணவர் விரும்பின் ஒரு சில வற்றை மனனம் செய்யலாமே தவிர, எல்லாவற்றையும் நெட்டுருச் செய்ய வற்புறுத்தவே கூடாது. விதிகளை மன னம் செய்விப்பதைக் காட்டிலும் விதிப்படி பேச, எழுதப் பயிற்சி தருவதே வேண்டற்பாலது.

4. **முறை:-** மேல்வகுப்புகளில் இலக்கணத்தை ஓர் தனிப்பாடமாகக் கற்பிக்கலாம். ஆனால், இடைநிலை வகுப்பு களில் கட்டுரை, உரைநடை, செய்யுள் முதலிய பாடங்க ளோடு இணைத்துப் போதிக்க வேண்டும். விதிவிளக்கு முறையை விடுத்து, விதிவருவிக்கும் முறையை மேற்கொள்ள வேண்டும். (இவற்றை பின்னர் விரிவாக அறிவிப்போம்.)

5. **பலவகை விளையாட்டு மூலம்** கற்பித்தல் இனிது. தனித்தாள்பயிற்சி முறைகளையும் பின்பற்றல் நலம். ஆசிரி யர் மிகுந்த விருப்பமும் தெளிந்த அறிவும் சிறந்த ஆயத்த மும் கொண்டு பாடம் நடத்த வேண்டும்.

6. **எடுத்துக் காட்டுகள்:-** இலக்கண விதிகளுக்குக் கூறும் உதாரணங்கள் மாணவர் வாழ்க்கையில் பயன் பட்ட தாய், விருப்பமூட்டுவதாய் விளங்கல் வேண்டும். ஐந்தாம்

வேற்றுமைக்கு எடுத்துக் காட்டு — கல்வியில் பெரியவன் கம்பன் என, எத்தனை நாள், எத்தனை புத்தகத்தில், எத்தனை வகுப்பில் கூறிக்கொண்டே வருகின்றனர்? "மற்போரில் சிறந்தவன் காமா" — என மாற்றலாகாதா? ஊறுகாய், அரிவாள் என வினைத்தொகைக்கு உதாரணங் காட்டலாகாதா? "ஏ, கீரை இங்கே வா." என ஆகுபெயர்க்கு உதாரணம் அறிவிக்கலாகாதா? பாடப் புத்தகங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளைத் தெரிந்தெடுத்தல்வேண்டும். ஒவ்வொரு மாணவனும் இலக்கண எடுத்துக்காட்டுகளைக் கூற ஏராளமான பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

7. **நடைமுறையில்** இலக்கணம் பயன்படல் வேண்டும். மாணவர் தங்கள் எழுத்திலும் பேச்சிலும் பிழைகள் நேரிடின், திருத்திக் கொள்வதற்கு இலக்கண அறிவு பயன்படல் வேண்டும். கட்டுரை எழுதும் போதும் கதைகள் கூறும் போதும் செய்யுளில் சொற்களைப் பிரித்து அறியும் போதும் இலக்கணம் பயன்படல் வேண்டும்.

8. **தெளிந்த மொழியறிவு**- தெளிந்த திட்டமான மொழியறிவும், நுட்பமாய்க் கருத்துக்களை வெளியிடும் திறமையும் இலக்கணத்தால் ஏற்படும். இலக்கணம் இன்றேல் எத்தனை ஆண்டுகள் ஒரு மொழியைக் கற்பினும் தெளிவான, திட்டமான, ஆழமான அறிவு ஏற்படாது.

உதாரணமாக, கீழ்க்கண்டவை பிழையா,சரியா, என இலக்கண அறிவின்றி, அனுபவஅறிவு கொண்டு முடிவு கட்ட முடியுமா? — சுவற்றில் ஒட்டாதே. பிருமணாள். ராமசாமி. காக்ஷி. காட்ச்சி. முயற்ச்சி. இஷ்ட்டம். திருப்த்தி. ஊறுக்குஅருகாமை. மேலும் கீழ்க்கண்ட சொற்களுக்கு

வேறுபாடென்ன என்று அனுபவத்தால் அறிந்துள்ளனரா? அவட்கு, அவற்கு, அவர்க்கு; பூந்தோட்டம், பூத்தோட்டம். மேலும் அறவு-என்ற சொல்லுக்குப் பாம்பு எனப் பொருள் கொள்ளல் தவறுவது எங்ஙனம் என்று இலக்கண அறிவினால்தான் விளக்க இயலும். அற என்ற பகுதிக்கு நீங்க என்று பொருள். இலக்கணம் என்ற உரைகல் இவற்றைச் சரியா, பிழையா என உரைக்கும். இலக்கணக் கட்டுப்பாடு இல்லையேல், நாளடைவில் மொழியே சிதைந்து, நைந்து, உருமாறி ஒழியும். இவ்வுண்மைகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டினால் இலக்கணத்தில் இனிமை ஏன் உண்டாகாது?

மேற்கூறிய முறைகளுக்கு நேர்மாறான முறைகளை மேற்கொள்வதே இலக்கணம் பள்ளியில் வெறுக்கப்படுவதற்குக் காரணமாகும்.

வினா:- 1. இலக்கணம் பள்ளியில் வெறுக்கப்படுவதற்குரிய காரணங்கள் எவை?

2. இலக்கணப் பயிற்சியை இனிமையாக்க என்னவழி முறைகளைக் கைக்கொள்ளலாம்?

3. மொழிக்கல்வியில் மற்ற அம்சங்களுடன் சம்பந்தப்படுத்திப் போதிப்பதுதான் இலக்கணம் போதிப்பதற்கு மிகச்சிறந்த முறையாகும்? இதை விளக்கிக் காட்டுக.

3 விதி விளக்கும் முறையில் இலக்கணம் (Deductive method)

இலக்கணத்தைக் கற்பிக்க இருமுறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நிகமன முறை. இதனை அனுமித முறை என்றும் விதிவிளக்கு முறையென்றும் கூறுவர். அதாவது முதலில் விதியைக்கூறிப் பின்னர் உதாரணங்களைக்கூறி, அவ்விதியை விளக்கலே இம்முறை.

இதுவே பழங்காலத்திலிருந்து ஆசிரியர்களால் வழங்கப் பட்டுவந்த முறை. மாணவர் தாம் கற்கும் செய்யுள், வசனப் பாடங்களில் வரும் சொற்களை இம்முறையில் பயிலலாம். கற்றுத் தெரிந்து கொண்ட விதிகளுக்கு மாணவர் தாங்களே உதாரணம் தரலாம். இவ்வாறு பயிற்சிகள் தர இம்முறை யைப் பயன்படுத்தலாம்.

இம்முறையைப் பின்பற்றி விரைவாக இலக்கணம் கற்பிக்கலாம். ஆயினும் உளநூலுக்கு ஏற்ற முறையன்று. இம்முறைப்படி தெரியாததிலிருந்து தெரிந்ததற்கும், கடினத் திலிருந்து இலகுவிற்கும் செல்ல நேரிடுகிறது. இவ்வாறு செல்வது போதன முறைக் கொள்கைக்கு ஒத்ததன்று. மேலும் மாணவர் தாமே ஆராய்ந்து விதிகளைக் கண்டு பிடிக்காததால், கற்ற பொருள் மிகத் தெளிவாகாமலும் இருக்கலாம்.

4. விதிவரு முறையில் இலக்கணம் (Inductive method)

இதனை அனுமான முறை என்றும், தொகுத்தறி முறை என்றும் கூறுவர். அறிந்த எடுத்துக் காட்டுகளைக் (உதாரணங்களை) கவனித்து, அவற்றிற்குள்ள ஒற்றுமை யைக் கண்டுபிடித்து, அவ்வொற்றுமையினையே ஒரு பொது விதியாக அமைக்க, மாணவர்க்கு வழி காட்டுவதே, இம் முறையாகும். இலக்கணம் கற்க ஏற்றமுறை இதுவே. இதிற்காணும் நிறைகள்:—

1. தாமே விதிகளைக் கண்டு பிடிப்பதால் நன்கு விளங்கும். ஆராய்ச்சித் திறன் வளர்கிறது. பிற்காலத்திலும் மாணவர் பிறர் உதவியின்றித் தாமே இலக்கணம் கற்கும் பயிற்சி பெறுகின்றனர்.

2. இம்முறையில் எடுத்துக்காட்டுகளை மாணவர் அறிவர். இவற்றிலிருந்து தாம் அறியாத இலக்கண விதிகட்குச் செல்கின்றனர். ஆகவே கீழ்க்கண்ட போதனு வழிகட்குப் பொருந்தியது இம்முறை.

"தெரிந்ததி னின்றும் தெரியா ததற்கும்
புரிந்ததி னின்றும் புரியா ததற்கும்
எளியதி னின்றும் அரிய ததற்கும்
தெளிந்ததி னின்றும் தெளியா ததற்கும்
அண்மையி னின்றும் சேய்மை யதற்கும்
புதுமையி னின்றும் பழமை யதற்கும்
செல்லுதல் முறைஎன வல்லுநர் வகுத்தார்"

3. இலக்கணமே தோன்றி வளர்ந்தது இம்முறைப் படிதான். ஆதியில் மக்கள் பேசி, எழுதி மொழியை வளர்த்தனர். பின்னர் இலக்கியங்களை உண்டாக்கினர். பின்னர்தான் எழுத்துக்களின், சொற்களின், சொற்றொடர்களின் அமைப்பு, இயல்பு இவற்றை ஆராய்ந்து, ஒற்றுமைகளைக் கண்டு, விதிகளை அமைத்து இலக்கணமாக்கினர்.

"எள்ளினின்றும் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்"

—பேரகத்தியம்.

4. மாணவர் தாமே ஆராய்ந்து விதிகளைக் கண்டு பிடிப்பதால், பொருள் நன்கு மாணவர் மனதில் தெளிவாய்ப் பதிந்து நிற்கும். ஆராய்ச்சித் திறனும் அடைகின்றனர்.

"சிந்திக்கத் தூண்டித் துணைபுரியும் ஆசானே
புந்திக்(கு) ஒளிசெ பகவன்."

5. அனுமான முறையில் பாடம்.

இரண்டாம் வேற்றுமையைக் கற்பிக்க, பாடக் குறிப்பு:—

1. **எடுத்துக் காட்டுகளை ஆராய்தல்-**

1. *ராமன் அடித்தான்* —— 2. *ராமனை அடித்தான்.*

1. *தவளை தின்றது* —— 2. *தவளையைத் தின்றது.*

(i) ஜோடி வாக்கியங்கள் பொருளில் வேறுபடுகின்றனவா?

(ii) ஒன்றுபடுவதை ஒற்றுமை என்கிறோம். வேறுபடுவதை எவ்வாறு சொல்ல வேண்டும்?

(iii) பொருளை வேறுபடுத்துகின்ற எழுத்து எது?

(iv) முதல் வரிசை வாக்கியங்களில் எழுவாய் எவை?

(v) இரண்டாம் வரிசை வாக்கியங்களில் செயப்படு பொருள் எவை?

2. **வருவிக்க வேண்டிய விதிகள்-** மேற்கண்ட கேள்விகளால் ஆராய்ந்து, சில பொது விதிகளை மாணவரே கூறத் துணைபுரிய வேண்டும்.

(i) பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை.

(ii) பொருள் வேற்றுமைக்குக் காரணமான எழுத்து 'ஐ'. இந்த 'ஐ' தனியான எழுத்துமல்ல; சொல்லுமல்ல. பொருளை வேறுபடுத்தும் உருபம். ஆகையால் இதனை எவ்வாறு சுருக்கமாய்க் கூறலாம்? (உருபு.)

(iii) 'ஐ' உருபு ஏற்ற சொற்கள் வாக்கியத்தில் செயப்படு பொருளாக அமையும்.

எச்ச வினை கற்பிக்க, பாடக் குறிப்பு.

மாணவரின் முன்னறிவு:- பெயர்ச் சொல், வினைச் சொல், காலம் - இவற்றை முன் பாடத்தில் மாணவர் அறிந்திருக்க வேண்டும்.

1. மனிதன் சாப்பிட்டான். 2. சாப்பிட்ட பெண். 3. சாப்பிட்டுச் சென்றாள்.

1. நாய் உறங்கியது. 2. உறங்கிய யானை. 3. உறங்கி விழித்தது

உதாரணங்களை ஆராய்தல்:-

(i) சாப்பிட்டான், உறங்கியது என்ற சொற்கள் என்ன சொற்கள் என, முன்னே படித்தீர்கள்?

(ii) சாப்பிட்ட, சாப்பிட்டு - என்பவை அர்த்தம் முடிந்த சொற்களா?

(iii) அவை போல் முடியாத வினைச் சொற்களை அடுத்த வரிசையில் சொல்லு.

(iv) அர்த்தம் முடிந்த வினைச் சொற்களை எவ்வாறு பெயரிடலாம்?

(v) மிஞ்சியதை மிச்சம் என்கிறோம்: அர்த்தம் முடியாது எஞ்சி நிற்பதை எவ்வாறு பெயரிடலாம்?

2. **வருவிக்க வேண்டிய விதி.** அர்த்தம் முடிந்த வினைச்சொல் முற்றுவினை. அர்த்தம் முடியாத வினைச்சொல் **எச்சவினை.**

3. **பயிற்சி.** சில வாக்கியங்களைத் தந்து முற்று வினை எவை? எச்சவினை எவை? என எடுத்தெழுதச் சொல்லல் வேண்டும்.

வி௵:- ஒரு இலக்கண விதியை ஆகமன முறைப்படி எவ்வாறு கற்பிப்பீர் என்பதை உதாரணவாயிலாக விளக்குக (Sec. 42, 48, Ele. 44, 46.)

2. ஐந்தாம் வகுப்புக்குப் பின்வரும் பாடங்களுக்கேற்ற பயிற்சிப் பட்டியல் தயாரி:—

(a) பெயர்ச் சொற்கள்.— எண்; பால்.

(b) வினைச் சொற்கள்—இறந்தகாலம்; நிகழ்காலம். (Sec. 50.)

ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டம்.

இலக்கணம்.

I & II வகுப்பு — இலக்கணம் கற்பித்தலவசியம் இல்லை.

III வகுப்பு — பெயர் வினை, ஒருமை பன்மை வேறு படுத்தியறிதல். முற்றுப் புள்ளி. நெடுங்கணக்கு வரிசை.

IV வகுப்பு — எழுவாய் பயனிலைகளின் பொருத்தம் மூன்று காலம். காற்புள்ளி, முற்றுப்புள்ளி மேற்கோட் குறிகளை உபயோகித்தல்.

V வகுப்பு — பேச்சிலும் எழுத்திலும் நேரிடும் பிழைகளை நீக்கும் திறமையூட்டல். முன் கற்ற பகுதிகளை நினைப்பூட்டல் இன்றியமையாத இன்னும் சில விதிகளைக் கற்பித்தல்.

Form I

1. எழுத்தின் ஒலி, வரி வடிவமும், வகையும்.
2. ல, ள, ழ, ர, ற, பிறக்கும் இடம்.
3. பகுதி.
4. தமிழ்ச்சொல், வடசொல், திசைச்சொல், வழூஉச் சொல்.
5. பெயர்ச் சொல், வினைச்சொல், எண்ணுப் பெயர்.
6. வேற்றுமை.
7. ஒரு பொருட் பன்மொழி.
8. புணர்ச்சி.
9. முக்கிய நிறுத்தற் குறிகள்.

இவ்வாறு, எழுத்தியல், பதவியல், சொல்லியல், புணர்ச்சி, அணி, நிறுத்தற்குறிகள், இவற்றைத் திருகல் முறையைப் பின்பற்றி [Concentric plan] முதல் மூன்று படிவங்களில் இலக்கணம் போதிக்கத் திட்டம் வகுத்துள்ளார்.

6. சில வாக்கியப் பயிற்சிகள்.

1. இரு வாக்கியங்களைச் சேர்க்க:—

(உ-ம்) *மான் அங்கு மிங்கும் ஓடிற்று; அது வலையில் அகப்பட்டது — மான் அங்கு மிங்கும் ஓடி, வலையில் அகப்பட்டது.*

2. இரண்டு வாக்கியமாகப் பிரிக்க:—

(உ-ம்) *புலவர்கள் ஆழ்ந்த கருத்தடங்கிய பல பாடல்களைப் பாடிவந்தனர்—புலவர்கள் பல பாடல்களைப் பாடிவந்தனர். அவை ஆழ்ந்த கருத்தடங்கியவை.*

3. வினா வாக்கியமாக மாற்றுக:—

(உ-ம்) *மலர்கள் மன்னனை வரவேற்பனபோல் தோன்றின —மலர்கள் எவ்வாறு தோன்றின ?*

4. பன்மையில் வாக்கியத்தை அமைக்க:—

(உ-ம்) *அதனை அறிந்த மனிதன் துன்ப முற்றான்— அவற்றை அறிந்த மனிதர் துன்பமுற்றனர்.*

5. முன்னிலை யிடத்தைத் தன்மையாக மாற்றுக:—

(உ-ம்) *நீ உன்புத்தகத்தை நன்றாய் படிப்பாயா ?— நான் என் புத்தகத்தை நன்றாகப் படிப்பேனா ?*

6. செயப்படுபொருளை எழுவாயாக வைத்து மாற்றுக:-

(உ-ம்) *அரசன் கள்ளரைத் தண்டித்தான்—கள்ளர் அரசனால் தண்டிக்கப்பட்டனர்.*

7. சொற்களைச் சரியான முறையில் அமைக்க:—

(உ-ம்) *காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தான் வணிகன் ஒருவன் பெயருள்ள என்ற கோவலன்.*

8. சில வாக்கியங்களைக் கொடுத்து, ஆனால், ஆயினும், மேலும், ஆகவே, ஆகையினால் முதலிய வார்த்தைகளைக் கூட்டி எழுதுமாறு கூறுக. *இவற்றிற்குதாரணம் நீங்களே கொடுங்கள்.*

9. தன் கூற்று வாக்கியத்தை அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக:— (உ-ம்) *"நான் எதற்கும் அஞ்சமாட்டேன்" என்றான் வீரன்—வீரன், தான் எதற்கும் அஞ்சமாட்டாதவன் என்றான்.*

இத்தகைய வாக்கியப் பயிற்சிகள் அளிப்பதால் வாக்கிய அமைப்புகளை மாணவர் அறிந்து கொள்ளுவார்.

7. சில நூதன முறைப் பயிற்சிகள்.

1. இவ்வார்த்தைகளை உயிரெழுத்து வரிசையில் அடுக்கு. அம்மி, இலை, உரல், ஈட்டி, எடுப்பு, ஊஞ்சல், ஆடு.

2. கீழ்க்கண்ட உயிர்மெய் வரிசையில் வார்த்தைகளை உண்டாக்கு:— (உ-ம்)
பண்டம், அண்டா, வண்டி, கண்டீர், வண்டு.........
குன்றம், வென்றான் பன்றி, சென்றீர் கன்று..........
பந்தம், வந்தான், குந்தி முந்தீர், பந்து..........

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எழுதுக:— கடவுள் உலகத்தைப் படைத்தார்.

4. கீழ்க்கண்ட வினைச் சொற்களிலிருந்து தொழிற் பெயர்ச் சொல் உண்டாக்குக:—
(உ-ம்) தின்னும்—தீனி. படுக்கிறோம்—படுக்கை.

5. பெயர்	வகை	திணை	பால்	எண்	இடம்	வேற்றுமை
முனிவனை	...	...	...	...	...	...

6. சேர்த்தெழுது:— எலி + ஓடிற்று.

7. பிரித்தெழுதுக:— நல்ல வரசன்.

8. ஒற்று மிகவேண்டிய இடங்களில் மிகுத்துக் காட்டுக:— காரி பசுவுக்கு புல்லை போடு.

9. தொகையை விரித்தெழுது:- தசரதன் ராமன் மகன்

10. பல சொல் ஒரு பொருள்:—
அரசன்—வேந்தன்—கோ—காவலன்.
மலை ... ...
சூரியன் ... ...

11. சரியான சொல்லைப் பொறுக்கி அதன் வேற்றுமையைக் கூறுக:— கப்பல் (தண்ணீரை, தண்ணீர்க்கு, தண்ணீரில்) மிதக்கும்.

12. பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வாக்கியத்தில் உபயோகி:—ஆடு=ஒரு ஆடு புல் மேய்ந்தது. அவள் ஆடுவதில் தேர்ந்தவள். பிறசொற்கள்:— அறை, ஆள், ஆறு, ஈ, உரை, உறை; கனி குடை, கூடு, சூடு.

13. வேற்றுமைச் சொற்களை எழுதுக:—

1	2	3	4	5	6	7	8
நான்	என்னை	என்னால்	...	...	...	...	...

8. ஆங்கில இலக்கணத்தோடு ஒப்பிட்டுக் கற்பித்தல்.

இடை நிலை வகுப்புகளில் ஆங்கில இலக்கணங்கற்கும் போது தமிழ்மொழி இலக்கணத்தை ஒப்பிட்டுக் காட்டலால் பல நன்மைகள் விளையும்.

1. ஒரு மொழி அறிவானது பிறமொழி கற்க உதவும்.

2. கற்கும் இலக்கணம் மனதில் நன்றாய்ப் பதியும்.

3. தமிழ் மொழியின் சிறப்பான இயல்புகள், ஒப்பிடும்போது நன்கு புலப்படும். உதாரணமாக, தமிழ் மொழியின் உயிர் எழுத்துக்கள் வேறாய், மெய் எழுத்துக்கள் வேறாய்ப் பிரித்து வைத்திருக்கின்றனர். மேலும் எழுத்துக்களைக் காரணத்தோடு வரிசைப்படுத்தி வைத்திருக்கின்றனர். உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு தமிழில் சிறப்பாக அமைந்துள்ளது. ஆனால், தமிழ் மொழியில் வினைகளின் கால வேறுபாடு ஆங்கிலத்தில் உள்ளது போல அமையவில்லை. மேலும் நிறுத்தற் குறியீடு முறைகளைத் தந்துதவியது ஆங்கில மொழியே.

வினா:- 1. ஆங்கில இலக்கணத்தோடு தமிழ் இலக்கணத்தை ஒப்பிட்டுப் போதிப்பதால் நன்மைகள் என்ன? உதாரணங்கள் தருக.

VIII. எழுத்துப் பயிற்சி.

1. எழுத்துப் பயிற்சியின் அவசியம்.

1. பேசுதல், படித்தல், எழுதுதல் என்ற இந்த முப்பயிற்சிகளை, இந்த முறையிலே அளிக்க வேண்டும். மொழி தோன்றிய முறையும் இதுவே. ஆதிமனிதர் முதற்கண் பேசக்கற்றனர். பின்னர் எழுத்தைக் கண்டு பிடித்தனர்.

2. ஆரம்ப வகுப்பிலே சிறுவர்கள் முதலில், இது இன்ன எழுத்து—இது இன்ன சொல்—என்று அறிந்து சொல்லக் கற்ற பின்னரே, அதனை எழுதக் கற்பிக்கவேண்டும்.

3. மொழிப் பயிற்சியிலே வேண்டிய இருதிறன்கள் உட்கொள்ளலும் வெளியிடலுமாகும். நம் எண்ணங்களை நடிப்பின்மூலமாயும் பேச்சின்மூலமாயும் எழுத்தின்மூல மாயும் வெளியிடலாம். இவற்றில் எழுத்தின்மூலம் வெளி யிடுவதே பல இடத்தவருக்கும் பல காலத்தவருக்கும் பயன் படுவது.

4. அறிஞர் எழுதி வெளியிடும் நூற்கள் பல காலத் திலும் பல நாடுகளிலும் இருந்து பயன்படும். இவ்வாறு பயன்படாவிடில் நாகரிகம் எங்ஙனம் வளர்ந்திருக்கும்? சரித்திரத்தை நாம் எங்ஙனம் அறிய இயலும்? விஞ்ஞானம் எவ்வாறு படிப்படியாய் வளர இயலும்?

5. எழுதிப் பழகும் போதுதான், எழுத்துரு வங்கள் நன்ருக மனதில் பதியும். எழுத்தின் வடிவங்களை நன்ருகத் தெரிந்து கொண்டால், வாசிப்புத் திறமை வளரும். எனவே எழுத்துப் பயிற்சியானது வாசிப்புப் பயிற்சிக்குத் துணை புரிகிறது.

6. எழுதும்பொழுது, ஏற்ற இடங்களில் நிறுத் தக்குறிகளை இடவும் பழகுகின்றனர். எழுதும் போது கருத்துக்களைச் சுருக்கமாக வெளியிட வேண்டும். ஆகவே மொழித் தேர்ச்சி பெறுவோர்க்கு முக்கியமானது எழுத்துப் பயிற்சியாகும்.

வினு:- 1. பாஷை பயிலுவதில் எழுத்துப் பயிற்சி செய்யும் உதவிகள் யாவை?

2. எழுதுதற்குத் தகுதி.

எழுதும் திறமையைக் குழந்தை அடைந்திருக்குமாயின் எழுதக் கற்பிக்கலாம். எழுத்துக்களை எழுதுதற்கு எவ்விதத் திறமை தேவை? ஒரு எழுத்து என்பது ஓர் ஒலியைக் குறிக்கும் சித்திரம் அல்லது வரிவடிவம் எனலாம். வரிவடிவத்தை கண்கள் மூலம் கவனித்து அறிந்து, மூளை கிரகிக்க வேண்டும். பின்னர் மூளை ஏவியபடி, தசைநார்கள் இயங்கி, எழுதுகோலை அசைத்து, கோடுகளை ஆக்கி, எழுத்துக்களை அமைக்க வேண்டும். ஆகவே கண்பார்த்தல், மூளை வரிவடிவங்களைக் கிரகித்தல், எண்ணியபடி தசைநார்கள் கட்டுப்பட்டுஇயங்குதல் ஆகிய திறமைகள் எழுதுதற்குத் தேவை. இத்திறமைகளைப் பெற்றுள்ள குழந்தையே 'எழுதுதற்குத் தகுதிவாய்ந்த குழந்தை' எனலாம். இந்த 'எழுதுந்தகுதி', சுமாராக ஐந்தாண்டு முடிவிலே பெறும்

பாலான குழந்தைகள் பெறுவதாகக் கல்வி நிபுணர் கருதுகின்றனர்; இந்த ஐந்தாண்டு முடிவே, குழந்தையைப் பள்ளிக்கு வைக்கும் வயதாகவும் விதித்துள்ளனர்.

3. எழுதுந் தகுதியை வளர்க்க முற்பயிற்சிகள்.

குழந்தைகள் சுமார் மூன்று வயதிலிருந்தே விளையாட்டுப் பொருள்களை வைத்து விளையாடுகின்றனர். ஆதலால், ஓரளவிற்கு அவர்கள் தசைநார்க் கட்டுப்பாடு பெற்றிருக்கின்றனர். ஆனால், அது போதாது. இன்னும் அதிகமாக, வடிவ உணர்ச்சியையும் விரல்தசைகளை முறைப்படி இயக்கும் திறனையும் உண்டாக்க வேண்டும். அதற்குக் கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் தரலாம்:—

1. பலவடிவக் கட்டைகளை வைத்து அடுக்கி விளையாடல்.

2. களி மண்ணால் உருவங்கள் செய்தல்.

3. காகிதங்களை மடித்தல், கிழித்தல், கத்தரித்தல்.

4. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனி உருவம் உண்டு. அந்த உருவம் கெடாமல் எழுதுகிறோம். ஆகவே, எழுத்தை எழுதுதல், ஒரு சித்திரம் வரைதலை ஒக்கும். சித்திரம் வரையும்ஆசை சிறுவரிடம் சிறந்து காணப்படுகிறது. ஆதலால், எழுத்துப் பயிற்சிக்கு முற்பயிற்சியாக, மாணவர்க்குப் பிரியமான சிறிய சித்திரங்கள் வரையச் சொல்லலாம்.

5. கூரிய எழுதுகோலால் எழுதுவது சிரமம். ஆதலால் பெரிய சுண்ணும்புக் கோலால் (சாக் துண்டால்) சுவர்க் கரும்பலகையில் எழுதச் சொல்லலாம்.

6. வடிவங்களைக் கண்டறிவதற்காக புரோ பெலின் பரிசில்களை உபயோகிக்கலாம். ஒரு அகன்ற கட்டையில் பலவகை வடிவத்தில் (முக்கோணம், சதுரம், வட்டம், நீண்ட வட்டம், முட்டை வட்டம்) குழிகள் இருக்கும். அந்தந்த வடிவத்தில் சரியாகப் பொருந்தும் கட்டைகளும் இருக்கும். இக்கட்டைகளைச் சரியாகப் பொருந்தும் குழிக்குள் பார்த்து வைக்க வேண்டும். இதனைக் குழந்தைகள் கண்ணைக்கட்டிக் கொண்டும் கையால் தொட்டுத் தடவிப்பார்த்தும் புரிய வேண்டும். இக்கருவியில்லையேல், கெட்டியான அட்டையிலே வெட்டி எடுத்துக் கொண்டு விளையாடலாம். கண்ணை மூடிக்கொண்டு பேனாவை திறக்கலாம்; மூடலாம். ஒரு கண்ணாடிப் புட்டிக்கு ஏற்ற மூடியால் மூடலாம்.

7. ஒரு படத்தை மூன்றாய், நான்காய் வெட்டி, மீண்டும் பொருத்திப் படத்தைச் சேர்க்கச் சொல்லலாம். இப் பயிற்சியால் வடிவங்களைப் பற்றிய அறிவு ஏற்படும். விதை, மணி, பாசி இவற்றை, வரைந்துள்ள சிறு சித்திரங்களின் மேல் வரிசையாக அடுக்கச் சொல்லலாம்.

8. மாண்டிசோரி உபகரணங்களைப் பயன்படுத்தலாம். ஒரு அட்டையில் பல உருவங்களை வெட்டி எடுத்துவிட வேண்டும். அந்த அட்டையை ஒரு தாளின்மேல் வைத்து உள்ளே பென்சிலால் சுற்றிலும் குறித்து, உருவத்தை உண்டாக்க வேண்டும். பின்னர் அந்த உருவத்தின் உள்ளே நேர்கோடுகளை நிறைய வரைந்து நிரப்ப வேண்டும். இப் பயிற்சியால் என்ன பயன் விளைகிறது எனச் சிந்தியுங்கள்.

9. உருவங்களை ஆகாய வெளியில் எழுதுதலாலும், முதுகில் எழுதிக் காட்டுதலாலும், கரும்பலகையில் கிறுக்கிப்

பழகுவதாலும் புஜத்தின் தசைகளுக்கும் தசைநரம்புகளுக்கும் பயிற்சி ஏற்படுகின்றது. இப்பயிற்சி விரலின் தசையைப் பயிற்சிசெய்வதற்கு முற்பயிற்சியாகும்.

10. எழுத்துக்கள் வளைவு கோடு, நேர் கோடு, படுக்கைக் கோடு முதலியவற்றால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இக்கோடுகளையும், எழுத்துக்களைப்போன்ற சிறு வடிவங்களையும் எழுதலாம்:— I C O L ப ˥ ா U ெ ே

மேற்கண்ட முற்பயிற்சிகளால் வடிவ அறிவும், விரல் தசைநார் இயக்கமும், எழுதுகோலைக் கையாளுந்திறனும் மாணவர் உண்டாகப் பெறுகின்றனர்.

வினா:- 1. முதல் வகுப்பு மாணவர்க்கு எழுத்துக்களை எழுதக் கற்பிக்கத் தொடங்குமுன், என்ன முற்பயிற்சிகளை அளிக்கலாம்? (Sec. 45 Ele. 48.)

4. எழுத்துக்களை எழுதிப் பழகல்.

1. எழுதும்போது எழுத்துக்கள் எங்கு தொடங்குகின்றன, எவ்வாறு சென்று முடிகின்றன, என்பதை மாணவர் கவனிக்குமாறு ஆசிரியர் நிறுத்திப் பெரிதாக எழுதிக் காட்டல் அவசியம். இவ்வாறு பயிற்சிக்காததால் சிலர் கொம்பை (ே) மேலிருந்து எழுதுவர். சிலர் 'ஊ' எழுத, முதலில் 'ன' எழுதிப் பின்னர் மேற்சுழியைச் சேர்ப்பர்.

2. எழுத்தை மணல் தாளில் வெட்டி, அதன்மேல் விரலால் விளம்பச் சொல்லல் நல்ல பயிற்சியாகும்.

3. விரலால் ஆகாயத்தில் எழுதப் பழக்கலாம்.

4. முதுகில் விரலால் எழுதிக் காட்டல் ஒரு இனிய பயிற்சியாகும்.

5. மணலில் விரலால் அல்லது குச்சியால் எழுதலாம்.

6. எழுத்துக்களின்மேல் முத்துக்களை வரிசையாக அடுக்குவதை விளையாட்டுப்போல் விரும்பிச் செய்வார். இத்தகைய பயிற்சிகள் எழுத்துக்களை எழுதப் பழக்க ஏற்றவையாகும்.

எழுத்துக்களை உருவ ஒற்றுமைக்கேற்ப, கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. ட, ப, ம, ய, ழ.
2. ஈ, ர, ந. ங.
3. க, ச, த.
4. எ, ஏ, ஞ, ஒ, ஓ, ஔ.
5. ள, வ, ல, ண, ண, ஐ, ற.
6. அ, ஆ, இ, உ, ஊ.

நேர்கோட்டு எழுத்துக்களை முதலில் கற்பதா, வளைவு கோட்டு உருவங்களை முதலில் தொடங்குவதா என்பதில் கருத்து வேற்றுமை உண்டு. முதன்முதல் ஒரு எழுது கோலை ஒரு குழந்தை கையில் கொடுத்து விட்டால்; அவன் வளைத்து வளைத்துத்தான் கிறுக்க ஆரம்பிக்கின்றான், நேர் கோடுகளாகவே கிறுக்குவது குழந்தையின் இயல்பில்லை.

வினா: 1. முதல் வகுப்பு மாணவர்க்கு எழுத்துக்களைக் கற்பிக்க எவ்விதப் பயிற்சிகள் அளிக்கலாம்?

5. நல்ல கையெழுத்தின் தகுதிகள்.

எழுத்துக்களைத் தெளிவாகவும் அழகாகவும் விரைவாகவும் எழுதவேண்டும். ஆகவே, நன்கு எழுதுவதில் தெளிவு, அழகு, விரைவு ஆகிய மூன்று திறமைகள் வேண்டும்.

தெளிவு:- எழுத்தினுடைய அழகையும் விரைவையும் காட்டிலும் தெளிவு மிகமுக்கியம். தெளிவின்றி எழுதுவதால் பயனே இல்லை. தெளிவுஇன்மை என்பது எழுத்து இதுதான் என்று அறிந்து கொள்ள முடியாமல் எழுதுவது. சங்கிலித் தொடர்போல, கூட்டிஎழுதிச் செல்வது தெளிவைக் குறைக்கும். ஆங்கிலம்போல் அல்லாமல், தனித் தனியாய் முத்துக்கள் போல, எழுதிச் செல்வதுதான் தமிழில் வழக்கம். எழுத்துகட்கூடே உரிய இடம் விடுவதும், நிறுத்தற் குறிகள் ஏற்ற இடத்தில் இடுவதும் தெளிவுக்குத் தேவை.

அழகு:- எழுத்துக்கள் பெரிதும் சிறிதுமாயிராமல், ஒரே தரமாய், மேல் விலங்கு, கீழ் விலங்கு, கொம்பு, கால், மூக்கு முதலியவை விழுக்காட்டளவுப்படி (விகித அளவு) அமைந்து விளங்குவதே அழகாகும்.

1. ஆரம்பத்திலே அழகாக எழுதப் பழக்குவது அவசியம்.

2. எழுத்துக்களுக்கூடே விடும் இடைவெளி அளவு, ஒரே அளவாய் இருத்தல் அழகூட்டும்.

3. சொல்லுக்கும் சொல்லுக்கும் ஊடே சற்று அதிக இடம் விடல்வேண்டும்.

4. எழுத்துக்களின் கோடுகளும் மிக மெல்லியதாயும் கடித்ததாயும் இராமல் ஒரே அளவாக இருத்தல் வேண்டும்.

5. அளவுக்கு மிஞ்சிய சுருள்களையும் திருகல்களையும் தவிர்த்தல் நலம். ஆனால், மாணவர், அழகுணர்ச்சி தூண்டுவதால், சில சிறிய வளைவுகளும் நெளிவுகளும் கொடுத்தெழுதுவர். இதனை ஆசிரியர் தடை செய்தால், மாணவரின் இன்பமும் இயற்கையும் கெட நேரிடும்.

விரைவு:- வாழ்க்கையில் நம்நேரம் மிக அருமை யானதால், குறித்த காலத்திற்குள் எதையும் விரைந்து எழுதப் பழகுவது இன்றியமையாதது. ஆனால், விரைவுக் காகத் தெளிவையும் அழகையும் விட்டு விடலாகாது.

1. முதல் இரண்டு வகுப்புகளில் தெளிவாயும் அழகா யும் எழுதுவதில் கவனம் செலுத்தி, மூன்றும் வகுப்புமுதல் விரைவாகவும் எழுதப் படிப்படியாய்ப் பயிற்றல் வேண்டும். 2. சற்று வலப்புறமாகச் சாய்த்து எழுதிச் செல்வது விரைவைத் தரும். 3. பார்த்து எழுதுதற் பயிற்சியைக் காட்டிலும் சொல்வதெழுதுதற் பயிற்சியானது விரைவாக எழுதத் தூண்டும். 4. எல்லா மாணவரையும் ஒரு கால அளவிற்குள், அதாவது சுமார் 5 நிமிடங்களுக்குள் எழுதச் சொல்லி, ஒவ்வொருவரும் எத்தனை வரிகள் அழகாகவும் தெளிவாகவும் எழுதுகிறார்கள் என்று பார்த்து மதிப்பெண் கள் கொடுக்கலாம். இத்தகைய விரைவுச் சோதனைகள் அடிக்கடி நடத்தி, ஒரு பேரேட்டில் குறித்து வரலாம். மூன்றும் வகுப்பில் ஒரு நிமிஷத்திற்கு 35 முதல் 40 எழுத் துக்கள் வரையிலும் எழுதலாம் என்று கணக்கிட்டிருக்கின் றனர். மேல் வகுப்பு மாணவர் நிமிஷத்திற்கு 100 எழுத் துக்கள் வரை எழுதலாம்.

5. விரைவாக எழுதுவதற்கு, பேனாவை பிடிக்கும் விதமும், உட்காரும் நிலையும், ஒளியின் அளவும், ஒளி வரும் திசையும், காகிதத்தின் தன்மையும் உதவி புரியும்.

வினா: நல்ல கை எழுத்தின் தகுதிகள் எவை? அவற் றைப் பெற உம்முடைய மாணவரை எவ்வாறு பயிற்று வீர்கள்?

6. கையெழுத்துத் திருந்துவதற்குப் பயிற்சிகள்.

1. பார்த்தெழுதுதல், 2. அச்செழுதுதல், 3. சொல்வதெழுதுதல், 4. தானே எழுதுதல் ஆகிய பயிற்சிகளால் கை எழுத்துத் திருந்தும்.

1. **பார்த்தெழுதுதல்** என்பது அச்சுப் புத்தகத்தை அல்லது ஆசிரியர் எழுதியதைப் பார்த்தெழுதுவதேயாகும். இப்பயிற்சி தருங்கால், ஆசிரியர் கவனிக்க வேண்டிய குறிப்புகள்.

1. வகுப்புக்குத் தகுந்தாற்போல் சில வரிகளை நாள்தோறும் பார்த்தெழுதப் பழக்கலாம்.

2. கீழ் வகுப்புகளில் சுமார் 10 நிமிடங்கட்குமேல் இப்பயிற்சி தரலாகாது.

3. எழுதியவற்றை ஆசிரியர் திருத்தாதுவிடல் பெரும் தீமை பயக்கும்.

4. மாணவரை அருகில் வைத்துத் திருத்துவது சிறந்தது.

5. ஆரம்ப வகுப்பில் எழுத்துக்கள் சற்று பெரிதாயும், மேல் வகுப்புகளில் எழுத்துக்கள் சிறிதாயும் இருத்தல் நலம்.

6. தொடக்க வகுப்புகளில் மின்னட்டை முதலியவைகளையும் மேல் வகுப்புகளில் புத்தகத்தையும் பார்த்தெழுதப் பழக்கலாம்.

இப் பயிற்சியால் மாணவர் அடையும் பயன்களையும் திறன்களையும் இனிக் காண்போம்.

(அ) பார்த்தெழுதுதல் மூலம் எழுத்துருவங்கள் மாணவர் மனதில் பதிகின்றன. இது வாசிப்புக்குதவும்.

(ஆ) மௌன வாசிப்புப் பழக்கம் ஏற்படுகிறது.

(இ) எழுத்துப் பிழையின்றி எழுத, மாணவர் பயிற்சி பெறுகின்றனர்.

(ஈ) இடங்களுக்கு ஏற்ற நிறுத்தக் குறிகளை இடவும் மாணவர் பயிற்சி பெறுகின்றனர்.

(உ) நல்ல வாக்கியஅமைப்பு முறைகள், வாக்கியத்தில் ஏற்ற இடத்தில் சொற்களை வழங்குதல் முதலிய இலக்கணங்களையும் நன்கு கற்றுக்கொள்வர்.

(ஊ) எழுதும்போது விஷயத்தைப் பற்றிய தெளிவான திட்டமான அறிவுண்டாகப் பெறுவர். இவை எழுத்துப் பயிற்சிமூலம் மாணவர் பெறுகின்ற நன்மைகளாகும்.

2. **சொல்வதெழுதுதல்.**-பார்த்தெழுதும் பயிற்சியைக் காட்டிலும் சொல்வதெழுதுதல் பயிற்சி சற்று கடினமானது. ஆசிரியர் சொல்வதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டு, ஞாபகத்தில் வைத்து எழுதவேண்டும்

1. ஆகவே இப் பயிற்சி மூலம், மாணவர் கூர்ந்து கவனிக்கும் திறமையை வளர்க்கின்றனர். கேள்விஞானம் பெறும் வழியிலே பயிற்சி பெறுகின்றனர்.

2. கேட்ட விஷயத்தை ஞாபகத்தில் வைக்க வேண்டுமானல், பொருளை அறிய வேண்டும். ஆகவே கிரகிக்கும் திறமையிலே வளர்கின்றனர்.

3. பார்த்தெழுதுவதில் சொற்கள் கண் முன்னுல் இருக்கும். ஆனல், சொல்வதெழுதுவதில் எழுத்துக்களை ஞாபகத்திலிருந்து எழுதுகின்றனர். ஒவ்வொரு சொல்லி

னும் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எதன் பின்னே எது வருகிறது, என மனத்திலே கண்டறிந்து எழுது கின்றனர். இவ்வாறு எழுத்துக் கூட்டப் பயிற்சி பெறு கின்றனர்.

4. வாக்கியத்தின்பொருள் நோக்கி, தாமே, நிறுத்தக் குறிகள் இடப் பழகுகின்றனர்.

5. எழுத்துக்களின் உச்சரிப்பு வேறுபாடுகளை அறிந் தால்தான் பிழையின்றி எழுத முடியும்.

6. மாணவர் எழுதுவதற்காக, ஆசிரியர் ஒருமுறை சொன்ன வாக்கியப் பகுதியை மீண்டும் கூறலாகாது. ஆசிரியர் சொல்லிச் செல்லும் வேகத்திற்கு மாணவரும் எழுதிச்செல்ல வேண்டுமாதலால், விரைவாக எழுதத் தூண்டப்படுகின்றனர்.

3. **அச்சு எழுதுதல்:—** (Copy writing)

1. மூன்றும் வகுப்பிலிருந்து அச்சு எழுதுதல் பயிற்சி யை ஆரம்பிக்கலாம். மூன்றும் வகுப்பில் ஆசிரியர் எழுதிக் காட்டும் வாக்கியங்களை எழுதுதல் நலம்; ஆசிரியர் எழுதும் போது அவரது கைஅசைவு, எழுத்தை ஆரம்பிக்கும் இடம், எழுத்தை எழுதிப் போகும் போக்கு முதலியவற்றை நேரில் கவனிக்குமாறு மாணவரைத் தூண்டவேண்டும்.

2. அச்சு எழுத்துப் புத்தகத்தில், அடி வரியிலிருந்து எழுதிச் சென்றால், ஒவ்வொரு வரியையும் எழுதும் போதும் அச்சிலுள்ள, மாதிரி வாக்கியத்தையே பார்த்து எழுத நேரிடும். ஆனால் மேல் வரியிலிருந்து கீழ்வரிகட்கு எழுதி வந்தால், மாணவன், தான் எழுதிய கை எழுத்தையே அடுத் தடுத்த வரிகளில் பார்த்து எழுத நேரிடும். ஆதலால் கீழ் வரியிலிருந்து எழுதிச் செல்வது நல்லது.

3. எழுத்துக்களின் தரம், உரிய வடிவம், விழுக்காட்டளவு, (விகித அளவு) ஊடே இடம் விடல், முதலியவற்றைக் கவனிக்கச் செய்ய வேண்டும்.

வினா:- 1. பாஷை பயிலுவதில் எழுத்துப் பயிற்சிகள் செய்யும் உதவிகள் யாவை? (Ele. 51)

2. எழுத்துப் பயிற்சியில் நான்கு இனங்களைக் கூறுக. அவற்றுள் ஒன்றை ஐந்தாம் வகுப்புக்கு எப்படி உபயோகிப்பீர் என்பதைத் தெளிவு படுத்துக. (Sec. 49)

7. எழுத்துப் பிழைக் காரணமும் நீக்கலும்.

1. சொற்களிலே, எழுத்தை விட்டு விடுவது, (வாழைப்ப ம்)

2. ஓர் எழுத்துக்குப் பதில் வேறு எழுத்தை எழுதுவது, (பூனைவாள் நீலம்)

3. குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் எழுதுவது (பான்றிக்குக் கல் நான்கு)

4. உரிய இடம் விடாமல் சொற்களைப் பிரித்து எழுதுவது, (சாப்பா டும்போ டப்ப டும்)

5. வரியின் ஆரம்பத்தில் புள்ளி எழுத்துக்களை எழுதுதல் உதாரணம்;—

க்கடவுளைக் காலையில்துதி.

6. சொற்களினூடே சந்தி எழுத்துக்களைவிட்டுவிடுதல் (கீரை கறி) முதலியவை மாணவர் எழுதும்போது நேரிடும் எழுத்துப் பிழைகளாகும். இவற்றிற்குப் பல காரணங்கள்

உள்ளன. அவையாவன, முறையாக வாசிக்கவும் எழுதவும் பயிற்சிகள் பெறுமையும், கவனக் குறைவும் சில எழுத்துக் களை ஒழுங்காய் உச்சரிக்கத் தெரியாமையும், எழுத்துருவங் கள் மனதில் தெளிவாய்ப் பதியாமையும் ஆகும். இனி, பிழைகளை நீக்கும் வழிகளைக் காண்போம்.

1. **முறையான வாசிப்புப் பயிற்சி:-** அடிக்கடி வாசிப்புப் பயிற்சி முறைப்பட அளிக்காததால் எழுத்து வடிவங்கள் மனதில் பதிவதில்லை. சொற்களைக் கற்குந் தோறும் புதிய எழுத்துக்கள் மனதில் பதியுமாறு கற்பிக்க வேண்டும். எழுத்துக் கூட்டிப் படிக்கும் பயிற்சியும் தரல் வேண்டும். மாணவர் எழுத்துக் கூட்டுங்கால், எழுத்துக்களின் ஒலிச்சேர்க்கையை உணருவார். பன்முறை, சொற்களைக் கண்ணால் பார்ப்பதால், சொல்லின் முழுவடிவம் மனதில் பதியும். ஆகவே வாசிப்புப் பயிற்சியானது பிழையற எழுதத் துணைபுரியும்.

2. **எழுத்துப் பயிற்சிகள்:—** அடிக்கடி பார்த்தெழு துதல், சொல்வதெழுதுதல் முதலிய பயிற்சிகள் தந்து திருத் துவதால் ஏற்படும் நலன்களைப் பற்றி முன்னரே படித் துள்ளோம்.

4. **கவனக் குறைவு நீக்கல்:-**

"படிப்பதுபோல் பார்வை பாடத்தைத் தேடும்-ஆனால் என்பதற்கிணங்க, பல்வேறு நினைவுகள் மனத்திலே ஓடும்."

மாணவர் படிக்கும்போதும் எழுதும்போதும் பிற சிந்தனைகள் மனத்திலே ஓடும். எழுதியவற்றை ஆசிரியர் அவசியம் திருத்த வேண்டும். ஆசிரியர் திருத்துவார் என்று திட்டமாய் மாணவர் அறிந்திருந்தால் கவனம் செலுத்தி

எழுதுவர். ஆசிரியர் திருத்தி, பிழையற எழுதும் மாணவர்க்கு மதிப்பெண்கள் தந்தும் புகழ்ந்தும் உற்சாகமூட்டல் வேண்டும்.

5. **நல்ல ஒலிப்பு:—** பிழைபட உச்சரிக்கும் பிள்ளைகள் பிழைபட எழுதுவார்கள். "அவல் பலம் தின்றால்" என்று சொல்லுபவன், அவ்வாறே எழுதுவான்.

பிற உதா:— ஆலையம்-ஆலயம். எடையன்-இடையன். காச்சல்-காய்ச்சல். சிலவு-செலவு.

3. **நெருங்கிய ஒலிச் சொற்களின் வேறுபாடு:-**

ஒத்த ஓசையுடைய சொற்களின் பொருள் வேறுபாடுகளை அறிவிக்க வேண்டும். வாக்கியங்களில் அமைத்துக் காட்டி, பொருளை விளக்கல் வேண்டும். ஏட்டிலும் எழுதி வரல் நலம். உதா:—

1. குடை:— மழையில் நனையாமல் குடையை விரித்துப் பிடி.

கொடை:— கொடையில் சிறந்தவரை 'வள்ளல்' என்கிறோம்.

2. மைல்:— உன்னை ஒரு மைல்தூரம் கூப்பிட்டால், இரு மைல் துணையாகச் செல்க.

மயில்:— கரிய மேகம் கண்டு, மயில் களித்தாடும். இதுபோன்றே, எண்ணை, எண்ணெய்-குலை, கொலை-இடை, எடை—நிரை, நிறை முதலிய சொற்களின் பொருள்களை விளக்கலாம்.

5. **கடின சொற்களை** நன்றாய்ப் படிக்கவும் எழுதவும் பயிற்சி தரல் வேண்டும். கடின சொற்களுக்கென்று ஒரு தனி ஏடு வைத்துக் கொள்ளலாம். அதில் ர, ற; (அரம்; அறம்) ன, ண (மனம்; மணம்) குறில் நெடில் (படம்

பாடம்) முதலிய எழுத்து வேறுபாட்டுச்சொற்களை அகராதி வரிசையிலே எழுதிவரல் மிகுந்த பயன் தரும். வாக்கியத்தில் அமைத்துக் காட்டல் நலம். உ.தா:—

அரன்—சிவன்—அரன் கைலைமலையில் உள்ளான்.

அரண்—கோட்டை—பண்டை வேந்தர்கள் அரண்களை அமைத்து வாழ்ந்தனர்.

கூரிய—கூர்மையான—கூரிய ஊசியால் குத்து.

கூறிய— சொல்லிய—கூறிய கதையைக் கேள்.

6. **அடிக்கடி பிழையாக எழுதும் சொற்களையும்** அந்தப் பிரதேசத்தில் வழங்கும் கொச்சை மொழிகளையும் சரியாகப் பெரிய எழுத்தில் எழுதி வகுப்பில் தொங்க விடலாம்.

7. **அகராதி பார்த்தல்:-** எழுத்துக்களைப் பற்றி ஐயம் ஏற்படுங்கால் ஆசிரியரைக் கேட்டோ, அகராதியைப் பார்த்தோ அறியப் பழக்கல் நலம்.

8. **இலக்கண விதி அறிவு கொண்டு** பிழை நீக்கும் வழிகளையும் கற்பித்தல் வேண்டும். சில உதாரணம்:—

(i) னன்கு=நன்கு. மொழிக்கு முதலில் 'ன' வராது.

(ii) பயிற்ச்சி=பயிற்சி. வல்லின மெய் இரண்டு சேர்ந்து வரா.

(iii) பந்றி=பன்றி. றகரத்தின் முன், 'ந்' வராது. அதன் இன எழுத்தாகிய 'ன்' வரும்.

(iv) சிலவு=செலவு. கையிலிருந்து செல்வது செலவு. இவ்வாறு அடிச் சொற்கள் (Root) மூலம் பல சொற்பிழை அகற்றலாம். குடைவாக இருப்பதால் குடை எனப் பெயர் பெற்றது. கொடுப்பது கொடை. 'சுவற்றில்' என்று எழுதுவது பிழை. 'சுவர்' என்பதே அடிச்சொல்; சுவர்+இல்=சுவரில்.

(v) பயிற்—பயிர். அரசற்—அரசர். தவிற்—தவிர். சொல்லீற்றில் வல்லின 'ற்'—ஒரு போதும் வாராது. சொற்களை ஒன்றோடொன்று சேர்த்து எழுதுங்கால் முதற் சொல்லின் இறுதியில் வரும்.

(vi) யிலை—இலை. யீரம்—ஈரம். யெருது—எருது. யேனம்—ஏனம். யி, யீ, யெ, யே —என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வரா. சொற்களை ஒன்றோடொன்று சேர்த்தெழுதுங்கால் முதலில் வரும்.

(vii) பிருமணன்—பிராமணன். அபருதம்—அபராதம். ருமன்—ராமன். வடசொல், திசைச் சொற்களில் றகரம் ஒருபோதும் வரலாகாது; ரகரமே வரும்.

9. **வாய் மொழிக் கட்டுரை:**— கட்டுரைகளையும் கதைகளையும் எழுதுதற்கு முன் பிழைபடக் கூடிய சொற்களைக் கரும்பலகையில் முன்னரே எழுதிக் கவனிக்கச் செய்தல் நலம். முறைப்பட வாய்மொழிக் கட்டுரையை நடத்தினல், எழுத்துக் கட்டுரையில் பிழைகள் அதிகம் நேரிடா.

வினா:- 1. மோசமான எழுத்துப் பிழைகள் சாதாரணமாய் எக்காரணங்களால் உண்டாகின்றன? அவற்றைத் தவிர்க்க என்ன செய்வீர்? (Sec. 43)

2. பொதுப் பிழைகளைக் குறிக்கும் குறிப்பேட்டின் தேவையை விவரிக்க. அத்தகைய ஏட்டை நீர் எப்படி வைத்திருப்பீர் என்பதையும் எவ்விதம் பயன்படும் என்பதையும் குறிக்க. (Sec. 53)

IX. கட்டுரை பயிற்சி.

1. கட்டுரைப் பயிற்சியின் அவசியம்.

கட்டுரை என்பது கருத்துக்களைச் சேகரித்து கோவையாகக் கட்டியுரைப்பதாகும். கட்டுரையைப் பேசியோ அல்லது எழுதியோ வெளியிடலாம். பேசிவெளியிடுவது வாய்மொழிக் கட்டுரை எனப்படும். எழுதி வெளியிடுவது எழுத்துக் கட்டுரை எனப்படும். பொதுவாகக் கட்டுரை என்பது எழுத்துக் கட்டுரையைத் தான் குறிக்கின்றது. மொழித் திறமையினை அளக்கக் கட்டுரை சிறந்த கருவி. வாழ்க்கையிலே இது பலவிதத்தில் பயன்படுகிறது.

1. கருத்துக்களை அழகாக எழுதிவைப்பதால் பல காலத்தவருக்கும் பயன்படும். தூரத்திலுள்ளவர்களும் படித்தறிந்து கொள்வார்கள். எழுதி வைக்காவிடில் பண்டைய இலக்கியச் செல்வங்கள் நமக்கு எப்படிக் கிடைத்திருக்கும்? விஞ்ஞான நுட்பங்களைப் பல நாட்டினர் எவ்வாறு அறிந்திருக்க முடியும்? வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் கருத்துக்களை எழுதியே வெளியிட வேண்டியதிருக்கிறது. கடிதங்களும் விண்ணப்பங்களும் வழக்குகளும் நாடகங்களும் உரையாடல்களும் கதைகளும் வரலாறுகளும் எழுதி வெளியிடுவதால், பல்வேறு கருத்துக்கள் மக்களிடையே பரவுகின்றன.

2. கட்டுரைப் பயிற்சியின் நோக்கமும் பயனும்.

1. எண்ணங்களையும் கருத்துக்களையும் தாமாகவே வெளியிடுந் திறமையை மாணவர்க்கு உண்டாக்குகின்றோம்.

2. தகுந்த, சிறந்த சொற்களை உபயோகிக்கப் பயிற்சி தருகின்றோம்.

3. மாணவர் தமக்கென ஒரு சொந்த நடையை உருவாக்கப் பயிற்சி பெறுகின்றனர்.

4. கருத்துக்களை வரிசைப்படுத்தி ஒழுங்காக வெளியிடக் கற்றுக் கொள்கின்றனர்.

5. எடுத்த பொருளைவிட்டு விலகாமல், தொடுத்துக் கூறிச் செல்ல மாணவரைப் பழக்குகின்றோம்.

6. குறித்த காலத்திற்குள், குறித்த அளவில் கருத்தை வெளியிடும் கட்டுப்பாட்டுணர்ச்சியை யூட்டுகின்றோம்.

7. பிழையின்றி, இலக்கண வரம்பிற்குட்பட்டு எழுதப் பழக்குகின்றோம்.

8. பிற்கால வாழ்க்கையிலே பத்திரிகை நடத்தவும் நூற்கள் வெளியிடவும் கடிதங்கள் விண்ணப்பங்கள் எழுதவும் வேண்டிய திறமையை உண்டு பண்ணுகிறோம்.

9. சிலர் நன்றாகப் பேசுவர்; படிப்பர்; ஆனால் நன்றாக எழுதமாட்டார். பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய முத்திறமைகளையும் பெற்றாரே மொழித் திறமை முழுதுறப் பெற்றோராவர். ஆகையால் எழுதுந் திறமையை மாணவர்க்குண்டாக்குவது மிக அவசியம்.

10. படிக்குந்தோறும் ஒருவர்க்குப் பரந்த அறிவு ஏற்படும். பேசிப் பழவகுதால் விரைவாகப் பொருளை

எடுத்துக் கூறும் திறமையைப் பெறுவார்; ஒரு பொருளை எழுதும் போதுதான் தெளிவாகவும் திட்டமாகவும் அப் பொருள் மனத்திலே, பதிகின்றது.

படிக்குந் தோறும் பரந்த அறிவும்
விளம்புந் தோறும் விரைவும் விறலும்
எழுதுந் தோறும், தெளிவும் திட்பமும்
முழுதும் பெற்று மொழித்தேர் வுறலாம். *

3. வாய் மொழிக் கட்டுரை.

ஆசிரியரும் மாணவரும் பேசுதல், உரையாடல், வினு விடை கூறல், ஆகியவையே வாய்மொழிக் கட்டுரையாகும். பேச்சுப் பயிற்சியைத் தனிப் பாடமாக நடத்த வேண்டிய தில்லை என்று பழைய கல்விமுறையில் கருதினர்; இது தவறு. எழுதுதல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் பேசுதல். ஆதலால் இதனை ஒரு தனிப்பாடமாக மிகுந்த கவனம் செலுத்திக் கற்பிக்க வேண்டும். சிலர் பேச்சுநடை வேருக வும் எழுத்துநடை வேருகவும் இருத்தல் வேண்டும் என்று கருதுவர்; இதுவும் முற்றிலும் கொள்ளத் தகுந்த கொள்கையன்று.

எழுதுவதுபோல பேசவும், பேசுவதுபோல எழுத வும் பயிலுவதே நல்லது. பலரும் பலவாறு பிழைபடப் பேசுவதுபோலவே, எழுதவும் ஆரம்பித்து விட்டால், ஒரு புது பாஷையே உற்பத்தியாகிவிடும். புது பாஷை நமக்கு வேண்டாம். எனவே நல்ல முறையில் வாய் மொழிக் கட்டுரைப் பயிற்சி அளிப்பதால் கீழ்க்கண்ட நலன்களையும் பலன்களையும் பெறலாம்.

---

* Reading maketh a full man.
Speaking maketh a ready man.
Writing maketh an exact man.

1. சொற்பொழிவுத் திறமையை வளர்க்க, வாய்மொழிக் கட்டுரை பெரிதும் பயன்படும்.

2. உச்சரிப்பைத் திருத்த உதவும்.

3. கட்டுரைக்கு வேண்டிய கருத்துக்களை வினவியும் உரையாடியும் உரைத்தும் சேகரித்து வகைப்படுத்தலாம்.

4. கருத்துப் பிழைகளையும் சொற் பிழைகளையும் ஆங்காங்கு இலகுவில் திருத்திவிட்டால், எழுத்துக் கட்டுரையில் பிழைகள் அதிகம் நேரிடா.

5. சொற்பொழிவாற்றும் திறமையை வளர்க்கலாம்.

6. மாணவரின் அச்சம் கூச்சம் அகற்றலாம்.

7. மாணவரது சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டலாம்.

மேற்கண்ட நன்மைகள் விளைவதால் எழுத்துக் கட்டுரைக்கு முற்பயிற்சியாக வாய்மொழிக் கட்டுரையை நடத்தலாம். மேலும் இதனைத் தனியாகவே நடத்துவதும் நலம் தரும். உரையாடல், கதைகூறல், சிறு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுதல் முதலிய பயிற்சிகளை வாய்மொழிக் கட்டுரையாக நடத்தல் நலம் தரும்.

வினா:- எழுத்துக் கட்டுரைக்கு முன், ஏன் வாய்மொழிக் கட்டுரை நடத்தப்பட வேண்டும்? ஐந்தாம் வகுப்புக் கேற்ற ஒரு கட்டுரைப் பொருளைத் தேர்ந்தெடுத்து அதைத் தழுவிய வாய் மொழிப் பயிற்சி நடத்த என்ன திட்டம் போடுவீர் எனக் காட்டுக. (Sec. 45)

4. கீழ் வகுப்புகளில் எழுத்து வேலை.

கீழ் வகுப்புகளில் சிறு வாக்கியங்களை அமைக்கப் பழக்க வேண்டும். ஒரு பொருளைப்பற்றி ஓரிரு வாக்கியங்கள் கூறத் தூண்டலாம். மேல் வகுப்பில் நீண்ட கட்டுரைகள் எழுதுவதற்கு வேண்டிய திறமையைக் கீழ் வகுப்பிலிருந்து, படிப்படியாக வளர்த்து வர முயல

வேண்டும். சொற்றொடர் ஆக்கப் பயிற்சிகள் இதற்கு ஏற்றவை. வாக்கியங்களை அமைக்கவும், சொற்களை உபயோகிக்கவும் தரும் பயிற்சிகளே சொற்றொடர் ஆக்கப்பயிற்சிகள். வினக்கட்கு ஒன்றிரண்டு வாக்கியங்களில் விடைகூறல், வாக்கியங்களில் காலி இடங்களை நிரப்பல், வாக்கியங்களை இணைத்தல், முறை மாறியுள்ள வாக்கியத்தைச் சரியாக அமைத்தல் முதலியவை சிறு வகுப்புகட்கு ஏற்ற பயிற்சிகளாகும். கருத்தைத் தூண்டும் படங்களைக் காட்டினல், சிறுவர் தாமே அவற்றைப்பற்றிச் சிறிது பேச ஆரம்பிப்பார். தாங்கள் விரும்பிக் கண்ட அல்லது அனுபவித்த காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் பற்றி, சில வாக்கியங்கள் கூறவும் எழுதவும் வாய்ப்பளிக்கலாம். வாக்கிய அமைப்புகள்பற்றிய பயிற்சிகளைத் தருவது சிறந்தது.

4, 5 வகுப்புகளில், வாக்கியங்களிலே ஒருமையைப் பன்மையாகவும், உடன்பாட்டை எதிர்மறையாவும், வினவை விடையாகவும், தன்மையை முன்னிலையாகவும் மாற்றலாம். இவற்றிற்கு மாறாக மாற்றுதற்கும் பயிற்சிகள் அளிப்பதால் மொழித்தேர்ச்சியுண்டாகும். நிறுத்தற் குறிகளைச் சரியாக வழங்கல்,—எழுவாயையும் பயனிலையையும் ஏற்பப் பொருத்தல், திணை, பால், எண், இடம், காலம், வேற்றுமை பற்றிய இலக்கணக் குறிப்புகள் தருதல் முதலியபயிற்சிகள் மொழித் திறமையை வளர்க்க உதவும்.

5. கட்டுரை எழுதுந் திறனை வளர்த்தல்.

மாணவர் கட்டுரை எழுதுந் திறனை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1. ஆசிரியரின் உதவி மூலமே எழுதுதல்.

2. உதவி மூலமாயும் தாமாகவும் எழுதுதல்.

3. பிற உதவி இன்றித் தாமாகவே எழுதுதல்.

1. மூன்று நான்காம் வகுப்புகளில் தாங்கள் படித்த பாடங்களைத் திருப்பி எழுதலாம்; அவற்றைப் படித்த நடையிலே எழுதலாம். ஏனெனில் தாமாகவே வர்ணிக்கவோ, விவரிக்கவோ சிறுவரால் இயலாது. கற்ற அல்லது கேட்ட கதைகளை, அதே நடையில் திரும்பக் கூறலாம். இவை தவிர, படங்களுக்கடியில் ஓரிரு வாக்கியங்கள் தாமாகவும் எழுதலாம். சொந்த அனுபவங்களைப் பற்றிச் சுருக்கமாய் இயலுமளவில் எழுத முயலலாம். சுருக்கமான கடிதங்கள் எழுதவும் முயலலாம்.

2. மேல் வகுப்புக்குச் செல்லச் செல்ல, ஆசிரியர் உதவியைச் சிறிது சிறிதாய்க் குறைத்து, மாணவர் தாமாகவே எழுதுந் திறனை உண்டாக்க வேண்டும். ஐந்தாம் வகுப்பிலிருந்து ஒழுங்கான திட்டம் வகுத்துக் கொண்டு, சிறிய கட்டுரைகள் படிப்படியாய் எழுதப் பயிற்சி தரல் நலம். மேல் வகுப்புகட்கு அரசியலார் பாடத் திட்டத்தில் கண்ட சில பயிற்சிகள்:—

1. சமூகச் சார்பாகவும், வாணிபச் சார்பாகவும் நீண்ட கடிதங்கள் எழுதுதல். (விளம்பரங்கள், அழைப்புக் கடிதங்கள், மன்னிப்புக் கடிதங்கள்)

2. தனிப்படங்கள், தொடர்படங்கள் வரிப்படங்கள் இவற்றின் பொருளை உணர்ந்து விளக்கல்.

3. கதைகளை நாடக வடிவில் அமைத்தல், சம்பாஷணை வடிவில் அமைத்தல்.

4. ஒரே கதையை அல்லது நிகழ்ச்சியைச் சந்தர்ப்ப வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறு விதமாய்ச் சொல்லல்:—(உ—ம்) ஒரு மோட்டார் விபத்தை மோட்டார் ஓட்டிசொல்லலாம்; நிகழ்ச்சியைக் கண்டவன் சொல்லலாம்; விசாரித்த நீதிபதி சொல்லலாம். இவ்வாறு வெவ்வேறு ஆட்கள் கூறுவது போலக் கூறலாம்.

5. கதைக் குறிப்பைக் கொண்டு விவரித்தல்.

6. குறைக் கதையைப் பூர்த்தி செய்தல்.

7. பள்ளிக்கூடப் பத்திரிகை நடத்தல்.

8. செய்த ஆராய்ச்சிச் சோதனைகள், சுய நோக்க முறை வேலைத் திட்டங்கள், பிரயாணங்கள் முதலியவற்றை விளக்கப் படங்களுடன் விவரித்தல்.

9. சுருக்கத்தைப் பெருக்கி எழுதுதல்.

10. வாசித்தவற்றை அல்லது சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்பெடுத்தல்.

11. விரித்து எழுதியதைச் சுருக்கமாக எழுதுதல்.

வினா:- 1. ஐந்தாம் வகுப்புக்குக் கட்டுரை எழுதும் பயிற்சிக்காக எவ்வெவ்வித விஷயங்களைக் கொடுப்பீர்? ஒவ்வொரு வகைக்கும் ஒரு உதாரணம் தருக. (Ele 45)

(கடிதம் எழுதுதல், சுருக்கம், எழுதல், சம்பாஷணை அமைத்தல், வருணனை எழுதுதல்.)

2. இரண்டாவது மூன்றாவது படிவங்களில் எத்தகைய கட்டுரைகளை எழுதும்படி பயிற்சி செய்தல் மிகவும் ஏற்றதாகும்? குறிப்பிட்ட ஒரு விஷய சம்பந்தமாய் மாணவர் பயன் பெறுமாறு எத்தகைய குறிப்புகளை அளிப்பீர்? (Sec. 44)

6. கடிதங்கள் எழுதுதல்,

முதல் நான்கு வருஷங்களில் மாணவர்க்கு சொல்லையும், வாக்கிய அமைப்பையும் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவை யாவும் கட்டுரை எழுதுவதற்கு மிகவும் உதவும். நான்காம் வகுப்பிலே கடிதக் கட்டுரை எழுதத் தொடங்க வேண்டுமென அரசியலார் பாடத் திட்டம் குறிக்கின்றது. ஐந்தாம் வகுப்பில் சற்று கடினமான, நீளமான கடிதங்கள் எழுதப் பயிற்சிகள் தரலாம். வேறு வகைக் கட்டுரைகளையும் முறையாக எழுத இவ்வகுப்பிலிருந்துதான் பயிற்சிதரல் வேண்டும்.

கடிதங்கள் பல வகைப்படும். நண்பர், உறவினர்க்கு எழுதும் சொந்தக் கடிதங்கள், அழைப்புக் கடிதங்கள், வேண்டுகோள்கள் நிறைந்த விண்ணப்பங்கள், முறையீடுகள் நிறைந்த மனுக்கள், காரியங்கள் செய்யத் தவறியதற்காக மன்னிப்பைக் கோரி எழுதும் மன்னிப்புக் கடிதங்கள், வாணிபச் சார்பான கடிதங்கள் ஆகிய பலவகைக் கடிதங்களையும் எழுதும் பயிற்சி நான்காம் வகுப்பிலிருந்து மாணவர் தகுதிக் கேற்பத் தந்துவரல் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும்.

கட்டுரைப் பயிற்சி, வாழ்க்கையில் சிலர்க்குச் சில காலத்தில்தான் பயன்படுகிறது. ஆனால் கடிதங்கள் அனைவர்க்கும் அன்றாட வாழ்க்கையில் அதிகம் பயன்படுகிறது. ஆதலால் ஆரம்பப் பள்ளியிலே கடிதப்பயிற்சி மிக முக்கியம். அநேக கட்டுரைகளைக் கடித ரூபமாகவே எழுதப் பழக்கலாம். இம்முறையிலே பயிற்சி தருவது இன்பமாகவும் ஆம் இருக்கும். உதாரணமாக, தாங்கள் கல்வியுலாச்சென்று

கண்ட காட்சியை வர்ணனையாக எழுதுவதைக் காட்டிலும் அதைப் பற்றி ஓர் உறவினர்க்குக் கடிதமாக எழுதுவது மிக்க இன்பந்தரும்.

கடிதம் எழுதக் கற்பித்தல்.

(i) மாதிரிக் கடிதங்களைக் காட்டுக.

(ii) கடிதத்தின் பாகங்களை வினாக்கள் மூலம் முதலில் விளக்குக.

1. இருப்பிடமும் தேதியும் எங்கெழுத வேண்டும்?

2. அழைப்பு முறைகள் எவை? ஆரம்பத்தில் வணக்கமா அல்லது ஆசியா கூறுவது?

3. கடிதத்தை எவ்வாறு பிரிக்கலாம்?

4. கடிதத்தின் முடிவு எவ்வாறு எழுத வேண்டும்?

5. கடிதத்தின் முடிவில்கையெழுத்திடுவதுஎங்கே?

6. முகவரியில் (விலாசம்) எழுத வேண்டியவற்றை எவ்வரிசையில் எழுதுவது? (பேர், தொழில், வீட்டு எண், தெரு, ஊர், தாலூகா, (கூற்றகம்) ஜில்லா (கோட்டகம்) மாகாணம், தேசம் என்னும் முறையில் எழுதுவது வசதி.)

(iii) கடிதத்தின் உள்ளடக்கப் பொருளை வினாவிடை முறையைப் பின்பற்றி முதற்கண் விளக்குக. 2. பின் அவற்றை வரிசைப்படுத்தி, பத்தி பத்தியாகப் பிரித்து எழுத வழிகாட்டுக. 3. உள்ளடக்கப் பொருளைக் கரும்பலகையில் சுருக்கக் குறிப்பாக எழுதிக் காட்டித் துணைசெய்க. 4. கீழ் வகுப்பிலே இவ்வாறு ஆசிரியரின் உதவிகொண்டும்கொள்ளா மலும் மாணவர் எழுதலாம்; மேல் வகுப்பிலே உதவி யின்றியே எழுதலாம்.

(iv) கடிதத்தின் நடை: பொருளுக்கும் கடிதத்தைப் பெறும் ஆளுக்கும் பொருந்துமாறு நடையை அமைக்க வேண்டும். பொதுவாக, கடிதங்கள் இயற்கையாகப் பேசும் நடையிலே பிழையற எழுதுதல் இனிது.

வினா:- 1. ஐந்தாம் வகுப்புக்கு ஏதாவதொரு விஷயத்தைப் பற்றிக் கடிதம் எழுதுவதில் ஒரு அப்பியாசம் கொடுக்கும்போது மாணவர்க்கு நீர் அளிக்கும் போதனைக் குறிப்புகளை எடுத்துக் கூறுக.

2. ஐந்தாம் வகுப்புக் குழந்தைகள் ஒரு கிராமப் பண்டிகையை வர்ணித்து ஒரு சிநேகிதனுக்குக் கடிதம் எழுதுவதற்கு என்ன குறிப்புகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பீர்? (Ele. 49.)

7. கட்டுரை வகை.

ஒன்றன் வரலாறு உரைப்பது வரலாற்றுக் கட்டுரை எனவும், ஒன்றை வர்ணிப்பது வர்ணனைக் கட்டுரை எனவும், ஒன்றைக் கருதியுரைப்பது கருதியல் கட்டுரை எனவும் கட்டுரை மூவகைப்படும்.

1. **வரலாற்றுக் கட்டுரை:—**

1. கதை—அரிச்சந்திரன் கதை.
2. சரித்திரம்—கட்டபொம்மன் கதை.
3. வாழ்க்கை வரலாறு—காந்தியடிகள் வரலாறு.
4. வழிபோக்கு—வாஸ்கோடிகாமாவின் பிரயாணம் போன்ற உண்மைப் பிரயாண வரலாறு.

2. **வருணனைக் கட்டுரை:—** 1. பொருள், 2. இடம், 3. காலம், 4. சினை, 5. குணம், 6. தொழில், 7. காட்சி, 8. நிகழ்ச்சி ஆகியவற்றை வர்ணித்து எழுதல்.

3. **கருதியல் கட்டுரை:—**

1. அறிவுரை:—(உ-ம்) உண்மை கடைப்பிடித்தல், அன்புடைமை.
2. விளக்கங்கள் எழுதுதல்:—ஏதாவது ஒரு வாசகத்தை அல்லது செய்யுளடியை விளக்கிக் கூறுதல், (உ-ம்) புத்தக விமர்சனம் தருதல் பாடப்பகுதிகளைவிளக்கிக்கூறுதல்முதலியன
3. சீர்திருத்தம்:— (உ-ம்) தாழ்த்தப்பட்டோரைக் கோயிலினுள் அனுமதித்தல். கள்ளுக்கடைகளை மூடல்.
4. தர்க்கம்:—(உ-ம்) ஹிந்தி பொது மொழியா? பேசும் படக்காட்சி நல்லதா? புலால் உண்ணலாமா?
5. கற்பனை:— (உ-ம்) சிந்து பாத்தின் கப்பல் பிரயாணம், ஜாண் பனியனின் மோட்ச பிரயாணம்என்னும் கற்பனைக்கனவுகள்முதலியன.

ஆரம்பப் பாடசாலைப் பாடத் திட்டம்

கட்டுரை எழுதுதற்கும் வாய்மொழிப் பயிற்சி அளிப்பதற்கும் உரியவை:-

4. வகுப்பு:—கட்டுரை எழுதுதற்கு முதற்படியாகவும், உதவியாகவும் சமூகவாழ்க்கையைப் பற்றிய கடிதங்களும் சொந்தக்கடிதங்களும் எழுதுதல். ஆண்டின் பிற்பகுதியில் சொந்த அனுபவங்களைச் சுருக்கமாகக் கட்டுரையாய் இயலுமளவுக்கு எழுதுதல்.
5. வகுப்பு:—சமூக, வாணிபச் சார்பான நீண்ட கடிதம் எழுதுதல்.

6. வகுப்பு:—i. தனிப் படங்கள், தொடர்படங்கள், பிளான், வரிப்படங்கள் [diagram] இவற்றின் பொருளை உணர்ந்து விளக்கல்.

ii. ஒரு கதை, நாட்டு வரலாறு, ஆட்சி முறை, இலக்கியம் இவற்றிலிருந்து எடுத்தவற்றை நாடக வடிவில் அமைத்தல்.

iii. படர்க்கைமுறைப் பேச்சைச் சம்பாஷணை வடிவில் எழுதுதல்.

iv. கடிதங்கள் எழுதுதல்.

7. வகுப்பு:—ஒரே கதை அல்லது நிகழ்ச்சியைச் சந்தர்ப்ப வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறு விதமாய்ச் சொல்வது.

உதாரணம்:— ஒரு மோட்டார் விபத்தை (a) மோட்டார் ஓட்டி சொல்வது போலவும். (b) பொலீஸ்காரன் நீதித் தலத்தில் தெரிவிப்பது போலவும். (c) மோட்டார் ஓட்டியும் அவன் நண்பனும் உரையாடுவது போலவும் எழுதுக.

8. ஆக்கத் திறமையை வளர்த்தல்.

மாணவர் தாமாகவே தம் உள்ள உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளியிட விரும்புவர். இவ்விருப்பத்தை ஆசிரியர் மிகவும் பாராட்டிப் பயன்படுத்த வேண்டும்.

1. **தகுதிக்கேற்றவை:-** ஆரம்பத்தில் மாணவர் தத்தம் தகுதிக்கும் அறிவுநிலைக்கும் தகுந்த அளவுக்குத்தான் கருத்துக்களை வெளியிட இயலும்; சிறந்த மொழி நடையையும்; நுட்பமான கருத்துக்களையும் ஆரம்பத்தில் மாணவரிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்கக் கூடாது.

2. **பயிற்சிகள்:**—தாம் விரும்பும் கருத்தைத் தாமே, தம்முடைய முறையிலே, தம்முடைய நடையிலே வெளியிடத் தக்க வசதிகளும் பயிற்சிகளும் படிப்படியாகத் தரல் வேண்டும். கதை கட்டுதல், பாட்டு இயற்றுதல், கற்பனையாக எழுதுதல், சொந்த அனுபவங்களை எழுதுதல் முதலியவை மூலமாக ஆக்கத் திறமையை வெளியிட உதவி புரியலாம். இப்பயிற்சியால் பிற்காலத்தில் மாணவரில் சிலர் பெரும் புலவராகவோ கதை, நாடக ஆசிரியர்களாகவோ விளங்கலாம்.

3. **குற்றம் திருத்தல்:**—அடிக்கடி குற்றங்களையே சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கலாகாது. குணங்களைப் பாராட்டவேண்டும். குற்றங்களை மிக்க அனுதாபத்துடன், அன்புடன் திருத்த வேண்டும். திருத்துவதின் மூலம் மாணவர் இன்பமடையப் பழக்க வேண்டும்.

4. **பிற மாணவர் ஏளனம்:**— மற்ற மாணவர்கள் ஏளனமாகப் பேசவோ எள்ளி நகையாடவோ இடம் அளிக்கலாகாது. கூச்சப்படின் தாமாக எதையும் செய்ய இயலாது.

5. சொந்தக் கருத்தை எடுத்துக்கூற யாதொரு கட்டுப்பாடும் இருக்கலாகாது. காலம், நேரம், நடை முதலியவற்றில் கட்டுப்பாடு இன்றித் தாராளமாக இயற்கையாகக் கருத்தை வெளியிடும் சுயாதீனம் மாணவர்க்கு ஆரம்பத்தில் கொடுக்கலாம்.

6. காரியங்களை யோசிக்கத் தூண்டலாம். சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் கேட்கலாம். நன்மை தீமைகளைப் பற்றி உரையாடலாம்; தர்க்கிக்கலாம்.

7. அறிவு நிரம்பிய உள்ளத்திலிருந்துதான் ஆக்கத் திறமை மலரும்; ஒன்றுமில்லா உள்ளத்திலிருந்து ஊறுமா ஆக்க வேலைகள்? மாணவர்க்குப் பல வழிகளில் அறிவூட்ட வேண்டும். மாணவர் சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்பதாலும் பல நூற்களை வாசிப்பதாலும் கல்வி சம்பந்தமான படக் காட்சிகளையும் நாடகங்களையும் காண்பதாலும் கல்விப் பயணங்கள் சென்று காட்சிகளைக் காண்பதாலும் பலதுறை அறிவு நிரம்பப் பெறுவர். கருத்துக்களைச் சேகரித்துக் குறித்து வைக்கும் பழக்கம் உண்டுபண்ண வேண்டும். நல்ல செய்யுட்களையும் பழமொழிகளையும் மாணவர் தொகுக்கலாம்.

8. பள்ளிக்கூட இதழ், இத்திறனை வளர்க்கப் பெரிதும் பயன்படும். வகுப்பைச் சிறு சிறு உட்பிரிவுகளாகப் பிரித்துப் பல பொருட்களைப் பற்றி, பள்ளிக்கூட இதழுக்காக எழுதச் சொல்லலாம்.

வினா:- மாணவர் தம் சுயக் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலை வளர்க்க அவர்களை எப்படி உற்சாகப்படுத்துவீர்.

(Ele. 43.)

9. கட்டுரை எழுதப் பழக்கல்.

கட்டுரை எழுதும்போது ஆசிரியர் கவனிக்கத்தக்கவை பல. தலைப்பிலே குறிப்புச் சட்டகம் எழுதுதல், சொல்நடை, வாக்கிய அமைப்புகள், கட்டுரையின் முகவுரை, பொருள் விளக்கம், முடிவுரை, பத்திகளின் வரிசை, நிறுத்தக்குறிகள், மேற்கோள்களை எடுத்தாளல் முதலியவைகளைப்பற்றி, மாணவர்க்கு நல்ல தெளிந்த திட்டமான அறிவை ஊட்டல் அவசியம். இனி, இவை ஒவ்வொன்றையும் பற்றிக் கற்போம்.

கட்டுரையின் முதலிலே கட்டுரையின் தலைப்பு சற்று பெரிய எழுத்தில் எழுத வேண்டும். வரந்தையில் கட்டுரையின் தொடர் எண்ணும், தேதியும் இட வேண்டும்.

1. வாய்மொழிக் கட்டுரை.

கீழ் வகுப்புகளில் எழுத்துக் கட்டுரைக்கு வாய்மொழிக் கட்டுரை மூலம் உதவிபுரிய வேண்டும். இதன் மூலம் பொருளை ஒருவாறு உணரலாம்; பல பிழைகளை நீக்கலாம். மாணவர், தங்கட்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றிக் கூறவும், வினவவும், விடை கூறவும் பயிற்சி தரலாம்.

2. விஷயச் சேகரிப்பு.

எடுத்த கட்டுரைப் பொருளைப் பற்றித் தங்கட்குத் தெரிந்த அளவு வாய்மொழியாகக் கூறிய பின்னர், மேலும் விஷயங்களைச் சேகரிக்க வேண்டும். பல புத்தகங்களை நூல் நிலையத்தில் புரட்டிப் பார்க்கும் பழக்கமுண்டாக்க வேண்டும். அகராதி வகைகளையும், அட்டவணைகளையும், செய்தித் தாள்களையும், பலவகைப் படங்களையும் படித்துத் தமக்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கலாம்.

3. பத்தி பிரித்தல்.

முகவுரைப் பத்தி, பொருள் விளக்கப் பத்திகள், முடிவுரைப் பத்தி என மூன்று வகையாக ஒரு கட்டுரையைப் பிரிக்கலாம். மேலே கூறியாங்கு சேகரித்த பொருளை முதலில் சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்தல் வேண்டும். பிரித்து, குறிப்புகள் தயாரிக்க வேண்டும். இதனைக் "குறிப்புச் சட்டகம்" என்பர். இடக் கைப்புறத்தின் மேலே மாணவர் இதனை எழுதிக் கொள்வதால், எழுத வேண்டியவற்றை ஒன்று விடாமல் எழுதவும், அடுத்து அடுத்து எழுத வேண்டிய வரிசையை முதலிலே நிர்ணயிக்கவும், வேண்டாத விஷயங்களை விலக்கவும் துணையாக இருக்கும்.

(மாதிரிக் குறிப்புச் சட்டகம்:- மோட்டார் வண்டியை வேகமாக ஓட்டுதல்-சாலையில் எதிராக மாட்டு வண்டி வரல்-மோட்டார் வந்து மோதுதல். மோட்டார் ஓட்டிக்குக் காயம், சிலர் மரணம்—நகர்க் காவலர் விசாரணை—தீர்ப்பு—முடிவு—வண்டிகளை வேகமாக் ஓட்டுதல் தீமை.)

வாக்கிய அமைப்புகள்:- இவ்வாறு, ஒருவாறு பல தலைப்புகளின் கீழ், பொருளைப் பாகுபடுத்திய பின்னர், வாக்கிய அமைப்பிலே மாணவர் கவனத்தைச்செலுத்தவேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஒரு கருத்தையே கொண்டு விளங்க வேண்டும். வாக்கியங்கள் யாவும் ஒரே அளவாக இருத்தல் கூடாது. நீண்ட வாக்கியங்களும் சிறிய வாக்கியங்களும் கலந்து எழுதுதல் கவர்ச்சி தரும். எழுவாய்களோடு பயனிலைகள் பொருந்த வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் முன் வாக்கியத்தோடு பொருளிலே தொடர்புபட்டே வரல் இனிது.

பத்தி அமைப்புகள்:- பொருள் விளக்கத்திற்கேற்ப, பல பத்திகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பத்தியிலும் ஒரு கருத்து விளக்கப்படல் வேண்டும். பத்திகள் ஒன்றற்கொன்று தொடர்புடையதாகத் திகழல் தேவை. பத்திகளின் முதல் வாக்கியங்களே பத்தியின் உட்பொருளைக் குறிக்குமாறு வெளிப்படையாய் அமைதலே நலம். பத்திகட்கூடே இடம்விடல் அவசியம்.

முகவுரைப் பத்தியானது சுருக்கமாய், பொருத்தமாய், கட்டுரையின் நோக்கத்தைக் காட்டுவதாய், கவர்ச்சியூட்டிக் கட்டுரைக்குள் அழைத்துக் கொண்டு போவதாய் அமைக்குமாறு மாணவர்க்கு அறிவூட்ட வேண்டும். முடிவுரைப் பத்தியிலே கட்டுரையின் சுருக்கத்தைக் கூறுவதும், வேண்டு கோட்கள், நீதிகள், அறிவுரைகள், பிறமுடிவுகள் முதலிய வற்றைக் கூறுவதும் ஏற்றது என்பதை விளக்க வேண்டும்.

4. மேற்கோள்கள்.

கட்டுரை எழுதும் போது, பழமொழிகள், செய்யுள் வரிகள், உவமைகள், மரபுத் தொடர்கள் (நண்டுக் குஞ்சு, தென்னம் பிள்ளை, பசுக்கன்று போன்றவை) இணை மொழிகள் (ஈகை இரக்கம், சீரும் சிறப்பும் போன்றவை) முதலிய வைகளை ஆங்காங்கு, ஏற்ற இடத்தில் அமைத்து எழுதுந் திறமையை உண்டாக்க வேண்டும். இவற்றையும் கடின சொற்களையும் கரும்பலகையில் ஓர் ஓரத்தில் குறித்து வைப்பதால் மாணவர் நினைவில் கொண்டு பிழையின்றி எழுதலாம்.

நடை:— இது சம்பந்தமாய் மேலே உரைநடைப் பகுதியில் (பக்கம் 125) கூறியவற்றைக் கைக்கொள்க.

5. எழுதுதல்.

மிகச் சிறிதாக அல்லது பெரிதாக எழுதாமல் அளவான, அழகான கையெழுத்தில் எழுதுமாறு ஆசிரியர் பார்க்க வேண்டும். மாணவர் எழுதும்போது ஆசிரியர் சுற்றிச் சென்று வேண்டிய உதவிகள், குறிப்புகள் தரலாம். கருத்துப் பிழைகளையும் சொற் பிழைகளையும் நீக்கத் துணை புரியலாம். இதனால் ஆசிரியர்க்குத் திருத்தும் வேலை குறையும். ஒவ்வொரு பத்தியினையும் இடப்புறம் சற்று இடம் விட்டு ஆரம்பிக்கக் கூறல் வேண்டும். எழுதி முடித்த பின்னர், மாணவர் திருப்பிப் பார்க்கப் பயிற்சி தருவதால், தாமே தம் பிழைகளை நீக்க ஏதுவாகும். நிறுத்தக்குறியீடுகளை தக்க இடங்களில் இடும் பழக்கத்தை உண்டுபண்ண வேண்டும்.

ஆகவே சுருக்கமாகக் கூறினால், கட்டுரை எழுதும் பயிற்சியின் நிலைகள் (படிகள்) இவையே:- 1. வாய்மொழிப் பயிற்சி, 2. பொருட் சேகரிப்பு, 3. பத்திகளைப் பிரித்து வரிசைப் படுத்தல். 4. வாக்கியங்களை அமைக்கப் பயிற்சி தரல். 5. எழுதுதல் முதலியவையாகும்.

வினு:- 1. கட்டுரை வரைதல் பயிற்சிக்கு முன் ஆயத்த மான முக்கிய வழிகள் (steps) யாவை? மூன்றும் படிவ மாணவர்கள், தென்னை மரம் என்னும் கட்டுரை தயார்செய்ய எவ்வித உதவி செய்வீர் என்று விளக்குக. (Ele. 47)

2. ஐந்தாம் வகுப்பிற்கு ஆறுகள் என்பதைப் பற்றி ஒரு கட்டுரைப் பயிற்சி தருவதாயிருந்தால், எழுத வேண்டிய விஷயத்தையும் முறையையும் பற்றி மாணவர் தெரிந்துகொள்வதற்கு நீர் என்ன உதவி புரிவீர். (Ele. 42)

10. கட்டுரையைத் திருத்துதல்.

1. **திருத்தலின் அவசியம் :—** பல கட்டுரைப் பயிற்சிகள் தந்து, திருத்தாமல் ஏடுகளை மூலையில் ஆசிரியர் குவித்து வைப்பதைவிட, ஒரு சில பயிற்சிகள் தந்து திருத்துவதே மிக மேலானது. எழுதிய கட்டுரையைத் திருத்துவதால் மிகுந்த பயன்விளைகின்றன. ஆதலால் திருத்திக் கொடுக்கக் கூடிய அளவுக்குத்தான் பயிற்சிகள் தரல் வேண்டும். ஆசிரியர் அவசியம் திருத்துவார் என்று அறிந்தாலே மாணவர் கவன மாய் எழுதுவார்.

பிழைக் காரணம்:- அறியாமையாலும், ஐயப்பாடுகளாலும், முன்ஆயத்த வாய்மொழிப் பயிற்சி நன்கு நடைபெறாமையாலும், கவனக் குறைவினுலும் மாணவர்கள் எழுதும்போது பிழைகள் நேரிடலாம்.

3. **திருத்தி எழுதுதல்:-** எழுத்திலே பிழை ஏற்படின் முழுச் சொற்களையும், சொல்லிலும் வாக்கியத்திலும் பிழைகள் ஏற்படின் முழு வாக்கியத்தையும் இடப்பக்கம் காலி விட்ட இடத்தில் எழுதலாம். கருத்துக்களிலும் பத்தி வரிசைகளிலும் சொற்களிலும் பிழைகள் அதிகமிருப்பின் முழுக் கட்டுரையினையும் மீண்டும் எழுதச் செய்யலாம்.

4. **அன்பும் ஆதரவும்:—** பிழை செய்ததற்காக மாணவரின் மனம் புண்படுமாறு எசியும் பேசியும் குற்றப் படுத்தலாகாது. தன் தோழர் முன்னிலையில் இளங் குமரப் பருவ மாணவர்கள் தன்மதிப்போடு நடக்கப் பெரிதும் விரும்புவர். ஆதலால், அன்பாய், ஆதரவாய்ப் பிழைகளை எடுத்துக்காண்பித்துத் திருத்த உதவலாம். தன் பிழையைத் தானொப்புக்கொள்ளும் பண்பாட்டை ஊட்டுவதும் சிறந்த தல்லவா ?

5. **முற்காத்தல்:-** பிழை நேரும் முன், காத்தல் நலம். முன் ஆயத்த வாய்மொழிப் பயிற்சியிலே கடின சொற்களை யும், தொடர்களையும், மேற்கோள்களையும், பிழையாக எழுத நேரிடலாமென எண்ணும் பிறவற்றையும் எடுத்துக் காட்டி மனத்தில் பதிப்பதன்மூலம் பிழை நேரிடா வண்ணம் முற் காக்கலாம். மாணவர்க்கு ஐயப்பாடுண்டாகுங்கால், அகராதி, அட்டவணைகளைப் பார்த்து எழுத வழிகாட்டல் நலம்.

6. **பொதுப் பிழைகள்.-** பல மாணவர்கள் எழுதும் பொதுவான பிழைகளை, ஆசிரியர் தம் குறிப்பு ஏட்டில் எழுதி வைத்துக் கொண்டு பிழைபட்ட விதத்தை மாணவர் அனைவர்க்கும், விளக்கிக் காட்டலாம். இதனால் காலமும் முயற்சியும் குறையும்.

7. **முன்னிலையில் திருத்துதல்:-** திருத்தும் வேலையை மாணவர் முன்னிலையில் ஆசிரியர் செய்தல் நலம். மாண வர்க்கு இவை எவ்வாறு பிழை என எடுத்துக் காட்டுவதால் தாமே அறிந்து திருத்திக் கொள்வார்; ஆனால், காலம் அதிகமாகும். ஆதலால் மிகப் பிழை செய்யும் மாணவர்களை யேனும், அழைத்து முன்னிலையில் திருத்தலாம். எல்லாப் பயிற்சிகளையும் மாணவர்களோடு திருத்த முடியாவிடினும், ஒரு நாளில், முறைக்கு, ஐந்தாறு மாணவர்களாகவேனும் அழைத்து, முன்னிலையில் பிழை திருத்தலாம். இவ்வாறு எல்லா மாணவரையும் உடன்வைத்து ஒருமுறையேனும் பிழை திருத்தல் சாலச் சிறந்தது.

TAMIL NADU ARCHIVES LIBRARY
555
T: 3 (P31)
N150

8. **திருத்தக் குறியீடுகள்**:- ஆசிரியர் தாமே பிழைகளைத் திருத்திவிடலாகாது. மாணவர் சிந்தித்து, எவ்வாறு பிழை எனக் காணத் தூண்ட வேண்டும். கவனக் குறைவால் ஏற்பட்ட பிழைகளை மீண்டும் கவனிக்கச் செய்வதால் மாணவர் தாமே தம் பிழையைக் கண்டு திருத்தலாம். இந்த நோக்கத்துடன் பிழைகளைக் காட்டுவதற்காகச் சில குறியீடுகளை ஆசிரியர்கள் தாமே அமைத்து வைத்துக் கொள்ளவேண்டும். அக் குறியீடுகளைக் கட்டுரை ஏட்டிலே, ஓர் மூலையிலே, மாணவர் எழுதி வைத்துக் கொள்ளல் நலம். மாணவர் செய்யும் பிழைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்:—

1. எழுத்துப் பிழை.
2. சொற் பிழை.
3. வாக்கியப் பிழை.
4. கருத்துப் பிழை.
5. கட்டுரையின் பொதுஅமைப்பு சம்பந்தமான பிழை

இப்பிழைகளைக் குறியீடுகளால் காட்டுவதால், இன்ன பிழை என விளக்கத் தேவையில்லை. சில குறியீடுகள்:—

| -எழுத்தின்மேல் கோடு இட்டால் எழுத்துப் பிழை.

— சொற்களைக் கீழ்க்கோடிட்டுக் காட்டினால், சொற் பிழை.

Λ சில சொற்கள் விடப்பட்டிருப்பதைக் காட்டும்.

○ நிறுத்தக் குறியில் பிழை.

வி... விட்டு விடுக.

இடம் விடுக.

பத்தியாக ஆரம்பிக்க.

வினா:- 1. மாணவரின் எழுத்து வேலையில் காணப்படும் பிழைகளைத் திருத்த என்ன செய்வீர்? (Ele. 47)

2. கட்டுரை அப்பியாசங்களைத் திருத்தும் போது கவனிக்க வேண்டியவற்றைக் குறிக்க. (Sec. 42)

ஓர் அன்புரை.

மாணவ ஆசிரிய மணிகளே!

உங்கள் போதனுமுறைப் பள்ளி இறுதித் தேர்வுக்குரிய வினுத்தாளை அரசினர் இரு பகுதியாகப் பிரித்துள்ளனர். அவை வாசக நூற்பகுதி, போதனு முறைப் பகுதி என இரு பிரிவுகளாகும். போதனு முறைப் பகுதியில் நான்கு அல்லது ஐந்து வினுக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினுவிற்கும் உரிய மதிப் பெண்கள் சுமார் 16. ஆகையால் நீண்ட கட்டுரையாக விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு விடையிலும் ஓர் முன்னுரைப் பத்தியும் விஷய விளக்கப் பத்திகளும் அமைத்து, முடிவுரையும் கூறவேண்டும். வாக்கியங்களைத் தெளிவாக அமைக்க வேண்டும். உதாரணங்கள் தந்து விடை எழுதுதல் நல்லது. புத்தகத்தை மனனஞ் செய்து அப்படியே ஒப்பித்தல் கூடாது; எல்லோரும் ஒரே மாதிரியாக விடை எழுதுதலும் கூடாது. மனத்தில் தோன்றும் கருத்துக்களைச் சொந்தமாக எழுதுவதே சிறப்பு. சிறு சிறு வாக்கியங்களாக அமைத்துத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

பரீட்சைக்குமுன், சுமார் பத்துக் கேள்விகட்கேனும் நல்ல விடை எழுதி ஆசிரியரிடம் தனித்துச் சென்று காட்டித் திருத்த வேண்டும்.

உங்கள் மனத்திலே ஆசிரியர் பக்தி வேண்டும்; தமிழ்ப் பற்று வேண்டும். புத்தகத்தைப் படிப்பது மட்டும்போதாது. ஆசிரியர் வகுப்பில் போதிப்பதை பக்தியோடும் கருத்தோடும் கேட்டுவரல் வேண்டும். கேட்டவற்றைச் சிந்திக்க வேண்டும். அவற்றை எழுதுவதால் மனதில் நன்கு பதியும்.

எல்லாவற்றிற்கும் முக்கியமாக, குழந்தைகளிடம்பற்றும் குழந்தைகட்குத் தொண்டுசெய்யும் ஆர்வமும் உங்கள் மனத்திலே வேரூன்றி நிலைத்து நிற்க வேண்டும். அப்போது தான் ஆசிரியப் பணி இன்பமாக மாறும்.

தமிழ்த் தாயையும் தமிழ் ஆசிரியர்களையும் நன்றி மறவாது போற்றுவீர்களாக. இறைவன் திருவருள் உங்களோடிருப்பதாக.

ஆசிரியர்,